407

T. N. L. C. Debates

official Report

1981

Vol: CLXXXI   No: 1, 2

D
V211,32'N81
N81.181.1-2
143087

S.No.22

பொருளடக்கம்

		பக்கங்கள்
	தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.	i—v
	தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்	vii
	தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்	x—xi
1.	இரங்கல் தீர்மானம்	1—17
2.	வினாக்கள்—விடைகள்	18—41
3.	மாற்றுத் தலைவர்கள் பட்டியல்	41
4.	அறிவிப்பு— அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து ..	42
5.	1981-82 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த முதல் விவர அறிக்கையை அளித்தல்.	43—44
6.	அரசின் தீர்மானம்— இலங்கையில் வாழும் தமிழர் அவதியுறுவது குறித்து	44—63
7.	அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்	64—79

143087
-600 008

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU.

Thiru SADIQ ALI.

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption and Planning.

2. THE HONOURABLE DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THE HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. THE HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. THE HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minster for Revenue, in charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THE HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister for Information and Reigious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona and Grant of Liquor Permits.

7. THE HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education and Official Language.

8. THE HONOURABLE THIRU K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. THE HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister for Co-operation and Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THE HONOURABLE THIRU P. KULANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THE HONOURABLE THIRU S. RAGHAVANDAM, Minster for Labour, in charge of Labour, Housing Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THE HONOURABLE DR. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. THE HONOURABLE THIRU K. RAJA MOHAMMED, Minister for Irrigation, in charge of Agro-Service Co-operative Societies, Irrigation including Minor-Irrigation and Wakf.

14. THE HONOURABLE THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. THE HONOURABLE THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. THE HONOURABLE THIRU S. N. RAJENDRAN, Minister for Handlooms and Khadi, in charge of Handlooms, Khadi, Prohibition excluding grant of liquor permits and passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. THE HONOURABLE THIRU M. VIJAYASARATHI, Minster for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THE HONOURABLE THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்

திரு. சாதிக் அலி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு மற்றும் திட்டம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—

நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

மின்சாரம், மற்றும் இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

கிராம, குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்கத் திட்டம், மற்றும் ஆவணப் பதிவுத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை, மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டுநிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் —

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

பெருந்தொழில்கள், சுரங்கமும்-கனிவளமும் மற்றும் நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் (கைத்தறி மற்றும் கதர் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

கைத்தறி, கதர், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித்துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால் நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள் வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்.

டாக்டர் ம.பொ. சிவஞானம்.

மேலவைத் துணைத் தலைவர்.

புலவர் புலமைப்பித்தன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. இராமமூர்த்தி.
2. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்.
3. திரு. க. அருணாசலம்.
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.

மேலவைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்.

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்ஸி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன். பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

தலைமை நிருபர்.

திரு. ச. சுவாமிநாதன்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
1 அருணாசலம், திரு. க. ..	நியமனம்.
2 ஆறுமுகம், திரு. சோ. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
3 ஆற்காடு வீராசாமி, திரு. நா.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
4 ஆனந்தம், திரு. வி.வி.வி.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
5 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்).	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
6 இராசா முகமது, திரு. கா. (பாசனத்துறை அமைச்சர்)	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
7 இராமமூர்த்தி, திரு. க.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
8 இராமலிங்கம், திரு. சி.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
9 இராதா, திரு. எஸ். ஆர்.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
10 கண்ணப்பன், திரு. காடுவெட்டி	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
11 சங்கரலிங்கம், திரு. ம.	திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி.
12 சண்முகம், திரு. ப. உ.	மாநிலச் சட்டமன்றப் பேரவை
13 சந்தோஷம், திரு. த.	தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி.
14 சனார்த்தனம், டாக்டர் இரா.	தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி.
15 சிவஞானம், டாக்டர் ம.பொ. (மாண்புமிகு தலைவர்).	நியமனம்.
16 சித்தரபதி, திரு. ஆர். டி.	மாநிலச் சட்டமன்றப் பேரவை
17 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி.	நியமனம்.

தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
18 சுவாமிநாதன், திரு. ஜி.	தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி.
19 தாமஸ், திரு. பா. ரா.	மதுரை–இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி.
20 தாமோதரன், திரு. ஏ. ஆர்.	தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி.
21 தாரா செரியன், திருமதி.	நியமனம்.
22 தாஸ், திரு. ஏ. ஜே.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
23 துரைசாமி, திரு. ஓ. எஸ்.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
24 நல்லசிவன், திரு. ஆ.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
25 நீலநாராயணன், திரு.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
26 புலமைப்பித்தன், புலவர் (துணைத் தலைவர்)	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
27 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி.	நியமனம்.
28 மாணிக்கம், திரு. ப.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
29 மியாகான், திரு. ஜே. எம்	மாநிலச் சட்டமன்றப் பேரவை
30 மீனாட்சிசுந்தரம், திரு. க.	தஞ்சாவூர் — திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி.
31 முத்து, திரு. எஸ். ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
32 முத்துசாமி, திரு. செ. ..	சேலம்–தர்மபுரி–கோயம்புத்தூர் நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி
33 முத்தையா செட்டியார், டாக்டர் ராஜா சர், எம். ஏ.	நியமனம்.
34 முனுசாமி, திரு. பி. ..	நியமனம்.
35 லீலாவதி, செல்வி. அ.	சென்னை–செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி.
36 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா.	வடஆற்காடு–தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி.
37 வசந்த பை, திரு. ஜி.	சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி.
38 வள்ளிமுத்து, திரு ஈ.வெ.ஆ.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
39 வீரப்பன், திரு இராம. (செய்தி–அறநிலையத் துறை அமைச்சர்).	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
40 வெங்கடேசன், ஈ. எஸ்.	நியமனம்.
41 ஹண்டே, டாக்டர் எச்.வி. (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்).	சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி.
42 ஜேப்பியார், திரு. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
43 வெற்றிடம் ..	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
44 டிை	டிை
45 டிை ..	சேலம்–தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
46 டிை ..	டிை
47 டிை ..	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத்தொகுதி.
48 டிை ..	டிை
49 டிை ..	செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
50 டிை ..	சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
51 டிை ..	கோயம்புத்தூர்–நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
52 டிை ..	டிை
53 டிை ..	மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
54 டிை ..	டிை
55 டிை ..	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
56 டிை ..	டிை
57 டிை ..	வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
58 டிை ..	டிை
59 டிை ..	தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
60 டிை ..	டிை
61 டிை ..	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
62 டிை	டிை
63 டிை ..	கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சட்டமன்ற மேலவையின் அறுபதாவது கூட்டத் தொடர்.

புதன்கிழமை, 1981 ஆகஸ்ட் 26.

ஆவணி 10, துன்மதி—திருவள்ளுவராண்டு 2012.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கல் தீர்மானம்.

தமிழகத்தின் முன்னாள் அமைச்சரும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் தலைவரும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவையின் முன்னாள் உறுப்பினருமான திரு. சி. பா. ஆதித்தனார் அவர்களின் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மேலவை உறுப்பினர்களே, தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் பேரவைத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 24 ஆம் நாள் சென்னையில் இயற்கை எய்தினார் என்ற செய்தியை அவைக்கு ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவை முன்னவர் அவர்களை, இரங்கல் தீர்மானத்தை முன்மொழியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு சட்டமன்ற மேலவை மற்றும் பேரவை முன்னாள் உறுப்பினராகவும், 1967-68 ஆம் ஆண்டுகளில் பேரவைத் தலைவராகவும், 1969 முதல் 1976 வரை தமிழ்நாடு அமைச்சராகவும் சிறந்த பத்திரிகையாளராகவும் விளங்கிய திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் 24-5-1981 அன்று இயற்கை

எய்தியதைக் குறித்து, இந்த அவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரது மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்குத் தனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறது" என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில், மறைந்த திரு. சி. பா. ஆதித்தனார் அவர்களைப் பற்றிய சில உணர்வுகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பொது வாழ்க்கையில், பல தலைவர்களை நாம் தொடர்ந்து இழந்து வந்திருக்கிறோம் என்பதும், அது இன்றைய காலகட்டத்தின் இளம் தலைமுறையினருக்கு ஒரு பேரிழப்பாகும் என்பதும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டியதாகும். தேசிய அளவிலும் சரி, சர்வதேச அளவிலும் சரி, மாநில அளவிலும் சரி, முன்னுதாரணமாக வாழ்க்கை நடத்தி, அதை மாணவர்கள் பின்பற்றக்கூடிய அளவுக்கு வரலாறாக மாறிய பெருந்தலைவர்களில் அநேகமாக ஒன்றிரண்டு பேர்களைத் தவிர மற்றவர்கள் அனைவரும் மறைந்து விட்டார்கள் என்பது தான் இன்றைய நிலைமை.

அதிலும், மரியாதைக்குரிய மறைந்த திரு. ஆதித்தனார் அவர்கள் வகிக்கும் பங்கு மிக முக்கியமானதாகும். வேறு ஒரு கோணத்தில் பார்த்தால், மற்ற தலைவர்களைவிட அவர் பத்திரிகைத் துறையின் மூலமாகத் தமிழகத்தில் ஏற்படுத்தியிருக்கும் மறுமலர்ச்சி என்பது சாதாரணமானதல்ல. ஒரு ஏழைக்கு எழுத்தறிவிப்பது என்பது எவ்வளவு பெரிய செயல் என்பதை நாம் நன்கு உணர்வோம். அதிலும் படிப்பதில் ஆர்வம் குன்றி வரும் இந்தக் காலத்தில் "என்ன படிப்பு, படித்துவிட்டு என்ன செய்யப் போகிறோம்" என்ற சலிப்பும் சோர்வும் இளைஞர்கள் மத்தியில் பிரதானமாக வளர்ந்து வரும் இந்தக் கால கட்டத்தில், திரு. ஆதித்தனார் அவர்கள் பத்திரிகையின் மூலமாக ஒரு பெரும் மாறுதலை, மறுமலர்ச்சியை, அறிவு பூர்வமான சிந்தனையை, வளர்ச்சியை உருவாக்கிக் கொடுத்தார்கள். அதில் அவருடைய சாதனை தனித் தன்மை உடையதாகும். ஏதோ பத்திரிகை நடத்தினார், அது பெரிய அளவிலே விற்பனையானது என்கிற சாதாரண சாதனையல்ல அது. படித்தவர்களுக்காக மட்டுமே நடத்தப்படக்கூடிய பத்திரிகைகள் வெற்றி பெறுவது என்பது வியப்புக்குரியதன்று. படிக்கக் கூடியவர்களுக்கும், பல்வேறு அலுவலகங்களில் பணியாற்றுகிறவர்களுக்கும் பத்திரிகையைப் படிப்பதென்பது தேவையான ஒன்றாகும். அது அவர்களின் அன்றாடப் பழக்க வழக்கங்களில் ஒன்றிப் போனதாக இருக்கின்றது. ஆனால் திரு. ஆதித்தனார் அவர்களின் சாதனை என்பது சற்று வித்தியாசமானது.

அவர், படிப்பில் ஆர்வம் காட்ட வேண்டிய அவசியம் இல்லாத மக்களுக்கு, இந்த நாட்டு நடப்பைத் தெரிந்து கொள்வதன் மூலம் நமக்கு என்ன ஆகப் போகிறது என்ற வகையில் பொது வாழ்க்கையிலிருந்து ஒதுங்கியிருந்த மக்களுக்கு, படித்து என்ன ஆகிவிடப்போகிறது என்ற சோர்வுணர்ச்சியோடு இருந்த மக்களுக்கு படிப்பறிவு இல்லாதவர்களுக்கு, ஆக இப்படி அனைவருமே அவருடைய பத்திரிகை என்னதான் எழுதுகிறது, அதைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வை, ஒரு பெரிய எழுச்சியை, புரட்சியை அந்தப் பத்திரிகையின் மூலமாக அவர் உருவாக்கினார்.

அது மட்டுமல்ல, உலகத்திலேயே அதிகமான அளவுக்கு பத்திரிகைகளை ற்பனை செய்யக் கூடிய நாடுகளிலே அதிலும் குறிப்பாக மாநிலங்களிலே, மிழகத்திற்கு ஓர் தனியிடம் இருக்கிறதென்று சொன்னால், அது மதிப்பிற் குரிய மறைந்த திரு. சி. பா. ஆதித்தனார் அவர்களின் சாதனைதான் என் பதை நாம் மறந்துவிடக் கூடாது. அவருடைய பத்திரிகையின் மூலமாக பொது வாழ்க்கையில் அனைத்துப் பிரிவு மக்களும் ஆர்வம் காட்டக் கூடிய சூழ்நிலையை உருவாக்கினார்கள். கிராமப்புறங்களில் காலை நேரங்களில் பலருக்குப் பல பழக்க வழக்கங்கள் இருக்கும். காலையில் எழுந்த உடனேயே காப்பி சாப்பிடுவது ஒரு சிலரின் பழக்கம், அந்தக் காப்பி கொஞ்சம் கால தாமதமாகக் கிடைத்தால், அவர்களுக்கு எதையோ இழந்துவிட்டதைப் போன்ற உணர்வு ஏற்படும். சிலருக்கு உடற்பயிற்சி செய்வது காலை நேரப் பழக்கமாக இருக்கும். அதைப்போலவே "வாக்கிங்" செல்லுவது சிலருக்குப் பழக்கமாக இருக்கும். ஆனால், பலருக்கு காலையில் அந்த "தினத் தந்தி" பத்திரிகையைப் படிக்கவில்லை என்றால், ஏதோ ஒன்றை இழந்துவிட்டதைப் போன்ற உணர்வு ஏற்படும். இது படித்தவர்களிலிருந்து அனைத்து மக்கள் மத்தியிலும் நிலவி வருவதை இன்றைக்கும் நாம் காண்கிறோம். அந்த அளவுக்குப் பத்திரிகைத் துறையில் அவர் மிகப் பெரும் மறுமலர்ச்சியை உண்டாக்கினார்கள். அதன் காரணமாகவே, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்களுடைய உரிமைகளை உணரவும், தங்களுடைய உரிமைகளை நிலை நாட்டவும், அதன் மூலமாகவே ஒரு பெரிய ஆட்சி மாற்றத்தையே செய்து காட்டவும்கூட முடிந்தது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

அதற்கு அப்பாற்பட்ட நிலையில் அவர் தமிழ்ச் சமுதாயத்திற்காகவே தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்கள். அவர் ஒரு தொழில் அதிபராக இருந்துகொண்டு, பல தொழிற்சாலைகளில் பங்கு பெற்றிருந்தாலும் கூட, "ஏதோ தொழில் அதிபராக இருக்க வேண்டும், தொழில் மூலம் சம்பாதிக்க வேண்டும், அதன் மூலம் புகழ் பெற வேண்டும், வசதியாக வாழ வேண்டும்"

எதையும் கருதாமல், எளிமையான வாழ்க்கையை முறையாக மேற்கொண்டு, சாதாரண வியாபாரியாக இல்லாமல் மக்களுக்காக வாழக்கூடிய, உண்மைத் தொண்டராகவும், தலைவராகவும் வாழ்ந்து காட்டினார் என்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர் தன்னுடைய தொழிலை விஸ்தரித்துக் கொள்ளக்கூடிய பல்வேறு விதமான வாய்ப்பு வசதிகளைப் பெற்றிருந்தார்கள். அவர் விரும்பியிருந்தால் அதற்குரியவர்களின் உதவியை நாடியிருக்க முடியும். அதோடு அதிகாரத்தில் பல்வேறு விதமான கொள்கை உடையவர்களை நண்பர்களாகக் கொண்டிருக்க முடியும். ஆனால், அவரோ அதையெல்லாம் துறந்து, தமிழர்களின் நலனுக்காகத் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டார்கள். ஆரம்ப காலத்திலிருந்தே, அதாவது அவர் " நாம் தமிழர் " இயக்கத்தைக் கண்டதிலிருந்தே அவருடைய கொள்கை அதுவாகத்தான் இருந்தது. அதற்குப் பிறகும் அவர் அண்ணாவின் தலைமையை ஏற்று திராவிட இயக்கத்திற்கு வந்து சேர்ந்து, கடைசி காலம் வரை உறுதியாக இருந்து தமிழ்ச் சமுதாயத்திற்காகப் பணியாற்றியிருந்திருக்கிறார்கள். எவ்வளவோ பெரிய நெருக்கடிகள் வந்தபோதும்கூட, அந்தக் கொள்கையிலிருந்து விலகிச் செல்லாமல் இருந்தது சாதாரணமாக யாரும் செய்யக்கூடியதல்ல. அதிலும் வசதி படைத்தவர்கள், வசதி வந்த பிறகு அதைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் முயலுவார்கள். அதன் காரணமாக வசதி வந்ததும் அவர்களுக்கு பயமும் அச்சமும், சிலருக்கு பக்தியும்கூட வந்துவிடும். எப்படியாவது பதவியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும், வசதியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்று திடீரென்று பக்திகூட வந்துவிடும். ஆனால் மறைந்த திரு. ஆதித்தனாரைப் பொறுத்தவரையில், அவர் ஆரம்பத்தில் எப்படி இருந்தாரோ அப்படியே கடைசிவரை இருந்தார். அதுமட்டுமல்ல, அவர் அமைச்சராக இருந்தபோது—அவரோடு நான் நெருக்கமாக இல்லையென்றாலும், அந்த இயக்கத்தில் பங்கு பெற்றிருந்தவன் என்ற முறையில் பல சந்தர்ப்பங்களில் பழகக்கூடிய சிறிய வாய்ப்புகள் கிடைத்த நேரத்தில்—அவருடைய அபாரமான தன்மையை உணர முடிந்தது. அமைச்சராக இருக்கும்போது, ஏதோ கோப்புகள் வரும், அவைகளில் கையெழுத்துப் போடச் சொல்வார்கள், போட்டுவிடுவோம் என்று இல்லாமல், அந்தப் பதவியை வகித்த போதும் அவர் ஓர் ஆராய்ச்சி மனப்பான்மையோடு, ஒரு நுணுக்க உணர்வோடு, அதிலிருந்து ஏதாவது செய்ய முடியுமா என்ற எண்ணத்தோடே செயல்பட்டார். அது விவசாயத் துறையானாலும் சரி, கூட்டுறவுத் துறையானாலும் சரி, இவைகளின் மூலம் தொழில் வளர்ச்சிக்கு ஏதாவது செய்ய முடியுமா என்று எண்ணிப் பார்த்துச் செயல்பட்டிருக்கிறார். அந்த வகையில் அவர் ஒரு சிறந்த முன்னுதாரணமாக இருந்திருக்கிறார் என்பதை நான் இங்கே நினைவுகூரக் கடமைப்

பட்டிருக்கிறேன். இந்த நவீன காலத்திற்குத் தேவையான அடிப்படை மனப்பான்மை அவரிடம் இருந்தது. அதாவது தொழில் சிந்தனை—இண்டஸ்ட்ரியல் கல்ச்சர் அண்டு மைண்டு—அவரிடம் இருந்தது. உழைத்து முன்னேற வேண்டும், மற்ற மேலை நாடுகளையும் மிஞ்சக் கூடிய அளவுக்கு நமது நாட்டில் தொழிற்சாலைகளை நடத்த முடியும் என்ற எண்ணங்கள் அவரிடம் இருந்தன. மூலப் பொருள்கள் கிடைக்கவில்லை, மின்சாரம் கிடைக்கவில்லை என்ற காரணங்களைப்பற்றிக் கவலைப்படாமல் மூலப்பொருள் பற்றாக்குறை இருந்தபோதும், பின்தங்கிய மாவட்டத்தில் ஒரு பெரிய தொழிற்சாலையை ஆரம்பித்து, நாமெல்லாம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவுக்கு " உடை " மரத்தையே மூலப் பொருளாகக் கொண்டு பேப்பர் இன்டஸ்டிரியை நடத்த முடியும் என்று செய்து காட்டி வெற்றியை ஈட்டியவர் அவர். அவ்வாறு தொழில் துறையில் ஈடுபட்டபோதும் சரி, அமைச்சராக இருந்தபோதும் சரி, பத்திரிகையாளராக இருந்தபோதும் சரி, பொது வாழ்க்கையில் மற்றவர்களைவிட ஏதோ ஒரு வகையில் ஒரு தனித்தன்மை பெற்றவராக வாழ்ந்து காட்டினார். எதிலும் ஒரு நுட்பமான அணுகுமுறையும், மனப்பான்மையும், ஆராய்ச்சி மனப்பான்மையும், உழைத்து முன்னேற்றம் காண வேண்டும் என்ற உணர்வும் கொண்டவராக இருந்தார். அதிலும் தமது உழைப்பின் வெற்றி சாதாரண மனிதர்களைப் போய்ச் சேர வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். எந்தக் காரியத்தைச் செய்தாலும் சரி, எந்தத் துறையில் ஈடுபட்டாலும் சரி, அதன் மூலம் சாதாரண மக்களை, ஏழை எளிய மக்களைப் பயன்பெறச் செய்ய வேண்டும் என்று அவர் செயல்பட்டார் என்பதைப் பார்க்கும்போது, அவர் நமக்கெல்லாம் ஒரு சாதனையாக, ஒரு வரலாறாக இருந்திருக்கிறார்கள். அவரை நாம் இழந்திருக்கிறோம் என்ற ஒரு வகையான வேதனை இருந்தாலும், அவருடைய சாதனைகளெல்லாம் நமக்குத் தொடர்ந்து வழிகாட்டிகளாக இருக்கின்றன என்பதில் நாம் ஆறுதல் பெறுகிறோம். அவரின் மறைவால் வருந்தும் அவருடைய குடும்பத்தினருக்கும், அவர் ஈடுபட்டிருந்த பத்திரிகைத் துறையைப் பின்பற்றி செயலாற்றிவரும் அவர்தம் குமாரர்களுக்கும், அவருடைய வீட்டிலுள்ள அனைவருக்கும் அரசின் சார்பிலும் இந்த அவையின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

*திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்த பெரியவர் திரு. ஆதித்தனார் அவர்கள் தமிழ் நாட்டின் பண்பிற்கும், தமிழ் நாட்டின் உயர்விற்கும், தமிழ் இன உயர்விற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் என்பதை அவருடைய வாழ்விலிருந்து நாம்

நன்கு அறிகிறோம். அவர் தன்னுடைய இளமைக் காலத்திலேயே மேல் நாடுகளுக்குச் சென்று கல்வி பயின்று பெரும் வாய்ப்பைப் பெற்று பார்-அட்-லா பட்டம் பெற்றார். மேல்நாடுகளில் பயின்று இந்தியா திரும்பியிருந்தாலும், மேல்நாடுகளில் தங்கி அங்குள்ள உயர்வுகளையும், உணர்வுகளையும் பெற்றிருக்காமல், தமிழ் நாட்டினுடைய வளர்ச்சியே தன்னுடைய உயர்வு என்ற கருத்தைக் கொண்டு தமிழ் நாட்டு நலனில் தன்னை ஆட்படுத்திக்கொண்ட பெரியவர் மறைந்த திரு. ஆதித்தனார் அவர்கள். அவர் நினைத்திருந்தால், தான் பெற்றிருந்த பட்டத்தால், தனக்கு இருந்த தொழில் திறமையால், ஆற்றலால், அனுபவத்தால், தன்னை உயர்த்திக்கொண்டு அகில உலக வாணிப மேதையாக விளங்கியிருக்கலாம். தன்னுடைய தலைமையகத்தை இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற மேல்நாடுகளில் வைத்துக்கொண்டு உலகம் முழுவதும் தொடர்பு கொள்ளுகிற வகையில் அவர் வாழ்ந்திருக்கலாம். அப்படியில்லாமல், எந்தப் பதவியைப் பெற்றாலும் தான் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன், தமிழன் என்ற உணர்வை மறந்துவிடாமல் வாழ்ந்தார். இத்தகைய உணர்வுகளைத் தமிழ் நாட்டு மக்கள் பெற்றிருந்தாலொழிய, அவர்களுக்கு எதிர்காலம் கிடையாது என்ற நிலையிலே தமிழகத்திலே "நாம் தமிழர்" என்ற இயக்கத்தைத் தொடங்கி எல்லாப் பகுதிகளிலும் உள்ள மக்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்பிக்கொண்டிருந்தார்.

1964 ஆம் ஆண்டு நான் இந்த அவையில் உறுப்பினராக நுழைந்த போது, அவர் "நாம் தமிழர்" இயக்கத்தின் தலைவராக இருந்து செயல்பட்டதைப் பார்க்கிற வாய்ப்பைப் பெற்றேன். அப்போது தமிழ் வளர்ச்சிக்காகப் பேசியவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும், அவர்கள் பேசி முடிக்கும் வரை காத்திருந்து, பிறகு, தட்டிக்கொடுத்து ஊக்கப்படுத்தி அவரைப் பாராட்டிவிட்டுத் தான் சென்றிருக்கிறார் என்பதை நான் இப்போது நினைத்துப் பார்க்கிறேன். அவர் பெரும் பொறுப்புக்களை தமிழகத்திலே ஏற்றிருந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்திலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டு சட்டமன்றப் பேரவைத் தலைவராகவும், அமைச்சராகவும் இருந்தார். அவர் தன்னை ஓர் ஏழையாகவே நினைத்துக்கொண்டு, ஏழையைப் போலவே உடையை உடுத்திக் கொண்டு, தனக்கு இருக்கின்ற செல்வம், அனுபவம் எல்லாம் இந்த நாட்டினுடைய வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டுமென்ற உணர்வோடு செயல்பட்டதை நான் அவரோடு பழகுகிறபோது உணர்ந்திருக்கிறேன்.

தமிழகமும், தமிழக மக்களும் உயரவேண்டும் என்று நினைத்ததோடு மாத்திரமல்லாமல், தமிழ் இனத்தின் கலாச்சாரமும் உயர வேண்டுமென்று அவர் விரும்பினார். குறிப்பாக கிராமங்களில் சிறுவர்கள், அதுவும் படிக்காதவர்கள் விளையாடுகிற விளையாட்டு "சடுகுடு" விளையாட்டு. அந்த விளையாட்டை பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கொண்டுவரச் செய்து அதற்கான போட்டிகளை மாநில அளவில் ஏற்படுத்தி, அதற்காக தானே பணத்தை ஒதுக்கீடு செய்து, தமிழக விளையாட்டை தேசிய விளையாட்டின் தரத்திற்கு உயர்த்திய பெருமை அவருக்கு உண்டு. இதற்குக் காரணம் அவருக்கு இருந்த தமிழ்ப் பற்றும், தமிழ் நாட்டுப் பற்றும், தமிழ்க் கலைகளில் இருந்த பற்றும், தமிழ் விளையாட்டுக்களில் இருந்த பற்றும்தான் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

இங்கிலாந்து சென்று படித்துத் தாயகத்திற்குத் திரும்பியிருந்ததால், தான் ஒரு தமிழர் என்ற உணர்வோடு செயல்பட்டு, தன்னுடைய மாவட்டமான திருநெல்வேலியில் ஓர் ஆலையைத் தொடங்கி வைத்தார். அது மட்டுமல்லாமல், தான் பிறந்த ஊருக்குப் பக்கத்திலே உள்ள திருச்செந்தூரில் ஒரு கல்லூரியை நிறுவினார். தான் பிறந்த ஊர், தான் பிறந்த மாவட்டம், தான் பிறந்த தமிழ்நாடு, தான் பிறந்த இந்திய நாடு ஆகியவற்றுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்ற உணர்வைப் பெற்று அவர் செயல்பட்டது பாராட்டத்தக்கது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் எடுத்துக்கூறியதைப் போல, பத்திரிகை உலகத்திலே அவர் புத்துணர்ச்சியையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தினார் என்றால், அது மிகையல்ல. பத்திரிகைகள் எல்லாம் படித்தவர்களுக்காக மட்டும் என்று இருந்த நிலைமையை மாற்றி, பாமரர்களும் படிக்கிற விதத்திலே பத்திரிகையை நடத்தி, அதன் மூலம் பாமரர்களுக்கு அரசியல் உணர்வையும், தேசிய உணர்வையும் ஏற்படுத்திய பெருமை அவருக்கே உரியது. மற்ற பத்திரிகைகள் பின்பற்ற வேண்டிய நிலையில் அவர் பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்தார் என்பதை நாம் பார்க்கிறோம். பத்திரிகைக் காகிதத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, தானே "சன் பேப்பர் மில்ஸ்" என்ற ஆலையை ஏற்படுத்தினார். அதைப்போலவே மூலப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, உடை மரத்தை அதிகமாகப் பயிரிடச் செய்து அதைத் தானே விலைக்கு வாங்கி அதைக் கொண்டு காகிதம் உற்பத்தி செய்கிற முறையைக் கண்டு பிடித்தார். இப்படியெல்லாம் புதிய உணர்வோடும் தமிழ் நாட்டுப் பற்றோடும் செயல்பட்டு பல்லாண்டுகள் தமிழ் நாட்டிலே வாழ்ந்து சிறந்த

முறையில் பணியாற்றியிருக்கிறார்கள். அதற்காக தமிழ்நாடு என்றும்
அவருக்கு கடப்பாடு உடையதாக இருக்கிறது. அவரைப் பின்பற்றி தமிழ்
மக்கள் தமிழ் உணர்வைப் பெற்று செயல்படுவது அவருக்கு நாம் செய்யும்
சிறந்த கைமாறாக அமையும் என்று சொல்லி, திராவிட முன்னேற்றக் கழகத்
தின் சார்பிலே எங்களது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்து,
அவருடைய குடும்பத்திற்கும் அன்னாரை இழந்து தவிக்கிற அவருடைய
அருமைப் புதல்வர்களுக்கும் ஆறுதல் கூறி அமைகிறேன். வணக்கம்.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே, மறைந்த பெரியவர் திரு. ஆதித்தனார் அவர்களுடைய
குடும்பத்திற்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்துக்
கொள்கிறேன். பெரியவர் திரு. ஆதித்தனார் அவர்கள், "தினத் தந்தி"
பத்திரிகை மூலம் ஆற்றிய தொண்டைப்பற்றி கல்விக் கண்ணோட்டத்திலே
பார்த்து நாங்கள் ஆச்சரியப்பட்டிருக்கிறோம். அதை நாம் பாராட்டக் கடமைப்
பட்டிருக்கிறோம். முக்கியமாக, முதியோர் கல்வியைப் பொறுத்த வரையில்,
அரசு தன்னுடைய திட்டங்களின் மூலமாகச் செயல்படுத்த வேண்டுமென்று
பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருந்தாலும், பெரியவர் திரு. ஆதித்தனார்
அவர்கள் "தினத் தந்தி" பத்திரிகையின் மூலம் மக்களிடையே கல்வியைப்
பரப்பிய முறையைப் பார்த்து அரசே ஆச்சரியப்படும் நிலை இருந்தது எ
பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது.

பாமர மக்கள், எளிய மக்கள், அரசியல் விஷயங்கள் மட்டுமல்லாமல் பொது
கருத்துக்களையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தை முதன் முதலில்
ஏற்படுத்தியவர் மறைந்த திரு. ஆதித்தனார் அவர்கள். ஓரளவிற்கு எழுத்துக்
களை மட்டும் தெரிந்து கொண்டவர்கள் புரிந்துகொள்ளுகிற முறையில் செய்தி
களை அமைத்து அதை அவர்கள் கூட்டிப் படிப்பதன் மூலம் படிக்கத் தெரி
யாதவர்களும் கேட்டுத் தெரிந்துகொள்கிற அளவில் செய்திகளைப் போட்டு
படிக்கிற ஆர்வத்தை மக்களிடையே ஏற்படுத்திய மாட்சி அவரையே சாரும்.

அது மட்டுமல்லாமல் பத்திரிகைகளுக்கு வழிகாட்டுகிற குறிப்பேட்டை
எழுதி வெளியிட்டு, அதன் மூலம் பத்திரிகைத் துறையில் உள்ளவர்களுக்கு ஒரு
சிறந்த நூலை அமைத்துக் கொடுத்திருக்கிறார். இது அனைவரும் பாராட்டக்
கூடியது.

அதைப் போலவே பள்ளிகளில் படிக்கின்ற மாணவ, மாணவியர்களுள் பள்ளி
இறுதித் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறுகிறவர்களுக்கு
பரிசுத் திட்டத்தைத் தீட்டி, முதல் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியைப்

பேட்டி கண்டு அவர்களுடைய புகைப்படங்களையும், அவர்களுடைய குடும்பத்
தினருடைய புகைப்படங்களையும் பத்திரிகையில் வெளியிட்டு அதன் மூலமாக
மாநிலம் முழுவதும் உள்ள மாணவர்களிடையே மதிப்பெண் பெறுவதில் ஆரோக்
கியமான போட்டி மனப்பான்மையை உருவாக்கினார். இது ஒரு மிகப் பெரிய
தொண்டு என்பது என்னுடைய கருத்து.

அது மட்டுமல்லாமல், தன்னுடைய இறுதிக் காலத்திலே தாழ்த்தப்பட்டவர்
கள், பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகியவர்களிடையில் பிளவு அதிகமாக இருப்
பதை உணர்ந்து, அப்படி பிளவு இருப்பதால் அவர்களுடைய முன்னேற்றம்
தடைப்படுகிறது என்பதை அனுபவரீதியாக உணர்ந்து அவர்களையெல்லாம்
ஒரே அணியில் கொண்டுவர வேண்டுமென்று கருதி, தாழ்த்தப்பட்டோர்-பிற்
படுத்தப்பட்டோர் அணியை அமைக்க முயற்சி எடுத்திருக்கிறார். ஆனால்,
துரதிருஷ்டவசமாக அது நிறைவேற முடியாத நிலையிலே அவர் நம்மை
விட்டுப் பிரிந்து இருக்கிறார். ஆகவே தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்
பட்டவர்களும் ஒன்றாக இணைந்து செயல்பட்டால் முன்னேற முடியும் என்று
அவர் காட்டிய அந்த வழியை தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட
மக்களும், அவர்களுடைய தலைவர்களும், பிரதிநிதிகளும் பின்பற்றினால்,
நிச்சயமாக அது சமுதாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உறுதுணையாக
அமையும் என்பது என்னுடைய கருத்து.

மறைந்த பெரியவர் திரு. ஆதித்தனார் தன்னுடைய இறுதிக் காலத்திலே
துறவியைப்போல வாழ்ந்தார் என்று அவரோடு நெருக்கமாக இருந்தவர்கள்
சொல்லக் கேட்டிருக்கிறோம். அப்படி பற்றற்ற வாழ்க்கை வாழ்ந்த காலத்திலும்
அறிவியல் ரீதியாகச் சில ஆராய்ச்சிகளை அவர் மேற்கொண்டார் என்ற செய்தி
யையும் பார்த்தோம். அதாவது, காற்றின் விசையைப் பயன்படுத்தி சில கருவி
களைத் தயாரித்தார் என்று படித்தேன். அப்படிப்பட்ட ஆராய்ச்சிகளை
அவர் தனிப்பட்ட முறையிலே செய்திருந்தால், அது தமிழகத்திற்கு உதவு
மானால், அதை ஆராய வேண்டியது அரசினுடைய பொறுப்பு. ஆகவே
அவருடைய ஆராய்ச்சிக் குறிப்பைப் பயன்படுத்தி, அதை தமிழ் நாட்டின்
வளர்ச்சிக்குப் பயன்படுத்த முடியுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டுமென்று
இந்தச் சமயத்தில் கேட்டுக்கொண்டு மறைந்த பெரியவர் திரு. ஆதித்தனார்
அவர்களின் குடும்பத்திற்கு எங்கள் அணியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலையும்
ஆறுதலையும் தெரிவித்து அமைகிறேன்.

[1981 ஆகஸ்ட் 26

(முற்பகல் 10-50)

திரு. ஏ. ஜே. தாஸ் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்த திரு. ஆதித்தனார் அவர்கள் காங்கிரஸ் கட்சியிலே நீண்ட நாட்கள் பணியாற்றியவர்கள். காங்கிரஸ் கட்சியிலே நீண்ட நாட்கள் பணியாற்றிய பிறகு, கருத்துவேறுபாடுகள் காரணமாக வெளியே வந்து, அவர் "தினத் தந்தி" பத்திரிகையை ஆரம்பித்து இன்றைக்கு பத்திரிகைத் தொழிலிலே, அந்தத் துறையிலே மிகச் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளார்கள். திரு. ஆதித்தனார் அவர்களுடைய பத்திரிகை இன்றைக்குப் பாமர மக்கள் மத்தியிலே, சாதாரணமான ரிக்ஷாத் தொழிலாளர்கள் மத்தியிலே பரவியிருக்கிறது. தொழிலாளர்கள் அந்தப் பத்திரிகையைக் காலையிலே வாங்கிக்கொண்டு செல்கிறார்கள். அதை மற்றத் தொழிலாளர்களுக்கும் படித்துக் காட்டுகிறார்கள். ஒருவர் ஒரு பத்திரிகையை வாங்கிக்கொண்டு சென்றால், பலர் அந்தப் பத்திரிகையைப் படித்துக்கொள்கிறார்கள். அதன் மூலம் இன்றைக்கு அவர்கள் அரசியலைப் பற்றித் தெரிந்துகொள்கிறார்கள். இன்றைக்கு அரசியல் நிலைமைகள் எப்படி இருக்கின்றன என்பதைச் சாதாரண பாமர மக்கள் கூடப் புரிந்துகொள்ளக் கூடிய அளவிலே அந்தப் பத்திரிகை மிகச் சிறப்பான ஒரு பத்திரிகையாக விளங்கிக்கொண்டிருக்கிறது. அந்தப் பத்திரிகை எந்த அளவிலே வளர்கிறது என்று அவர்கள் நேரடியாகப் பார்த்துக் கொண்டார்கள்:

திரு. ஆதித்தனார் அவர்கள் சோவியத் ரஷியா சென்று திரும்பிய பிறகு, விவசாயிகள் சங்கம் என்று ஒரு சங்கம் ஆரம்பித்தார்கள். அப்படி அவர்கள் அந்தச் சங்கத்தை ஆரம்பித்தபோது, அவர் சில நண்பர்களை அழைத்து, இந்த விவசாயிகள் சங்கத்திற்காக தீவிரமாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். காங்கிரஸ் கட்சியிலே இருந்தவர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். அவர் கட்சிக்கு அப்பாற்பட்டவராக இருந்ததால், காங்கிரஸ் கட்சி நண்பர்கள் அவருடைய கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமைகள் இருந்தன.

தமிழகத்திலே ஏதாவது புரட்சிகரமான செயலைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு இருந்தார்கள். தமிழகத்தில் அவர் பேசும்போதெல்லாம், நாம் தமிழர்கள், நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஒரு நாள் திடீரென்று 'நாம் தமிழர்' என்ற கட்சியை உருவாக்கி செயல்படத் தொடங்கினார். தமிழகத்திலே 'நாம் தமிழர்' என்ற உணர்ச்சியை உருவாக்க வேண்டுமென்றே மிக வேகமாக அவர் செயல்படத் தொடங்கினார்.

1981 ஆகஸ்ட் 26] [திரு. ஏ. ஜே. தாஸ்]

1967 ஆம் ஆண்டுக்குப் பின்னர், பேரறிஞர் அண்ணா அவர்களின் கட்சி ஆட்சிக்கு வந்தபோது, அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது, அந்த ஆட்சியிலே கலந்துகொண்டார்கள். அப்போது ஏற்பட்ட நிர்பந்தங்கள் காரணமாக 'நாம் தமிழர்' கட்சியை நிறுத்திவைத்து இந்தக் கட்சியிலே ஒன்றுபட்டு ஈடுபட்டார். அதன் பிறகு தமிழகத்திலே 'தினத் தந்தி' பத்திரிகையின் வாயிலாக எந்த அளவுக்குப் பாமர மக்களை ஈர்க்க வேண்டுமோ, அந்த அளவுக்கு ஈர்த்து தமிழகத்திலே உள்ள பாமர மக்கள் மத்தியிலே சிறப்பாக விளங்கினார்கள். தமிழகக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக அன்னாரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

THIRU J. M. MIAKHAN : Mr. Deputy Chairman, Sir, I associate myself with the sentiments expressed by the other hon. Members regarding the demise of our beloved Thiru Aditanar. He was a very good friend of my father and I think that I can take pride in saying that it was my father who made him merge with the D.M.K. and strengthen the Party. It was on my father's advice that he left the 'Naam Thamizhar' movement and joined the D.M.K. and strengthened that Party.

The Hon. the Leader of the House and the other Members rightly mentioned about his capabilities as a scholar, a lawyer and an industrialist. He took pride in everything that belonged to India. If he found any ancient manuscripts in which Indians could take pride, he would immediately publish them. He was also research-minded. Especially, when he was Minister for Agriculture, he tackled the problem of conserving the ground-water instead of allowing the ground-water taken from great depth to go waste into the soil. Somebody suggested to him that the water could be conserved if something like a trough was constructed. Immediately, he arranged for the construction of such troughs and put them for experimental usage for conserving the water. That system worked well and later, that system was internationally accepted to be a very good system for conserving water for irrigation. In the same manner, in respect of various other things also, he was always research-minded. It was he who brought the newspaper to the people who might have stopped their education with the III Standard

so as to take out a living. In his newspaper, he used words like 'திடீர்' and 'படீர்' so that the news could be followed even by people who had not had much of education. Even educated people found some interesting items in his newspaper. I have been a regular reader of that newspaper because I am interested in the cartoons and tit-bits which appear in that paper. His newspaper suited the tastes of people belonging to all strata of society, whereas the other newspapers used to cater to the needs of particular sections of society having particular interests. That was the main reason why his newspaper rose to such heights in the matter of circulation that it created a record in the circulation of language-newspapers in India. The headlines, etc., were printed in bold types in his newspaper so that the news-items could easily catch everyone's eyes. Even a poor man would buy the paper and read the news-items coming the words letter by letter while two or three other persons would be listening to him. In short, he was research-minded in every field of activity and he felt a pride in beign an Indian and a Tamilian.

On behalf of my Party, I associate myself with the sentiments expressed in this House and our Party conveys its condolences to the bereaved family. Thank you.

திரு. செ. முத்துசாமி : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டினுடைய தலைசிறந்த பத்திரிகையாளரும், அரசியலில் முன்னேறி பேரறிஞர் அண்ணா அவர்கள் அமைச்சரவை அமைத்தபோது, பேரவைத் தலைவராகப் பணியாற்றி, பின்னர் அமைச்சராகவும் பணியாற்றி, இன்றைக்குத் தமிழ் நாட்டில் மறைந்துவிட்ட தலைவர் திரு. ஆதித்தனார் அவர்களுடைய மறைவுக்கு ஆசிரியர்கள் சார்பாக நான் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். பத்திரிகை உலகத்திலே ஒரு தனிப் பாதையை உருவாக்கிய பெருமைக்குரியவர்கள் அவர்கள். பத்திரிகை நடத்துவதிலே சிரமங்கள் உண்டு. பல பேர்கள் பத்திரிகை நடத்தி, அதைச் சீராக நடத்த முடியாமல் இழுத்து மூடியிருக்கிறார்கள். திரு. ஆதித்தனாரைப் பொறுத்த வரையில், அவருடைய பத்திரிகை மக்கள் விரும்புவதற்குரிய முறையில், பரபரப்பூட்டும் முறையில், தொழிலாளர்களுக்கு ஏற்ற முறையில் இருந்தது. தமிழ் நாட்டில் பெரும் தொழில் அதிபராக விளங்கிய ஆற்றலுடையவர். தமிழ்

நாட்டிலே தமிழிலே பத்திரிகை வெளியிடுவதிலே பல நிறுவனங்கள் ஈடுபட்டன. அப்படி தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவந்து, பின்னர் இழுத்து மூடப்பட்டிருக்கின்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் திரு. ஆதித்தனார் அவர்கள் ஆங்கிலப் பத்திரிகைகள் போல, தமிழ்ப் பத்திரிகைகளையும் நல்ல முறையிலே நடத்த முடியும் என்பதை உருவாக்கிக் காட்டினார்கள். அதுமட்டுமல்ல. 'தினத்தந்தி' யிலே வருகின்ற தலைப்புகளை வைத்துக்கொண்டு விஷயங்களை அறிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு வார்த்தைகள் இருக்கும். அந்த அளவுக்கு சாதாரண மக்கள் மத்தியிலே சக்தி மிக்க பத்திரிகையாக இருந்தது.

இரண்டாவது, கார்ட்டூன் வரைவதிலே, கார்ட்டூன் மூலமாக கருத்துக்களைச் சொல்வதிலே அந்தப் பத்திரிகை சிறந்து விளங்குகிறது. அந்தப் பத்திரிகைக்குப் பின்னர் 'மாலை முரசு' பத்திரிகையும், அதற்குப் பின்னர் 'ராணி' வாராந்திரப் பத்திரிகையும், அதற்குப் பின்னர் 'ராணி முத்து' பத்திரிகையும் வந்திருக்கின்றன. பத்திரிகைத் துறையிலே திரு. ஆதித்தனார் ஒரு பெரிய சக்தியாக விளங்கினார்கள். அதே சமயத்திலே அந்தத் துறையிலே ஒரு புதிய வழிமுறையை வகுத்தார்கள். இங்கே அமைச்சராக இருந்த போது, கேள்வி-பதில் நேரத்தில்போதுகூட அவர்கள் ஏதாவது கிறுக்கிக்

(முற்பகல் 11.00)

கொண்டே இருப்பார்கள். நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். ஏன் இப்படி கிறுக்கிக் கொண்டிருக்கிறார் என்று கேட்டதுகூட உண்டு. ஒவ்வொன்றிலும் ஆணித்தரமாக, தெளிவாகப் பதில் சொல்லக்கூடிய அமைச்சராக இருந்தார்கள். பிரச்சினைகளில் குழப்பமில்லாமல் தெளிவாகப் பதில் சொல்லக்கூடிய ஆற்றல் அவருக்கு இருந்தது. எந்தத் துறையிலும் புதிய வழி வகைகளைக் காண வேண்டுமென்ற துடிப்போடு விளங்கிய அவர், இன்று நம்மிடையே இல்லை. அவரை இழந்துவிட்டோம். அவருடைய குடும்பத்தார், அவர் இடத்தைப் பூர்த்தி செய்ய ஆற்றல் பெற வேண்டுமென்று தெரிவித்து, ஆசிரியர்கள் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, விடை பெறுகிறேன்.

திரு. வி. வி. வி. ஆனந்தம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மறைந்த மேதை திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தான் மேற்கொண்ட ஒவ்வொரு பணியிலும் முன்னோடியாக வாழ்ந்தார். அவர் முதன்முதலாக ஆரம்பித்த பத்திரிகைத் தொழிலில் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்து வந்தார். குறிப்பாக அந்தக் காலத்தில், பத்திரிகைகள் எல்லாம் சென்னையிலிருந்து தான் வெளி வந்தன. முதன்முதலாக தமிழகத்தில், தென் மாவட்டமான

மதுரையில் பத்திரிகையை ஆரம்பித்த பெருமை அவரைத்தான் சாரும். பின்னர், மற்ற மாவட்டத் தலைநகரங்களிலும் அவர் பத்திரிகைகளை ஆரம்பித்தார். முன்பெல்லாம் செய்திகள் ஒரு நாள், இரண்டு நாட்கள் கழித்துத் தான் மதுரைக்குத் தெரியும். ஆனால் 'தினத் தந்தி' பத்திரிகையை அவர் ஆரம்பித்தவுடன், உடனுக்குடன் செய்திகள் கிடைக்கும் வாய்ப்பு கிடைத்தது. டெலிபிரின்ட்டர் இயந்திரத்தைப் பயன்படுத்தி, செய்திகளை உடனடியாகத் தெரிவிக்க வகை செய்யப்பட்டது. சுருங்கச் சொல்லி, விளங்க வைத்தல் என்ற முறையில், தந்தி என்ற பெயருக்கேற்ற முறையில் மிகச் சுருக்கமாகச் செய்திகளை வெளியிட்டு வந்தார்கள். அவருடைய பத்திரிகையை பாமர மக்கள் விரும்பிப் படித்து, அரசியல் அறிவு பெற்றார்கள். பாமரர்கள் மட்டு மல்ல, மற்றவர்களும்கூட தினத் தந்தியைப் படித்தார்கள். அவசரமாகச் செய்திகளை அறிய விரும்பியவர்களுக்கு 'தினத் தந்தி' உதவியது. அதனால் அவர்களும் அதை விரும்பிப் படித்தார்கள்.

அவர் விவசாய அமைச்சராக இருந்தபோது, நல்லதொரு காரியத்தைச் செய்தார். மணற்பாங்கான நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் பகுதியில் நெல் விவசாயம் செய்ய முடியாது என்ற நிலையில், அதற்காக ஒரு புதிய முறையை வகுத்துத் தந்தார். அந்த இடங்களில், 2 அடி ஆழத்தில் தண்ணீர் ஊறாத தளத்தை ஏற்படுத்தி, அதற்குமேல் மண் கொட்டி, நெல் உற்பத்தி செய்ய புதிய வழிமுறைகளை வகுத்துத் தந்தார். அவருடைய தரும நிதியிலிருந்து கல்லூரியும், மற்றும் பல அறச் சாலைகளும் நிறுவப்பட்டு, நல்ல முறையிலே நடந்து வருகின்றன. தொழில் துறையிலும், நாட்டுக்கு வேண்டிய சிமென்ட், காகிதத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, நாட்டில் தொழில் வளம் ஏற்பட உறுதுணையாக இருந்தார். அன்னாருடைய மறைவு தமிழகத்திற்குப் பேரிழப்பாகும். காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் அவருடைய மறைவிற்கு எங்களுடைய இரங்கலைத் தெரிவித்து, அவருடைய குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மரியாதைக்குரிய திரு. சி. பா. ஆதித்தனார் அவர்களுடைய மறைவிற்காக இரங்கல் தெரிவிக்க நான் கடமைப்பட்டவனாவேன். தமிழ் நாட்டிலே, தமிழர் ஒருவர் ஒரு பத்திரிகையை ஆரம்பித்து, அதில் ஏனையவர்களை விஞ்சக்கூடிய அளவிற்கு நடத்த முடியுமென்பதை எடுத்துக் காட்டிய பெரியவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்களாவார்கள். அவருடைய பெயர் ஆதித்தனார் என்பதைப் போலவே, பத்திரிகை உலகில் அவர் ஒரு சூரியனாகவே திகழ்ந்தார். ஒரு சிலரால்தான் பத்திரிகைகளை நடத்த முடியும், ஒரு சார்பு

உடையவர்களால்தான் பத்திரிகைகளை நடத்த முடியும் என்ற நிலையை மாற்றி, ஏன் நம்மாலே நடத்த முடியாது என்பதைச் சவாலாக ஏற்று, அவர் பத்திரிகையை—'தினத்தந்தி'—தொடங்கி, சிறந்த பாராட்டு பெற்றவர்களாவார்கள். பெரியாரிடம், தினத்தந்தியில்' ஜோசியப் பகுதி வருகிறதே, உங்களுக்குப் பிடித்தம் இல்லாத பகுதி வருகிறதே, என்றாலும் நீங்கள் அதைப் பாராட்டுகிறீர்களே" என்று ஒருமுறை கேட்டபோது, அவர் அதற்கு' விடை அளித்தார். ஒரு தமிழன் ஒரு பிரிவினரைத் தவிர வேறு யாராலும் பத்திரிகை நடத்த முடியாதென்று கூறப்படும் நிலையில், பத்திரிகையை ஆரம்பித்து, நடத்தத் தொடங்கி, வெற்றிபெற்றிருக்கிறான்; என்னுடைய கொள்கைக்கு மாறுபட்ட கருத்து அதில் இருந்தாலும், அதைப்பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொல்லி, பெரியார் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். பெரியார் அவர்களால் பாராட்டப்பட்டவர்கள் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள். அவர் ஆரம்பித்த பத்திரிகையின் பெயர் 'தந்தி'. பெயருக்கேற்ப, முன்கூட்டியே செய்திகளைச் சுருக்கமாகத் தந்து, விளங்க வைக்கும் பாங்கைப் பெற்றிருந்தது. அவ்வேட்டில் மாணவர்கள் படக்கதை படிக்கலாம், வயோதிகர்கள் ஜோசியப் பகுதியைப் படிக்கலாம், கல்வியாளர்கள் அவர்களுக்குரிய பகுதியைப் படிக்கலாம், அரசியல்வாதிகள் அவர்களுக்குரிய பகுதியைப் படிக்கலாம். வெளிநாட்டு அரசியல், உள்நாட்டு அரசியல், சினிமா பகுதி என்று பல பகுதிகளை வெளியிட்டு, மற்ற எந்தப் பத்திரிகையும் பின்பற்றாத நிலையில், அதைப் பின்பற்றி, இன்றைக்கு அதை எல்லாப் பத்திரிகையாளர்களும் பின்பற்றும் நிலையை வகுத்துத் தந்திருக்கிறார்கள். தமிழ் இனத்திற்குப் பெருமையைத் தேடித் தந்த பெரியவராக இருந்தார்கள். செயற்கரிய செய்வர் பெரியர்—அந்த முறையில் பெரியவராக இருந்தார்கள். செயற்கரிய செய்கலாதார் சிறியர். தங்களால் இயன்றதைக்கூட செய்ய முடியாத சிறியவர்கள் இருக்கக்கூடிய இன்றைய நாட்டிலே, அவர்கள் விடாப்பிடியாக இருந்து சிரமங்களைப் பொருட்படுத்தாமல் வெற்றி பெற்றார் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்ற செய்திகளை எல்லாம் அனைவரும் தெரிவித்திருக்கிறார்கள். பெரிய பெரிய சான்றோர்கள், கல்வியாளர்கள், எழுதிய புத்தகங்கள், கதைகள், சிறுகதைகள், நாவல்கள் ஆகியவற்றை—பெரிய பெரிய புத்தகங்களை—மலிவுப் பதிப்பாகக் கொண்டு வந்து, அவற்றை எல்லோரும் படிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியவர் அவர்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுகூட, அவர் அமைச்சராக இருந்த நேரத்திலும் பெருக்கத்து வேண்டும் பணிவு என்ற முறையில், அகம்பாவம் இல்லாத ஒருவர் அவரைப் பார்க்கச் சென்றாலும், அவரிடம் இவர்

காட்டிய பணிவு, குழைவு, அன்பு ஆகியவற்றைப் பார்க்கும்போது, அவர் எவ்வளவு வசதி படைத்தவராக இருந்தாலும், பெரிய தொழில் மேதையாக இருந்தாலும், மேலே போகப்போக பணிவு இருக்க வேண்டுமென்பதற்கு இலக்கணமாக இருந்தார்கள் என்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆசிரியர்கள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் ஆகியோர்களின் பிரச்சினைகளை எல்லாம் தந்தியிலே வெளியிட்டு, அவர்களுக்கு ஆக்கம் அளித்தவர்கள். ஒரே நேரத்தில் மாநிலம் முழுவதும் செய்தியைப் பரப்பும் விதத்திலே 'தினத் தந்தி' 8 இடங்களிலிருந்தும், மாலை முரசு 6 இடங்களிலிருந்தும் வெளி வரச் செய்தார்கள். செய்திகளை அவ்வப்போது தெரிவித்து, எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தவர்கள், மாணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர்கள் அவர்கள். அப்படிப்பட்ட மேதை இன்றையதினம் நம்மிடம் இல்லை என்பதை நினைத்துப் பார்க்கும்போது, உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது:

கடைசியாக ஒன்றே ஒன்று. 'நாம் தமிழர்' இயக்கத்தை ஆரம்பித்து மக்களுக்குத் தமிழ் உணர்வையூட்டி அவர் அதை வளர்த்த போது, ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடும், காரும் வேண்டுமென்று பேசினார். அது நடைபெறுமா, நடைபெறாதா என்பது வேறு. 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்ற முறையில் அவர்கள் அந்த உணர்வை வெளிக்காட்டினார்கள். தமிழர்களுக்காக, தமிழ் இனத்திற்காக, தமிழ் நாட்டிற்காக, தமிழ்க் கலாச்சாரத்திற்காக, தமிழ்ப் பண்பாட்டிற்காக, தமிழ் உயர்விற்காக நாளும் உழைத்த அவர் மறைந்துவிட்டார். அவர் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அமைகிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் 1905 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27 ஆம் தேதி பிறந்தவர். ஸ்ரீவைகுண்டத்திலும், திருச்சியிலும் கல்வி கற்ற பின்பு, லண்டனில் பார்-அட்-லா படித்துத் தேறி இந்தியா திரும்பி வழக்குரைஞராகப் பணியாற்றினார்.

1947 முதல் 1953 வரை மற்றும் ஏப்ரல் 21, 1964 முதல் பிப்ரவரி 22, 1967 வரை இந்த அவையின் உறுப்பினராகவும், 1957 முதல் 1962 வரை மற்றும் 1967 முதல் 1976 வரை சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும் இருந்தார். 1967 மற்றும் 1968 ஆம் ஆண்டுகளில் சட்டப் பேரவைத் தலைவராக இருந்தார். பேரவைத் தலைவராக இருந்தபோது பேரவை விதிகளைத் தாமே தமிழாக்கம் செய்து, முதன் முதலில் அதிகார பூர்வமான தமிழ் விதி முறைகளை உருவாக்கியவர். 1969 முதல் 1973 வரை கூட்டுறவுத் துறை அமைச்சராகவும், 1973 முதல் 1976 வரை வேளாண்மைத் துறை அமைச்சராகவும் இருந்தார்.

கோயில்களில் உயிர்ப்பலி செய்வதைத் தடுக்கும் சட்ட முன்வடிவு இவரால் தனி உறுப்பினர் மசோதாவாக அறிமுகப்படுத்தப்பட்டு, 1950 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. தமிழர்கள் பெரும்பாலும் ஞாபக மறதி அதிகமுள்ளவர்கள் என்பதாலே 'நாம் தமிழர்கள்' என்பதை அடிக்கடி நினைவுபடுத்த வேண்டுமென்ற அடிப்படையில் 'நாம் தமிழர்' என்ற கட்சியைத் தொடங்கி நடத்தியவர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பேரன்புக்குப் பாத்திரமானவர். நான் அவருடைய மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கிற வகையில் ஒரு கவிதை வரியை அவருடைய பத்திரிகையில் எழுதியிருந்தேன். "பைந்தமிழ் நாட்டுப் பாமர மக்களின் இடதுகைப் பெருவிரல் இழந்த ரேகையை மீட்டுக் கொடுத்த மேலோன்" என்று அதில் சொல்லியிருந்தேன். பாமர மக்களும் பத்திரிகையைப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியவர், ஆற்றல் மிக்கவர், தொண்டு செய்தவர். "வெயில் தரும் அந்த ஆதித்தன் அஸ்தமனத்தில் விழுவான் எழுவான் ஆயினும் இந்த ஆதித்தன் என்றுமே இருப்பான்" என்று அவருடைய பத்திரிகையில் நான் எழுதியிருந்தேன்.

தமிழ் தினப் பத்திரிகையான 'தினத் தந்தியை'யை நிறுவியவர். 'தமிழ்ப் பேரரசு' என்னும் புத்தகத்தின் ஆசிரியர். பாமரர்களும் பத்திரிகை படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியவர். தொழிலாளர்களிடமும் தொழிலிலும் மிகுந்த அக்கறை கொண்டவர்.

அவரது மறைவால் தமிழ்நாடு ஒரு தலைசிறந்த பத்திரிகையாளரையும் நல்ல தமிழ் குடிமகனையும் இழந்து விட்டது.

அன்னாரது மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்:

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் 2 நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மறைந்த பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், இந்த அவை 15 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் முற்பகல் 11-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

அவை மீண்டும் கூடியது:

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

(முற்பகல் 11.30)

3. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கீழ் மேட்டூர் நீர் மின் திட்டம்.

* 1 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) காவிரி ஆற்றின் குறுக்கே, கீழ்மேட்டூர் நீர் மின் திட்டத்தின் கீழ், நீர் மின் நிலையங்களை நிறுவ அரசு பரிசீலித்து வருகிறதா ?

(இ) ஆமெனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (இ) : கீழ்மேட்டூர் நீர் மின் திட்டத்திற்கு செப்டம்பர் 1980-ல் மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் முன்னமே ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு என்ன ? எவ்வளவு கால அளவிலே இத்திட்டம் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ? இதனால் எந்த அளவுக்கு மின் உற்பத்தி அதிகரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இத்திட்டத்திற்கு 89.72 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1983 டிசம்பரில் ஒரு யூனிட் மின் உற்பத்தியைத் தொடங்கும். 1985 செப்டம்பரில் எல்லா யூனிட்களும் மின் உற்பத்தியைத் தொடங்கும். எல்லா யூனிட்களும் மின் உற்பத்தியைத் துவங்குகின்றபோது, ஆண்டு ஒன்றுக்கு 54 கோடி யூனிட்கள் மின்சக்தி கிடைக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இதுபோன்ற மின் உற்பத்தியைச் செய்யும் அளவுக்கு எங்கெங்கெல்லாம் நீர்வளம் இருக்கிறதோ அந்த இடங்களில் கிடைக்கும் நீர் வசதியைப் பயன்படுத்தி தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலேயும் இதுபோன்ற மின்திட்டம் செயல்படுத்தும் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இத்தகைய திட்டம் மிகவும் நவீன திட்டமாகும். 'பால் டர்பைன்' என்பது ஓடுகிற தண்ணீரில் 14 அடி உயரம் இருக்கும் அளவிலே, ஆற்றுப்படுகையிலே இந்த இயந்திரத்தை வைத்து செய்கிறோம். இது நல்ல முறையிலே இயங்குகிறதா என்று பார்த்து, அதற்குப் பிறகு வேறு ஆற்றுப் படுக்கைகளிலே இத்தகைய திட்டத்தைச் செயல்படுத்தலாமா என்று முடிவு எடுக்கப்படும்.

THIRU G. VASANTHA PAI : Will the Hon. Minister clarify whether there is any scheme for having sub-terranean power station, especially when power is to be generated from lower levels in the same river which is flowing from above? Will the Government consider the feasibility of having sub-terranean power station, so that it may not affect the environment ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, there is no such proposal at present.

திரு. ம. சங்கரலிங்கம் : கீழ்மேட்டூர் நீர்மின் திட்டத்திற்கு 89.72 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதில் மத்திய அரசினுடைய உதவி ஏதாவது உண்டா ? நாம் உதவி கோரியிருக்கிறோமா ? இதுபோன்ற திட்டங்களை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு ஒரு கமிஷன் மூலம் பணம் ஒதுக்குகிறது என்றெல்லாம் சொல்கிறார்கள். நமக்கு அதிலிருந்து எவ்வளவு உதவி கிடைக்கும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தத் திட்டம் மாநில அரசுத் திட்டத்தின் கீழ் வருவது. மத்திய அரசின் உதவியைப் பொறுத்த வரையில், மாநில அரசு பல்வேறு இனங்களில் செய்கின்ற செலவுகளின் அடிப்படையில், நம்முடைய மாநிலத்திற்கு என்று மொத்தமாக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் Block grant மத்திய அரசு மொத்த நிதியுதவி என்ற அடிப்படையில் தருகிறது. மத்திய அரசே நிறைவேற்றும் திட்டங்கள் என்ற வகையிலே 'நேஷனல் தெர்மல் பவ்வர் கார்ப்பரேஷன்', 'நேஷனல் ஹைட்ரோ-எலக்ட்ரிக் கார்ப்பரேஷன்' மூலம் பல திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள். அதிலிருந்து நமக்கு என்ன முதலீடு இதுவரையிலே கிடைத்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் அறிய விரும்பினால் 'ஒன்றுமில்லை' என்பதுதான் பதில்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : 14 அடி உயரத்திலிருந்து தண்ணீர் விழும் சக்தியைப் பயன்படுத்தி, நவீன திட்டமாக இது ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிகவும் மகிழ்ச்சி. ஒகேனக்கல்லிலேயிருந்து மின்சக்தி உருவாக்கும் திட்டம்பற்றி முன்பே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது இப்போது எந்த அளவில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஒகேனக்கல் இருக்கிறது. திட்டம் இல்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : கீழ் மேட்டூர் நீர் மின்திட்டத்தையொட்டி, அடுத்த கட்டமாக கீழ் நிலையிலே இதுபோன்ற திட்டம் ஏற்படுத்தும் முயற்சி இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதுதான் சொன்னேன். எந்த அளவுக்கு இந்தத் திட்டம் பயனளிக்கிறது என்பதைப் பார்த்து, மற்ற ஆற்றுப் படுகைகளிலும், காவிரி ஆற்றுப் படுகையிலும் இதைச் செய்யலாம்.

அருள்மிகு கன்னிகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் திருட்டு

* 2 **வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கிருஷ்ணகிரி வட்டம், பழையபேட்டை, அருள்மிகு கன்னிகா பரமேஸ்வரி ஆலயத்தில், அம்மனின் தாலி முதலிய நகைகள், 1980, டிசம்பரில் திருடு போய்விட்டன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அது குறித்து புலனாய்வு செய்யப்பட்டுள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ), (இ) மற்றும் (உ) கிருஷ்ணகிரி வட்டம், பழையபேட்டை அருள்மிகு கன்னிகா பரமேஸ்வரி ஆலயத்தில் ரூ. 6,900 மதிப்புள்ள அம்மன் மாங்கல்யம் முதலிய நகைகள் 25—12—1980 அன்று இரவு திருடு போய்விட்டன. மேற்கண்ட களவு குறித்து 26—12—1980 அன்று கிருஷ்ணகிரி காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டு

இந்திய குற்றவியல் சட்டக்கோவை பிரிவு 457 மற்றும் 380-ன்கீழ், குற்ற எண் 525/80 ஆகப் பதிவு செய்யப்பட்டு, புலனாய்வுக்குப் பின் கண்டுபிடிக்க இயலவில்லை என்று கருதி 30—6—1981 ஆம் நாளன்று இந்த வழக்கு முடிக்கப்பட்டது.

திரு. ம. சங்கரலிங்கம் : பழையபேட்டை, அருள்மிகு கன்னிகாபரமேஸ்வரி ஆலயத்தில் அந்த அம்மனுக்கு உரிய நகைகள்—சுமார் ரூபாய் 7 ஆயிரம் பெறுமானமுள்ள நகைகள்—களவு போயிருக்கின்றன. புகார் செய்தும், கண்டுபிடிக்க முடியவில்லை என்று வழக்கு விடப்பட்டிருக்கிறது. காவல் துறை அதிகாரிகள் இதுபற்றி எடுத்த முயற்சி போதுமானது என்று அரசு கருதுகிறதா ? அதைப்பற்றிப் பரிசிலனை செய்யப்பட்டதா ? அறநிலையத் துறை ஆணையாளர் அதுபற்றிப் பரிசிலனை செய்தார்களா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : காவல் துறையினுடைய நடவடிக்கைகள் பற்றிய தகவல் இப்போதுதான் சமீபத்திலே அரசுக்குக் கிடைத்தது. அந்த நடவடிக்கைகள் சரியாக எடுக்கப்பட்டனவா, இல்லையா என்பதைப்பற்றி மீண்டும் ஆய்வு செய்ய வேண்டும் என்றும், அந்தப் புலனாய்வுத் துறையிலே ஈடுபட்ட அதிகாரிகள் எந்த அளவுக்கு முயற்சி செய்தார்கள் என்பதைப்பற்றியும் முழு விவரங்கள் தரவேண்டும் என்று காவல் துறையை அரசு கேட்டிருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : அறநிலையத் துறை—அந்தத் தகவல் கிடைத்த பிறகு—ஆணையாளரைக் கொண்டு தனி விசாரணை செய்து, தேவைப்பட்டால், தனி போலீஸ் செல் அனுப்பி அதைப்பற்றி விசாரணை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இதுபோன்ற வழக்குகளில் காவல் துறையினர் சரியாகவும், முறையாகவும், அக்கறையுடனும் குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று பல்வேறு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் காவல் துறைக்கு அறநிலையத் துறை சொல்லியிருக்கிறது. அந்த வகையில், இந்த வழக்கும் சேர்ந்திருக்கிறது. ஆகவே, ஒட்டுமொத்தமாக இதற்கான விளக்கம் கிடைத்த பிறகு, காவல் துறை எப்படி அறநிலையத் துறை சம்பந்தப்பட்ட இதுபோன்ற வழக்குகளில் நடவடிக்கை மேற்கொள்வது என்பது பற்றிய தெளிவான முடிவு ஒன்றை அரசு எடுக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்த ஆலயத்தில் உள்ள அம்மனின் தாலி, நகைகள் திருட்டு போய்விட்டதால், கவனக் குறைவாக இருந்த ஆலய ஊழியர்கள் மீது துறை சம்பந்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அந்தத் திருட்டு இரவிலே நடைபெற்றிருக்கிறது. கருவறைக்கு வெளிச்சம் வருவதற்கு வசதியாக இருந்த இடத்தில் போடப்பட்டிருந்த கம்பிகளை உடைத்து வந்திருக்கிறார்கள். அந்தப் பகுதி இப்போது மூடப்பட்டிருக்கிறது. தனியாக அந்த ஆலய ஊழியர்கள் மீது குற்றம் சுமத்த அடிப்படையில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : கேரள மாநிலத்திலே சேர்த்தலை என்ற இடத்திலே கோயில் திருட்டுப்போனது சம்பந்தமாக ஒரு குற்றவாளியைப் பிடித்தார்கள். அப்போது, தமிழ் நாட்டில் உள்ள கோயில்களில் களவு செய்ததையும் அவன ஒப்புக்கொண்டிருக்கிறான். கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் விசாரணை செய்தார்கள். கோயிலைக் கண்டவுடனே களவு செய்யத் தோன்றுகிறது என்று அவன் சொல்லியிருக்கிறான். ஆகவே, அந்த நபருக்கும் இந்தக் களவுக்கும் தொடர்பு இருக்கிறதா என்று அரசு பரிசிலனை செய்யுமா ?

(முற்பகல் 11-40.)

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் குமரன்கோயிலில் நடைபெற்ற கொலை வழக்கு சம்பந்தமாகத் தேடப்பட்டு வந்த நபரும், கேரள மாநிலத்தில் திருடிய நபரும் ஒருவரே என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவருக்கும், தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் நடைபெற்ற திருட்டுக் குற்றங்களுக்கும் தொடர்பிருக்கிறதா என்று பரிசீலிக்கப்பட்டு, அவருடைய திருட்டு நடவடிக்கைகளெல்லாம் கன்னியாகுமரி மாவட்ட எல்லைக்குள்ளே தான் இருந்திருக்கின்றன என்பது அரசுக்குத் தெரிய வந்திருக்கிறது. இருந்தாலும், இப்போது இந்த வழக்கு முடிவு பெற்றுவிட்டதாகக் காவல் துறையினால் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், இதுபோன்ற வேறு வழக்குகளில் வேறு குற்றவாளிகளைப் பிடிக்கும்போது, முன்னால் நடைபெற்ற குற்றங்கள் குறித்து, துப்பு கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இதுபோன்ற திருட்டுக்களைத் தவிர்க்க அவ்வப்போது காவல் துறையினரை அணுகுவதைவிட ஓய்வுபெற்ற இராணுவத்தினரை நிரந்தரமாகவே இதுபோன்ற கோயில்களில் காவலாளிகளாக நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இது ஒன்றும் பெரிய கோயில் அல்ல. ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ. 4,700 மட்டும் வருமானம் உள்ள கோயில். இந்தக் கோயிலில் பணியாற்றுகிறவர்களுக்கே கூட சம்பளம் கொடுக்க, போதுமான சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Licence for trading in fertilisers

* 3 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU A. R. DAMODARAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether, under the Fertiliser Control Order, dealers in Fertiliser are requested to take licences for wholesale and retail trading;

(b) whether conditions have been imposed that licences have to be endorsed by the licensing authorities for trading in Urea and other chemical fertilisers manufactured or marketed by different companies under various brand names; and

(c) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(இ) மற்றும் (உ) யூரியா மற்றும் ஏனைய இரசாயன உரங்களில் வியாபாரம் செய்வதற்கான ஒவ்வொரு உரிமத்திலும், உரிமம் வழங்கும் அதிகாரிகள் உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களுடைய அனுமதிக்கப்பட்ட விற்பனையாளர்கள் கொடுக்கும் சான்றிதழை ஆதாரமாகக் கொண்டு விற்பனையாளர் விற்பனை செய்ய உள்ள உரங்களின் விவரங்களும், அவ்வுரங்களுக்கான வியாபார பெயர் மற்றும் உர உற்பத்தியாளர் இட்டுள்ள பெயர் ஆகியவைகளை [illegible] அந்த மேற்குறிப்பு செய்தல் வேண்டியுள்ளது.

Special Pay for Hindi Pandits

* 4 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Local Administration be pleased to state :—

(*a*) whether it is a fact that former Hindi Pandits absorbed in other posts are eligible for a Special pay of Rs. 10 per month as per G.O. Ms. No. 625, Education, dated 3rd April 1976;

(*b*) if so, the reasons for the objection by the Local Fund Audit Department in Madurai district; and

(*c*) the action proposed to be taken thereon?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) தலநிதி கணக்கு ஆய்வாளர் இதைப் பற்றி எந்த மறுப்பும் எழுப்பவில்லை. ஆனால், திண்டுக்கல் நகராட்சியின் 1975-76 ஆம் ஆண்டின் பொது நிதி (General Fund) தணிக்கையில் இது சம்பந்தமான (அதாவது மாத சம்பளத்தில் இருமுறை கூடுதல் சம்பளத்தை கணக்கெடுத்துக் கொண்டது) ஒரு மறுப்பு எழுப்பப்பட்டது. தற்போது அந்த ஆட்சேபணையும் நீக்கப்பட்டுவிட்டது.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன்கள்

*5 வினா—திரு. க. அருணாசலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) பூதானம் பெற்ற விவசாயிகள், நீண்டகாலக் கடன் கிடைக்காமல் சிரமப்படுவதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) அறியும்.

(இ) தமிழ்நாடு பூமிதான வாரிய விதிகளில், இது குறித்து சில மாற்றங்கள் செய்வதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. க. அருணாசலம் : நில அடமான வங்கிகளைப் பொறுத்த வரையில், பூதானம் பெற்ற விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் கொடுக்க உரிமையில்லை என்று சொல்லப்படுகிறது. இது குறித்து அரசு ஆலோசனை செய்து, சட்ட விதிகள் இதற்குத் தடையாக இருந்தால், அத்தகைய சட்ட விதிகளுக்குத் திருத்தம் செய்ய முன்வருமா ? தற்போதைய நிலைமையின் காரணமாக ஆயிரக்கணக்கான பூதான நிலம் பெற்றவர்கள் கடன் பெறும் வசதியற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதால், இதைப்பற்றி அரசு விரைவில் ஆலோசனை செய்து முடிவெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இது குறித்துதான் அரசின் பரிசீலனை இருந்து வருகிறது. உப விதிகளை மாற்றினால்தான், உடனடியாக அவர்களுக்குக் கடன் கொடுக்க முடியும் என்பதால், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டாக்டர் இரா. சனார்த்தனம் : பூதானம் கொடுத்த நிலங்களில் உள்ளபடியே சில நிலங்கள் விளையக் கூடியவைகளாகவும், பெரும்பாலானவை விளைச்சலுக்கு லாயக்கில்லாமலும் இருக்கின்றன. எனவே இவற்றில் விளையக் கூடிய நிலங்கள், விளையாத நிலங்கள் என்று நாம் பிரித்து அவற்றின் அடிப்படையில் குறைந்த கடன் அல்லது அதிகமான கடன் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பூதானம் கொடுக்கப்பட்ட நிலங்களில் பெரும்பாலான நிலங்கள் வானம் பார்த்த பூமிகளாகத்தான் இருக்கின்றன. கல் மற்றும் மேடான நிலங்களாகவும் இருக்கின்றன. ஆனால் இவைகளைத் தானமாகக் கொடுக்கிற நேரத்தில், பல்லைப்பிடித்துப் பார்க்கிற சூழ்நிலையை நாம் மேற்கொள்வதில்லை. எனவே தானமாகக் கொடுத்ததை வைத்துக்கொண்டு, அதை ஏழை எளிய விவசாயிகளுக்கு நாம் பகிர்ந்தளிக்கிறோம். இத்தகைய நிலங்களுக்குக் கடன் கொடுக்கும்போதுகூட, வங்கிகளால் சரியான முறையில் கடன் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலைமையைப் போக்குவதற்குத்தான் அரசு தற்போது நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. அப்போது தரத்திற்கு ஏற்ப தாராளமாகக் கொடுக்கிற சூழ்நிலை உருவாகலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : பூதான நிலம் பெற்ற விவசாயிகளில் எத்தனை பேர் நீண்டகாலக் கடன்கள் கோரி விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறார்கள்? எத்தனை பேருக்கு நீண்டகாலக் கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன? அவர்களுக்குக் கடன்களைக் கொடுப்பதில் உள்ள சிக்கல்கள் என்னென்ன? அவைகளைத் தீர்ப்பதற்கு அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : எவ்வளவு பேர் விண்ணப்பித்தனர் என்பது குறித்த குறிப்புகள் என்னிடம் தற்போது இல்லை. ஆனால் அவர்களுக்குக் கடன் கொடுப்பதற்குத் தடையாக உள்ள விதிகளைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இங்கே குறிப்பிட்டார்கள். அந்தத் தடைகளைத் தீர்ப்பதற்குத்தான் நாம் இப்போது நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்.

திரு. ம. சங்கரலிங்கம் : இதுவரை ஒருவருக்காவது கடன் கொடுக்கப் பட்டிருக்கிறதா? அதைப்பற்றிய விவரமாவது அமைச்சரிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் எவ்வளவு பேருக்குக் கடன்கள் கொடுக்கப்பட்டன என்ற விவரம்தான் என்னிடமில்லை.

பூதானம்.

* 6. வினா—திரு. க. அருணாசலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தமிழ்நாட்டில் பூதானத்தின் மூலம் பயனடைந்த நிலமில்லா விவசாயிகள் எத்தனை பேர்?

(இ) பூதானத்தை மேலும் ஊக்குவிக்க அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துவருகின்றது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 15,461 பேர்கள்.

(இ) தமிழ்நாடு பூமிதான வாரியம் ஆக்க பூர்வமாக செயலாற்ற வாரியத்திற்கு வேண்டிய பணியாளர்களையும் கூடுதல் பணியாளர்களையும் அரசு தன் செலவில் ஏற்று அனுமதித்து வருகிறது. பூமிதான உழவர்கள் தம் வருவாயை பெருக்கிக் கொள்ள ஏதுவாக உப தொழில் செய்ய ஆலோசனைகளை வழங்கி, அதற்காக, கறவை மாடுகள், ஆடுகள், பம்பு செட்டுகள் போன்றவை வாங்க, வேண்டிய கடன் வசதிகளை குறைந்த வட்டி விகிதத்தில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகப் பெறவும், அரசு பூமிதான வாரியத்தின் மூலம் வழிவகை செய்து வருகிறது. பூமிதான கிராமதான உழவர்கள் நில்வள வங்கி மூலமாகவும் மேயர் டிரஸ்ட் சர்வோதய மண்டல் போன்ற சேவை நோக்கு நிறுவனங்கள் மூலமாகவும் கடன் பெற்று பயனுற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. க. அருணாசலம்: பூதானத்தின் மூலம் நிலங்களைப் பெற்ற விவசாயிகள் கடன் உதவி பெற முடியவில்லை. விவசாயிகள் தங்களுடைய நிலங்களுக்கு நீர்வளம் இல்லாத காரணத்தால், தங்களின் நிலத்தினை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்க முடியவில்லை. ஆனால் மத்திய அரசின் கிராம குழு வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நிலத் திருத்தத்திற்கும் கிணறுகள் வெட்டுவதற்கும் உதவி கிடைத்தபின் இப்போது தமது உபரி நிலத்தைப் பகிர்ந்து கொள்ள முன்வந்திருக்கிறார்கள்.

நத்தம் வட்டாரத்தில் 10 விவசாயிகள் இவ்வாறு பூதானத்தின்கீழ் கிடைத்த நிலங்களை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள இசைவு தந்திருக்கிறார்கள். அவர்களுடைய நிலம் மானாவாரியாக இருந்தது. ஆளுக்கு 3 ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருந்தவர்கள் தங்களுடைய நிலத்திற்கு கீழே நிலத்தடி நீர் இருக்கிறது என்று தெரிந்து தனித்த நிறுவனங்களின் உதவியால் கிணறுகள் தோன்றிய பின் இப்போது தங்களின் நிலத்திலிருந்து ½ ஏக்கரை விட்டுக் கொடுத்துள்ளார்கள். இப்படி 5 பேர் ½ ஏக்கரை விட்டுக் கொடுத்து 6-வது நபரை புதிய நிலச்சுவான்தாராக ஆக்கியிருக்கிறார்கள். இவர்களைப் போன்றவர்களுக்கு அரசே சமுதாயக் கிணறுகளை வெட்டிக் கொடுத்தால், அதிக பயன் ஏற்படும், புதிய பூதானமும் கிடைக்கும், இயக்கம் பலம் பெறும் என்பதால், அத்தகைய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அதுபோன்ற திட்டங்கள் ஏதும் இல்லை. இருக்கிற நிலங்களை வைத்துக்கொண்டு அவற்றிற்குக் கடன் வசதிகளை ஏற்படுத்தி அதன் மூலம் ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எவ்வளவு நன்மையைச் செய்ய முடியுமோ அதைத்தான் செய்ய இருக்கிறோம். இதுவரை 15,461 பேர்களுக்கு பூதான நிலங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கொடுக்கப்பட்ட நிலங்களில் 23,712 ஏக்கர் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு இடங்களில் கிராமதானம் கொடுத்திருக்கிறார்கள். இதுபோன்று தானமாகக் கொடுக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை 22,030. அதில் 1,617 பத்திரங்கள் விசாரணை முடிந்து கிராமதானக் கிராமங்களாக ஏற்றுக்

[1981 ஆகஸ்ட் 26

கொள்ளப்பட்டிருக்கின்றன. பாக்கியிருப்பவை இன்னும் விசாரணையில் உள்ளன. இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும் என்று அரசு செயல்பட்டு வருகிறது. எவ்வளவு விரைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டு ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவிட முடியுமோ அதைச் செய்யவே அங்கேயிருக்கிற புனியாளர்களையும் அரசுப் பணியாளர்களாக ஏற்றுக்கொள்ள அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஜேப்பியார்: இந்தத் திட்டத்தினால் ஆதி திராவிட மக்கள் பயன் பெற்றிருக்கின்றார்களா ? எத்தனை பேர் பயன்பெற்றிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: 15,461 பேர்களுக்கு நிலம் பகிர்ந்தளித்ததில், ஆதி திராவிட மக்கள் 9,717 பேர் பயனடைந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அருணாசலம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது, ஆயிரக்கணக்கான கிராமங்கள் கிராமதானமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அவைகளில் பெரும்பாலானவை வானம் பார்த்த பூமியாகும். மழையை எதிர்பார்த்து உள்ள நிலங்களைக் கொண்டவைகள். அங்கெல்லாம் சமுதாயக் கிணறுகளைத் தோண்டிக் கொடுத்தால் மற்றவர்களைச் சேர்த்துக்கொண்டு அங்குள்ள விவசாயிகள் நன்மை பெற முடியும். தற்போது சர்வோதய மண்டல், மேயர் டிரஸ்ட் போன்றவைகளின் மூலமாக உதவி பெறுவதாகச் சொல்லப்பட்டாலும், அரசாங்கம் இன்னும் கொஞ்சம் அதிகமான பணத்தை ஒதுக்கி, இந்த இயக்கத்தைப் பலப்படுத்த வேண்டும். பூதான நிலத்தைப் பெற்ற விவசாயிகளுக்கு வட்டிக்குப் பணம் கடனாகக் கொடுத்தவர்களே அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக ஆகிவிடாமல் பார்த்துக்கொள்வதற்கு இது அவசியம். எனவே அரசு தக்க முயற்சிகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சமுதாயக் கிணறுகளைப் பொறுத்த வரையில், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டங்கள் மூலமாக, 40, 50 பேர் கூட்டாகச் சேர்ந்து தங்களுக்குத் தேவையான கிணற்றைத் தோண்டியிருக்கிறார்கள். அதைப் போலவே இவர்களும் உருவாக்க முடியும். அதைப் போல இவர்களும் சேர்ந்து வந்தால், கண்டிப்பாக அரசு செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாக்கியிருக்கக் கூடிய நிலங்களைப் பொறுத்தவரையில், அதில் உள்ள சிக்கல்களை எவ்வளவு சீக்கிரமாகத் தீர்க்க முடியுமோ அந்த அளவிற்குத் தீர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

1981 ஆகஸ்ட் 26]

திரு. செ. முத்துசாமி : பூமிதானம் என்றால், தனிப்பட்டவர்கள் தங்கள் நிலங்களைத் தந்துவிடுவது என்பது. ஆனால் கிராமதானம் என்றால் என்ன? ஒரு கிராமத்திலுள்ள அத்தனை பேரும் தங்களுடைய நிலங்களைத் தந்து விடுகிறார்களா ? கிராமதானம் என்றால் என்னவென்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பூமிதானம் என்பது, ஒருவர் தன்னுடைய நிலத்தைத் தானமாகவே கொடுத்துவிடுவது. கிராமதானம் என்பது ஒரு கிராமத்தில் உள்ள நபர்களில் 2/3 பகுதியினர் தங்களுடைய நிலம் அனைத்தையும் தானமாகக் கொடுத்து விடுவது அல்லது ஒரு கிராமத்தின் மொத்த நிலத்தில் பாதி பகுதி அங்குள்ளோரால் தானமாகக் கொடுத்து விடுவதாகும். கிராமதானம், பூமிதானம் போன்றவைகள் இன்று வெற்றிகரமாக இல்லை. 1956, 1957 ஆம் ஆண்டில் வினோபா பாவே அவர்கள் தமிழகத்திற்கு வந்த போது அவரோடு சேர்ந்து நானும் ஏறத்தாழ ஓராண்டுக் காலம் பணியாற்றியிருக்கிறேன். அதற்குரிய பயிற்சியையும் நான் பெற்றிருக்கிறேன். நிர்மாண ஊழியர் சங்கத்தில் சேர்ந்து பயிற்சியைப் பெற்று அதற்குப் பின்னாலே திரு. வினோபா பாவே அவர்களோடு சேர்ந்து பணியாற்றியிருக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையில், கிராமதானம் வெற்றியடையவில்லை. நாம் எவ்வளவுதான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று பாடுபட்டாலும் முடியவில்லை. நிலம் கொடுத்தவர்கள் எந்த நோக்கத்தின் அடிப்படையில் அதைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இப்போது புரிந்துகொள்ள முடிகிறது. முதலில் இது ஏற்படுத்தப்பட்டபோது நோக்கம் நல்லதாக இருந்தாலும், அதைத் திறம்படச் செயல்படுத்த முடியாத சூழ்நிலை இன்றும் இருந்து வருகிறது. சட்டச் சிக்கல்கள் கூட இதிலே இருக்கின்றன. அதன் காரணமாகத்தான் அந்த விதிகளை மாற்றி அதன் மூலமாகக் கிராமதானம், பூமிதானம் ஆகியவற்றை வெற்றிபெறச் செய்ய முயன்று வருகிறோம்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரு. வினோபா பாவே அவர்களுடன் பணியாற்றிய அனுபவத்தோடு, கிராமதானம் என்றால் என்ன என்பதற்குப் பதில் அளித்திருக்கிறார்கள். நான் கேள்விப்பட்ட வரையில் ஒரு வருவாய்க் கிராமத்திலே உள்ள பெரும்பகுதியான நிலங்களைத் தானமாகக் கொடுத்தால், அந்தக் கிராமம் கிராமதானமாகக் கொடுத்ததாக ஆகும் என்று அறிந்திருக்கிறேன். அது சரிதானா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பூமிதானம், கிராமதானம், சிரமதானம் என்று மூன்று வகைகள் இருக்கின்றன. பூமிதானம் என்பது ஒருவர் தன்னுடைய நிலத்தைத் தானமாகக் கொடுப்பது. கிராமதானம் என்பது நில

உச்சவரம்பு வருவதற்கு முன்னால் இருந்தது. ஒரு ஜமீந்தாருக்கு பல கிராமங்கள் சொந்தமாக இருந்தன. அதில் வருமானம் வராத கிராமத்தை எடுத்து கிராமதானமாகக் கொடுக்கிற நிலை முன்பு இருந்தது. ஆனல், உச்சவரம்பு வந்த பிறகு கிராமதானம் இல்லை. இப்போது கிராமதானம் நடைபெற்று வருகிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திரு. வினோபா பாவே அவர்களுடன் பணியாற்றியதாகச் சொன்னார்கள். அதற்காகப் பயிற்சி பெற்றதாகவும் சொன்னார்கள். மீண்டும் பூமிதான இயக்கத்தை நடத்தும் உத்தேசம் அமைச்சர் அவர்களுக்கு உண்டா ? இப்போது இல்லாவிட்டாலும் 60 வயது அடைந்த பிறகாவது நடத்துவார்களா ?

Plastic Surgery

*7. *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether the Government have any proposal for the immediate expansion and improvement of the Pastic Surgery Department in the Madurai Rajaji Hospital considering the increasing need for plastic surgery, because of the several kinds of accidents in modern times; and

(b) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மதுரை மாநகரத்தின் முக்கியத்துவம் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. மதுரை மாநகராட்சியான பிறகும், மதுரையில் உலகத் தமிழ் மாநாடு நடந்த பிறகும், மதுரை நகரின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அப்படிப்பட்ட மாபெரும் நகரில் உள்ள மருத்துவமனையில், அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் ஏற்படுகிற விபத்துக்களால் வரும் நோயாளிகளுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்கப் போதுமான வசதிகள் இப்போது இல்லை. அத்தகைய வசதிகளை அதிகப்படுத்த

வேண்டும் என்பதுதான் மூலக் கேள்வியின் நோக்கம். அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தொகுதியும் கூட. ஆகவே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், " இல்லை " என்று பதில் அளிப்பதை மாற்றி, அங்கே அத்தகைய வசதிகளைச் செய்து தருவதற்கு விரிவாக மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மூலக் கேள்வியில், " உடனடியாக விரிவாக்கி மேம்படுத்துவதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா? " என்று கேட்டிருப்பதால்தான் " இல்லை " என்று பதில் அளித்தேன். அங்கே ஏற்கெனவே 24 படுக்கைகள் இருக்கின்றன. 26—1—1964 முதல் பிளாஸ்டிக் சர்ஜரி நடைபெற்று வருகிறது. மேலும் ஆக்சிடெண்ட் பிரிவை மதுரை மருத்துவ மனையில் சேர்க்கலாமா என்பதைப் பற்றியும். இராஜாஜி மருத்துவ மனையை விஸ்தரிப்பது பற்றியும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதனுடைய விவரங்களைப் பட்ஜெட்டிலே கொடுத்திருக்கிறோம். ஆனால் 'உடனடியாக' செயற்குறிப்பு இல்லை. Phased Programme-ஆகச் செய்து கொண்டிருக்கிறோம். அங்கே ஏற்கெனவே பிளாஸ்டிக் சர்ஜரி ஒழுங்காக நடைபெற்று வருகிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு கூட ஒரு நோயாளிக்கு, அமெரிக்காவில் நடைபெறுவதைப் போன்ற அளவிற்கு, பிளாஸ்டிக் சர்ஜரி நடைபெற்றது.

திரு. ம. சங்கரலிங்கம் : மதுரை மருத்துவ மனை மாவட்டத் தலைமை மருத்துவ மனையாக இருக்கிறது. அதிலே மருத்துவக் கல்லூரியும் சேர்ந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, 24 படுக்கைகள் கொண்ட பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட் இருந்தாலும், நவீன கருவிகள் பொருந்திய அமைப்பு முறை அங்கே இல்லை. விபத்துக்குள்ளானவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கக் கூடிய வகையில் துணை பட்ஜெட் மூலமாக நிதி ஒதுக்கி அந்த மருத்துவமனையை மேம்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, பிளாஸ்டிக் சர்ஜரிக்கு வேண்டிய promotion skin-grafting, geyser, refrigerator ஆகிய கருவிகள் இருக்கின்றன. மேலும் Government have sanctioned the purchase of one high-power steam steriliser. இப்படி ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஆகவே மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் சொல்லக் கூடிய உணர்வின் அடிப்படையிலே நிச்சயமாக எல்லா வகையான காரியங்களும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே உறுப்பு ஒட்டு அறுவை சிகிச்சை முறை உள்ள மருத்துவ மனைகள் எத்தனை ? அவை எவையெவை ?

* மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : 1. அரசு பொது மருத்துவ மனை, சென்னை.—1963 ஆம் ஆண்டு டிசம்பரில் துவக்கியிருக்கிறோம். பிளாஸ்டிக் சர்ஜரிக்காக 20 படுக்கைகள், தீப்புண்ணுக்காக 12 படுக்கைகள்.

2. ஸ்டேன்லி மெடிக்கல் காலேஜ் மருத்துவமனையில் 10—1—1974 அன்று துவக்கப்பட்டது. பிளாஸ்டிக் சர்ஜரிக்கு 30 படுக்கைகள். இங்கே ஹாண்ட் இன்ஜூரிக்கு நவீன வகையிலே அறுவை சிகிச்சை செய்து முடித்திருக்கிறோம்.

3. கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் 7—6—1973 அன்று 20 படுக்கைகள் கொண்ட பிரிவு துவக்கப்பட்டது. இப்போது புதிதாக 4 நாட்களுக்கு முன்பு தீப்புண்ணுக்காக ஒரு வார்டைத் துவக்கி வைத்திருக்கிறேன்.

4. அரசு இராஜாஜி மருத்துவ மனை, மதுரையில் 26—1—1964 அன்று 24 படுக்கைகள் கொண்ட பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

5. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 22—1—1970 அன்று 25 படுக்கைகள் கொண்ட பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

6. கோயம்புத்தூர் மெடிக்கல் காலேஜ் மருத்துவ மனையில் 1—7—1979 அன்று துவக்கப்பட்டது. 8 படுக்கைகள் இருக்கின்றன.

THIRU J. M. MIAKHAN : Sir, I wanted to put the same question. I wanted to know the names of the hospitals in Tamil Nadu in which there were facilities for plastic surgery. The Hon. Minister has already answered the question. I, therefore, do not want to put a separate question.

வாகனங்களில் வேகக் கட்டுப்பாடு.

* 8. வினா—திரு. ஜி. வசந்த பை (திரு. ப. மாணிக்கம் சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சாலை விபத்துக்களைத் தவிர்க்க, லாரிகள், பேருந்துகள் வேகத்தைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(இ) விபத்துக்களில் உயிர் நீத்தவர்களுக்குக் காரணமாயிருக்கும் வாகனங்களின் சொந்தக்காரர்களிடம் இருந்து நஷ்ட ஈடு பெற்றுத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) சாலை விபத்துக்களைத் தடுக்க லாரிகள் மற்றும் பேருந்துகளில் கட்டாயமாக எலக்டிரானிக் முறையில் இயங்கும் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தப்பட வேண்டும் என்று கட்டாயப் படுத்துவதற்காக தமிழ் நாடு மோட்டார் வண்டிகளின் விதி திருத்தப்பட்டு உள்ளது.

(இ) மோட்டார் வண்டிகளினால் ஏற்படும் விபத்துக்களில் உயிர் நீத்தவர்கள் அல்லது காயமடைந்தவர்களுக்கு நஷ்ட ஈடு பெறுவதற்காக உயிர் நீத்தவரின் சட்ட முறைப் பிரதிநிதிகள் அல்லது காயமடைந்தவர் மோட்டார் வண்டிகள் நஷ்ட ஈடு தீர்ப்பாயத்தில் மனு செய்யலாம். இதில், தீர்ப்பாயத்திற்கு நஷ்ட ஈடு வழங்குவதைப் பொறுத்தமட்டில், அரசு எந்தவிதக் கட்டளையும் பிறப்பிக்க முடியாது.

(நண்பகல் 12-00.)

திரு. ம. சங்கரலிங்கம் : வேகக் கட்டுப்பாடு இயந்திரம் பொருத்துவதற்காக, மோட்டார் வாகனச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். லாரிகளில் எல்லாம் வேகக் கட்டுப்பாட்டு இயந்திரம் பொருத்தப்பட்டுவிட்டதா ? லாரிகள் இரவில் போகின்றபோது அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட லாரிகளினால் பிளஷர் கார், மற்ற வாகனங்கள் பாதிக்கப்படுகின்றன. அடுத்த டெஸ்ட்டுக்கு வருவதற்குமுன் வேகக் கட்டுப்பாடு இயந்திரம் பொருத்தப்பட வேண்டுமென்ற விதியையாவது அரசு வேகமாக அமுல்படுத்துமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : கனரக வண்டிகள் அனைத்திலும் வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகள் பொருத்தப்பட வேண்டும் என்றுதான் 1979-லே உதகமண்டலத்திலே தென் மாநிலப் போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டது. அதற்குப் பின்னர் அரசு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதிலே உள்ள பிரச்சினை என்னவென்றால், அந்தக் கருவியை உற்பத்தி செய்கின்ற ஃபேக்டரிகள் அதிகமாக இல்லாத காரணத்தினால், இதிலே "மானோபலி" ஏற்படும் என்பது. இந்தக் காரணத்தினால் கொஞ்சம் கால தாமதம் ஏற்படுகின்றது. அப்படி 'மானோபலி' நிலைமைகளை உருவாக்க அரசு விரும்பவில்லை. அரசுத் துறை வாகனங்களுக்கு இப்போது பொருத்திக் கொண்டிருக்கிறோம்.

அதற்கு இன்றைக்கு பம்பாயிலே உள்ள நிறுவனம் கருவிகளைத் தயாரிக்கின்றது. இன்றைக்கு கிட்டத்தட்ட 5 ஆயிரம் வண்டிகளுக்கு அந்தக் கருவிகளைப் பொருத்தியிருக்கிறோம். தற்போது சில நிறுவனங்கள் முயற்சி எடுத்து இந்தக் கருவிகளை உற்பத்தி செய்துகொண்டிருக்கின்றன. இரண்டு மூன்று நிறுவனங்கள் இந்தக் கருவியை உற்பத்தி செய்ய ஆரம்பித்த பின்பு, அந்த விதியை அமுல்படுத்த, வேகக் கட்டுப்பாட்டு இயந்திரம் கட்டாயமாகப் பொருத்தப்பட வேண்டும் என்பதற்கான முயற்சிகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: Will the Hon. Minister consider the question of having a lane for lorries, buses and motor-cars separately and another lane for slow moving vehicles as is done in some other countries or having two roads separately, one for buses and lorries and another for motor-cars and other slow moving vehicles, both going in one direction during peak hours?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே. இந்த எண்ணம், அந்த ஆசை எங்களுக்கு இருந்தாலும், நம்முடைய அரசுக்கு வருகின்ற நிதிநிலைமையைப் பார்க்கவேண்டியிருக்கிறது. அந்த எண்ணம் எங்களுக்கு இருக்கிறது. முதற்படியாக சென்னை நகர அளவில் தனித் தனியான பாதையாக அமைப்பது குறித்து நான்கு தினங்களுக்கு முன் விவாதத்திலே இருந்தபோது யோசித்திருக்கிறோம். அரசுக்கு செய்வதற்கு ஆசை இருந்தாலும், நிதிநிலைமை காரணமாக காலதாமதமாகச் செய்ய வேண்டிய நிலைமைக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, I am not referring to the making of new roads and the Hon. Minister has probably mistaken the point. For example, Anna Salai could be reserved for buses and lorries during peak hours, whereas General Patters Road, in one direction, could be reserved for slow moving vehicles during peak hours, and those forwards the Town and cars and other slow moving vehicles could be diverted through the General Petters Road. That is what I am suggesting.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அதைப்பற்றித்தான் சொன்னேன். அதைப்பற்றி 4 தினங்களுக்கு முன் ஒரு கூட்டத்திலே விவாதித்திருக்கிறோம். மௌண்ட் ரோடில் நாம் ஏதாவது மாற்று வழிசெய்தால், மன்ற உறுப்பினர்களேகூட அங்கே வருகின்ற காரை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இப்போது மௌண்ட் ரோடு என்ற பெயர் இல்லை. அண்ணா சாலை என்றுதான் பெயர் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அண்ணா சாலையில் வருபவர்கள் மீண்டும் உறுப்பினர்களும், இங்கே வந்து அப்படிப் போய்க்கொண்டிருந்த கார்களை நிறுத்திவிட்டார்கள் என்று சொல்லக்கூடிய சூழ்நிலைகள் வருமா என்பதைப்பற்றியும் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. செ. முத்துசாமி : வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு என்று உள்ள கருவிகள் கார்ப்பரேஷன், கழக வண்டிகளிலே பொருத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. தனியார் வண்டிகளில் ஒரு வழியிலேகூட வேகத்தைக் கட்டுப்படுத்தும் கருவி இல்லை. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கழக வண்டிகள் போகும்போது, இந்தக் கட்டுப்பாட்டுக் கருவி இருப்பதால், வேகம் குறைந்து இருக்கின்ற காரணத்தினால், நேரம் அதிகமாக எடுத்துக்கொள்கிறது. அதனால் மக்கள் தனியார் பஸ்களிலேயே ஏறிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையை என் கண் முன்னால் பார்த்தேன். தனியார் பஸ்கள் அரசு பஸ்கள் இரண்டிலும் அந்தக் கருவி இருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகளை வைக்க வேண்டுமென்று சொல்வது விபத்துக்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான். அந்த நடவடிக்கையை அரசு முன்னோடியாக இருந்து நிறைவேற்ற வேண்டுமென்ற நிலையிலேதான் அரசுப் பேருந்துகளிலே வைத்திருக்கிறோம். அத்தனை பேருந்துகளிலும் நாம் பொருத்திவிட்டு மற்றவர்களும் அப்படிச் செய்ய வேண்டுமென்று நாம் சொல்லியிருக்கிறோம். தனியாரை விடுவதாக இல்லை. எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும், உறுப்பினர்களுடைய ஆதரவோடு அதை நாம் செய்வோம். நிச்சயமாக எதிர்ப்புகள் வரும். அன்றையதினம் உறுப்பினர்கள் அரசுக்கு ஆதரவாக இருக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

THIRU J. M. MIAKHAN: Sir, the motor accidents that occur in Tamil Nadu are not only due to the speed of the vehicles but also due to the direct flash of the headlights during nights. If they use polarised lights, that will reduce the number of accidents and this is being adopted in foreign countries like France and other places where it is compulsory that they should use only polarised lights, so that the eyes of the drivers of the vehicles

are not hurt by those headlights. Have the Government any schemes to direct the owners of motor vehicles to fit their cars with polarised lights?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : வேகம் மட்டும்தான் அந்த விபத்துக் களுக்கு காரணம் என்று நான் சொல்லிவிடவில்லை. அதுவும் ஒரு காரண மாக இருந்துகொண்டிருக்கிறது என்று சொன்னேன். மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் சொல்வது போன்று, இரவு நேரத்தில் ஏற்படுகின்ற விபத்துக் களுக்கு விளக்கு வெளிச்சம்கூட காரணமாக இருக்கும் என்று நான் நம்பு கிறேன். அந்த அடிப்படையிலே இப்போது இருக்கின்ற சட்டப்படி, அந்த விளக்குக்கு நடுவிலே கறுப்புப் புள்ளி வைக்க வேண்டும். மாண்புமிகு உறுப் பினர் அவர்களின் யோசனையின் மீது நடவடிக்கை எடுக்க முடியுமா என்று பார்ப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இப்போது அரசுப் பேருந்துகளிலே வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட வேகமே போகவேண்டிய தேவையில்லாத வண்டிகளிலேயும்கூட வைக்கப்பட்டிருக் கின்றன. தேவையிருக்கின்ற வண்டிகளிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல், நிறைய ஸ்டாப்பிங், நூல் பகுதிகளிலே ஒவ்வொரு பர்லாங்குக்கு ஒரு ஸ்டாப்பிங் என்று நிறைய ஸ்டாப்பிங் இருக்கக்கூடிய பாதையிலே செல்லும் வண்டிகளிலும் வைக்கப்பட்டிருக்கிறது. அது போலவே சில தேவைப்படாத வண்டிகள், ஆங்காங்கே நின்று நின்று போகின்ற வண்டிகள் இருக்கின்றன. இக்குறைகளை நீக்குவதோடு அக்கருவியை மகிழ் வுந்து வண்டிகளில் வைப்பதற்கும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஒரு சட்டம் என்று கொண்டுவந்தால், இந்த வண்டிக்கு வைக்கலாம், அந்த வண்டிக்கு வைக்கக்கூடாது என்று சொல்ல முடியாது. வண்டிகள் நிறைய இடங்களில் நிற்கவேண்டியதில்லை என்றாலும். அதற்கு வைக்கக்கூடாது என்று சொல்ல முடியாது. கன ரக வண்டிகள் என்று சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட கன ரக வண்டிகள் அத்தனையிலும் பொருத்த வேண்டும் என்று சொல்கிறோம். அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அதற்கு எதிர்ப்புகள், குற்றச் சாட்டுகள் எல்லாம் வரும். அதைப்பற்றியெல்லாம் யோசித்து நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : உடனடியாக ஏற்படுகின்ற விபத்துக்களுக்கு ஒரு கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. அதுபோலவே சில வண்டிகளில் அதிக அளவுக்கு சப்தத்தை எழுப்புகிறார்கள். காது செவிடாகும் அளவுக்குப்

பயங்கரமான சப்தத்தை எழுப்புகிறார்கள். காதில் உள்ள ஜவ்வு கிழிந்து விடும் அளவுக்கு எழுப்புகிறார்கள். அதற்கு ஒரு கட்டுப்பாடு இல்லை. அதைத் தவிர்க்கக்கூடிய அளவுக்கு ஏதாவது ஆலோசனை அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நானும்கூட அதை அனுபவித்திருக் கிறேன். அப்படிப்பட்ட ஹாரன்களை நகர்ப்பகுதிகளிலே பயன்படுத்து கிறார்கள். அப்படிப்பட்ட ஹாரன்கள் கொடுத்தால்கூட மக்கள் ஒதுங்குவ தில்லை என்று அவர்கள் சொல்கின்றார்கள். ஆக இரண்டு பக்கமும் பார்த் துச் சொல்லவேண்டிய சூழ்நிலையிலே அரசு இருக்கிறது என்பதை தெரிவித் துக்கொள்கிறேன்.

மதுபானம் கடத்தல்.

*9. வினா—**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கைத்தறி-கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1981-ஆம் வருடத்தில், 14—2—1981 வரை, மதுபானங்களைக் கடத்திச் சென்ற கார்களைத் தடுத்து நிறுத்த முயன்ற காவல் துறை அதிகாரி கள் மீது கார்களை ஏற்றி அவர்களை படுகாயப்படுத்திய சம்பவங்கள் எத்தனை ?

(இ) அச்சம்பவங்கள் தொடர்பாக, எத்தனை வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்: (அ) 1 (ஒன்று).

(இ) 1 (ஒன்று)

திரு. ம. சங்கரலிங்கம் : காவல் துறை அதிகாரிகள் மீது காரை ஏற்றி காயப்படுத்தி இருக்கின்ற சம்பவம் இது. இது குறித்து அரசு என்ன நட வடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-10)

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்: காவல் துறை அதிகாரி காயப் படுத்தப்படவில்லை, அவர் கொலை செய்யப்பட்டுவிட்டதாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. காரமடை காவல் நிலையத்தில் இ.பி.கோ. 302, மதுவிலக்குச் சட்டம் 4 (1) (எ) என்ற பிரிவுகளின்கீழ் குற்ற எண் 10/81-ன் கீழ் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1981 ஆகஸ்ட் 26

திரு. ம. சங்கரலிங்கம் : கோவையிலிருந்து அன்னூருக்குச் செல்லும் வழியில், கள்ளச் சாராயத்தைக் கடத்திச் சென்ற வண்டியைத் தடுத்து நிறுத்திய, 40 வயதான சப்-இன்ஸ்பெக்டர் அப்துல் குத்தூஸ் என்பவர்மீது கள்ளச் சாராயம் ஏற்றிவந்த காரோட்டிகள், காரை ஏற்றிக் கொன்றிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வழக்கில் எத்தனை பேர்கள் குற்றவாளிகள்? அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா? எந்த நிலையில் அந்த வழக்கு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். இது சனவரியில் நடந்தது. இப்போது எந்த நிலையில் இருக்கிறதென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் 3 பேர்கள், டிரைவர் உட்பட. அவர்கள்மீது வழக்கு தொடரப்பட்டு, புலன் விசாரணை முடிந்து, அவர்கள் கடத்தியதாகச் சொல்லப்படும் பொருள் கெமிகல் டெஸ்டுக்காக, ஆய்விற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் முடிவு வந்தவுடன் சார்ஜ் ஷீட் போடப்பட்டு, வழக்கு விசாரணைக்கு வருமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : அவர்கள் கடத்திய பொருளை கெமிகல் டெஸ்டுக்கு அனுப்பியிருந்தாலும், அவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்த காவல் அதிகாரி மீது காரை ஏற்றிக் கொன்றிருக்கிறார்கள். அவர்கள் ஜெயிலில் இருக்கிறார்களா அல்லது ஜாமீனில் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். கொலை வழக்கில் அவர்கள்மீது சார்ஜ் ஷீட் போட ஏன் தாமதம்? காரில் ஏற்றிச் சென்ற பொருள் மதுவா, இல்லையா என்பதைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம். எனவே இதில் காலதாமதத்திற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன். இதன் காரணமாக சமூக விரோதச் செயல்களைத் தடுக்கும் அதிகாரிகள் தங்கள் சக்தியை இழந்துவிடுகிறார்கள் என்பதை அரசு உணருகிறதா?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : வழக்கில் புலன் விசாரணை முடிந்துவிட்டது. சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, சம்பவங்கள் குறித்து விசாரிக்கப்பட்டு, விசாரணை முடிவு செய்யப்பட்டது. 4(1)(எ) பிரிவும் இதில் சேர்க்கப்பட்டிருப்பதால், அதாவது, இதனால்தான் கொலை நடைபெற்றது என்று இருப்பதால், 'பேசிக் ரீசன்' அதுவாக இருப்பதால், முறைப்படி அது குறித்து இரசாயன முடிவு தெரிந்தபின்தான் சார்ஜ் ஷீட் போட முடியும். எவ்வளவு விரைவிலே சார்ஜ் ஷீட் போட முடியுமோ அவ்வளவு விரைவிலே போட்டு, வழக்கு விசாரணைக்குக் கொண்டுவரப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1981 ஆகஸ்ட் 26]

திரு. ம. சங்கரலிங்கம் : கைது செய்யப்பட்டவர்கள் சிறையில் இருக்கிறார்களா அல்லது பெய்லில் இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : ஓர் எதிரி ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். அவர் டிரைவர். மற்ற இருவரும் சிறையில் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : இப்படி கடமையாற்றும்போது, அதிகாரிகள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து, பணியாற்றுகிறார்கள். அவர்கள் கொலை செய்யப்படும்போது, உத்தியோகத்தில் அவர்கள் ஓய்வுபெறும்வரை இருந்தால் எவ்வளவு ஊதியம் பெறுவார்களோ, அந்தத் தொகையை அவர்கள் குடும்பத்திற்குக் கொடுக்க ஒரு மனிதாபிமான முடிவை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : முறைப்படி என்ன உதவி செய்ய முடியுமோ அதை இந்த அரசு செய்யும்.

இளம் குற்றவாளிகள்.

* 10. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1977 முதல் 1980 வரை சென்னை பெருநகரில் வழக்குப் பதிவு செய்யப்பட்ட இளம் குற்றவாளிகளின் எண்ணிக்கை, வருட வாரியாக எவ்வளவு?

(இ) 1972—1975-ல் இருந்ததைவிட, அத்தகைய குற்றவாளிகளின் எண்ணிக்கை, தற்பொழுது எத்தனை சதவிகிதம் உயர்ந்துள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) குற்றவாளிகளின் எண்ணிக்கை வருடவாரியாக :—

1977 —	12,502
1978 —	13,657
1979 —	9,523
1980 —	9,427

(இ) இளம் குற்றவாளிகளின் எண்ணிக்கை உயரவில்லை. மாறாக கணிசமான அளவுக்கு குறைந்திருக்கிறது.

[1981 ஆகஸ்ட் 26

திரு. ம. சங்கரலிங்கம்: 1977-லிருந்து 1980 வரை ஏறக்குறைய 40,000 இளம் குற்றவாளிகள்மீது வழக்கு பதிவாகியிருக்கிறது. இவ்வாறு பதிவாகும் போது, அவர்கள் எந்த அளவிற்குக் குற்றங்கள் செய்வதில் ஈடுபடுகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அவர்களை இளங்குற்றவாளிகள் பள்ளிக்கு அனுப்பி, குற்றமற்றவர்களாகத் திருத்துவதற்கும், அவர்களின் சமூகப் பாது காப்பிற்காகவும் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : குற்றம் செய்த சிறுவர்களை முதலிலே வரவேற்பு இல்லங்களுக்குக் கொண்டு வந்து, பிறகு நீதிமன்றங்களில் அவர்களை ஆஜராக்கும்வரை, அவர்கள் அந்த இல்லங்களிலேயே வைக்கப்படு கின்றனர். அந்தக் குழந்தைகளை பெற்றோர்கள் பெற்றுக்கொள்ள முன்வந் தால், அவர்களை நீதி மன்றம் அவர்களிடம் ஒப்புவிக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லாத நிலையில், அவர்களுக்குச் சிறு தண்டனை விதித்து, இல்லங்களுக்கே அனுப்பப்படுகிறார்கள். அவர்களைத் திருத்துவதற்காகத் தான் வரவேற்பு இல்லங்களில் வைக்கப்படுகிறார்கள். அவர்களைப் பெற் றோர்கள் பெற்றுக்கொள்ள முன்வந்தால் அவர்களிடம் அவர்களை ஒப்படைக் கிறோம். இல்லாவிட்டால் நீதி மன்றத்திற்கு அனுப்பி அங்கு என்ன தண் டனை கொடுக்கிறார்களோ, அதன்படி அங்கிருந்து அனுப்புகிறோம்.

திரு. ம. சங்கரலிங்கம் : 3 ஆண்டுகளில் 43,000 குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு, வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவர்களைச் சமூக நலத் துறையின் சார்பில் சீர்திருத்தப் பள்ளிகளிலே சேர்த்து, அவர் களுக்குப் பயிற்சி கொடுத்து, எந்தச் சூழ்நிலையில் குற்றம் செய்தார்களோ அந்த சூழ்நிலை இல்லாத நிலையை உருவாக்கிட முயற்சி எடுத்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்கள் தங்கள் குடும்பங்களில் மீண்டும் சேர்ந்து, மீண்டும் அத்தகைய குற்றங்கள் செய்யாமல் இருக்கிறார்கள் என்று கண்காணிக்கப்படுகிறார்களா ? அவர்களுக்கு அரசு வேலைகளில் முன்னுரிமை கொடுத்து, அவர்கள் முறையான வாழ்க்கை நடத்த ஓர் அமைப்பு முறையை ஏற்படுத்தி இருக்கிறோமா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி இல்லை என்றால்; அப்படி ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : குற்றம் செய்த சிறுவர்கள் சீர் திருத்தப் பள்ளியிலிருந்து சென்ற பிறகு, மீண்டும் குற்றம் செய்தார்களா, மறுபடியும் குற்றம் செய்து கொண்டிருக்கிறார்களா என்பதைப் பரிசீலிக்கும் வகையில் தகவல்கள் என்னிடம் இல்லை. அடுத்து, அவர்களுக்கு சீர்திருத்தப்

1981 ஆகஸ்ட் 26]

பள்ளிகளில் தச்சு வேலை, தையல் வேலை, பூ வேலை போன்று, அவர் களாகவே சுயமாகச் சம்பாதிக்கும் அளவிற்குப் பல தொழில்கள் கற்றுக் கொடுத்து, அவர்கள் வீட்டுக்குச் சென்றாலும் பிழைக்க வழி வகை செய்திருக் கிறோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இளம் குற்றவாளிகளுக்கான பள்ளிகள் எத் தனை இருக்கின்றன ? அந்தப் பள்ளிகளிலே இருக்கக் கூடிய ஆசிரியர்கள். அந்தக் குற்றவாளிகள் மீண்டும் மீண்டும் குற்றங்களைச் செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பணியையும் செய்கிறார்கள். அவர்கள் தப்பித்துப் போய் விட்டால், அவர்களைக் கண்டுபிடித்து, கொண்டு வந்து சேர்க்க வேண்டும். அப்படிக் கொண்டு வந்து சேர்க்காவிட்டால், ஆசிரியர்களுக்குத் தண்டனை கொடுப்பதாகப் புகார்கள் சொல்லப்படுகின்றன. எனவே இளங் குற்றவாளிகள் தப்பித்துப் போகாமல் பார்த்துக்கொள்ள காவல் துறையிலிருந்து காவலர் களைப் போட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இளம் சிறார்களுக்கான சீர் திருத்தப் பள்ளிகள் தஞ்சை, கடலூர், மல்லிப்புதூர், சென்னை இராயபுரம், ராணிப்பேட்டை, மஞ்சம்பள்ளி, சென்னையில் உள்ள பெண்கள் சீர்திருத்தப் பள்ளி ஆகியவற்றில் மொத்தம் 2,505 சிறுவர்கள் இருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ் வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

3. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 6-வது விதியின்கீழ் மேலவையின் 60-வது கூட்டத் தொடருக்கு கீழ்க்காணும் உறுப்பினர்களை மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் நியமித்துள்ளார்கள்.

1. திரு. சி. இராமலிங்கம்
2. திரு. நீலநாராயணன்
3. செல்வி அ. லீலாவதி
4. திரு. க. மீனாட்சிசுந்தரம்.

4. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விவரம் முடிவு செய்யப்பட்டது.

27—8—1981—1. 1981-82-ம் ஆண்டுக்கான துணைச் செலவு குறித்த முதல் விவர அறிக்கையின்மீது விவாதம்.

2. அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

28—8—1981—அரசின் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

29—8—1981—தனி உறுப்பினர் அலுவல்.

30—8—1981—ஞாயிற்றுக்கிழமை—விடுமுறை.

31—8—1981—அரசின் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

1—9—1981—1. நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவினை ஆய்வு செய்தல்.

2. இதர சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

3. அத்தியாவசியப் பண்டங்களின் விலை ஏற்றம் பற்றியும் உணவுக் கொள்கை பற்றியும் வெள்ளை அறிக்கையின் மீதான விவாதம்.

மேலவை வழக்கம்போல் காலை 9-30 மணி முதல் 12-30 மணிவரை கூடும். தேவைப்படின் 27—8—1981 அன்று மேல்வை மாலையிலும் கூடும்.

(பிற்பகல் 12-20)

5. 1981-82 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த முதல் விவர அறிக்கையை அளித்தல்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 1981-82 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடு குறித்த விவர அறிக்கையை அவைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அளிப்பார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேல்வைத் துணைத் தலைவர் அவர்களே,

1981-82 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இந்த அவையில் வைக்க முன் வருகிறேன். இந்தத் துணை மதிப்பீடுகளில் உள்ள மொத்தத் தொகை ரூபாய் 1,55.38 கோடியாகும். இதில் ரூபாய் 62.35 கோடி வருவாய்க் கணக்கில் உள்ளது. இதில் ரூபாய் 1.48 இலட்சம் காட்டிய செலவுகள் குறித்ததாகும். ரூபாய் 13.03 கோடி மூலதன, கடன் கணக்கு களில் உள்ளது. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்தச் சட்டத்தின்) (எண் 28/1981) அடிப்படையில் எதிர்பாராச் செலவு நிதிக்கு மாற்றுவதற்கு, ரூபாய் 80 கோடி ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. பல் வேறு மானியக் கோரிக்கைகளில் கேட்கப்பட்டுள்ள தொகைகளின் விவரமும் அவற்றிற்கான காரணங்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. மன்ற உறுப்பினர்களின் தனி கவனத்திற்காக, சில குறிப்பிட்ட முக்கிய இனங்களின் விவரங்களை மட்டும் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

2. இம் மாநிலத்தில் நிலவிய வறட்சியின் விளைவுகளைப் போக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு ரூபாய் 48.90 கோடி செலவிடுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். இந்த ஒப்புதலை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசு ஏற்கெனவே வறட்சிப் பணிகளுக்கான செலவுக்கு அனுமதி வழங்கி உள்ளது. இதில் ரூபாய் 18.72 கோடி குடிநீர் வழங்கும் பணிகளுக்குரியதாகும். ரூபாய் 26.03 கோடி வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற் குரியதாகும். பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகக் குடியானவர் களுக்குத் தக்காவிக் கடன் வழங்கும் இனம் மத்திய அரசால் ஏற்பளிக்கப்படா விட்டாலும், குடியானவர்களுக்கு அவ்வாறு கடன் வழங்கும்பொருட்டு, இந்த அரசு ரூபாய் 5 கோடி அனுமதித்துள்ளது.

3. கிராமப் பகுதிகளில் போதிய வேலைவாய்ப்பு அளிப்பதற்காக, இம் மாநிலத்தில் கிராமப்புற வேலை வாய்ப்பு தேசியத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1980—81 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுக்கான

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஆகஸ்ட் 26

ரூபாய் 4.45 கோடியும் நடப்பு நிதி ஆண்டில் (1981—82) மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுக்காக ரூபாய் 7.40 கோடியும் துணை மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசிடமிருந்து பெறும் தொகைக்கு நிகரான தொகை வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் மாநில அரசால் நடப்பாண்டில் செலவிடப்படும்.

4. 150 வளர்ச்சி வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டம் செயற்படுத்தப்படுமென 1981—82 நிதிநிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டிருந்தேன். நடப்பாண்டில் 150 வளர்ச்சி வட்டாரங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்காக ரூபாய் 30 கோடியும் ஏனைய திட்டங்களுக்காக ரூபாய் 59 கோடியும் ஒதுக்குவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. இத்திட்டங்களுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் பங்கினைச் செலுத்தும்பொருட்டு அவைகளுக்குக் கடன் அளிப்பதற்காக இந்தத் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தை நல்ல முறையில் செயற்படுத்துவதற்கு அவசியமான தொழில் நுட்பப் பணியாளர் பதவிகளை ஏற்படுத்தியுள்ளது. இவற்றிற்கு ரூபாய் 173.33 இலட்சம் செலவாகும்.

5. 1981-82 நிதி ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை அவையில் வைக்கப்பட்ட பின்னர் ஏற்பட்டுள்ள சில முக்கிய செலவினங்களை மட்டுமே இப்போது எடுத்துக் கூறியுள்ளேன். இந்தக் கோரிக்கைகளில் அரசு கேட்டுள்ள தொகையை வழங்கி இத் திட்டங்கள் அனைத்திற்கும் இசைவளிக்குமாறு அவையை வேண்டி அமருகிறேன்.

வணக்கம்.

6. அரசின் தீர்மானம்.

இலங்கையில் வாழும் தமிழர் அவதியுறுவது குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" இலங்கையில் வாழும் நிலையான தமிழர், மலைத் தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட இந்தியர் வழிவந்த தமிழர் ஆகியோரின் உயிருக்கும், உடைமைக்கும், உரிமைக்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பதையும், இனவெறியர்களால் கொலை-கொள்ளை-கற்பழிப்பு-துன்புறுத்தல் போன்ற வன்முறைச் செயல்கள் நிகழ்வதையும், தக்க பாதுகாப்பு அளிக்காத நிலை நிலவுவதையும் அறிந்து மனிதாபிமான அடிப்படையில் இந்த அவை மிக்க அதிர்ச்சியும், கவலையும் கொள்கிறது.

1981 ஆகஸ்ட் 26] [திரு. கா. இராசா முகமது]

தமிழக மக்களின் சார்பாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமருக்கு தெரிவித்துள்ளதற்கு ஏற்ப, இந்திய அரசு தம்து தூதுவரகத்தின் மூலமும், ஐ.நா. அவையின் மூலமும், மற்ற முறைகளின் மூலமும் இலங்கை வாழ் தமிழர்க்கு நியாயம் கிடைக்க முற்படுவதோடு, அவர்களுக்கு எல்லாவிதமான பாதுகாப்புகளையும் அளிக்க, தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்த அவை மாண்புமிகு இந்தியப் பிரதமரைக் கேட்டுக்கொள்கிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இனக் கலவரத்தில் படுகொலைக்கு ஆளானவர்களின் குடும்பங்களுக்கும், காயமுற்றும், பல தொல்லைகளுக்கு ஆளாகியும் அவதியுறும் மக்களுக்கும் இந்த அவை தன் இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறது "

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தையொட்டி தமிழ் நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய உணர்வுகளை இந்த அவையின் மூலமாக மத்திய அரசுக்கும் உலகத்திற்கும் உணர்த்த வேண்டிய ஒரு பெரும் பொறுப்பும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இப்படி ஒரு நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதன் விளைவாக தமிழகத்திலே ஒரு ஐக்கிய உணர்வு ஏற்பட்டிருப்பதையும் நாம் எல்லோரும் வரவேற்கிறோம். கட்சி பேதங்களை மறந்து, இன உணர்வின் அடிப்படையில் தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துத் தலைவர்களும் ஒன்று சேர்ந்து, இந்தப் பிரச்சினையை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்வது பற்றியும் உலக அளவிலே எடுத்துச் சொல்வது பற்றியும் விவாதிக்க வேண்டும், செயல்படுத்த வேண்டுமென்ற உணர்விலே இருக்கிறார்கள். அந்த உணர்வின் அடிப்படையிலே பேரவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பினையும் செய்துள்ளார். தேவைப்படும்போது தமிழகம் பூராவும் ஒரு பொது ஹர்த்தால், பொது கடை அடைப்பு நடத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். இது ஓர் இனப் படுகொலை என்ற அளவிலே நாம் நம்முடைய அதிர்ச்சியையும், வேதனையையும் தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எந்த நாட்டிலே எது நடைபெற்றாலும் அது உள்நாட்டுப் பிரச்சினை என்ற கருத்தினைச் சொல்லி யாரும் இனிமேல் தப்பித்துக்கொள்ள முடியாது. விஞ்ஞான வளர்ச்சி நிகழ்ந்துகொண்டிருக்கிற நிலையில், மனித இனங்கள் யாவும் ஒன்று என்ற நிலை வளர்ந்துகொண்டிருக்கும்போது, இதை உள்நாட்டுப் பிரச்சினை என்று சொல்லி யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது. இதைத் தட்டிக் கழிக்க முடியாது என்பதையும் பல்வேறு சந்தர்ப்பங்களின் மூலம் நாம் நன்றாக உணர முடிகிறது.

[திரு. கா. இராசா முகமது] [1981 ஆகஸ்ட் 26

வட அயர்லாந்து பிரச்சினையில் பார்லி சான்ட்ஸ் என்பவர் உயிரைத் துறந்திருக்கிறார். அதுகுறித்து இன்றையதினம் உலக நாடுகள் எல்லாம் கவலையைத் தெரிவித்த வண்ணம் நிலைமையைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருக்கின்றன. இதுகுறித்து பல நாட்டுத் தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களை வெளிப்படையாகவே சொல்லி வருகிறார்கள். அதுபோல் பாலஸ்தீனிய பிரச்சினையில் இந்திய நாடு தன்னுடைய கொள்கையையும் நிலைப்பாட்டினையும் உணர்த்தியிருக்கிறது. அராபட் என்ற விடுதலை வீரர் எழுப்பிய பிரச்சினைகள் ஐ.நா. சபை வரை போய் அங்கு நம் நாடு தன் நிலையைத் தெளிவாக்கியிருக்கிறது. ஆகவே இந்த இலங்கை பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், இதை ஒரு உள்நாட்டுப் பிரச்சினை, அங்கே சாதாரணமாக நடைபெறக்கூடிய ஒரு பிரச்சினை என்று கருதக்கூடிய சூழ்நிலை இல்லை. சமீபத்தில் இங்கிலாந்தில் ஏற்பட்ட இனக் கலவரத்தில் சீக்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் தக்க பரிகாரம் காண வேண்டிய அவசியம் இந்திய அரசுக்கு ஏற்பட்டது. அதுபோல் இன்றைக்கு அண்டை நாடாக இருக்கக்கூடிய பாகிஸ்தானுக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன. அங்கே எல்லைப்புற மாகாணம் ஏற்பட வேண்டுமென்று பெரியவர் எல்லைப்புற காந்தி கான் அப்துல் கபார்கான் அவர்கள் தெரிவித்த கருத்துக்கு நாம் வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்திருக்கிறோம். அதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுபோல் ஆப்பிரிக்கக் கண்டங்களில் ஏற்பட்டிருக்கிற தேசிய இன எழுச்சிகள் மீதும் தனியாக ஒவ்வொரு நாடும் கவனத்தைச் செலுத்தி வருகின்றது. ஒரு ஜனநாயக யுகத்தில் இவையெல்லாம் தவிர்க்க முடியாதவை. இலங்கை நமது அண்டை நாடு என்பது மட்டுமல்ல. அங்கேயுள்ள தமிழர்களில் ஒரு பகுதியினர் பூர்வீகமாகவே, 100 ஆண்டுகளுக்கு மேலாகவே, அங்கே வாழுகின்ற உரிமையைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். இன்னொரு பகுதியினர் பல ஆண்டுகளுக்கு முன்பே அங்கு சென்று மலைத் தோட்டங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். காடுகளைப் பயன்படுத்தி கழனிகளாக்கி, பொன் விளையும் பூமியாக ஆக்கியிருக்கிறார்கள். தங்களுடைய உதிரத்தால் வளம் கொழிக்கச் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு இவர்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்கிறபோது, இதை இன்னும் நாம் கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் கூடுமானவரை தமிழகத்தில் இருக்கிற அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து மத்திய அரசுக்கு இதைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டிய கடமையில் இருக்கிறோம். இந்தியா-இலங்கை உறவு என்பது பூகோள ரீதியில் பார்த்தாலும், அரசியல் நிலைமையில் பார்த்தாலும் ஒன்றுக்கொன்று முக்கியத்துவம் வாய்ந்தது. இரண்டும் ஜனநாயக அமைப்பைப்

1981 ஆகஸ்ட் 26] [திரு. கா. இராசா முகமது]

பொறுத்தவரை, ஒரே மாதிரியானவை. இரண்டிலும் இருக்கிற மக்களும் ஒரேவிதமான கலாசார வரலாற்றுப் பின்னணியைக் கொண்டவர்கள். இலங்கையின் ஜனநாயக அமைப்பைப் பொறுத்தவரையிலும், இந்தியா போன்ற ஒரு பெரிய நாடு அதற்குப் பக்கத்திலே இருப்பது அவர்களுக்கும் நல்லது என்ற அடிப்படையில் பல்வேறு ஒப்பந்தங்களை மனிதாபிமானத்தோடும், பெருந்தன்மையோடும், இன்னும் சொல்லப்போனால் நம்முடைய சில உரிமைகளை விட்டுக்கொடுத்துக்கூட நல்ல எண்ணத்தில் நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம்.

(பிற்பகல் 12-30)

சமீபத்திலே ஏற்பட்ட சம்பவங்கள் உடனுக்குடன் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு சம்பவம் நடைபெற்றது. இங்கேயிருந்து சுற்றுப்பயணம் சென்றவர்களிலே திரு. தனபதி என்பவர் கொலை செய்யப்பட்டதைப் பார்த்தோம். நேற்றையதினம் அதிர்ச்சியோடும், வடிகின்ற கண்ணீரைத் துடைத்துக்கொண்டும் அவருடைய உடலை நாம் பெற்றோம். படுகொலை செய்யப்பட்ட அந்த உடலைப் பெறச் சென்ற நண்பர்களை அங்கே இருக்கும் சிங்களவர்கள் எல்லாம் சேர்ந்து கேலியும் கிண்டலும் செய்திருக்கிறார்கள். 1956-லே, 1958-லே, 1977-லே கலவரம் எல்லாம் ஏற்பட்டு அது இப்படி தொடர்ந்து நீடித்துக்கொண்டே போகிறதென்றால், இதற்கு என்ன அடிப்படைக் காரணம் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பும்போது, அழுத்தமாக, வலிமையாக நம்முடைய உணர்வை இதிலே பதியவைத்து அனுப்புகிறோம். தமிழர்களுக்கு ஒன்று நடந்தால் அதைத் தட்டிக் கேட்க நாதியில்லை என்ற உணர்வு எங்கே இருந்தாலும், அதைக் கண்டிக்க வேண்டும். ஒரு சாதாரணச் சம்பவமானாலும், அது வேறு மாநிலங்களிலே உள்ளவர்களுக்கு நடைபெற்றிருந்தால், இன்றைக்கு இந்தியாவிலே என்ன நடந்திருக்கும்? நமது தமிழ் நாடு பொறுமையான நாடு. பொறுமைக்குப் பெயர்போன இடம். கடைகோடியிலே இருப்பதால், அந்தப் பொறுமை ஒருவேளை அதிகமாக இருக்கலாம். ஆனால் அந்தப் பொறுமைக்கும் ஒரு எல்லைக்கோடு உண்டு. அந்த எல்லைக்கோட்டைத் தாண்டும் அளவுக்கு இன்றைக்கு நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இந்த சோகம் நிறைந்த உணர்வை, அதிர்ச்சி நிறைந்த உணர்வை மத்திய அரசுக்குத் தெரிவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். புரட்சிக் கவிஞர் அவர்கள் பாடியதுபோல—

"எங்கள் பகைவர்கள் எங்கோ மறைந்தனர்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே"

என்று பாடியதுபோல நாம் அனைவரும் ஏகமனதாக நம்முடைய உணர்வு
களை இந்தத் தீர்மானத்தின் மூலம் உணர்த்த வேண்டியவர்களுக்கு உணர்த்த
வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட
தீர்மானம் :

"இலங்கையில் வாழும் நிலையான தமிழர், மலைத் தோட்டத் தொழி
லாளர்கள் உள்ளிட்ட இந்தியர் வழிவந்த தமிழர், ஆகியோரின் உயிர்க்கும்,
உடைமைக்கும், உரிமைக்கும் ஆபத்து ஏற்பட்டிருகபதையும் இனவெறியர்
களால் கொலை-கொள்ளை-கற்பழிப்பு-துன்புறுத்தல் போன்ற வன்முறைச்
செயல்கள் நிகழ்வதையும், தக்க பாதுகாப்பு அளிக்காத நிலை நிலவுவதையும்
அறிந்து மனிதாபிமான அடிப்படையில் இந்த அவை மிக்க அதிர்ச்சியும்,
கவலையும் கொள்கிறது.

தமிழக மக்களின் சார்பாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்
மாண்புமிகு இந்தியப் பிரதமருக்கு தெரிவித்துள்ளதற்கு ஏற்ப, இந்திய அரசு
தமது தூதுவரகத்தின் மூலமும், ஐ.நா. அவையின் மூலமும், மற்ற முறைகளின்
மூலமும் இலங்கை வாழ் தமிழர்க்கு நியாயம் கிடைக்க முற்படுவதோடு, அவர்
களுக்கு எல்லாவிதமான பாதுகாப்புகளையும் அளிக்க, தக்க நடவடிக்கைகளை
எடுக்குமாறு இந்த அவை மாண்புமிகு இந்தியப் பிரதமரைக் கேட்டுக் கொள்
கிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இனக் கலவரத்தில் படுகொலைக்கு ஆளானவர்
களின் குடும்பங்களுக்கும், காயமுற்றும், பல தொல்லைகளுக்கு ஆளாகியும்
அவதியுறும் மக்களுக்கும் இந்த அவை தன் இரங்கலையும், ஆறுதலையும்
தெரிவித்துக் கொள்கிறது".

* **திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு முன்னவர் அவர்கள் முன்மொழிந்த, மனிதாபிமானத்தைக் காக்
கின்ற, மனித உணர்வை மதிக்கின்ற, மனிதச் சமுதாயத்திற்கு எந்த
மூலையில் எந்த ஆபத்து ஏற்பட்டாலும் உலகத்தின் எந்தப் பகுதியிலே வாழ்
கின்ற மனிதர்களும் துடித்து, கொதித்தெழுவார்கள் என்ற வகையிலே தெளிவு
படுத்தும் இந்தத் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக
வழிமொழிகிறேன். சில சம்பவங்களை நாம் இப்போது நினைவுகூரக்
கடமைப்பட்டிருக்கிறோம். நமது நாட்டு எல்லையிலிருந்து 18 மைலுக்கு
அப்பால் கடல் கடந்து வாழ்கின்ற தமிழ் மக்கள் இரு சாரார்களாகக் கருதப்

படுகிறார்கள். ஒன்று அந்தக் கண்டத்திலேயே பிறந்து, அங்கேயே உரு
வெடுத்து, இலங்கைவாழ மக்களான யாழ்ப்பாணப் பகுதியிலே வாழ்பவர்கள்.
இன்னொரு சாரார், ஆங்கிலேயர்கள் வந்தபோது, இலங்கையில் உள்ள மலைப்
பகுதிகளையும், அங்கே உள்ள தேயிலைத் தோட்டங்களையும் வளம்
கொழிக்கும் பூமியாக மாற்ற. பலவிதமான இடர்பாடுகளுக்கும், இன்னல்
களுக்கும், துன்பங்களுக்கும் ஆளாகி, அங்கேயுள்ள விஷப் பாம்புகளோடு
போராடி, இலங்கைக்கு அந்நியச் செலாவணி கிடைக்கும் அளவுக்கு அதை
வளம் கொழிக்கும் பகுதியாக மாற்ற தமிழ் நாட்டிலேயிருந்து சென்ற அல்லது
இந்திய நாட்டிலேயிருந்து சென்ற இலங்கைவாழ் தமிழர்கள். இந்த இரு
சாராரும் இன்றைக்கு பெரும் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்
என்ற செய்தி நமக்கு அதிர்ச்சியைத் தந்தாலும், அதற்கு அப்பாலும் சென்று
'தான் ஆடாவிட்டாலும் தன்னுடைய சதை ஆடும்' என்ற அளவிலே நம்மு
டைய உடன்பிறப்புக்கள் இலங்கையிலே துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கி
றார்கள் என்ற செய்தி, நம்மை தாங்க முடியாத அதிர்ச்சியடையச் செய்திருக்
கிறது. கவலையடையச் செய்திருக்கிறது. கடந்த 25, 30 ஆண்டுகளாக
அவர்கள் அனுபவித்துவரும் துன்பத்தைப்பற்றி விவரிக்கத் தேவையில்லை.
நாம் நமது உணர்வுகளையும், எதிர்ப்பையும் இன்றையதினம் பதியவைத்திருக்
கிறோம். அதை மத்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் தெரிவித்திருக்கி
றோம். நம்முடைய அனுதாபத்தை இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் தெரி
வித்திருக்கிறோம். ஆனால், இந்தக் கொடுமைகளுக்கு எல்லாம் சிகரம்
வைத்தாற்போல, நமது உணர்வை மட்டுமல்ல, நாம் எந்தத் தியாகத்தையும்
செய்ய வேண்டிய ஒரு காலகட்டத்திற்கு இலங்கை அரசு நம்மைத் தள்ளி
யிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. கடந்த பல வாரங்களாக
அங்கே நடைபெறும் சம்பவங்களை நாம் கேட்கும்போது, உண்மையிலேயே,
அவற்றையெல்லாம் விவரித்துச் சொல்ல நாவிலிருந்து சொற்கள் நமக்கு வர
வில்லை. 'நா' அந்தகைய கொடிய செயல்களை எடுத்துச் சொல்லும்
வலிமையைப் பெறவில்லை. அத்தகைய கொடுமைக்கு அங்கிருக்கும் தமிழ்
மக்கள் இரையாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சம்பவத்தைக் கேட்ட
வுடனே இந்திய அரசு அக்கறை காட்டுவதாகச் சொன்னார்கள். தமிழக
முதல்வர் அவர்களும் மத்திய அரசோடு தொடர்பு கொண்டார்கள். எதிர்க்
கட்சித் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களும் டெல்லி சென்று பிரதம
அமைச்சர் அவர்களைச் சந்தித்து விவரங்களை விளக்கிச் சொன்னார்கள்.
ஒருமனத்தோடு, ஒரே உணர்வோடு, கட்சிப் பாகுபாடின்றி தமிழ்ச் சமுதாயம்
தன்னுடைய உணர்வை வெளிப்படுத்தியிருக்கிறது. இவ்வாறு உணர்வை
வெளிப்படுத்தும் இச் சந்தர்ப்பத்திலே, அதைவிட ஒரு கொடிய நிகழ்ச்சி
யையும் நாம் சந்தித்திருக்கிறோம். தமிழக மக்களும், இந்தியாவும் தங்க

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 ஆகஸ்ட் 26

ளுடைய உணர்வை இவ்வளவு அழுத்தமாகத் தெரிவித்த பிறகும் கூட. இந்த நாட்டிலேயிருந்து அங்கே சுற்றுலாவுக்குச் சென்று, அங்கேயுள்ள முருகன் கோயிலுக்குச் சென்ற சென்னையைச் சேர்ந்த தனபதி என்ற தமிழர், அந்தக் கோயிலுக்குச் சென்று திரும்பும்போது அவர் வந்த பேருந்து பழுதுபட்டதன் காரணமாக, பக்கத்திலேயிருந்த முகச் சவரம் செய்யும் நிலையத்திற்குச் சென்று, தனக்கு முகச்சவரம் செய்ய வேண்டும் என்று சொல்லி, அந்தப் பணியிலே தான் இருந்தபோது, அவர் தமிழன் என்று தெரிந்தவுடனே இரத்த வெறி பிடித்த கொடியவர்களால் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இந்த நிகழ்ச்சியைத் தமிழகம் தாங்கிக்கொள்ளாது. தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு மிகக் கொடுமையான செயல் இது. நம்முடைய அதிர்ச்சியை, நம்முடைய உணர்வை நம்முடைய அரசின் மூலம் இலங்கையில் இருக்கிற அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த உடல்மீது கண்ணீர் சிந்த நம்முடைய தலைவர்கள் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர் திரு. சாதிக் பாட்சா அவர்களும், அமைப்புச் செயலாளர் திரு. நீலநாராயணன் அவர்களும் அவருடைய இல்லத்திற்குச் சென்று அந்த உடலுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு வந்தார்கள். அத்தகைய ஒரு சூழ்நிலையை இன்றைக்கு இலங்கை அரசு ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், வருகிற செய்திகளைப் பார்த்தால், போலீஸ்காரர்கள் யாராவது கொல்லப்பட்டால், அதைப் பட்டியல் போட்டு சொல்கிறார்கள். 1974-லே தமிழ் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பிலே நடந்த தமிழ்ச் சொற்பொழிவின்போது, இன்தமிழ்ச் சுவையை சுவைத்துக் கொண்டிருந்தவர்களில் 9 பேரை போலீசார் அந்த வளைவிலேயே சுட்டுக் கொன்றார்கள். 1976-லே இஸ்லாமியப் பள்ளிவாசலிலே சென்று வழிபாடு செய்தவர்களில் எழு பேர்களைச் சுட்டுக் கொன்றார்கள். நபிகள் நாயகத்தின் அருளைப் பெற வழிபாடு செய்தவர்கள் மீது காவலர்கள் சுட்டு அவர்களை வீழ்த்திய பிறகும்கூட நாம் கொதித்தெழவில்லை. நான் சொல்வது ஒருவேளை எல்லைமீறிய செயலோ என்ற அச்சம் இருந்தாலும்கூட, அங்கே இருக்கும் அந்த அரசும் இதற்குத் துணை நிற்கிறதோ என்று நாங்கள் எண்ணுவதற்கான எல்லா சூழ்நிலைகளும் அங்கு உருவாகிக்கொண்டிருக்கின்றன என்ற தமிழக மக்களுடைய உணர்வை, மத்திய அரசுக்கும், இந்தியப் பிரதமருக்கும் நாம் தெரிவிக்கிறோம். அதன் மூலம் அவர்கள் இலங்கை அரசுக்குத் தெரிவித்து, அங்கு வாழ்கின்ற மக்களுடைய துயர் துடைக்க, மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதை எடுக்க வேண்டும் என்று மிகவும் அழுத்தமாக வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

1981 ஆகஸ்ட் 26] [திரு. ம. சங்கரலிங்கம்]

(பிற்பகல் 12-40)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித்
தலைவர் அவர்களும், இந்த உணர்வுகளையெல்லாம் தேரில் எடுத்துச் சொன்
னாலும்கூட, நான் இந்தச் சந்தர்ப்பத்தில் மத்திய அரசிற்கு ஒரு வேண்டு
கோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அமைச்சர் ஒருவரின்
தலைமையில் நமது தமிழக முதல்வர் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர்
களும் அங்கே ஒரு தூது கோஷ்டியாகச் சென்று அங்கே நடைபெறும் நிகழ்ச்சி
களைத் தெரிந்துகொள்ளச் செய்ய முயல்வதோடு, அங்கே துன்பப்படுகிற
மக்களுக்கு ஆறுதல் அளிக்கிற நிலையையும் மத்திய அரசு மேற்கொள்ள
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கிலாந்து நாட்டிலுள்ள இந்தியர்கள் கொடுமைப்படுத்தப்பட்டபோது,
பஞ்சாப் மாநிலத்தின் முதல்வர் அவர்கள் அங்கே சென்று அவர்களுக்கு
ஆறுதல் அளித்தார்கள். அதைப்போன்ற நிலையை மத்திய அரசு நமக்கு
உருவாக்கித் தர வேண்டும். தமிழகத்தைச் சேர்ந்த தனபதி அங்கே கொலை
செய்யப்பட்ட பிறகு, இலங்கை அரசின் சார்பில் இலங்கை வெளிவிவகார
அமைச்சர் அவர்களும், இலங்கை இராஷ்டிரபதி அவர்களும் தங்களின் அனுதா
பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். தங்களின் உணர்வுகளைத் தெரிவித்திருக்
கிறார்கள். அவர்கள் தெரிவித்த அனுதாபத்திற்கும் உணர்வுகளுக்கும் நான்
நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்றாலும் இத்த
கைய சூழ்நிலை தொடர்ந்து இருக்கிற நிலைமையை அவர்கள் தவிர்க்க
வேண்டும் என்ற வேண்டுகோளை மத்திய அரசின் வாயிலாக, இலங்கை
அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தேவைப்பட்டால் தமிழக
முதல்வர் அவர்களும், மாண்புமிகு பேரவை எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர்
கலைஞர் அவர்களும் இந்தியப் பிரதமர் அவர்களைச் சந்தித்து மத்திய
அமைச்சர் ஒருவரின் தலைமையில் மூவர் அடங்கிய தூதுகோஷ்டி ஒன்று
அங்கே செல்வதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு,
தற்போதைய நிலைமை அகல, சுமுக நிலை உருவாக வேண்டும் என்ற உணர்
வோடு, கொடிய செயல்களுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாகியிருக்கும் தமிழ்ச்
சமுதாயத்திற்கு, 18 மைல்களுக்கு அப்பால் கடல் கடந்து வாழ்கிற தமிழ்ச்
சமுதாயத்திற்கு, ஆறுதலையும் அனுதாபத்தையும் தெரிவிப்பதோடு, நீங்கள்
துன்பத்தை அனுபவிக்கிறீர்கள் என்றாலும் நாங்கள் சொல்லொணாத்
துயரைத் தாங்கிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, உங்களுக்கு
ஏற்பட்டிருக்கிற துயரைத் துடைக்க, முறையான ஜனநாயக ரீதியில், 20 ஆம்
நூற்றாண்டில் ஒரு நாட்டிற்கிருக்கிற 'சாவரின்டி' உரிமையோடு என்னென்ன
செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் இந்த நாடு உங்களுக்காகச் செய்யும்'

என்று சொல்லி, அண்டையிலுள்ள பங்களா தேஷ் பகுதியில் கொடுமைகள் செய்யப்பட்டபோது இந்திய அரசு எவ்வளவு விரைவாகவும் வேகமாகவும் உதவியை அளித்ததோ அதைப்போல், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஆப்கானிஸ்தான் பகுதியை ஒட்டிய பலுச்சிஸ்தான் பகுதி மக்களுக்கு எந்த அளவுக்கு இந்தியப் பேரரசு ஆதரவு காட்டியதோ அதைப்போல, மற்றும் ஆப்ரிக்கக் கண்டத்தில் உள்ள கொடுமைக்காளாக்கப் பட்ட மக்களுக்கு எந்த அளவுக்கு உதவி செய்ய விரைந்ததோ அதைப்போல 'உங்களுக்கும் இந்தியப் பேரரசு துணை நிற்கும். உதவி செய்யும்' என்று சொல்லி, இந்தியப் பேரரசின் அங்கமாக இருக்கிற தமிழகமும் உங்களுக்கு ஆதரவையும் அனுதாபத்தையும் தெரிவிக்கிறது என்ற மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் கருத்தோடு ஒன்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அமைகிறேன்.

செல்வி அ. லீலாவதி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலவையின் முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை, ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரிகள் சார்பாக நான் வரவேற்கிறேன்.

இலங்கை வாழ் தமிழர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள், 1956, 1958, 1977 மற்றும் 1979 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து அந்த நாட்டு வெறியர்களால் தாக்கப்பட்டு, அந்தப் பிரச்சினை மாறி மாறி பூகம்பமாக வெடித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கான வகையில் தக்க நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று ஆசிரியர்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் ஒருநாள் அர்த்தால் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறி, அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விட்டிருக்கிறார்கள். இதை நான் வரவேற்கிறேன். நாம் அனைவரும் தமிழர்கள் என்ற உணர்வோடு அதை வரவேற்கிறோம். நாம் மேற்கொள்ளும் அர்த்தால் மிகத் தீவிரமான முறையில் இருக்க வேண்டும் என்பதோடு, ஏனைய நாடுகள் அதைக் கண்டு பிரமிக்கத் தக்க வகையில் நடத்திக் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டு தமிழர்கள் இலங்கைக்குச் சென்று அங்கே உள்ள மக்களின் பொருளாதார வளர்ச்சிக்குப் பேருதவி செய்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்வாறு தங்களின் உடல் பொருள் ஆவி அனைத்தையும் இலங்கை நாட்டு மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியவர்கள் மீது, இம்மாதிரியான கொடுமைகள் நடத்தப்படுகின்றன என்பதைப் பார்க்கும் போது, மிகவும் வேதனை உண்டாகிறது. அங்கேயுள்ள பெண்களின் கற்பு

சூறையாடப்படுகிறது என்று கேட்கும்போது, அதை நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும். எனவே கட்சி வேறுபாடு இன்றி, தமிழர்கள் அனைவரும் இந்தத் தீர்மானத்தை வரவேற்று அரசுக்குக் கை கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப்போன்ற கொள்கையை வேறு நாடுகள் பின்பற்றாத வகையில் இந்தப் போக்கு தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று ஆசிரியர்கள் சார்பாக நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக மீண்டும் ஒருமுறை இந்தத் தீர்மானத்தை வரவேற்று அமைகிறேன்.

திரு. ஏ. ஜே. தாஸ்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவல நிலையைப் பார்க்கும் போது, ஒன்று நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. 1957 முதல் இதுபோன்ற சம்பவங்கள் ஏற்பட்டு, இன்று மிகத் தீவிரமாகி, இறுதியாகக் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற நிலைமைகளாக உருவாகி அங்குள்ள தமிழ் மக்கள் அனைவரும் இத்தகைய அவதிகளுக்குள்ளாகிய நிலையைப் பார்க்கிறோம்.

தமிழகத்திலேயிருந்து சுற்றுலாச் சென்றிருந்த கோஷ்டியினரில் ஒருவரான தனபதி அங்கே கொலை செய்யப்பட்டு, இங்கே பிணமாக அனுப்பி வைக்கப்பட்ட காட்சியைக் காண்கிறபோது, தமிழ் மக்களின் உணர்வு மிக வேகமாகப் பரவுகிற நிலையைப் பார்க்கிறோம். தமிழ் மக்கள் எங்கேயிருந்தாலும், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதிகளைப் போக்க தமிழக அரசு முன்வந்து தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். தமிழக முதல்வர் அவர்கள் ஒருநாள் அர்த்தால் மேற்கொள்ள வேண்டும் என்று அனைத்துக் கட்சியினரையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை நான் என்னுடைய கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். இது ஒன்றும் தவறல்ல. தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதியைப் போக்க செய்யப்படும் அர்த்தால் என்பதால், இதை நாம் அனைவரும் வரவேற்றாக வேண்டும். மத்திய அரசுக்கு நமது உணர்வுகளைத் தெரிவிக்க இது உதவும் என்று சொல்லி இந்த வகையில் இந்த அரசு எடுக்கும் முயற்சிகளுக்கும், மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கும் எங்கள் கட்சியின் சார்பில் ஒத்துழைப்பையும் ஆதரவையும் கொடுப்போம் என்று சொல்லி அமர்கிறேன்.

THIRU J. M. MIAKHAN: My Deputy Chairman, Sir, on behalf of the Party to which I belong, I associate myself with the Resolution brought forth by the Government. Our Party

sympathises with the lot of our people in Sri Lanka. It is a very good thing that all Parties have agreed to have a 'hartal' and we fully appreciate and welcome it.

I also suggest that the Government of Tamil Nadu, with the permission of the Government of India, may send a peace delegation, consisting of our Chief Minister and the leaders of political Parties, to Sri Lanka not only to visit the place but also to meet the President there and impress upon him the intensity of our feelings over the happenings there. The delegation may tell him how we feel when our people are massacred there, when their hearths are burnt down and when a situation of insecurity for their lives is created there. When similar injustice had happened in other parts of the world, we have raised our voice. The Government of India are also supporting the cause of the Palestenians, the people of Israel and other countries. In the same manner, the Government of India should take more interest in this matter also and should see that the Government of Sri Lanka take things seriously. It should be impressed upon the Government of Sri Lanka that we really mean business and that we are realy concerned about the lives of our countrymen who are there.

(பிற்பகல் 12-50)

Though they may not be our countrymen, they are really the citizetns of Ceylon and they have toiled for their whole lives to improve the economic conditions in that country and they have made that country prosperous. The places which were jungles once have been converted into prosperous places. It is sheer ingratitude that the local people have thought it fit to ill-treat these people. There may be some differences or disputes between the majority Sinhalese and the minority Tamilians. Those differences could be resolved through discussion and the minority community could not be wiped out by massacres and by striking terror in their minds. We should bring it to the notice of the President of Sri Lanka that they cannot wipe out the minority by terrorising the people and by intimidating them and they cannot claim that they can drive out these people from their conntry and have a peaceful life without these people, who

form an essential part of life in that country. They have got every right to be there. They were born and brought up there and they have got a right to be there. In respect of those who want to be repatriated, of course the Indo-Ceylon Agreement is there and it will be implemented in due course of time by the Government of India. We will welcome them because most of them most probably will settle down in Tamil Nadu and the Government of Tamil Nadu will definitely take steps to rehabilitate them. I fully endorse the Government resolution and I request all parties to give their whole-hearted support to show our solidarity behind them and to show how intensely we feel about the situation and thereby to impress not only the Central Government but the whole world about what is happening in Sri Lanka, and also that we mean business and that we want that these atrocities should be stopped. I also request the Government of Tamil Nadu to send a delegation consisting of representatives of political parties, with the Hon. the Chief Minister of Tamil Nadu as the leader, to go and meet the President in this regard. With these words, I thank the Hon. Deputy Chairman and resume my seat.

திரு. வி. வி. வி. ஆனந்தம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது, தமிழ் இனப் பெண்கள் கற்பழிக்கப்படுவது ஆகியவை எல்லாம் நமக்கு மிகுந்த வேதனையைத் தருகின்றன. அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி இது ஒரு நாட்டினுடைய உள்நாட்டுப் பிரச்சினை என ஒதுக்கிவிடக் கூடியதல்ல. உலகத்தின் எந்த மூலையில் மனிதாபிமானமற்ற முறையில் படுகொலை நடந்தாலும், அது மற்ற நாடுகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும், ஐக்கிய நாடுகள் சபை அளவிற்குக் கொண்டுவரப்பட வேண்டிய பிரச்சினையாகும். இதை உள்நாட்டுப் பிரச்சினை என்று நமது மத்திய அரசின் வெளி விவகார அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிச்சயமாக இது அந்த நாட்டினுடைய உள்நாட்டுப் பிரச்சினையல்ல. ஆனால் இந்தமாதிரியாக இந்திய மக்களுக்கு வேறு இடங்களில் கொடுமைகள் இழைக்கப்பட்டபோது, மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறது. இங்கிலாந்து தேசத்தில், இலண்டன் மாநகரில் சௌத் ஹால் பகுதியில் உள்ள இந்தியர்களுக்குக் கொடுமைகள் இழைக்கப்பட்டபோது, அதற்கு உடனடியாக பரிகாரம் காண நம் நாட்டிலிருந்து திரு. வாஜ்பாய் போன்றவர்கள் சென்றிருக்கிறார்கள். சௌத் ஹால் பகுதியில் சீக்கியர்கள்

வாழ்கிறார்கள் என்பதால், பஞ்சாபிலிருந்து ஒரு தூதுக் குழுவையும் அனுப்பியிருக்கிறார்கள். இதே மாதிரியாக முன்பு ஒரு முறை தென் ஆப்பிரிக்காவில் தமிழர்களுக்கும், குஜராத்தியர்களுக்கும் பெரிய அநீதி இழைக்கப்பட்டபோது, இந்திய அரசாங்கத்திலிருந்து அந்த நாட்டிற்கு ஒரு தூதுக் குழுவை அனுப்பியிருக்கிறார்கள். இனக் கலவரத்திற்கு வித்திட்ட தென் ஆப்பிரிக்காவிற்கு ஐக்கிய நாடுகள் சபையில் இடம் கொடுக்கக் கூடாது என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து அந்த ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து நீக்கியிருக்கிறார்கள்.

இலங்கையில் நடந்த இந்தப் படுகொலை மிகவும் கண்டிக்கத்தக்கது. ஈழத்தில் வாழ்கின்ற தமிழர்கள் அங்கே பிறந்து வாழ்கிறவர்கள். மேலும் இந்திய தேசத்திலிருந்து இலங்கை சென்று தோட்டத் தொழிலாளர்களாக வேலை செய்தும், மற்றும் பல சிறு தொழில்களைச் செய்தும் பல்லாண்டு காலமாக அங்கிருந்து இலங்கைக் குடியுரிமையைப் பெற்றவர்கள் அவர்கள். இலங்கை தேசத்தைச் சுற்றிப் பார்க்க சுற்றுலாப் பயணியாகச் சென்ற தனபதி என்ற ஒருவர், அவர் தமிழர் என்ற காரணத்திற்காக படுகொலை செய்யப்பட்டார் என்றால், அங்கே எந்த அளவிற்கு இன வெறி தலைவிரித்தாடுகிறது என்பதை நாம் கண்டுகொள்ளலாம். இந்தியக் குடிமகன் வெளிநாட்டிற்கு சுற்றுலாப் பயணியாகச் சென்றபோது, அவனைப் படுகொலை செய்திருப்பதால், இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடமிருந்து அதற்குத் தகுந்த காரணங்களைக் கேட்க வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் இந்திய அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும். இத்தகைய படுகொலை இலங்கையில் நடக்கக் காரணம், அங்கே ஆளும் கட்சியில் உள்ள அரசாங்கத்தினர் வெறியர்களுக்குத் தூபம் போட்டு பிரசங்கங்கள் செய்வதுதான். இந்தப் படுகொலைக்கு இலங்கை அரசாங்கமே காரணமாக இருப்பதால், இதை உள்நாட்டுப் பிரச்சினையாக ஒதுக்காமல், தகுந்த நடவடிக்கையை மத்திய அரசாங்கம் எடுக்க வேண்டும். அதாவது ஐக்கிய நாடுகள் சபையிலும் இது குறித்து நம்முடைய நாடு புகார் செய்ய வேண்டும் என்று நமது அரசு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது அரசு இந்தப் பிரச்சினையில் மிகுந்த ஆர்வம் காட்டி, உடனடியாக இதற்குப் பரிகாரம் காணுவதற்காகக் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை எங்கள் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஆதரிக்கிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது குறித்து நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்துத் தரப்பினர்களும் எந்த

வேறுபாடுகளுக்கும் இடம் இல்லாமல் கண்டனத்தைத் தெரிவித்து வருகிறோம். இலங்கையிலே இருக்கக்கூடிய அரசாங்கமும், அங்கு பொறுப்பிலே இருப்பவர்களுடைய பேச்சுக்களுமே இப்படிப்பட்ட படுகொலைக்குக் காரணம் என நாம் சந்தேகிக்க இடமிருக்கிறது. தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய முதல்வர் அவர்களும், தமிழ் நாட்டு சட்டமன்றப் பேரவையின் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், ஏனையோரும் நம்முடைய இந்திய நாட்டுப் பிரதமருக்கு இதுபற்றி அறிவித்திருக்கிறார்கள்; வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். இந்திய நாட்டினுடைய வெளி விவகார அமைச்சர் அவர்கள், இந்தியா-இலங்கை நட்புறவு கெட்டுவிடக்கூடாது என்ற கருத்தையும், இது உள்நாட்டுப் பிரச்சினை என்ற கருத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள். உள்நாட்டுப் பிரச்சினையென்றால் நாட்டிற்குள்ளே இருக்கக்கூடிய மக்கள் பிரச்சினை. ஆனால் தமிழகத்திலேயிருந்து உல்லாசப் பயணியாகச் சென்ற தனபதி என்ற தமிழர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். ஆகவே இது உள்நாட்டுப் பிரச்சினையில்லை, தமிழர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் யாராக இருந்தாலும், இனப் படுகொலை செய்யப்படுகிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டான நிகழ்ச்சி என்பதை இந்தியப் பிரதமருக்கு நாம் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆனந்தம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வெளி நாடுகளிலே இருக்கக்கூடிய தமிழர்கள் பாதிக்கப்படுகிறபோது, இந்திய அரசாங்கம் ஒரு மாதிரியான நடவடிக்கையையும், வெளிநாடுகளிலே இருக்கக்கூடிய வட இந்தியர்கள் பாதிக்கப்படுகிறபோது வேறு மாதிரியாக மிகவும் சுறுசுறுப்பான நடவடிக்கையையும் எடுத்து வருகிறார்கள். வட நாட்டவர்கள் ஆப்பிரிக்காவிலே சென்று வட்டிக் கடை நடத்தினார்கள். அவர்கள் மீது அங்கே உள்ளவர்கள் தாக்குதல் செய்தபோது, குஜராத் மாநிலம் போன்ற வட மாநிலத்துக்காரர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பேரணி நடத்தினார்கள். அந்தப் பேரணியில் இந்திய நாட்டின் அமைச்சர் ஒருவரே பங்கேற்றார். அவருடைய பெயர் இன்றைக்கு எனக்கு நினைவில்லை. அப்போது அது அந்த நாட்டு உள்நாட்டுப் பிரச்சினையாக மத்திய அரசுக்குத் தெரியவில்லை. தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லும்போது மட்டும், அது வெளி நாடு, அது அந்த நாட்டு உள்நாட்டுப் பிரச்சினை என்று சொல்லிக்கொண்டிருப்பது தமிழர் இனம் வேகமாக வேறு வழியில் செல்ல தூண்டுகோலாக அமையும் என்பதை இந்த நேரத்திலே இந்திய அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1981 ஆகஸ்ட் 26

(பிற்பகல் 1-00)

தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள், தனபதி என்ற தமிழன் படுகொலை செய்யப்பட்டிருக்கிறான் என்றால், அவரை பைத்தியக்காரன் கொலை செய்திருக்கிறான் என்று அந்த நாட்டு நிர்வாகத்தினர் சொல்லுகிறார்கள். எங்கே, எபபோது அரசியல் கொலை நடந்தாலும், தவறு நடந்தாலும் அதற்கு அரசியலில் எல்லா நாட்டிலும் ஒரே மாதிரியாகத்தான் சமாதானம் சொல்வார்களா. அது எனக்குப் புரியவில்லை. அங்கேகூட ஒரு பைத்தியக்காரன் இப்படிச் செய்துவிட்டான் என்கிறார்கள். பைத்தியக்காரன் ஏன் சிங்களவரைக் கொலை செய்யவில்லை? தமிழனைக் கொலை செய்திருக்கிறான். அவன் என்ன இனப் பாகுபாடு தெரிந்த பைத்தியக்காரனா? நம் நாட்டினுடைய துரதிருஷ்டம் நம்முடைய தமிழ் மக்கள் பிழைப்பதற்காக நாடு தோறும் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிச் செல்லக்கூடியவர்கள், அந்த நாட்டிலே வளத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நாட்டைச் செழிப்பு மிக்கதாக மாற்றிய பின்னாலே அந்நாட்டவர்கள் நன்றி மறந்து விடுகிறார்கள். இந்த நாட்டை செல்வம் கொழிக்கக்கூடிய நிலைக்கு மாற்றினார்களே என்றுகூட எண்ணாமல், இன்றைக்குக் கொலை செய்கிறார்கள், கொள்ளை அடிக்கிறார்கள். அங்கு கற்பழிக்கின்ற நிலைமைகள்கூட இருக்கின்றன. அதையெல்லாம் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இதற்கெல்லாம் நம்முடைய அரசு ஒரு திட்டம் தீட்டவேண்டும். நம் நாட்டிலிருந்து குவைத், துபாய் ஆகிய நாடுகளுக்கு பிழைப்புக்காகச் செல்லக்கூடிய அவல நிலைமைகள் கின்றன. தமிழ் நாட்டிலே இருப்பவர்கள் வெளிநாட்டிற்குச் செல்லவே கூடாது. அவர்கள் அப்படிச் செல்வதற்கு வாய்ப்பே ஏற்படக்கூடாது. வாழ்ந்தால் அனைவரும் வாழ்வோம், வீழ்ந்தால் அனைவரும் வீழ்வோம். அரைப் பட்டினியாக இருந்தால்கூட வெளிநாட்டிற்கு, மற்ற நாட்டிற்குச் செல்லக்கூடாது. பிழைப்புக்காக வெளிநாட்டிற்கு போகக்கூடாது என்ற நிலைமையை நாம் உருவாக்கவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, ஆப்பிரிக்க நாட்டைப் பொறுத்த மட்டுமல்ல, வங்காளத்திலே நடைபெற்ற நிகழ்ச்சிகளிலேகூட, மத்திய அரசு விரைவாக நடவடிக்கை எடுத்திருக்கிறது. கோவாவிலே நடைபெற்ற நிகழ்ச்சியிலேகூட மத்திய அரசு மிக விரைவாக நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டிலே இருந்து சென்றுள்ள தமிழ் மக்களுக்கு, இலங்கையில் இங்கிருந்து 22 கல் தூரத்தில் இருக்கக்கூடிய நாட்டில் இருக்கக்கூடிய தமிழ் மக்களுக்கு இத்தனை நாட்களாக இன்னல் விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே இருக்கக்கூடிய தமிழர்கள் கூட உணர்ச்சி மிக்கவர்களாக இருக்கி

1981 ஆகஸ்ட் 26] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

றார்கள். நாம் அறியாமலே அவர்கள் வேறு நடவடிக்கையில் ஈடுபடக்கூடிய நிலைமைகள் ஏற்படும். அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தும்கூட, மத்திய அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது அவ்வளவு நன்றாக இல்லை என்ற உணர்வை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் நாடும் இந்தியாவில் உள்ள நாடுதான். தமிழரும் இந்தியர்தான் என்ற எண்ணம் இருக்குமானால், இந்திய அரசு உடனடியாக மிக விரைவாக தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழர்கள் தனித்தவர்கள் என்ற எண்ணம் நமக்கேகூட ஏற்பட்டுவிட்டால், நாம் வேறு வழியிலே செல்லக்கூடிய அவசியமான நிலைமைகள் ஏற்படும் என்பதையும் எச்சரிக்கையாகவே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழுக்காக உயிர் விட்ட திரு. விரப்பன் என்பவர் ஒரு ஆசிரியர் என்பதைச் சொல்கிறேன். அந்தத் தமிழ இன உணர்வு, எல்லாப் பகுதியினருக்கும் இருந்தாலுங்கூட, ஆசிரியர்களுக்கு அதிகமான அளவுக்கு உண்டு என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். அந்த உணர்விலே, தமிழ், தமிழ் நாடு, தமிழினம் என்ற உணர்விலே ஆசிரியர்களுடைய உணர்வு எந்தவிதத்திலும் குறைந்ததல்ல, நாங்களும் எல்லா விதத்திலும் ஒத்துழைப்போம் என்று கூறி அமைகிறேன்.

* THIRUMATHI TARA CHERIAN : Sir, on behalf of the women of India and especially on behalf of the women of our State, I am supporting the resolution which voices the concern of the Hon. the Chief Minister and the opinion of all the people of our State, irrespective of their political affiliations. Sir, today, the Mover of the Resolution and the hon. the Leader of the Opposition have very touchingly placed before us the abject situation in Sri Lanka. I am indeed happy that the Hon. the Chief Minister had met our Prime Minister and appraised her of the feelings of the people of Tamil Nadu regarding the atrocities on our Indians in Sri Lanka. I know that we, Tamilians who unequivocally feel that we are Indians first and Indians last, would take up cudgels if any Indian group or any Indian individual is put to suffering, irrespective of the State he comes from, irrespective of the language he speaks and irrespective of the community he belongs to, if they were in the same predicament

[Thirumathi Tara Cherian] [1981 ஆகஸ்ட் 26

as our Tamilians in Sri Lanka are today. There was a time when we as children if we drew up the map of India and left our Sri Lanka then referred to as Ceylon, we got zero marks. Ceylon being very near the southern States, many of our people had inhabited Ceylon, made it their home and become part and parcel of Sri Lanka and have in no small measure played their rightful part, contributing their best in making Sri Lanka become what it is today. Therefore, we feel very much for our people, and the agonies to which they are put. Our hearts go out to them. I am sure the Prime Minister would take heed of the feelings of our people expressed in this House and in the other House. I am happy also to see that this subject has been taken up for discussion in the Lok Sabha and the Rajya Sabha. My only request would be this. The students are restive always and the younger generation have many factors to make them restless, including unemployment, underemployment, malnutrition, and many other frustrations and they want something to keep them active and, therefore, we should not do anything that may play down the seriousness of the situation and sufferings of the people there. It should not be said that it is all due to parochialism and it is only due to their being Tamilian that we are over-anxious. Undoubtedly we are not going to be just spectators but we have to see that due justice is done to our people, through the right course. Certain things have to be done only at the Union level. Therefore, while passing this Resolution unanimously and when all the various parties of one accord have condemned the attacks on Indians in Sri Lanka let us not do anything that will bring unnecessary misunderstanding. To-day's newspapers have made it very clear that the Prime Minister of Sri Lanka has taken up the issue and that he is very anxious to book the people who killed an Indian tourist while in Sri Lanka and restore peace. Let us do our very best to see that we do not do anything that would be misunderstood and strain the relationship at Diplomatic level. I am sure that our Prime Minister would do the needful because it is her bounden duty to take action and to see that every thing possible is done to our people.

1981 ஆகஸ்ட் 26]

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் **சார்பாக** கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை நான் முழு மனதோடு வரவேற்று ஆதரிக்கிறேன். 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்று நம்முடைய புலவன் பாடினான். இப்போது தமிழ் நாட்டினுடைய, தமிழனுடைய நிலை தாழ்ந்துகொண்டிருக்கிறது. கொலை வெறிக்கு தமிழர்கள் இன்று ஆட்பட்டிருக்கிறார்கள். கடல் கடந்து வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய ஆபத்து நமக்கு ஆத்திரத்தை மட்டுமல்ல, இன்றைக்கு அதைத் தடுப்பதற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்ற உணர்ச்சியை இங்கே உண்டாக்கியிருக்கிறது என்பதை நம்மால் மறுக்க முடியாது. இந்த நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் ஒன்று சேர்ந்து இந்தப் பிரச்சினையில் தமிழ் நாட்டு மக்கள் எவ்வளவு கொந்தளிப்பு அடைந்திருக்கிறார்கள் என்ற உணர்ச்சியை பக்கத்திலே உள்ள சிங்களத்துக்காரர்களும், இந்திய அரசும் உணர்வதற்கு ஏற்ற அளவில் நிலைமைகளைப் பற்றி வலியுறுத்திச் சொல்ல வேண்டும். அதற்கான முயற்சிகளிலே நாம் ஈடுபடவேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

'கடல் கடந்து செல்லடா, சிங்கள வெறியர்களின் கொலைச் செயலை அடக்கடா' என்ற புதிய ஒரு உணர்ச்சி வேகத்தோடு நாம் செல்லலாமா என்று எண்ணக்கூடிய அளவுக்கு அங்கே அக்கிரமங்கள் நடக்கின்றன. இந்த அக்கிரமங்கள் கொஞ்சநஞ்ச நாட்களாகவா நடந்துகொண்டிருக்கின்றன? பல நாட்களாக நடக்கின்றன. பொறுமை, பொறுமை என்று இருந்துகொண்டிருக்கும் நாள் மாறி, புலியாக ஆகும் அளவுக்கு நமக்கு ஆத்திரத்தை உண்டாக்கியிருக்கிறார்கள்.

இப்போது ஒன்று மட்டும் சொல்வேன். இந்த உலகத்திலே அமெரிக்க நாட்டிலே இருக்கக்கூடியவன், வேறு நாட்டிலே கொல்லப்பட்டு இருந்தால், அந்த நாடு எச்சரிக்கப்பட்டு, அந்த நாடு பயந்து மன்னிப்புக் கேட்டிருக்கும். இதை நாம் உலக வரலாற்றிலே பார்க்கிறோம். ஆனால் தமிழர்கள், இந்த நாட்டிலே இருந்து போனவர்கள், வேறு ஒரு நாட்டிலே, மிகக் கேவலமாக நடத்தப்படுகிறார்கள். கொலை செய்யப்படுகிறார்கள். கேவலமாக நடத்தப்பட்டதைக்கூட நாம் நீண்ட நாட்களாகப் பொறுத்திருந்தோம். அங்கே அவர்களைக் கொள்ளை அடிக்கிறார்கள். கொலை செய்கிறார்கள். உயிருக்கும், உடலுக்கும், உடைமைக்கும் ஆபத்துக்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. நம் சொந்தச் சகோதரர்கள் சிங்களத் தீயில் பட்டுக்கொண்டிருக்கின்ற

கொடுமைகள் சொல்லியறாது. அவ்வளவு அக்கிரமங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இவ்வளவு அக்கிரமங்களையும் கண்டும் காணாமலும் இருக்கிறார்கள் போலீஸ்காரர்கள். இராணுவத்தினர் துணை போவதுபோல இருந்து கொண்டிருக்கிறார்கள். இது மனிதாபிமானத்திற்கே, மனித இனத்திற்கே அந்தச் சிங்களவர் விடுகின்ற சவால் ஆகும். நாம் அத்தனை பேரும் அதை எதிர்க்கிறோம், சிங்களத்தில் ஒரு கொடுமை தமிழ் மக்களுக்கு நடந்தால், தமிழகத்திலே அதன் பிரதிபலிப்பு தெரியும் என்ற அளவுக்கு நாம செயலில் ஈடுபட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஹர்த்தால் பற்றி வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அது முழு அளவுக்கு வெற்றி பெற வேண்டும். திரு. வாஜ்பாய் அவர்கள் எதிர்கட்சித் தலைவராக இங்கிலாந்திலே நடைபெற்ற நிகழ்ச்சிக்காக ஓடியிருக்கிறார்கள். இப்போதுகூட அறிக்கை விட்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழ் மக்களுடைய தலைவர்கள் இலங்கைக்குச் சென்று பார்க்க வேண்டும். இந்திய அரசாகட்டும், எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆகட்டும், அமைச்சர்கள் தலைமையில் அங்கு சென்று நிலைமைகளைப் பார்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்ற உணர்வைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட உணர்வை தமிழ் மக்கள் பெற வேண்டும் என்ற அளவுக்கும் தமிழர்கள் பெற்றிருக்கக்கூடிய உணர்ச்சியை இந்திய அரசு பெற்றிருக்க வேண்டும் என்ற அளவுக்கும் நிலைமைகள் உருவாக வேண்டும். ஐ.நா. இதில் தலையிட வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும். ஐ.நா. தலையிடத் தயங்கினால், இந்திய அரசு தலையிட வேண்டும். இந்தியக் குடிமகனுக்கு ஏற்படக்கூடிய உணர்ச்சி மட்டுமல்ல, தமிழகத்திலே இருப்பவர்களுக்கு ஏற்படக்கூடிய உணர்ச்சியை இந்திய அரசும் பெற வேண்டும், தலைமை அமைச்சர் அவர்கள் பெற வேண்டும். உடனடியாக அவர்கள் எச்சரிக்கை செய்ய வேண்டும். மற்ற பகுதிகளிலே ஏற்படக்கூடிய நிகழ்ச்சிகளுக்கெல்லாம், நம்முடைய இந்திய அரசு முன்னணியில் இருக்கும்போது, இந்திய இனம், இந்திய வம்சாவளியில் இருக்கக்கூடிய தமிழர்களுடைய இனம் அங்கே படுகொலை செய்யப்படும் போது, அதைக் கண்டும் பாராமல் அல்லது எச்சரிக்காமல் இருப்பது

(பிற்பகல் 1-10)

கொஞ்சமும் நல்லதல்ல. உடனடியாக இந்திய அரசு எச்சரிக்கை செய்ய வேண்டும். ஸ்ரீலங்கா சின்ன நாடு, இந்தியா பெரிய நாடு என்று உள் நாட்டு விவகாரத்தில் ஈடுபட நான் விரும்பவில்லை. பெரிய நாடு இந்தியா. உலக நாடுகளிலே வல்லமை பெற்றுள்ள அரசு இந்திய அரசு. அப்படிப்பட்ட இந்திய நாட்டின் பிரஜைகள் கொலை செய்யப்படுகிறார்கள். ஆனால் அந்த ஆட்சி அதைப்பற்றி மௌனமாக இருக்கிறது. கடைசியாக நடந்த ஒன்றிக்கு

வருத்தம் தெரிவித்திருக்கிறது. நிறைய அக்கிரமங்களைச் செய்துவிட்டு, அதற்குப் பின்னாலே அறிக்கை விடுவது என்பது மனிதாபிமானமல்ல. இந்திய அரசு இதில் வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபற்றி நேரடியாக தீர்மானத்தில் வாசகங்கள் இல்லாவிட்டாலும், என்னுடைய உணர்ச்சியாக, தமிழினத்தின் உணர்ச்சியாக நான் இதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென் ஆப்பிரிக்க நாட்டில் இன வெறிக் கொடுமைகள் நடைபெற்றன. இரண்டாவது தென் ஆப்பிரிக்க நாடாக ஸ்ரீலங்கா உருவெடுத்திருக்கிறது. இதை எல்லோருக்கும் உணர்த்த தமிழர்கள் கொதித்து எழுந்திருக்கிறார்கள். இதை இந்தியா உணரட்டும். இந்திய நாடு மற்றவர்களுக்கு அதை உணர்த்தட்டும் என்று தெரிவித்து, இந்த உணர்வில் எல்லோரும் ஒன்றாகி, சிங்களக் கொடுமைகளுக்குச் சவாலாக உருவாக வேண்டுமென்று தெரிவித்து, அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"இலங்கையில் வாழும் நிலையான தமிழர், மலைத் தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட இந்தியர் வழிவந்த தமிழர், ஆகியோரின் உயிருக்கும், உடைமைக்கும் உரிமைக்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பதையும், இன வெறியர்களால் கொலை-கொள்ளை-கற்பழிப்பு-துன்புறுத்தல் போன்ற வன்முறைச் செயல்கள் நிகழ்வதையும், தக்க பாதுகாப்பு அளிக்காத நிலை நிலவுவதையும் அறிந்து மனிதாபிமான அடிப்படையில் இந்த அவை மிக்க அதிர்ச்சியும், கவலையும் கொள்கிறது.

தமிழக மக்களின் சார்பாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமருக்கு தெரிவித்துள்ளதற்கு ஏற்ப, இந்திய அரசு தமது தூதுவரகத்தின் மூலமும், ஐ.நா. அவையின் மூலமும், மற்ற முறைகளின் மூலமும் இலங்கை வாழ் தமிழருக்கு நியாயம் கிடைக்க முற்படுவதோடு, அவர்களுக்கு எல்லாவிதமான பாதுகாப்புகளையும் அளிக்க, தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்த அவை மாண்புமிகு இந்தியப் பிரதமரைக் கேட்டுக் கொள்கிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இனக் கலவரத்தில் படுகொலைக்கு ஆளானவர்களின் குடும்பங்களுக்கும், காயமுற்றும், பல தொல்லைகளுக்கு ஆளாகியும் அவதியுறும் மக்களுக்கும் இந்த அவை தன் இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, மீண்டும் நாளை காலை 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-11)

7. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

* 1. Notification issued with G.O. Ms. No. 492, Revenue, dated the 2nd March 1981 in regard to an amendment to the rules published with Revenue Department Notification SRO No. B-570 (*a*)/80, dated the 18th November 1980 at pages 1-3 in Part III—Section 1 (*b*) of the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated the 20th November 1980. [Laid on the table of the House under section 12 (3) of the Tamil Nadu Abolition of Posts of Part-time Village Officers Act, 1981 (Tamil Nadu Act 3 of 1981).]

* 2. Notification issued with G.O. Ms. No. 1299, Housing and Urban Development, dated the 4th October 1980 in regard to approval of the Detailed Development Plan for Radhakrishnan Nagar Area, Madras City, by the Madras Metropolitan Deveopment Authority and approved by him under section 28 of the Tamil Nadu Town and Country Planning Act 1971. (Tamil and English) [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

* 3. Notification issued with G.O. Ps. No. 325, Commercial Taxes and Religious Endowments, dated the 30th March 1981 in regard to exemption in respect of the Surcharge payable by any dealer under section 3 of the Tamil Nadu Sales Tax (Surcharge) Act, 1971 on the sale of petrol, diesel and kerostene [Laid on the table of the House under section 7 (3) of the Tamil Nadu Sales Tax (Surcharge) Act, 1971 (Tamil Nadu Act 24 of 1971).]

* 4. Notification issued with G.O. Ms. No. 272, Commercial Taxes and Religious Endowments, dated the 17th March 1981 exempting from tax payable under the Tamil Nadu General Sales Tax Act on the sale of bagasse by the Sugar Mills in this State to the Tamil Nadu Newsprint and Papers Limited (TNPL), Pugalur int Tiruchirappalli district and on the sale of steam by the Tamil Nadu Newsprint and Papers Limited (TNPL), Pugalur in Tiruchirappalli district to the Sugar Mills in this State. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959.)]

* 5. Notification issued with G.O. P. No. 821, Commercial Taxes and Religious Endowments, dated the 8th September 1980, exempting from tax payable by the Kanyagurukula for Handicapped, Kaladipet, Madras-19, under the Tamil Nadu General Sales Tax Act on the purchase of paper required for manufacture of envelopes and on the sale of envelopes manufactured by the said institution. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 6. Notification issued with G.O. Ps. No. 326. Commercial Taxes and Religious Endowments, dated the 30th March 1981 in regard to an amendment to the Commercial Taxes and Religious Endowments Department Notification No. II (1)/CTRE/164 (*c*)/81, dated the 26th March 1981, published on page 2 in Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 26th March 1981. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 7. Notification issued with G.O. Ms. No. 401, Rural Development and Local Administration, dated the 16th March 1981 in regard to an amendment to the Municipal Corporation of Madurai (Regulation of Payment of Travelling Allowance, Daily Alowance and Conveyance Allotwance to the Mayor, Deputy Mayor and other Members of the Corporation Council) Rules, 1972. [Laid on the table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

* 8. Notification issued with G.O. Ms. No. 1492, Housing and Urban Development, dated the 14th November 1980 in regard to approval of the Detailed Development Plan for Amir Mahal Area, Madras City by the Madras Metropolitan Development Authority and approved by him under section 28 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Tamil and English). [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

* 9. Notification issued with G.O. Ms. No. 586, Education, dated the 2nd April 1981 in regard to an amendment to the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Rules, 1974. [Laid on the table of the House under section 57 (2) of the Tamil Nadu Recognised Schools (Regulation) Act, 1973 (Tamil Nadu Act 29 of 1974).]

* 10. Notification issued with G.O. Ms. No. 602, Home (TR.I), dated the 18th March 1981, exempting the public service vehicles of the States having special permits granted under section 63 (6) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939) from the tax payable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974). [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

* 11. Notification issued with G.O. Ms. No. 1230, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 17th December 1980 in regard to exclusion of the post of Section Officer in Secretariat from the Commission's purview and inclusion for appointment of Under Secretary to Government by promotion within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

* 12 Notification issued with G.O. Ms. No. 134, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 14th February 1981 in regard to exclusion of the post of Storekeeper in Tamil Nadu House, New Delhi from the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

* 13. Notification issued with G.O. Ms. No. 24, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 7th January 1981 in regard to inclusion of the post of Physical Education Director in the Government Nandanar Higher Secondary School for Boys at Chidambaram in South Arcot district in the Harijan Welfare Subordinate Service within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

* 14. Notification issued with G.O. Ms. No. 779, Revenue, dated the 31st March 1981 in regard to an amendment to the rules published with Revenue Department Notification No. SRO B/570 (*a*)/80, dated the 18th November 1980, at pages 1–4 in Part III—Section 1 (*b*) of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 20th November 1980. [Laid on the table of the House under section 12 (3) of the Tamil Nadu Abolition of posts of part-time Village Officers Act, 1981 (Tamil Nadu Act 3 of 1981).]

15. First Annual Report of the Tamil Nadu Magnesite Limited for the year 1979–80. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

& 16. Notification issued with G.O. Ms. No. 415, Revenue, dated the 18th February 1981 in regard to an amendment to the Tamil Nadu Urban Land Tax Rules, 1966. [Laid on the table of the House under section 45 (2) of the Tamil Nadu Urban Land Tax Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966).]

& 17. Notification issued with G.O. Ms. No. 124, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 12th February 1981 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 in Volume I of the Tamil Nadu Service Manual, 1977. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

18. Notification issued with G.O. Ms. No. 1160, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 25th November 1980 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 in Volume I of the Tamil Nadu Services Manual, 1977. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

& 19. Notification issued with G.O. Ms. 1740, Agriculture, (A.M. I), dated the 1st September 1980 in regard to amendments to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

20. Fifth Annual Report of the Tamil Nadu Poultry Development Corporation Limited for the year 1977-78 (Tamil and English). [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

21. Fourth Annual Report and Accounts of the Tamil Nadu Fisheries Development Corporation Limited for the year 1977-78. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

& 22. Notification issued with G.O. Ms. No. 627, Rural Development and Local Administration, dated the 4th April 1981 in regard to an amendment to the rules relating to the "Installation of machinery—Exemption from permission", published with the Rural Development and Local Administration, Department Notification S.R.O. No. A-489 of 1961, dated the 26th April 1961, at page 58 of Supplement to Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 10th May 1961. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 23. Notification issued with G.O. Ms. No. 545, Home (PE. IV), dated the 9th March 1981 in regard to an amendment to the Madras Denatured Spirit Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

& 24. Notification issued with G.O. Ms. No. 253, Industries, dated the 26th February 1981 in regard to amendments to the Tamil Nadu Small Scale and Cottage Industries Loans and Subsidy Rules, 1956 (Tamil and English). [Laid on the table of the House under section 19 (*d*) of the Tamil Nadu State Aid to Industries Act, 1922 (Tamil Nadu Act V of 1923).]

& 25. Notification issued with Government Letter No. 31217/VIII-2/80-11, Commercial Taxes and Religious Endowments, dated 22nd April 1981 in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 1431 of 1965, dated the 30th March 1965, published at pages 588-593 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 31st March 1965. [Laid on the table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

& 26. Notifications issued with Government Letter No. 126717/AM-II/80-2, Agriculture, dated the 11th February 1981 in respect of change of address of Anamalai, Udumalpet, Kinathukadavu and Annur markets under section 5 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

& 27. Notification issued with G.O. Ms. No. 202, Labour and Employment, dated the 28th January 1981 in regard to an amendment to the Tamil Nadu Labour Welfare Fund Rules, 1973. [Laid on the table of the House under section 41 (5) of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972 (Tamil Nadu Act 36 of 1972).]

& 28. Notification issued with G.O. Ps. No. 392, Commercial Taxes and Religious Endowments, dated the 16th April 1981 in regard to an amendment to the Commercial Taxes and Religious Endowments Department Notification No. II (1)/CTRE/366 (*c*)/70, dated the 3rd July 1980, published at page 2 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 3rd July 1980. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

& 29. Notifications issued with G.O. Ps. No. 365, Commercial Taxes and Religious Endowments, dated the 8th April 1981 in regard to amendments to the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 and amendment to the Commercial Taxes and Religious Endowments Department

Notification No. II(1)/CTRE/1258 of 1974, dated the 9th October 1974, published at page 142 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 13th November 1974. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

30. Sixth Annual Report of the Pallavan Engineering Corporation Limited for the year 1979–80. [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

31. Second Annual Report of the Tamil Nadu Minerals Limited for the year 1979–80. [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

& 32. Notification issued with G.O. Ps. No. 327, Commercial Taxes and Religious Endowments, dated the 31st March 1981 exemption from levy of sales tax payable under the Tamil Nadu General Sales Tax Act by the Salvation Army Vocational Training Centre for the Physically Handicapped, Nagercoil, in regard to the whole of the turnover relating to the sale of goods manufactured by the said Training Centre. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

& 33. Notification issued with G.O. Ps. No. 393, Commercial Taxes and Religious Endowments, dated the 16th April 1981 *re* exemption from levy of sales tax payable under the Tamil Nadu General Sales Tax Act by Thiruvalargal Lakshmi Seva Sangam, Gandhigram, Madurai district, on the sale of products manufactured by the said Sangam. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

& 34. Notification issued with G.O. Ps. No. 501, Commercial Taxes and Religious Endowments, dated the 12th May 1981 in regard to levy of certin taxes on Inter-venue Betting inside the Race Course at Uthagamandalam on the races to be held at Bangalore with effect on and from the 15th May 1981 and up to and inclusive of the 21st June 1981 under the Tamil Nadu Betting Tax Act, 1935. [Laid on the table of the House under section 10 (4) of the Tamil Nadu Betting Tax Act, 1935 (Tamil Nadu Act XX of 1935)].

& 35. Notifications issued with G.O. Ps. No. 429, Commercial Taxes and Religious Endowments, dated the 24th April 1981 in regard to levy of certain taxes under the Tamil Nadu Betting Tax Act, 1935. [Laid on the table of the House under section 10(4) of the Tamil Nadu Betting Tax Act, 1935 (Tamil Nadu Act XX of 1935)].

& 36. Notification issued with Government Letter No. 43276/VIII-2/79-13, Commercial Taxes and Religious Endowments, dated the 27th April 1981 in regard to an amendment to the Commercial Taxes and Religious Endowments Department Notification No. II(2)/CTRE/2455/80, dated the 29th April 1980, published at page 387 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 18th June 1980. [Laid on the table of the House under section 48(5) of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 30 of 1963)].

@ 37. Notification issued in Proceedings No. 28818/78/D2, dated 24th March 1979 in regard to certain variations sanctioned in G.O. No. 1824, P.H., dated 17th May 1938 published in Public Health Department, Notivcation No. 394, dated 17th May 1938 at pages 383-384 of Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 31st May 1938. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 38. Notification issued with G.O. Ms. No. 86, Home (Cinemas), dated the 20th January 1981 in regard to certain amendments to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10(3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955)].

@ 39. Notification issued with G.O. Ms. No. 138, Home (Cinemas), dated the 24th January 1981 in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957,

[Laid on the table of the House under section 10(3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955)].

@ 40. Notification issued with G.O. Ms. No. 136, Home, dated 24th January 1981 in regard to certain amendments to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10(3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955)].

@ 41. Notification issued with G.O. Ms. No. 447, Commercial Taxes and Religious Endowments, dated the 29th April 1981 in regard to publication of certain scheme. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

& 42. Notification issued with G.O. Ms. No. 276, Commercial Taxes and Religious Endowments, dated the 18th March 1981 in regard to certain amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

@ 43. Notification issued with G.O. Ms. No. 1234, Housing and Urban Development, dated the 22nd September 1980 in regard to the approval of Detailed Development Plan for Pariamet Area, Purasawalkam Planning Unit 6.9 Madras, Map No. 4. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

& 44. Notification issued with G.O. Ms. No. 18, Home (Cinemas), dated the 3rd January 1981 in regard to certain amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955)].

& 45. Notification issued with G.O. Ms. No. 1088, Commercial Taxes and Religious Endowments, dated the 23rd October 1980 in regard to certain amendment to the Management and Preservation of Properties of Religious Institutions Rules, 1964.

[Laid on table of the House under section 116(3) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu 22 of 1959)].

@ 46. Notification issued with G.O. Ms. No. 502, Home, dated the 4th March 1981 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

@ 47. Notification issued with G.O. Ms. No. 238, Home, dated the 5th February 1981 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

@ 48. Notification issued with G.O. Ms. No. 1856, Housing and Urban Development, dated the 25th September 1979 in regard to the declaration of certain areas specified in column (3) of the table to be a local planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 49. Notification issued with G.O. Ms. No. 2479, Revenue, dated the 8th November 1979 in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 3987/(b) of 1971 dated the 7th September 1971, published in extraordinary issued of Part II Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 8th September 1971. [Laid on the table of House under section 18(4) of the Tamil Nadu Agricultural Lands Records of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969)].

@ 50. Notification issued with G.O. Ms. No. 391, Commercial Taxes and Religious Endowments, dated the 16th April 1981 in regard to an amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

@ 51. Notification issued with G.O. Ms. No. 1183, Housing and Urban Development, dated the 10th September 1980 in regard to an amendment to the Tamil Nadu Slum Clearance Board Service Rules, 1972. [Laid on the table of the House under section 72(2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971)].

@ 52. Notification issued with G.O. Ms. No. 1616, Housing and Urban Development, dated the 29th December 1980 in regard to an amendment to the Tamil Nadu Slum Clearance Board Service Rules, 1972. [Laid on the table of the House under section 72(2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971)].

@ 53. Notification issued with G.O. Ms. No. 1566, Housing and Urban Development, dated the 6th December 1980 in regard to certain amendments to the Tamil Nadu Slum Clearance Board Service Rules, 1972. [Laid on the table of the House under section 72(2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971)].

@ 54. Notification issued with G.O. Ms. No. 894, Housing and Urban Development, dated the 12th July 1980 in regard to certain amendments to the Tamil Nadu Slum Clearance Board Service Rules, 1972. [Laid on the table of the House under section 72(2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971)].

@ 55. Notification issued with G.O. Ms. No. 31, Housing and Urban Development, dated the 8th January 1980 in regard to certain amendments to the Rural Development and Local Administration Department Notification No. 4363, dated 7th July 1972, published at pages 39—54 of Part II—1 of the *Tamil Nadu Government Gazette*, dated 20th September 1972. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 56. Notification issued with G.O. Ms. No. 2004, Housing and Urban Development, dated the 27th October 1979 in regard to the declaration of Tiruthani as Local Planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 57. Notification issued with G.O. Ms. No. 1084, Housing and Urban Development, dated the 26th August 1980 in regard to certain variations to the Nungambakkam Central Area Town Planning Scheme sanctioned in G.O. Ms. No. 384, Public Health, dated the 9th February 1944, published as late Education and Public Health Department Notification No. 142, at page 91 of Part 1-A of the *Tamil Nadu Govednment Gazette*, dated the 4th April 1944. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 58. Notification issued with G.O. Ms. No. 376, Commercial Taxes and Religious Endowments, dated the 14th April 1981 in regard to an amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

@ 59. Notification issued with G.O. Ms. No. 247, Home (Cinemas), dated the 30th January 1980 in regard to certain amendments to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955)].

@ 60. Notification issued with G.O. Ms. No. 1064, Rural Development and Local Administration, dated the 6th June 1981 in regard to the declaration of certain village in Gingee taluk, South Arcot district to be Gramdhan Village. [Laid on the table of the House under section 28 (4) of the Tamil Nadu Bhoodan Yagna Act, 1958 (Tamil Nadu Act XV of 1958)].

@ 61. Notification issued with G.O. Ms. No. 636, Commercial Taxes and Religious Endowments, dated the 6th June 1981 in regard to certain amendment to the Revenue Department Notification III No. 249, dated 24th April 1964 published

at page 1109 of Part III of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st June 1964. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

@ 62. Notification issued with G.O. Ms. No. 2457, Revenue, dated the 27th October 1980 in regard to certain amendments to the Tamil Nadu Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965. [Laid on the table of the House under section 112(2) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961)].

@ 63. Notification issued with G.O. Ms. No. 675, Commercial Taxes and Religious Endowments, dated the 17th June 1981 in regard to the exemption from payment of contribution and audit fees payable by Arulmigu Arunagirinathar Urchava Kattalai, Tiruvannamalai Town, North Arcot district. [Laid on the table of the House under section 116 (6) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959)].

@ 64. Notification issued with G.O. Ms. No. 1617, Housing and Urban Development, dated the 29th December 1980 in regard to certain amendments to the Tamil Nadu Slum Clearance Board Service Rules, 1972. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971)].

@ 65. Notification issued with G.O. Ms. No. 963, Revenue, dated the 15th April 1980 in regard to certain amendments to the Revenue Department Notification II-1 No. 5939, dated the 17th December 1969 published in Extraordinary issue of Part II of Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 19th December 1969. [Laid on the table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

@ 66. Notification issued with G.O. Ms. No. 523, Commercial Taxes and Religious Endowments, dated the 15th May 1981 in regard to the reduction of the tax payable under the Tamil Nadu General Sales Tax Act, 1959 on the sale of tea made at the

auction centres at Coimbatore and Coonoor. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).].

67. Notification issued with G.O. Ms. No. 472, Commercial Taxes and Religious Endowments, dated the 6th May 1981 in regard to certain amendments to the Commercial Taxes and Religious Endowments Department Notification II(1)/CT & RE/755/80, dated the 2nd December 1980, published at page 99 in Part II—Section I of the *Tamil Nadu Government Gazette*, dated the 24th December 1980. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

68. Notification issued with G.O. Ms. No. 466, Commercial Taxes and Religious Endowments, dated the 2nd May 1981 in regard to the cancellation of the Commercial Taxes and Religious Endowments Department Notification No. II(1)/CT & RE/651/80, dated the 6th October 1980, published at page 81 of Part II—Section I of the *Tamil Nadu Government Gazette* dated the 29th October 1980. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

69. Notification issued with G.O. Ms. No. 303, Commercial Taxes and Religious Endowments, dated the 26th March 1981 in regard to certain amendments to the 1st Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

70. Notification issued with G.O. Ms. No. 782, Housing and Urban Development, dated the 19th May 1979 in regard to the declaration of certain revenue villages for the new town in Hosur taluk. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

71. Notification issued with G.O. Ms. No. 1298, Revenue, dated the 1st June 1981, in regard to certain amendment to the Tamil Nadu Debt Relief Rules, 1980. [Laid on the table of the House under section 13 (3) of the Tamil Nadu Debt Relief Act, 1980 (Tamil Nadu Act 13 of 1980).]

72. Notification issued with G.O. Ms. No. 1259, Revenue, dated the 29th May 1981 in regard to certain amendment to the Tamil Nadu Pawnbrokers Rules, 1944. [Laid on the table of the House under section 22 (4) of the Tamil Nadu Pawnbrokers Act, 1943 (Tamil Nadu Act XXIII of 1943).]

73. Notification issued with G.O. Ms. No. 38, Prohibition and Excise (PE-IV), dated the 23rd May 1981 in regard to certain amendment to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

74. Notification issued with G.O. Ms. No. 153, Housing and Urban Development, dated the 15th February 1980 in regard to the declaration of Tiruvallur as local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

75. Notification issued with G.O. Ms. No. 647, Commercial Taxes and Religious Endowments, dated the 9th June 1981 in regard to the exemption in respect of the additional surcharge payable by any dealer under the Tamil Nadu Sales Tax (Surcharge) Act, 1971 on the sale and purchase of declared goods within the limits of the City of Madras and its suburban area with thirty-two kilometres. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

B. Reports, Notifications and Other Papers.

£ 1. The Tamil Nadu Prohibition (Second Amendment) Ordinance, 1981 (Tamil Nadu Ordinance No. 3 of 1981).

* 2. An Economic-*cum*-Functional Classification of the Tamil Nadu Government Budgetary Transactions 1980-81.

££ 3. The Tamil Nadu Panchayats (Second Amendment) Ordinance, 1981 (Tamil Nadu Ordinance No. 4 of 1981).

** 4. The Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Second Amendment Ordinance, 1981 (Tamil Nadu Ordinance No. 5 of 1981).

** 5. The Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Ordinance, 1981 (Tamil Nadu Ordinance No. 6 of 1981).

% 6. The Madurai Kamaraj University (Amendment) Ordinance, 1981 (Tamil Nadu Ordinance No. 7 of 1981).

% 7. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Ordinance, 1981 (Tamil Nadu Ordinance No. 8 of 1981).

& 8. Notification issued with G.O. P. No. 327, Commercial Taxes and Religious Endowments, dated the 31st March 1981 directing that no tax under the Central Sales Tax Act, 1956 (Central Act 74 of 1956) shall be payable by the Salvation Army Vocational Training Centre for the Physically Handicapped, Nagarcoil, in respect of the sale of goods manufactured by the Training Centre in the course of Inter-State Trade or Commerce.

&& 9. The Tamil Nadu Prohibition (Third Amendment) Ordinance, 1981 (Tamil Nadu Ordinance No. 9 of 1981).

10. Thirteenth Annual Report of the Tamil Nadu Vigilance Commission for the period from 1st April 1978 to 31st March 1979. (Tamil and English).

£ Sent by post to all M.L.Cs. on 28th May 1981.
** Sent by post to all M.L.Cs. on 11th June 1981.
* Sent by post to all M.L.Cs. on 18th June 1981.
££ Sent by post to all M.L.Cs. on 23rd June 1981.
% Sent by post to all M.L.Cs. on 6th July 1981.
& Sent by post to all M.L.Cs. on 14th July 1981.
&& Sent by post to all M.L.Cs. on 25th July 1981.
@ Sent by post to all M.L.Cs. on 10th August 1981.

[ISSUED 18-2-1982

4045

TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

OFFICIAL REPORT

THURSDAY 27th AUGUST 1981

Volume CLXXXI (No. 2)

©
GOVERNMENT OF TAMIL NADU
1981

Legislative Council Department
Fort St. George, Madras-600 009.

Price 2 *Rupees*.]

பொருளடக்கம்.

	பக்கங்கள்.
1. வினாக்கள்—விடைகள்	81—102
2. அறிவிப்பு—	
பேரவையிலிருந்து செய்தி	103
3. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் தொழில் துறை, கொள்கை விளக்கக் குறிப்பு விவாதத்திற்கு அளித்த பதிலுக்குத் திருத்தம் குறித்து.	103—104
4. கவன ஈர்ப்பு—	
தேர்வுக் கட்டணங்கள் அதிகமாக்கப்பட்டதை எதிர்த்து மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அடையாறு சென்ட்ரல் பாலிடெக்னிக் கால வரையறையின்றி மூடப்பட்டிருப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து.	104—106
5. அரசின் தீர்மானம்—	
(1) தமிழ்நாடு 1920ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் வரைவுத் திருத்தத்திற்கு ஒப்புதலளித்தல் குறித்து.	106—107
(2) நிகழ்ச்சி நிரலில் வரிசை மாற்றம் குறித்து.	107
6. அரசின் சட்ட முன்வடிவுகள்—	
(1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1981)	107—135
(2) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 57/1981)	[illegible]—14[illegible]
(3) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு முறைப் படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண், 58/1981).	147
7. 1981-82 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த முதல் விவர அறிக்கையின் மீது விவாதம்.	148—161, 162—210
8. மேலவை விதி 82-ன்படி அமைச்சரின் விளக்க உரை-விவசாயத்திற்கும் தொழிற்சாலைகளுக்கும் மின்சக்தி வழங்குவதில் உள்ள கட்டுப்பாடு நீக்கம் குறித்து.	162
9. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.	210—212

143087

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1981 ஆகஸ்ட் 27.

ஆவணி 11, துன்மதி—திருவள்ளுவராண்டு 2012.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9.30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Additional Police Station at Tindivanam.

* 11. *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to open an additional Police Station at Tindivanam, with a Sub-Inspector of Police, in view of the work-load involved; and

(*b*) if so, when it will function?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : (அ) மற்றும் (இ) திண்டிவனத்தில் கூடுதலாக காவல் நிலையம் திறக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் திண்டிவனம் காவல் நிலையத்தில் பணி புரியும் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு மாநில காவல் துறை இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : திண்டிவனத்தினுடைய பூகோள அமைப்பின் காரணமாகப் புதுவை மாநிலத்திலிருந்து மாநில ஆளுநர் மற்றும் அமைச்சர்கள் சென்னைக்கோ அல்லது டெல்லிக்கோ செல்லும்போதும், நம்முடைய மாநில அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்கின்றபோதும், அரசு அதிகாரிகள் அல்லது காவல் துறை அதிகாரிகள் பயணம் செய்கின்றபோதும், அவசியத்தின் காரணமாக அல்லது பல்வேறு காரணங்களுக்காக பல சந்தர்ப்பங்களில் அங்கே தங்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அங்குள்ள டி.பி.யில் அவர்கள்

தங்கியிருக்கும்போது, அநேகமாக நாள்தோறும் காவலர்களை அவர்களுக்கான டிராபிக் ரெகுலேஷன், காவல், போலீஸ் மரியாதை போன்ற வேலைகளில் ஈடுபடுத்துகின்ற நிலை, அவசியம் இருக்கிறது. இதனால் அவர்கள் வேறு பணிகளைக் கவனிக்க முடியவில்லை. உடனடியாக மற்ற பணிகளைப் பார்க்க முடியாத நிலை இருக்கிறது. எனவே, அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்ற செயற்குறிப்பை விரைவுபடுத்தி, வேகப்படுத்தி முடிவெடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அங்கு இருக்கக்கூடிய பணி எவ்வளவு பளுவாக இருக்கிறது என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அதனால் தான் கூடுதலாக 6 இரண்டாம் தரக காவலர்களையும், 1 தலைமைக் காவலரையும், 1 சப்-இன்ஸ்பெக்டரையும் நியமிக்கின்ற ஒரு கருத்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தையும் இந்த அரசு உணர்ந்திருக்கிறது. ஆனால், விரைவாக அவர்களை நியமிப்பது குறித்து இந்த அரசு நிச்சயம் ஆவன செய்யும்.

திரு. த. சந்தோஷம் : மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாக இப்போது காவல் துறையினரின் சேவை மிகவும் தேவைப்படுகிறது. இந்தக் கேள்வி குறிப்பாக திண்டிவனத்தில் கூடுதல் காவல் நிலையம் அமைப்பது பற்றியதாக இருந்தாலும் கூட, இப்போது அநேக கிராமப்புறங்களில் காவல் நிலையம் 25 கிலோமீட்டருக்கும் அதிகமான இடைவெளியில் இருக்கின்றது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வியையொட்டி துணை வினா கேட்க வேண்டும். மூலக் கேள்வியையொட்டாமல் ' இருந்தாலும் கூட ' என்று சொல்லி கேட்க வேண்டாம்.

திரு. த. சந்தோஷம் : ஒரு காவல் நிலையத்திற்கும் இன்னொரு காவல் நிலையத்திற்கும் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக இடைவெளி இல்லாத வகையில் காவல் நிலையங்களை அமைப்பதுபற்றி இந்த அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : இப்போது அளிக்கப்பட்டுள்ள விடையைப் பொறுத்தவரை, ஒரு பகுதிக்குத்தான் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் வளர்ந்து வருகிற மக்கள் தொகை, மக்களுடைய தேவைகள், காவலர்களுடைய பணிப் பளு இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு தான் 12 ஆயிரம் காவலர்களைப் *புதிதாக, கூடுதலாக நியமிக்க இருக்கிறோம். அந்த நிலை வருகின்றபோது, காவல் நிலையங்களில் கூடுதலாகக் காவலர்களை நியமிக்கலாம். ஆனால் 10 கிலோ மீட்டர் இடை

வெளிக்குள் காவல் நிலையங்களை ஏற்படுத்த வேண்டுமென்று இப்போது உறுப்பினர் கேட்கிறார். இது கொள்கைப் பிரச்சினை என்பதோடு மட்டுமல்லாமல், நிதிப் பிரச்சினையும் சம்பந்தப்பட்ட ஒன்றாக இருப்பதால், இது குறித்து தனியாகக் கேள்வி கேட்டால் விரிவாகப் பதில் தரலாம்.

விரைவுப் புகை வண்டிகளில் அரசாங்க ஒதுக்கீடு.

* 12 வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விரைவுப் புகை வண்டிகளில் மிகச் சிறியப் பெருமக்களுக்கு முதல் வகுப்பில் பயணச்சீட்டு அரசாங்க ஒதுக்கீடு முறை தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்குரிய காரணம் யாது ?

(உ) இரயில்வே துறைக்கு முறையீடு செய்து ஒவ்வொரு புகை வண்டியிலும் ஒரு பயணச்சீட்டு அரசாங்க ஒதுக்கீடு முறையினை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவர அரசு பரிசீலித்து வருகிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : (அ) ஆம்.

(இ) மாநில அரசுகளுக்கென தனியாக இட ஒதுக்கீடு செய்யக்கூடாது என இரயில்வே போர்டு கொள்கை முடிவு செய்துள்ளதால் தென் பிராந்திய இரயில்வே இவ்வரசிற்கு அளித்திருந்த இட ஒதுக்கீடுகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளது. எனவே இவ்வரசு அளித்து வந்த முன் ஒதுக்கீடு முறை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(உ) ஆம்.

திரு. ம. சங்கரலிங்கம் : முன்பு ரெயில்வேயில் வி.ஐ.பி. கோட்டா என்று மத்திய அரசால் பயணச்சீட்டு அரசாங்க ஒதுக்கீடு முறை அமுலில் இருந்தது. அது மிக மிக இன்றியமையாத ஒன்று. திடீரென்று பயணம் மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் வரும்போது அமைச்சர்களும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய நிலை இருந்தது. எம்.பி.க்களுக்குத் தனியாக அந்த வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் திடீரென்று பயணம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால், உடனே

பப்ளிக் டிப்பார்ட்மென்டுக்கு எழுதிக் கேட்டு அந்த வாய்ப்பைப் பயன்படுத்தக் கூடிய நிலை இருந்தது. 'புரோட்டக்கோல்' அடிப்படையில் முதலில் அமைச்சர்கள், பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள், அதன் பிறகு அரசு அதிகாரிகள் என்று அதற்கான முன்னுரிமையைக் கொடுத்து வந்தார்கள். இப்போது அது அடியோடு ரத்து செய்யப்பட்டிருப்பதால், மாநில அரசுக்கு அந்த உரிமை இல்லாமல் ஆகியிருக்கிறது. அதோடு வி.ஐ.பி.க்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இது குறித்து மத்திய ரெயில்வே அமைச்சருடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி பழையபடி மாநில அரசுக்கு இருந்த உரிமை பெறப்படுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: இந்தமாதிரி இட ஒதுக்கீட்டை ரத்து செய்வது எவ்வளவு பிரச்சினையை உண்டாக்கும் என்பதை இந்த மாநில அரசு உணர்ந்து ஏற்கெனவே ரெயில்வே நிர்வாகத்திற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது. அதோடு மாநில அரசினுடைய சில உரிமைகள் இதிலே அடங்கியிருக்கின்றன என்பது உண்மை என்றாலும் கூட, கூடுதலாக நமக்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்று கேட்டபோது தான், முன்பு இருந்த இட ஒதுக்கீட்டையும் சேர்த்து பறித்திருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இங்கே மத்திய அமைச்சர்கள் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து அமைச்சர்கள் அடிக்கடி வருகின்றார்கள். அதோடு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பு திடீரென்று தகவல் தந்து, நாங்கள் திரும்ப வேண்டுமென்று சொல்கிறார்கள். மேலும் இப்போதெல்லாம் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக பிற மாநிலங்களிலிருந்து இங்கே வந்து பேச்சு வார்த்தை நடத்துகின்ற நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே பிற மாநிலங்களிலிருந்து வந்து போகின்ற அமைச்சர்களின் எண்ணிக்கையும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இருக்கிற அரசாங்க ஒதுக்கீடு போதாது. இன்னும் கூடுதலாக அரசாங்கப் பயணச் சீட்டு ஒதுக்கீடு வேண்டுமென்று ஒரு கடிதத்தின் வாயிலாகக் கேட்டோம். பிறகு அதுகுறித்து இரண்டாவது ரிமைண்டர் எழுதியபோதுதான், இருந்ததையும் ரத்து செய்திருக்கிறார்கள். நிச்சயமாக இது பெரிய பிரச்சினை. ஆனால் சுமுகமான நிலையில் இதுகுறித்து மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதி ஆவன செய்யவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: இது சம்பந்தமாக இந்த அவையினுடைய உணர்வைத் தெரிவிப்பதுடன், தனியாக மத்திய இரெயில்வே அமைச்சர் திரு. கேதார் பாண்டே அவர்களைச் சந்தித்து இதை விரைவில் பெற தனியாக முயற்சி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: சென்னையிலிருந்து வேறு இடங்களுக்குப் போகிறவர்களுக்குத்தான் இந்தப் பயணச்சீட்டு அரசாங்க ஒதுக்கீடு வசதி இருக்கிறது. மாவட்டங்களிலிருந்து தலைநகருக்கு வருகிறவர்களுக்கு இந்த வசதி இல்லை. ஆகவே மாவட்டங்களுக்கும் பயணச்சீட்டு அரசாங்க ஒதுக்கீடு முறை அமுலுக்குக் கொண்டுவரப்படுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: எல்லா இடங்களுக்கும் இது பொருந்தும். தென் பிராந்திய ரெயில்வே முன்பு இந்த அரசுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பயணச்சீட்டு அரசாங்க ஒதுக்கீடு வசதியை எடுத்திருக்கிறது. அவர்கள் அவ்வாறு எடுத்ததற்குப் பிறகு, அந்த வசதி வேண்டுமென்று வலியுறுத்தும்போது, பழைய வசதியைத்தான் வேண்டுமென்று வலியுறுத்துகிறோம். அந்த வசதி வந்தாலேயே, மாவட்டங்களிலிருந்து வருகிறவர்களுக்கும் அது பொருந்தும்.

திரு. த. சந்தோஷம்: மூலக் கேள்வியில் (இ)யில் "ஆமெனில், அதற்குரிய காரணம் யாது" என்று கேட்கப்பட்டிருக்கிறது. என்ன காரணம் என்று தெரிவிக்கவில்லை. இந்த வசதியை ரத்து செய்வதற்கு முன்னாடியே இந்த மாநில அரசை மத்திய ரயில்வே இலாகா கலந்தாலோசித்ததா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: ரெயில்வே நிர்வாகக் குழு அனைத்து மாநில அரசுகளுக்கும் உள்ள சலுகைகளை நிறுத்திவிட்டோம் என்று அறிவித்திருக்கிறது. அதைத் தவிர வேறு காரணங்களை ஒன்றும் தெரிவிக்கவில்லை. இப்போது பல்வேறு நிலைமைகள் வளர்ந்து கொண்டிருக்கிற நிலையில், ஏற்கெனவே இது சம்பந்தமாகக் கொடுத்துள்ள வசதிகள் போதாது, மாநில அமைச்சர்களே ஒவ்வொரு மாநிலத்திற்கும் சென்று, பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை நடத்த வேண்டியிருப்பதால், அடிக்கடி அண்டை மாநிலங்களிலுள்ள அமைச்சர்கள் இங்கு வந்து போகிறார்கள், ஆகவே இருக்கின்ற பயணச் சீட்டு அரசாங்க ஒதுக்கீட்டினை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இதைத் தவிர வேறு தகவல் ஒன்றும் இல்லாததால், வேறு பதில் ஒன்றும் சொல்வதற்கில்லை

இளைஞர் அணியினருக்கு ஆசிரியர் பதவிகள்.

* 13 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இளைஞர் அணியில் பி.டி. பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) இவர்களில் 1—8—1980 வரை வேலை கிடைக்காமல் உள்ளவர்கள் எத்தனை பேர்?

(உ) இவர்களை புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களில் முன்னுரிமை கொடுத்து நியமிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 103 பேர்.

(இ) 1-8-1980 வரை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்கள் 48 பேர். இவர்களில் 28 பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். கோவை மாவட்டத்திற்கான தகவல் வந்து சேரவில்லை.

(உ) புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களில் நியமிக்கப்பட வேண்டியவர்கள், தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகவும் வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலமாகவும் நியமிக்கப்பட வேண்டியவர்களாதலால், இவர்களை பள்ளிக்கல்வி இயக்குநர் நேரிடையாக நியமிக்க இயலாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இளைஞர் அணியில் இருந்த பி.டி. பட்டம் பெற்றவர்களைப்பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். பி.டி. பட்டம் பெறாதவர்கள் எத்தனை பேர் இன்றையதினம் இளைஞர் அணியில் வேலையில்லாமல் இருக்கிறார்கள்? அவர்களுக்கு வேலை கொடுக்க அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. இளைஞர் அணி அமைக்கப்பட்ட பிறகு, மத்திய அரசு ஓர் ஆண்டுக்கு மட்டும் நிதி உதவி அளித்தது. 1973-74 வரை அளித்து வந்தது. 1972-73-ல் வேலையாய்ப்பு சிறப்புத் திட்டத்தை ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடர முடியாது என்று மத்திய அரசு அறிவித்தது. 1974 மார்ச்சுக்குப் பிறகு அவர்களால் உதவி வழங்கப்படவில்லை. தற்போது எல்லா வேலைகளும் முடிவடைந்துள்ளன. 28-2-1979 அன்று தான் அவர்களுடைய பொறுப்பிலிருந்து கடைசி அணி விடுவிக்கப்பட்டிருக்கிறது. மூலக் கேள்வி இளைஞர் அணியினருக்கு ஆசிரியர் பதவிகள் கொடுப்பது பற்றியது. உறுப்பினர் கேட்டது குறித்து தனிக் கேள்வி கேட்டால் பதில் தர முடியும்.

(முற்பகல் 9.40)

திரு. ம. சங்கரலிங்கம் : இளைஞர் அணியில் இருந்தவர்கள் வேலையிலிருந்து விடுவிக்கப்பட்டபோது, இனிமேல் வேலைக்கு ஆட்கள் நியமிக்கப்படும்போது அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அனைவரும் வேலையில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்ற உறுதி இருந்தது. வேலையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் அப்போது மாவட்டத் தலைநகரங்களில் உண்ணாவிரதம் இருந்து அரசினுடைய வாக்குறுதியைப் பெற்று அந்த உண்ணாவிரதத்தை நிறுத்தினார்கள். இப்போது 'டெக்னிக்கல் க்வாலிஃபிகேஷன்' என்ற முறையில் பி.டி. பட்டம் பெற்ற 48 பேர்கள் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருக்கும் போது, அவர்களுக்கு என்று தனியாக ஒரு 'கமிஷன் தேர்வு' ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்க, எல்லாச் சலுகைகளும் வழங்கி வேலையில் அமர்த்த, தனி முயற்சி எடுக்க வேண்டியிருக்கிறது. அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

Claims under Family Benefit Scheme

* 14. *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) the number of claims made from 1st April 1978 to 31st July 1980 to the Government, under the Tamil Nadu Family Benefit Scheme;

(*b*) the time-limit, if any, for payment of the lump sum under the Scheme, from the date of death of the individual or from the date of claim made by the legal heirs of the deceased; and

(*c*) the number of pending claims, if any, under this Scheme in the Agriculture and Revenue Departments?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழ் நாடு அரசு குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 1-4-1978 முதல் 31-7-1980 வரை 4,745 உரிமைக் கோரிக்கைகள் வரப்பெற்று தீர்க்கப்பட்டுள்ளன.

(இ) இறந்தவர்களுடைய குடும்பத்தினருக்கு இத்திட்டத்தின்கீழ் ஒட்டு மொத்தத் தொகை வழங்க, இத்திட்டம் தொடர்பான விதிகளில் கால அளவு வரையறுக்கப்படவில்லை. இறந்தவர்களுடைய சட்டப்படியான வாரிசுகள், இத்தொகை பெறுவதற்கு தாங்கள் உரிமை உள்ளவர்கள் என்பதை மெய்ப்பித்தால் உடனடியாக அவர்களுக்குத் தொகை கொடுத்து தீர்க்கப்படுகின்றது

(உ) இத்திட்டத்தின்கீழ் வேளாண்மைத் துறையில் 26 உரிமைகளும், வருவாய்த் துறையில் 80 உரிமைக் கோரிக்கைகளும் முடிவு செய்யப் படாமலுள்ளன.

திரு. க. இராமமூர்த்தி : இந்தத் திட்டம் இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு உதவி உடனடியாகக் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு கொண்டு வரப்பட்ட திட்டம். இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதிலே காலதாமதம் அதிகமான அளவிலே இருக்கிறது என்றும் தேவையான டாக்குமென்ட்கள் (documents) எல்லாம் தந்த பிறகும்கூட, இப்படிப்பட்ட காலதாமதம் தொடர்கின்றது என்றும் தகவல்கள் இருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட காலதாமதத்தைத் தவிர்க்க தனியாக அலுவலர்களை நியமித்து இந்த உதவி சீக்கிரம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சட்ட விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை உடனடியாகத் தெளிவாக அறிவிப்பவர்களுக்கு எல்லாம் இந்த உதவி உடனடியாக வழங்கப்படுகிறது. மூலக் கேள்வியின் விடையில் இருப்பதுபோன்று, 6,745 உரிமைக் கோரிக்கைகள் வரப்பெற்று அவைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் அந்த உரிமைக் கோரிக்கைகளில் எந்தவிதமான சந்தேகங்களும் இல்லை. சில உரிமைக் கோரிக்கைகளில் சந்தேகங்கள் இருப்பதால்தான், காலதாமதமாகின்றது. வாரிசு சான்றிதழ் பெறுவதிலே காலதாமதம், சிக்கல்கள் எல்லாம் ஏற்படுகின்றன. மேலும் இதனை மிகவும் தெளிவாக ஆராய்ந்து கொடுக்க வேண்டும். காவல் துறையிடமிருந்து வரவேண்டிய சான்றிதழ்கள் சில உரிமைக் கோரிக்கைகளிலே சரியாக வந்து சேரவில்லை. மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருந்தால், அவர்கள் இருசாராரும், ‘ எங்களுக்குத்தான், எங்களுக்குத்தான் ’ என்று சொல்லி கேட்கும்போது, அதிலே யார் உண்மையான வாரிசு என்று நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. மேலும், வருவாய்த் துறையிலிருந்து சான்றிதழ் கிடைப்பதிலே தாமதம் ஏற்படுகிறது. எவ்வளவு விரைவாகக் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாகக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், கிடைக்கவேண்டிய விவரங்கள் சீக்கிரம் கிடைத்தால் தாமதத்தைத் தவிர்க்கலாம். வேளாண்மைத் துறையிலிருந்து 86 கோரிக்கைகளுக்கும் வருவாய்த் துறையிலிருந்து 80 கோரிக்கைகளுக்கும் வேண்டிய விவரங்கள் வரவேண்டியிருக்கின்றன. விரைவில் அவைகள் கிடைக்கப் பெற்றவுடன் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. க. இராமமூர்த்தி : அதற்கான விவரங்களைக் கேட்கின்றபோது, சம்பந்தப்பட்ட துறையினர், எதற்காக இது காலதாமதமாகிறது, எந்தெந்த ரெக்கார்டுகள் மேலும் தேவை என்பது போன்ற விவரங்களை கடிதம் மூலம் தெரிவித்தால், சம்பந்தப்பட்டவர்கள் அதற்காக அலுவலகங்களுக்கு நடந்து கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை. ஆகவே, இதுபற்றிய தகவல் தொடர்புகளை கடிதம் மூலமாக சம்பந்தப்பட்டவர்களோடு, கொள்வதற்கு துறையினருக்கு அறிவுரை வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும் என்று கருதுகிறேன். அதுபற்றிய தெளிவாக விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. காரணங்கள் தெரியாமல் அவர்கள் அப்படியே இருந்து, அதன் நிமித்தம் காலத் தாழ்வு ஏற்பட்டால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல என்னென்ன காரணங்களால் காலதாமதம் ஏற்படுகிறது. அதை எப்படி உடனடியாக நீக்கலாம் என்று அவர்களுக்குக் குறிப்பு அனுப்பும் முயற்சி எடுக்கலாம்.

THIRU A. R. DAMODARAN : Sir, would it be possible for the Government to consider whether, under the Family Benefit Scheme, the employee could nominate the person to receive the money in the event of his demise? The Hon. Minister mentioned that in view of multiplicity of wives, it was impossible to determine the legitimacy. So, why not allow the employee himself to choose the legitimate wife to whom such benefit should accrue?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தத் திட்டத்திலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல, அவர்கள் வேலை பார்க்கும் போது திடீரென்று இறந்துவிட்டால், வாரிசாக யார் இதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று முன்பே குறிப்பிட வேண்டும் என்று இருக்கிறது. பல பேர், இதைச் சரியாகக் குறிப்பிடுகிறார்கள். அதனால்தான் நான் முதலிலே சொன்ன ஆறாயிரத்து எழுநூற்றுச் சில்லறை பேருக்கு உடனடியாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. சிலர் வாரிசு பெயரைக் குறிப்பிடாமல் இருப்பதால், ‘ யார் வாரிசு ? ’ என்று அவர் இறந்த பிறகு தேட வேண்டியிருக்கிறது. வேலையில் இருக்கும்போதே ‘ யார் வாரிசு ’ என்று வாரிசை நியமித்தால், அதுவே சிறந்த சான்றாக இருக்கும். எல்லோரும் இப்படிச் செய்தால் சங்கடங்கள் இல்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : வேளாண்மைத் துறையிலே 81 குடும்ப நலத் திட்டத்தின்கீழ் தொகை வேண்டுவோர்களும், வருவாய் துறையிலே 80 பேர்களும் இருபபதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருநெல்வேலி மாவட்டம் ஓட்டப்பிடாரத்தில் தாலுக்கா அலுவலகத்திலே பணி புரிந்து இறந்த ஒருவருடைய வாரிசுகள் விண்ணப்பம் கொடுத்து எல்லா விதமான சான்றிதழ்கள் கொடுத்தும் கடந்த இரண்டு வருடமாக அது கிடைக்கப் பெறாமல் காலதாமதம் ஆகியிருக்கிறது. இப்போது அது இவ்வளவு காலம் கடந்துவிட்டதால், இனிமேல் இதற்குச் சென்னையிலே இருந்து, தலைமைச் செயலகத்திலேயிருந்து அனுமதி வரவேண்டும் என்று சொல்கிறார்கள். இப்படிக் காலதாமதம் ஆகின்ற கோரிக்கைகளைப் பொறுத்த வரையில், ஏன் காலதாமதம் ஆகிறது என்பதைப பற்றி அந்தந்தத் துறைத் தலைவர்கள் ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்த அரசு பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ‘இவ்வளவு காலத்திற்குள் தான் பெறவேண்டும்’ என்ற நிபந்தனையோ, வரையறையோ இல்லை. இந்தப் பிரச்சினை தீர்கிற வரையிலும் வைத்துக்கூடக் கொடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த குறிப்பிட்ட நபருடைய பிரச்சினையைப்பற்றித் தனியாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதுபற்றி விசாரித்து அறிந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். கூடுமானவரையில், காலத்தாழ்வு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்தக் குடும்பநலத் திட்டத்தின்கீழ் ஊழியர்கள் தற்கொலை செய்துகொண்டாலும், அவர்களின் வாரிசுக்கு உதவி உண்டு என்ற வகையிலே ஆணையிடப்பட்டிருக்கிறது. அந்த ஆணை செயல்படுத்தப் பட்டும் வருகிறது. என்றாலும், அந்தந்தத் துறைத் தலைவர்களே பணம் கொடுப்பதற்குப் பதிலாக, தற்கொலை செய்து கொண்ட ஊழியர்களுடைய குடும்பங்களுக்கு உதவி கொடுப்பது சம்பந்தமாக சென்னையிலேயிருந்து ஆணை வரவேண்டும் என்று இருப்பதால், இதில் ஆண்டுக்கணக்காகக் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, அதையும் மாற்றி, அந்தந்த ஸ்தல அதிகாரிகளே வழங்கலாம் என்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது இருக்கும் நிலைமைகள் பற்றிய குறிப்புகள் என்னிடம் இல்லை. அதுபற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம். தற்கொலை பற்றி நாம் நல்ல

முறையில் விவரங்களைத் தெரிந்துகொண்டு தருகின்ற சூழ்நிலை இருந்தால் தான், நல்லது. ஏனென்றால் ‘லீகல் காம்பிளிக்கேஷன்’ எல்லாம் வரும். விரைவிலே தர முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். அதுபற்றி, என்னென்ன நடவடிக்கைகளை, ஏற்பாடுகளைச் செய்யலாம் என்பதை ஆராய்ந்ததற்குப் பிறகு தான் முடிவு எடுக்க வேணடும்.

திரு. த. சந்தோஷம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களின் வினாவுக்குப் பதில் அளிக்கும்போது, அரசு அலுவலர்கள் தங்களுடைய வாரிசுகள் யார் என்பதுபற்றி முன்பே நியமனம் செய்தால், அதை அரசு ஏற்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனக்கு ஒரு சந்தேகம். அவர்கள், உண்மையாக சட்டப்படி திருமணம் செய்து கொண்ட மனைவி இருக்கும்போது, அவரை விட்டுவிட்டு, ஆசை நாயகியை நியமனம் செய்துவிட்டால், அது மிகவும் கொடுமையானது. ஆகவே, இதை மனதில் கொண்டு சட்டப்படியாக உள்ள மனைவி-பிள்ளைகளுக்குத்தான் கொடுக்கலாம் என்று விதிமுறை வகுக்கப்படுமா ?

(முற்பகல் 9.50)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசு அலுவலர்கள் தாங்கள் பதவியில் இருக்கும்போதே குடும்ப நலத்திட்டத்தின் கீழ் கிடைக்கும் தொகையைப் பெறுவதற்கான சட்டப்படியான வாரிசுதாரர்களை நியமிக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு அவர்களே நியமிக்க முன்வராவிட்டால், அதிலே அவர்களுக்கே அப்படிப்பட்ட சங்கடம் இருக்குமானால், பிறகு அரசுக்கும் மற்றவர்களுக்கும் இன்னும் அதிகமான சங்கடம்தான் இருக்கும் என்பதை அறிவோம். எனவே கூடுமானவரை அப்படிப்பட்ட ஆசை நாயகிகளை வைத்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு).

திரு. செ. முத்துசாமி : தென்னாற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி ஒன்றியத்தில் கணவன் மனைவியாக இருந்த இரு ஆசிரியர்கள் இறந்து போனார்கள். முதலில் கணவன் டி.பி. நோய் பீடிக்கப்பட்டு இறந்து போனார். அவரைத் தொடர்ந்து அவருடைய மனைவியும் டி.பி. நோயின் காரணமாக இறந்து போனார். அவர்களுக்குப் பிறந்த ஆண் பிள்ளையும் அதே டி.பி. நோயால் இறந்து போய்விட்டான். எஞ்சியிருக்கும் அவர்களுடைய பெண் குழந்தையைத் தற்போது இரயில்வேயில் கேங்க் மேன் பதவி வகிக்கும் பாட்டனார் எடுத்துக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறார். அவர்கள் இறந்து 1 1/4

ஆண்டுகளாகியும் இன்னும் அந்தப் பெண் குழந்தைக்குச் சேரவேண்டிய இந்தத் தொகை கிடைக்காத காரணத்தால், அவர்கள் பிச்சை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இதுகுறித்து முழு விவரத்தையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இதன் மீது உரிய நடவடிக்கையை மேற்கொண்டு விரையில் அந்தப் பணத்தை வாரிசு தாரான அந்தப் பெண்ணுக்குக் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல அந்த ஆசிரியர் குடும்பத்தைச் சேர்ந்த கணவன் மனைவி மற்றும் அவர்கள் மகன் ஆகிய அனைவருமே இறந்து விட்டிருந்தால் . . .

(உறுப்பினர் குறுக்கிட்டு பெண் குழந்தை உயிரோடு இருப்பதாகக் கூறினார்.)

அதுபற்றிய விவரத்தைச் சொன்னால், தனியாக ஆராய்ந்து என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யலாம்.

ஆசிரியர்கள் பணி வரன்முறை செய்தல்.

* 15 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்; திரு. ம. சங்கரலிங்கம் மற்றும் திரு. த. சந்தோஷம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் வேலை பார்த்துவரும் ஆசிரியர்கள் எத்தனை பேர்களுடைய பணி 1—4—1979 நிலவரப்படி வரன்முறை செய்யப்பட்டுள்ளது ?

(இ) அவர்களில் பட்டதாரி ஆசிரியர்கள், முதல்நிலைத் தமிழாசிரியர்கள் எத்தனை பேர் ?

(உ) இன்னும் பணி வரன்முறை செய்யப்படாது இருக்கும் ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(எ) அவர்களுடைய பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 2,440 ஆசிரியர்களின் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளது.

(இ) பட்டதாரி ஆசிரியர்கள், 172 பேர்.
முதனிலைத் தமிழாசிரியர், 75 பேர்.

(உ) பட்டதாரி ஆசிரியர்கள், 51 பேர்.
முதனிலைத் தமிழாசிரியர்கள், 31 பேர்.
மற்றவர்கள், 5 பேர்.

(எ) பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதனிலைத் தமிழாசிரியர்களின் பணியிடம் தமிழ்நாடு பொதுப்பணித் தேர்வாணைக் குழுவின் ஆளுகைக்குள் வருவதால் அவர்கள் பொதுப்பணித் தேர்வாணைக் குழுவின் தேர்வில் தேர்ச்சி பெற்றால் மட்டுமே பணி வரன்முறை செய்ய இயலும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த படி, பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதல்நிலைத் தமிழாசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பணிவரன்முறை செய்யப்படுவதற்கு தேர்வாணைக் குழுவிற்குச் செல்ல வேண்டும் என்பது சரி. பதிலில் குறிப்பிட்ட 'இதரர்கள்' யார் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கினால் நல்லது. அவர்களுக்கும் இவ்விதி பொருந்துமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மீதமுள்ள ஐவரும் கைத்தொழில் ஆசிரியர்கள். அவர்கள் பி.டி.சி தேர்வு பெற்றிருப்பின் அவர்கள் பணி வரன்முறை செய்யப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம்: பட்டதாரி ஆசிரியர்களின் பணி வரன்முறை செய்யப்படுவதற்கு தேர்வாணைக் குழுவின் ஒப்புதல் தேவை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படித் தேவையானால் இவர்களுக்கு என்று அரசு ஒரு இன்டர்வியூ வைத்துச் செய்வதற்கு முன்வருமா ? அல்லது இது குறித்து தேர்வாணைக் குழுவின் ஒப்புதலைப் பெற அரசு அணுகியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இவர்களுக்காகவும், ஏற்கெனவே ஓராண்டுக்காலம் தற்காலிகமாகப் பணியாற்றியவர்களுக்காகவும் தனித் தேர்வு ஒன்றினை, பொதுப் பணியாளர் தேர்வாணைக் குழு நடத்தியுள்ளது. இதில் தேர்வு பெற்றவர்களின் பணி வரன்முறை செய்யப்படும்.

திரு. த. சந்தோஷம் : இவர்களில் பலர் 10 ஆண்டுகளுக்கும் மேலாகவே ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே இத்தனையாண்டு பணிக்குப் பிறகும் இவர்கள் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப் பட வேண்டியது அவசியம்தானா ? இவர்கள் தேர்வாணைக் குழுத் தேர்வில் வெற்றி பெறவேண்டும் என்பதிலிருந்து விதிவிலக்கு அளிப்பதற்கு அரசு ஆலோசிக்குமா ?

[1981 ஆகஸ்ட் 27

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஒரு விதிவிலக்கைப் போல்தான், அவர்களுக்கென்று தனியாக ஒரு தேர்வு வைக்கப்பட்டது. அதில் அவர்கள் வெற்றிபெற்றால் அவர்களின் பணி வரன்முறை செய்யப்படும்.

திரு. செ. முத்துசாமி : இந்தப் பணிகளுக்கான நியமனங்கள் அனைத்தும் கல்வித் துறையைப் பொறுத்த வரையில், 'கம்யூனல் ரொட்டேஷன்' என்ற அடிப்படையில்தான் செய்யப்பட்டிருக்கின்றன. இங்கே இப்படிப்பட்ட நிலை இருக்கும்போது, அண்மையில் உள்ள ஆந்திர மாநிலத்தில் என் 10 (ஏ) (1) விதிகளின்கீழ் தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரை, அங்கேயுள்ள அமைச்சரவை ஒரு முடிவை மேற்கொண்டு அப்படிப்பட்ட ஆசிரியர்கள் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதில்லை என்று ஆணையிட்டிருக்கிறது. அதைப் போலவே தமிழ் நாட்டில் உள்ள ஆசிரியர்களைப் பொறுத்த வரையிலும், தேர்வாணைக் குழுவின் தேர்வில் வெற்றி பெற்றாக வேண்டும் என்றில்லாமல், அவர்களின் பணியை வரன்முறை செய்ய அரசு ஒரு நல்ல முடிவை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆந்திர மாநிலத்தில் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அதிகார வரம்பிலிருந்து அதை எடுத்துவிட்டார்கள். நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், நாமும் அப்படி பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் அதிகார வரம்பிலிருந்து இதை எடுக்க வேண்டுமா என்று பார்க்கும்போது, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் வைக்கப்பட்டதன் நோக்கமே சர்க்கார் தன்னிச்சையாக எந்தக் காரியத்தையும் செய்துவிடக்கூடாது என்றும், நடுநிலையில் நின்று தகுதியுள்ளவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் வேறு பல காரணங்களையும் கருத்தில் கொண்டும்தான் என்பதை அறிவோம். எனவே அப்படி பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அதிகார வரம்பிலிருந்து இதை எடுக்க வேண்டும் என்று மேற்கொள்ளுகிற முடிவு சாதாரண சூழ்நிலையில் எடுக்கக் கூடிய ஒன்றல்ல என்று மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : மதுரை மாவட்டத்திலுள்ள கள்ளர் நலப் பள்ளிகளில் பணியாற்றும் 15 பட்டதாரி ஆசிரியர்களும் 5 தமிழ் ஆசிரியர்களும் இந்த எண்ணிக்கையில் அடங்கியுள்ளனரா ? இந்த ஆசிரியர்கள் 10 ஆண்டுகளாக ஊதிய உயர்வு ஏதுமில்லாமல், விடுப்பு வசதிகள் ஏதுமில்லாமல், எந்தவிதமான தேர்வு நிலையுமில்லாமல் இருந்து வருகின்றனர். எனவே இதைத் துரிதப்படுத்தி, தேர்வாணைக் குழுவின் ஒப்புதலைப் பெற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

1981 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தேர்வாணைக் குழுவின் சிறப்புத் தேர்வு முடிந்து ஓராண்டுக் காலத்திற்கும் மேலாகிறது. ஆனால் அந்தத் தேர்வின் முடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை. தனிப்பட்ட இருவர் அந்த முடிவுகளை வெளியிடக்கூடாதென்று உயர்நீதி மன்றத்திற்குச் சென்று ஒரு தடையுத்தரவை வாங்கியிருக்கிறார்கள் என்று காரணம் சொல்லப்படுகிறது. இந்தத் தடையுத்தரவை அகற்ற வேண்டுமென்றால், தேர்வாணைக் குழுவோ அல்லது அரசோ அல்லது இரண்டுமாகச் சேர்ந்தோ முயற்சி மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் தடை நீக்கப்பட்டு தேர்வின் முடிவுகளை வெளியிட முடியும் என்கிறார்கள். எனவே, இது குறித்து அரசு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சில்லரைச் செலவின ஊழியர்கள் பணியை வரன்முறைப்படுத்தல்.

*16 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம், திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன், செல்வி அ. லீலாவதி மற்றும் திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தனியார் பள்ளிகளில் பணிபுரியும் காவலர் துப்புரவு செய்வோர், போன்றோரின் பணியை வரன்முறைப்படுத்தி, இதர துறைகளில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்களுக்கு அளிக்கப்படும் ஊதிய விகிதம், குடும்பநல நிதி, ஓய்வூதியம் ஆகியவைகளை வழங்க வேண்டுமென்ற உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) 1—4—1981 ல் தக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இந்த அரசாணை தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கும் பொருந்துமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனியார் பள்ளிகளில் பணி புரியும் காவலர்கள், துப்புரவு செய்வோர் மற்றும் இதுபோன்ற பணியாளர்கள் 1—4—1979 அன்று ஐந்தாண்டுக் காலம் பணியாற்றி முடிந்திருந்தால், அவர்

களின் பணியை முறைப்படுத்தி அவர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் ஊதிய விகிதம் போன்றவைகள் அளிக்கப்படும் என்ற அரசாணை 1—4—1981 அன்று வெளியிடப்பட்டிருக்கிறது. இது தனியார் பள்ளிகளுக்கும் பொருந்தும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தனியார் பள்ளிகளில் பணிபுரியும் காவலர், துப்புரவு செய்வோர் போன்றோரின் பணியை வரன்முறைப்படுத்தி அரசு ஆணை பிறப்பித்திருப்பதை நான் வரவேற்று நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அவர்களுடைய பணியை வரன்முறைப்படுத்தி ஆணை பிறப்பித்த பிறகு, அவர்களுடைய ஊதியத்தை நிர்ணயிப்பதில் பல கோளாறுகள் ஏற்பட்டு, பலர் ஏற்கெனவே வாங்கிக் கொண்டிருந்ததைவிடக் குறைவான ஊதியம் பெறும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சங்கடத்தைப் போக்கிட வேண்டும் என்று அரசிடம் முறையிடப்பட்டிருக்கிறது. அதன் மீது அரசு விரைவில் முடிவெடுத்து அவர்களின் சங்கடத்தைப் போக்கிட முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட குறைபாடுகளைப் பற்றி அரசு பரிசீலனை செய்யலாம்.

திரு. பா. ரா. தாமஸ் : இப்போது பணி வரன்முறை செய்யப்பட்ட ஊழியர்கள் கடைநிலை ஊழியர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆனால் பார்ட்-டைம் கன்டிஜென்சி ஸ்டாஃப் என்று சொல்லக் கூடிய, மாதம் 18 ரூபாய் மட்டுமே ஊதியமாகப் பெற்றுக் கொண்டு பணியாற்றும் ஊழியர்களும் இருக்கிறார்கள். அவர்களுடைய பணியையும் வரன்முறைப்படுத்தி உரிய ஊதியம் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுகுறித்துத் தனிக் கேள்வி போடவும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: சில பள்ளிகளில் துப்புரவு செய்வோர், 1,000 மாணவர்களுக்கு ஒருவர் என்று நியமிக்கப்படுகிறார்கள். எனவே மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அதிகமான துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பள்ளிகளில் பணியாற்றும் காவலர், துப்புரவு செய்வோர் போன்ற மற்ற பணியாளர்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு தாமஸ் அவர்கள் வினவியபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது குறித்துத் தனிக் கேள்வி போடவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இந்த மூல வினாவே அவர்களைப்பற்றியதுதான், அதாவது சாதல்வார் பணியாளர்களைப் பொறுத்ததாகும். இப்போது மூலக் கேள்விக்கு பதிலளிக்கும் போது, அவர்களுக்கும் இது பொருந்தும் என்று சொல்லிவிட்டு, இப்போது தனிக் கேள்வி போடவும் என்று சொல்லுவதால் இதில் எது சரி என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்கள் வேறு ஒரு பிரிவினர் என்ற அடிப்படையில்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் கேள்வி கேட்டார். எனவேதான் நான் தனிக் கேள்வி போட வேண்டும் என்று குறிப்பிட்டேன். சந்தேகம் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர், திரு தாமஸ் அவர்களைத் தனியாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

(முற்பகல் 10-00)

திரு. செ. முத்துசாமி : தனியார் ஆரம்பப் பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும் தற்போது காவலர்கள், எழுத்தர்கள், கடைநிலை ஊழியர் நியமனம் இல்லை. ஐநூறு முதல் ஆயிரம் வரையில் மாணவர்கள் உள்ள பள்ளிகளில் கூட காவலர் நியமனம் இல்லை. ஆகவே இப்படிப்பட்ட பள்ளிகளிலும் காவலர் மற்றும் எழுத்தர் ஆகியோரை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தப் பிரச்சினையையும் அரசு பரிசீலிக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : துப்புரவாளர்கள் போன்ற பதவிகளை வரன்முறைப்படுத்தும்போது ரூபாய் 250-5-330-10-400 என்ற ஊதிய விகிதத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று மூன்றாவது ஊதியக் குழு அறிக்கை அளித்திருக்கிறது. அந்த அறிக்கையை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் மேற்குறிப்பிட்ட தனியார் பள்ளி ஊழியர்களை வரன்முறைப் படுத்தியபோது அவர்களுக்கு ரூபாய் 250-400 என்ற ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்படாமல், ரூபாய் 200-5-300 என்ற ஊதிய விகிதத்தை நிர்ணயம் செய்திருப்பதால், அவர்களுக்கு ஊதிய இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி உள்ள ஊதிய விகிதத்தை தனியார் பள்ளிகள் விஷயத்திலும் அரசு அமுல்படுத்துமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எல்லாவற்றையும் பரிசீலனை செய்துதான் அந்த ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

Uniform Pay Scales for Craft Teachers.

* 17 Q.—THIRU K. MEENAKSHISUNDARAM & THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether it is a fact that according to the revised scales of pay, there is difference in the scale of pay drawn by the Craft Teachers in Higher Elementary Schools and those of High Schools; and

(b) if so, the action proposed to be taken to remove the same ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பா. ரா. தாமஸ்: கைவினை ஆசிரியர்கள் உயர்தொடக்கப் பள்ளியில் பணியாற்றினால் மட்டும் குறைந்த ஊதியம் பெறுவதும், உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றினால் அதிக ஊதியம் பெறுவதும் என்ற நிலை இருப்பதால், அவர்களுக்குப் பெருத்த இழப்பும் ஏமாற்றமும் இருக்கின்றன. ஆகவே, அதை மாற்றியமைக்க வேண்டுமென்று ஆசிரியர்கள் சங்கங்கள் பல சமயங்களில் அரசுக்குக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். அது குறித்து அரசு எவ்வளவு விரைவிலே முடிவு எடுக்கும் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலேதான் பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது. எல்லா மட்டங்களிலும் பரிசீலனை நடந்த பிறகு, இறுதி முடிவு எடுக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : உயர் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் கைவினை ஆசிரியர்களுக்கும், உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் கைவினை ஆசிரியர்களுக்கும் ஒரேவிதமான ஊதியம் தரவேண்டுமென்ற கோரிக்கையை எழுப்புகின்றபோது, போதிய மாணவர்கள் எண்ணிக்கை இல்லை, வகுப்புகள் இல்லை என்ற காரணம் காட்டி மறுக்கலாம் என்ற சந்தேகங்கள் இருக்கின்றன. ஆகவே ஒரே பணியை ஆற்றுகின்றவர்கள் எந்த இடத்தில் பணியாற்றினாலும், வகுப்புகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அதற்குரிய ஊதியத்தை வழங்க வேண்டும் என்று ஆணையிட அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பரிசீலனை என்று வருகிறபோது, செய்கின்ற வேலை, தகுதி, எடுத்துக்கொள்கிற வகுப்புகள் ஆகியவற்றின் அடிப்படையிலேதான் பரிசீலனை செய்யப்படும். ஒரே மாதிரியான வேலை வாய்ப்புகள், ஒரே மாதிரியான தகுதிகள் என்ற நிலைமை இருந்தால், உறுப்பினர் சொல்லும் முடிவுக்கு வர முடியும். வேறு நிலைமைகள் இருந்தால் சிந்திக்க வேண்டியதொன்று. பரிசீலனை என்பது இத்தகைய அடிப்படையிலேதான் நடந்து கொண்டிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி: இளநிலை ஆசிரியர் பதவியில் பணியாற்றும் ஆசிரியர் இடைநிலை ஆசிரியர் தகுதி பெற்றிருந்தால், இடைநிலை ஆசிரியர் பதவிக்குரிய ஊதியம் வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது. அதே கொள்கையை கைவினை ஆசிரியர்கள் விசயத்திலும் பின்பற்ற அரசு பரிசீலிக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி முடிவு எப்போது எடுக்கப்படும் என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பரிசீலனையை விரைவுபடுத்தவும், முடிவை விரைவுபடுத்தவும் அரசு முயற்சியை மேற்கொள்ளும்.

Collection of Special Fees in Schools.

* 18 Q.—THIRU K. MEENAKSHISUNDARAM : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether there is any proposal under the consideration of the Government to avoid collection of special fees once again, from the children of Teachers and employees of Government who are transferred to the new places in the middle of the academic year; and

(b) if so, the present stage thereof?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் மாறுதல் காரணமாக தங்கள் பிள்ளைகளை வேறு பள்ளிகளில் சேர்க்கும்பொழுது, அவர்கள் முதலில் படித்த பள்ளியில் தனிக் கட்டணம் செலுத்தியிருந்தால் அம்மாணவர்களிடமிருந்து ஒரே வருடத்தில் இரண்டாவது தடவை தனிக் கட்டணம் வசூலிக்க வேண்டாமென்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ் : இந்த ஆணையைப் பிறப்பித்ததன் மூலமாக குறிப்பிட்ட மாணவருக்கும், பெற்றோருக்கும் நன்மை பயக்கும் என்றாலும், இரண்டாவது பள்ளியில் போய்ச் சேர்ந்த மாணவருக்கு அந்தப் பள்ளியில் தேவை

யான சாதனங்களைக் கொடுக்க நிதி வசதி இல்லாமல் போகிறது. ஆகவே, முதல் பள்ளியில் கட்டிய பணத்தை இரண்டாவது சேர்ந்த பள்ளிக்கு மாற்றும் வாய்ப்புகளை அரசு ஏற்படுத்துமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த ஆணையால் அப்படிப்பட்ட பிரச்சினைகள் எழுவது உண்மைதான். ஆகவே அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

Sharing of Cauvery Waters.

* 19 *Q*.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Irrigation be pleased to state the various steps taken by the Government for establishing the rights of the State with regard to the sharing of Cauvery Waters ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அவை முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : 27—12—1980 அன்று நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலே தமிழகம் உட்பட மற்ற மாநிலங்களும் அவரவர்கள் என்ன அடிப்படையிலே காவிரி பிரச்சினையை அணுகுகிறார்கள் என்ற விவரங்களை மத்திய அரசுக்குத் தருகிறபோது, மற்ற மாநிலங்களுக்கும் அனுப்ப வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட தகவலை அனுப்பியிருக்கிறோம் என்று கருதுகிறேன். மற்ற மாநிலங்கள் எந்த அடிப்படையிலே அணுகுகிறார்கள் என்ற தகவல்களை நமக்கு அனுப்பியிருக்கிறார்களா? அப்படிப்பட்ட தகவல்கள் நமக்கு வந்திருந்தால், அந்தத் தகவல்களை முழுமையாகத் தர முடியாவிட்டாலும், அல்லது அப்படித் தர வேண்டாமென்று அரசு நினைத்தாலும், அதுபற்றிய ஒரு குறிப்பையாவது இந்த அவைக்குத் தர முடியுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: அன்று கூட்டிய அனைத்து மாநில முதலமைச்சர்கள் கூட்ட முடிவின்படி அந்தந்த மாநிலங்கள் தங்களுடைய நிலை என்ன என்பதை மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தந்த மாநிலங்களின் கொள்கையின் அடிப்படையிலே பேச்சுவார்த்தை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இப்போது கடுமையான சூழ்நிலை இருப்பதால்தான், இந்த அவைக்கு இந்த அறிக்கையை வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்தை அரசு நிச்சயமாக தேவைப்படுகிறபோது பரிசீலனை செய்யும்.

@ 212-213 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி: இது தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்காக அண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டில்லிக்குச் சென்றிருந்தார்கள். ஆனால் அந்தக் கூட்டம் நடைபெறவில்லை. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், மற்ற மாநிலங்களைவிட நமக்குத்தான் அதிக அக்கறை இருக்கிறது. ஆகவே இதில் முடிவு எடுப்பதற்கு மத்திய அரசை மேலும் வற்புறுத்த முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? அவசியமானால் அவரோடு மற்ற கட்சித் தலைவர்களையும் அழைத்துச் செல்ல முன்வருவாரா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே; அண்மையில் இது சம்பந்தமாக நடக்கவிருந்த கூட்டத்திற்கு நான் சென்றபோது மற்ற மாநிலங்களிலிருந்து யாரும் வரவில்லை. குறிப்பாக கர்நாடகத்திலிருந்து வர வேண்டியவர்கள், கடைசி நேரத்தில் விமானம் அவர்கள் வருவதற்குள் பறந்துவிட்டது என்று சொல்லி வராமல் நின்றுவிட்டார்கள். ஆனால், அமைச்சர் அந்தஸ்தில் உள்ள இன்னொருவரை அனுப்பியிருந்தார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், அனைத்துக் கட்சியினுடைய கருத்தை ஏற்றுக்கொண்ட வகையில் தமிழக அரசின் முடிவை அங்கே சொன்னபோது, அது குறித்து விவரமாகப் பேசுவதற்கு முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இப்படியே தாமதித்துக்கொண்டு போவது நல்லதல்ல என்ற எண்ணம் மைய அரசுக்கு இருப்பதால், இறுதியாக ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். அதாவது தமிழக அரசு கர்நாடக மாநில அரசினுடைய முதலமைச்சரை அணுகுவது என்றும், அதற்காக அங்கே சென்று பேசுவது அல்லது அவரை இங்கே அழைத்துப் பேசுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. அப்படி ஒரு முறை முயற்சிப்பது என்றும், அதிலே வெற்றி காண முடியவில்லை என்றால், இந்தியப் பேரரசு ஒருமுறை பேச்சுவார்த்தையைத் தொடங்குவது என்றும், அந்த முயற்சியும் வெற்றி பெற முடியாமல் போய்விட்டால், பேச்சுவார்த்தையை அத்தோடு நிறுத்திவிட்டு வேறு வழியிலே இதற்கு ஒரு முடிவு காணுவது என்றும் இந்தியப் பேரரசின் அந்த இலாக்காவின் அமைச்சர் கூறிய கருத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கர்நாடகா மாநிலம் வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறதோ என்ற ஐயம் மைய அரசுக்கு ஏற்பட்டுவிட்டது என்பதை நான் உணர்ந்துகொள்ள முடிந்தது. அந்த வகையில் நம்முடைய முயற்சி வெற்றி காணும் சூழ்நிலையில் நமக்குச் சாதகமாக இருக்கிறது என்று கருதுகிறேன். அது மட்டுமல்லாமல், இந்த இரண்டு கூட்டங்களில் எந்த முடிவும் வராவிட்டால், வேறு வழியில் இறுதி முடிவு காண மைய அரசும் ஒத்துழைக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: காவிரியில் ஒகனேக்கல் பகுதியில் நீர்ப்பாசனத்திற்காகவும், மின் உற்பத்திக்காகவும் கட்டப்படவிருக்கின்ற அணையின் நிலைமை இப்போது எவ்வாறு உள்ளது? இரண்டு மாநிலங்களிடையேயும் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதா? உடனடியாக அணை கட்டப்படவிருக்கிறதா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மூலக் கேள்விக்குச் சம்பந்தமான துணைக் கேள்வியைக் கேட்டால், அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல முடியும்.

(முற்பகல் 10-10)

Mettur Dam Park

* 20 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Irrigation be pleased to state:

(a) whether there is any proposal for electrification and beautification of Mettur Dam Park, for the benefit of tourists; and

(b) if so, the stage at which the matter stands?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: (அ) ஆம்.

(இ) மேட்டூர் அணையிலுள்ள பூங்காக்களை, அழகுபடுத்தவும் அவைகளில் ஒளிவிளக்குகள் அமைக்கவும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன எனத் தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Government state whether there is any proposal to have fountains in the Mettur Dam Park?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எதிர்பார்ப்பதைப் போல, அங்கே தண்ணீர்க் குழாய்கள் புதுப்பித்து நீர் ஊற்றுக்கள், மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் விரும்புகின்ற ஃபௌண்டன்கள் எல்லாம் அமைப்பதற்கான செயற்குறிப்புகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள, கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

(1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1981).

(2) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1981).

(3) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1981.)

(4) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 57/1981).

(5) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு, முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 58/1981).

(6) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/1981).

3. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் தொழில்துறை கொள்கை விளக்கக் குறிப்பு விவாதத்திற்கு அளித்த பதிலுக்குத் திருத்தம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் திருத்த அறிக்கை ஒன்றை அவைக்கு அளிப்பார்கள்.

[1981 ஆகஸ்ட் 27

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 24—4—1981 நாளன்று தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் நடந்த தொழிற்துறை விவாதத்தின்போது ஜவ்வரிசி தொழிலைப் பற்றி மேலவையில் கீழ்க்கண்டவாறு கூறியிருந்தேன் :

"நிதி நிலை அறிக்கையில் ரூபாய் 3 கோடி ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். இந்த 3 கோடி ரூபாயை இண்டஸ்ட்ரிஸ் கோவாப்பரேடிவ் சொசைட்டி என்கிற முறையில் முதலீடு செய்து ஏற்கனவே ஜவ்வரிசி தயாரிக்கின்ற தொழில் உரிமையாளர்களை எல்லாம் இதில் உறுப்பினர்களாக ஆக்கி மர வள்ளிக்கிழங்கை விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கு மற்றும் ஜவ்வரிசி ஆலை வைத்திருக்கின்ற சிறு தொழில் முனைவர்களுடைய நலனைப் பாதுகாக்கத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இத்தகைய ஒரு முடிவினை எடுத்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்."

இதற்குப் பதிலாக கீழ்க்கண்ட திருத்திய குறிப்பை அளிக்க விரும்புகிறேன்—

"சேலம் மாவட்டத்தில் ஜவ்வரிசி மற்றும் கஞ்சிப்பசை தயாரிக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை நிறுவுவதற்கு அரசு அனுமதி அளித்து அதற்கென ரூ. 10 இலட்சம் கடனாக அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. ஏற்கனவே ஜவ்வரிசி தயாரிக்கின்ற தொழில் உரிமையாளர்களை எல்லாம் இதில் உறுப்பினர்களாக ஆக்கி மரவள்ளிக்கிழங்கை விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கும் மற்றும் ஜவ்வரிசி ஆலை வைத்திருக்கின்ற சிறு தொழில் முனைவர்களுடைய நலனைப் பாதுகாக்கத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இத்தகைய ஒரு முடிவினை எடுத்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்."

4. கவன ஈர்ப்பு.

தேர்வுக் கட்டணங்கள் அதிகமாக்கப்பட்டதை எதிர்த்து மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அடையாறு செண்ட்ரல் பாலிடெக்னிக் காலவரையறையின்றி மூடப்பட்டிருப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து.

***திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைக் குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

1981 ஆகஸ்ட் 27] (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்)

'தேர்வுக் கட்டணங்கள் அதிகமாக்கப்பட்டதை எதிர்த்து மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அடையாறு செண்ட்ரல் பாலிடெக்னிக் காலவரையறையின்றி மூடப்பட்டிருப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து.'

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை@ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

***திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, இங்கே மாணவர்களின் கோரிக்கைகள் குறித்து ஒரு தெளிவான நிலை இல்லை என்றும் இனம் தெரியாத கோரிக்கையின் பேரில் மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாணவர்கள் தவறு செய்திருந்தால் கூட, அவர்கள் கோரிக்கைகளில் முக்கியமான, நியாயமான கோரிக்கைகள் இருக்கின்றனவா என்று பார்த்து, நிர்வாகத்தினரை முதல்வர் அவர்களே அழைத்துப் பேசி ஏற்கக் கூடியவற்றைப் பற்றி முடிவெடுத்து, ஏற்கமுடியாதவைகளைக் குறித்து விளக்கி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலம் மாணவர்கள் மத்தியில் அமைதியின்மை ஏற்படாமல், சுமுகமான முறையில் கல்வி நிறுவனம் இயங்கக்கூடிய அளவுக்கு அரசு தக்க முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அவர்களுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கூறியிருப்பதுபோன்று தேர்வுக் கட்டண உயர்வு இந்த வேலைநிறுத்தத்திற்குக் காரணமில்லை என்பதை முதலிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பிறகு அவர்கள் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு காரணத்தைச் சொல்லி வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அவர்களுக்கு வேலை நிறுத்தம் செய்வதிலேதான் விருப்பத்தைக் காட்டுகின்றார்களே தவிர, படிப்பதிலே அவர்களுக்கு ஆர்வம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாணவர்களிலே ஒரு குறிப்பிட்ட நான்கைந்து பேர்கள் அந்த அடிப்படையிலேதான் இருக்கிறார்கள். அவர்களுக்காக மற்ற மாணவர்கள் பின் தொடர்ந்து செய்கிறார்கள். இதுதான் அங்கே இருக்கின்ற நிலைமை. ஆகவே அந்த நான்கைந்து மாணவர்கள் விரும்புவதற்கு ஏற்ப மற்ற மாணவர்கள் அவர்களை பின் தொடர்ந்து போகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்று தெரிந்து பிறகு,

---

@ 214 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அந்தச் சூழ்நிலையை மாற்றியமைக்க என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அரசின் தீர்மானம்.

(1) தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் வரைவுத் திருத்தத்திற்கு ஒப்புதலளித்தல் குறித்து.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 305 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன சட்டத்தின் IV வது விவர அட்டவணையில் சேர்க்கக் கருதியுள்ள வரைவுத் திருத்தத்திற்கு ஒப்புதலளிக்குமாறு வேண்டப்படுகிறது".

வரைவுத் திருத்தம்.

தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) IV -வது விவர அட்டவணையில் 43 ஆம் விதியைச் சேர்ந்த (1) துணை விதியின் (IV) இனத்திற்குப் பின்னர், பின்வரும் இனம் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது—

'(PP) குடும்பநல அறுவை சிகிச்சைகள் தொடர்பாக பணியாளர்களுக்குப் பயணப் படி வழங்குதல்."

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 305 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன சட்டத்தின் IV வது விவர அட்டவணையில் சேர்க்கக் கருதியுள்ள வரைவுத் திருத்தத்திற்கு ஒப்புதலளிக்குமாறு வேண்டப்படுகிறது".

வரைவுத் திருத்தம்.

தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) IV வது விவர அட்டவணையில் 43 ஆம் விதியைச்

சேர்ந்த (1) துணை விதியின் (p) இனத்திற்குப் பின்னர், பின்வரும் இனம் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், **அதாவது—**

'(pp) குடும்பநல அறுவை சிகிச்சைகள் தொடர்பாக பணியாளர்களுக்குப் பயணப் படி வழங்குதல்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) நிகழ்ச்சி நிரலில் வரிசை மாற்றம் குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"மேலவை விதி 21 (3)-ன்கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள 6-வது இனமான அரசின் சட்ட முன்வடிவுகளை இனம் 5-க்கு முன்பு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 21 (3)-ன்கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள 6-வது இனமான அரசின் சட்ட முன்வடிவுகளை இனம் 5-க்கு முன்பு எடுத்துக்கொள்ள வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

6. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 56/1981).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1981) @ ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

@ 215-216 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

உறுப்பினர் யாரும் இதுவரையிலே பேசுவதற்குப் பெயர் கொடுக்கவில்லை.

THIRU G. VASANTHA PAI: Hon. Chairman, Sir, I wish to refer to a matter which is referred to in this Supplementary Budget, namely:—

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்போது விவாதத்திற்கு வந்திருப்பது சப்ளிமெண்டரி பட்ஜெட் பற்றியது அல்ல. நிலச் சீர்திருத்தங்கள் சட்ட முன்வடிவு.

THIRU G. VASANTHA PAI: I am sorry.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, இதிலே உள்ள சிக்கல் இது தான். நேற்று அலுவல் ஆய்வுக் குழுவிலே, இன்று காலையிலே சப்ளிமெண்டரி பட்ஜெட் எடுத்து விவாதிப்பது என்றும், அப்படி முடியாமல் போனால், மாலையிலே விவாதிக்கலாம் என்றும் சொல்லப்பட்டது. ஆதலால் நாங்கள் சட்ட முன்வடிவைப் பார்க்காமலேயே வந்திருக்கிறோம். திமிரென்று அவை முன்னவர் அவர்கள் இப்படிச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்ட முன்வடிவைப் பற்றி விவாதம பிற்பாடு வருகிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : சட்ட முன்வடிவிலேதான் விவாதம் வருகிறது. இப்போது சட்ட முன்வடிவை 'பிரசண்ட்' பண்ணிவிட்டால், 'டைம்' இருந்தால் படித்துவிட்டு வந்துதான் பேச வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இரண்டும் இப்போது போடப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் என்ன செய்யலாம் என்று சொல்லலாம்.

திரு. ம. சங்கரலிங்கம் : அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சட்ட முன்வடிவு பற்றியும் விளக்கிப்பேசிவிட்டால், நாங்கள் அதற்குப் பிறகு பேசுகிறோம்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விதி 126-ன் கீழ் 3 நாட்கள் நோட்டீசாவது ஒரு சட்ட முன்வடிவுக்குக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அதுவும் சேர்மன் அபிப்பிராயப்

பட்டால், அதைச் சீக்கிரம் எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. அதுவும் 6-வது இனமான சட்ட முன்வடிவுகளை இனம் 5-க்கு முன்பு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அதுவும் அமைச்சர் அவர்கள் ஒரு லைன் அடிப்படையிலே முடிவு பண்ணி என்ன காரணத்தின் அடிப்படையிலேயோ இதை இப்போது எடுக்க வேண்டும் என்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவர் பேசிக்கொண்டிருக்கிறார்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் : அவர் பேசி முடித்துவிட்டார்.

I would request the Hon. Minister kindly to explain what is in this Bill, so that Members may understand and discuss it in an intelligible manner.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும் சட்ட முன்வடிவு பற்றி எங்களுக்குத் தெரியவில்லையே, அமைச்சரவர்கள் விளக்கிச் சொன்னால் தேவலையே என்று சொல்லுவதை சம்பிரதாயத்திற்கு ஏற்றுக்கொள்ளலாமே தவிர, உண்மையான நிலையாக அது இராது. அதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவார்கள். வெளியிலே உள்ளவர்களும் நன்றாக அறிவார்கள். நான் ஏதாவது பேச வேண்டுமென்று அவர்கள் ஆசைப்படுவதாக எண்ணுகிறேன். நீண்ட நாள் இடைவெளிக்குப் பிறகு இங்கே கூடியிருக்கிறோம் என்பதற்காக அப்படி இருக்கலாம். நான் பேசக் கூடிய வார்த்தைகளினால் மகிழ்ச்சி ஏற்படாவிட்டாலும், என்னுடைய குரலைக் கேட்க வேண்டுமென்பதற்காக என்னை முதலிலேயே பேசுங்கள் என்று சொல்லியிருக்கிறார்களென்று கருதுகிறேன்.

நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவந்தபோது, சில ஐட்டங்களுக்கு விதி விலக்கு கொடுத்திருந்தார்கள். மேய்ச்சல் நிலம், தோட்டம் என்று பல நிலங்களுக்கு விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அதே போன்று கரும்பு ஆலைகளுக்காகப் பயன்படுத்தும் நிலங்களுக்கும் விதி விலக்கு கொடுத்திருந்தார்கள். 1971-ல் சில விதி விலக்குகளை ரத்து செய்தார்கள். அப்படி விதி விலக்குகளை ரத்து செய்யும்போது, கரும்பு ஆலைகளுக்குப் பயன்படும் நிலங்களை வைத்துக் கொள்ளலாமென்று கொடுத்திருந்த விதி விலக்கை ரத்து செய்தார்கள். அப்படி ரத்து செய்துவிட்டு, அந்த நிலங்களை உச்சவரம்பில் எடுத்து, நிலமற்ற ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்தால், அந்த நிலங்களை நம்பியிருந்த கரும்பு ஆலைகளுக்கு கரும்பு பற்றாக்குறை ஏற்பட்டு, ஆலைகளை இயங்க முடியாமல் போய்விடுமோ என்று எண்ணி, அந்த நிலத்திலேயே கரும்புப் பண்ணை ஏற்படுத்தி, அந்தப் பண்ணைக்குத் தேவையான கரும்பை அந்த நிலங்களிலிருந்து உற்பத்தி செய்து கொடுக்க வேண்டுமென்ற விதியையும் ஏற்படுத்தி, அதை அப்போதிருந்த அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்தது. அந்தச் சட்டத்தை 1972-லே கொண்டுவந்து, ஒரு முறை 5 ஆண்டுகளுக்கு நீட்டித்து, அதற்குப் பிறகு மீண்டும் 2 ஆண்டுகளுக்கு நீட்டித்தது. 1981 ஜூன் 30 ஆம் தேதியுடன் அது முடிவடைகிறது. இடையிலே இன்றைக்கு இருக்கிற அரசு அதிலே சில மாற்றங்களைச் செய்தது. அந்த மாற்றம் என்ன என்பதைக் கூறுகிறேன். சர்க்கரை ஆலை தன்னுடைய நிலங்களோடு, தனியார் நிலங்களையும் குத்தகைக்கு எடுத்து, கரும்புப் பண்ணைக்குப் பயன்படுத்தியது. அரசு ஏற்படுத்திய கரும்புப் பண்ணையில், உச்ச வரம்பில் வந்த நிலம், தனியார் நிலம் எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு கரும்பு உற்பத்தி செய்தது. கரும்புப் பண்ணைக்கு அப்போது நிலங்களைக் கொடுத்தவர்களிடம் அந்தக் காலத்தில் சர்க்கரை ஆலை சொந்தக்காரர்கள் ஒரு ஏக்கருக்கு 100 ரூபாய், 150 ரூபாய் என்று கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். அதிலே பல ஏழைகள் இருந்தார்கள். அப்படிப்பட்ட ஏழை எளியவர்களுக்கு இன்றைக்கு இருக்கும் கரும்புப் பண்ணை நிலம் வேண்டாமென்றால், அந்த நிலத்தைத் திரும்பக் கொடுத்துவிடலாமென்பதுதான் இப்போது வந்துள்ள சட்டத் திருத்தமாகும். உச்சவரம்பில் எடுத்துக் கொண்டுள்ள அரசு நிலங்களைக் கொடுக்கப் போவதில்லை. தனியாரிடமிருந்து 10 ஏக்கர், 8 ஏக்கர் என்று எடுத்துக் கொண்டிருக்கிறோமே, அதைத் திருப்பிக் கொடுத்துவிடலாம். அப்படித் திருப்பிக் கொடுக்க இன்றைக்குக் கரும்புப் பண்ணைக்கு அதிகாரம் கொடுக்கிறோம். அப்படித் திருப்பிக் கொடுக்க ஓர் ஆண்டு தேவைப்படுகிறது. அதற்காக இந்தச் சட்டத்தை மேலும் ஓராண்டு நீட்டிக்கிறோமென்பதுதான் இந்தச் சட்டத்திலுள்ள கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சரவர்கள் நிலச் சீர்திருத்தம் தொடர்பாக ஒரு திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த மசோதா மேலெழுந்தவாரியாகப் பெரிய விளைவுகளை ஏற்படுத்தி விடாதென்ற நிலையில் வந்திருந்தாலும், இதனுடைய பின்னணியை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். ஆனாலும்கூட வேறு சில புதிய பிரச்சினைகள் இதன் வாயிலாக உருவாகியிருக்கின்றன என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட நில உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படையிலே அளிக்கப்பட்ட விதி விலக்குகள், அந்த விதி விலக்குகள் திரும்பப் பெறப்பட்ட நிலைமைகள் என்று நில உச்சவரம்புச் சட்டத்தில் எப்படியெல்லாம் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றங்கள் செய்யப்பட்டன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு உள்ள பிரச்சினையைச் சொல்லுகிறேன். திரு. ஆரூரான் சர்க்கரை ஆலையிடம் வைத்திருந்த நிலம் போக மற்றதை அரசாங்கம் கரும்பு பயிரிடுவதற்காக கையகப்படுத்தி, அதற்காக ஒரு தனி நிறுவனத்தை அமைத்திருக்கிறது. தமிழ்நாடு சுகர்கேன் பார்ம் கார்ப்பரேஷன் என்ற பெயரில் அந்த நிறுவனம், விதி விலக்குக்கு ஆளான நிலங்களை, அன்றைய தினமே விவசாயிகளுக்குப் போயிருக்க வேண்டிய நிலங்களை, கரும்பு பயிரிடத் தேவை என்ற அடிப்படையிலே கையகப்படுத்தியிருக்கிறது. அதற்காகவே அந்த நிறுவனத்தை அமைத்திருக்கிறது. இன்றைக்கு எழுந்துள்ள பிரச்சினை, அந்த நிலங்களைத் திரும்பத் தருவதால், அந்த நிலங்களை விவசாயிகளுக்குத் திரும்பக் கொடுப்பதால், திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைக்குத் தேவையான கரும்பு ஒவ்வொரு ஆண்டும் கிடைக்குமா என்பதை ஊர்ஜிதம் செய்ய வேண்டும். அன்றைய சூழ்நிலையிலே கரும்பு பயிரிட அந்த நிலங்கள் தேவைப்பட்டன. இன்றைக்கு அவை தேவையில்லை என்றால், அதற்கு ஏற்ற வகையிலே புதிதாக நிலங்கள் வந்திருக்கின்றனவா அல்லது புதிதாகக் கரும்பு பயிரிடுவதாக ரிஜிஸ்டர் செய்து கொண்டவர்கள், இன்னொரு நேரத்தில் கரும்பு பயிரிடாமல் விட்டுவிட்டால், இந்த ஆலைக்கு நிரந்தரமாக கரும்பு வர என்ன ஏற்பாடு; அது காவிரி டெல்டா பகுதி. அங்கே பயிரிடுவதில் மாற்றங்கள் ஏற்படுவது இயற்கை. இந்தச் சூழ்நிலையில் அந்த ஆலைக்கு வேண்டிய கரும்பு நிச்சயமாகக் கிடைக்குமென்ற உறுதியைச் செய்துகொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை அரசு கொண்டுவந்திருக்கிறதா

என்ற தகவலும் தெரியவில்லை. இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லுவார்களென்று எதிர்பார்த்தேன். அவர் சொல்லவில்லை. பதில் சொல்லும்போது சொல்லுவார்களென்று எதிர்பார்க்கிறேன்.

கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில், 1976 வரை நீட்டிக்கப்பட்டது. அதற்குப் பிறகு மேலும் 5 ஆண்டுக்காலம் நீட்டிக்கலாமென்று முடிவு செய்தார்கள். இந்தப் புதிய சூழ்நிலைகளில்தான் இந்தச் சட்டமுடிவு வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டுவருகிற நிலச் சீர்திருத்தச் சட்டங்களைப் பொறுத்தவரையில், அவற்றிலே எவ்வளவு கோளாறுகள் இருந்தாலும், அவரைப் பொறுத்தவரையில், நோக்கத்தில் தவறு இல்லை. அவருடைய நோக்கம் அதுவல்ல. சட்டம் கொண்டுவரும் போது அதிலே பல சிக்கல்கள் வந்துவிடுகின்றன.

இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், ஒன்றை இந்த அவைக்குத் தெளிவாகத் தெரிவித்தாக வேண்டும். உச்ச வரம்புச் சட்டம் நிறைவேற்றப்படும்போது, அதிலே விதி விலக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் என்ற அடிப்படையிலே, பலருக்குச் சலுகைகள் கிடைத்தன. இந்த நிலங்கள் கரும்புச் சாகுபடிக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டனவென்ற அடிப் படையிலே சிலருக்குச் சலுகைகள் கிடைத்தன. அன்றையதினம் நில உச்சவரம்புச் சட்டத்திற்குட்பட்டு எவ்வளவு வைத்துக் கொள்ளலாமோ, அதாவது அதிகபட்சம் எவ்வளவு வைத்துக் கொள்ளலாமோ அப்படி வைத்துக்கொண்டிருந்தவர்கள்கூட இந்த விதிவிலக்கின் அடிப்படையிலே நிலங்களைக் கரும்புச் சாகுபடிக்காக விட்டுவைக்க முடிந்தது. நான்

(முற்பகல் 10-30)

இப்போது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம் பழைய நில உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படையில் யார் எல்லாம் 'மேக்சிமம் லிமிட்' நிலம் வைத்திருந்தார்களோ அவர்களுக்கெல்லாம் சலுகையாக இன்றைக்கு கிடைக்கப் பெற்ற நிலம் திரும்பச் செல்கிறதா என்பதைத் தான். இந்தச் சட்டத்தின் அடிப்படையில் மேக்சிமம் நிலத்தை கைவசம் வைத்துக்கொண்டு அதிகமாக இருந்த நிலத்தை விலைக்கு, விற்றவர்களுக்கு, இந்த நிலத்தைத் திரும்பக் கொடுப்பது என்ற நிலை இருந்தால், அதைத் தடுக்க இந்தச் சட்டத்தில் வழிவகை இருக் கிறதா? அதற்கான வழிவகை எதுவும் இல்லை. ஏழை எளியவர் களுடைய நிலம் அவர்களுக்கே போகிறது என்று மாண்புமிகு அமைச்சர் சொன்னார். அது குறித்து மகிழ்ச்சி. ஆனால் முழுக்க முழுக்க இது

ஏழையெளியவர்களுடைய நிலம் தானா? மற்றவர்களுடைய நிலம் இதிலே இல்லையா? இது போன்ற விவரங்களையெல்லாம் இங்கே அமர்ந்திருக் கின்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் அவர்கள் கொடுத்திருந்தால், மிகவும் நன்றாக இருந்திருக்கும். ஆனால் திரும்பத் தரப்படுகின்ற நிலம் 100 ரூபாய்க்குக் குத்தகைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலம், ஆகவே அவர்களுக்கே அதைத் திரும்பக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் சொந்தமாகச் சாகுபடி செய்திருக்கிறார்களா? அல்லது இந்த பார்ம் கார்ப்பரேஷனுக்கு உட்பட்ட நிலத்தை 'ஆப்செண்டி' என்ற நிலையில் லேண்ட்லார்டுக்குக் கொடுத்து அப்படியே அது வேறுயாருடைய கைக்காவது போகப் போகிறதா? அப்படி மற்றவர்கள் மூலமாக நிலத்தில் பயிர் செய்கின்ற நிலை ஏற்படுமானால், இதிலே அரசே வேகத்தைக் காட்டி அவர் களிடம் நிலத்தைத் திரும்பக் கொடுப்பதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்பதற்கான விளக்கத்தைக் காண முடியவில்லை. இந்த நிலத்தைப் பொறுத்தவரையிலும், சொந்தமாக விவசாயம் செய்ய விரும்பவில்லை அல்லது அதற்கான வாய்ப்பு இல்லை என்ற நிலை இருக்குமானால், அப்படிப்பட்டவர் களிடமிருந்து இந்த நிலத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று கேட்கப் பட்டிருக்கிறதா? அரசு நிலத்திற்கு உள்ளே, இடையிலே, குறுக்கே தனியார் பெற்ற நிலங்களைத் திரும்ப அரசு தரவில்லை. ஆனால் நோக்கத்தை பொறுத்தவரையில், வேறு இடங்களில் உள்ள நிலத்தைத் திரும்பத் தந்துவிடுகிறோம் என்ற நிலை வரும்போது, அரசு நிலத்தை வாங்குகிறது என்ற அடிப்படையில் ஏதாவது கேட்டிருக்கிறதா என்றும் தெரியவில்லை. அப்படி கேட்காமல் இருந்திருந்தால், இப்படி ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வர வேண்டிய கட்டாயம், அவசியம், சூழ்நிலை என் ஏற்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். அதுமட்டுமல்ல. இன்றைக்கு நிலம் திரும்பத் தரப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 100 ரூபாய் அளவிற்கு குத்தகையில் நிலத்தை ஏற்றுக்கொண்டோம் என்றும் சொன்னார்கள். இடையிலே பல ஆண்டுகள் ஓடியிருக்கின்றன. ஃபார்ம் கார்ப்பரேஷன் என்பது கரும்பு பயிரிட ஏற்படுத்தப்பட்ட ஒரு அரசு நிறுவனம். மிக அதிகமாகச் செலவு செய்து இன்றைக்கு அந்த நிலத்தினுடைய தரத்தை உயர்த்தியிருக்கிறார்கள். தரத்தை உயர்த்தாத நிலத்தினுடைய மதிப்பே உயர்ந்திருக்கும் நிலையில் தரத்தை உயர்த்தியிருக்கும் இந்த நிலத்தினுடைய மார்க்கெட் பிரைஸ் நிச்சயமாகப் பல மடங்கு உயர்ந்திருக்கும். இன்றைக்கு எந்த விலையின் அடிப்படையில் தனிப்பட்டவர்களிடமிருந்து நிலம் பெறப்பட்டது? தனிப்

பட்டவர்கள் விரும்பி நிலத்தைத் தருவது என்பது வேறு நிலை. தனிப்பட்டவர்கள் நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் நாங்கள் தான், ஆனால் நாங்கள் பயிர் செய்யவில்லை என்ற நிலை இருக்கும்போது, அரசாங்கம் அதற்கு ஏற்ற விலை கொடுத்தால் தான் அவர்கள் அரசுக்கு நிலத்தைத் தருவார்கள். இல்லாவிட்டால் வேறு யாருக்காவது விற்கத் தான் அவர்கள் முன்வருவார்கள். ஆகவே, அரசாங்கம் அவர்களுக்குத் தக்க விலை கொடுக்க முன்வந்திருக்கிறதா ? அது குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். இவ்வளவுதூரம் வந்திருக்கக் கூடிய இந்தச் சட்ட முன்வடிவில் இதனுடைய பின்னணியில் ஒன்று அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் சட்டமன்ற உறுப்பினர்கள் மேல் நம்பிக்கை வைத்து அரசாங்கம் எவ்வளவு நிலத்தை ஏற்றுக்கொண்டது, எவ்வளவு கரும்பு விவசாயம் செய்யப்படுகிறது, ஏற்றுக்கொண்ட நிலத்தில் எவ்வளவு திரும்பத் தரப்படுகிறது போன்ற விவரங்களைத் தரக்கூடாதா? இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஆய்வுக்குக் கொண்டு வந்து, அதன் மீது உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்ற நிலை இருக்கும்போது, அதற்குரிய வாய்ப்புகள் தரப்படும்போது, இது சம்பந்தப்பட்ட 'எக்ஸ்டென்ட் ஆஃப் ஏக்கர்' எவ்வளவு என்கின்ற விவரம் தரப்படாதது உள்ளபடியே வேடிக்கையாக இருக்கிறது. எந்த அடிப்படையில், எவ்வளவு நிலம் இருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவித்தால், இதனுடைய பின்னணியை இந்த அவையின் மூலம் தமிழக மக்கள் அறிய வாய்ப்பாக இருக்கும். ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் குறிப்பாக தமிழகத்திலே தொடங்கப்படும்போதும், அது நிரந்தரமாக ஓடுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தியாக வேண்டும். குறைந்தபட்சம் இவ்வளவு ஏக்கர் கரும்பு பயிரிடப்பட்டாக வேண்டும், குறைந்தபட்சம் இவ்வளவு நிலம் இருந்தாக வேண்டும் என்கின்ற நிலைமைகள் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைக்குத் தேவைப்பட்ட 'ரெக்கோயர்ட் எக்ஸ்டென்ட் ஆஃப் ஏக்கர்' எவ்வளவு, அவர்கள் சொந்தமாக வைத்திருக்கும் நிலம் எவ்வளவு ஏக்கர், விவசாயிகள் மூலம் பதிவு செய்திருக்கும் நிலத்தின் அளவு எவ்வளவு, இடையிலே பார்ம் கார்ப்பரேஷன் என்ற அரசு நிறுவனத்தின் மூலமாக எவ்வளவு நிலம் பயிரிடப்பட்டு, எவ்வளவு கரும்பு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்—இவைபோன்ற விவரங்கள் எல்லாம் அரசால் விவரமாகப் பரிசீலிக்கப்பட்டதா ? அப்படி பரிசீலிக்கப்பட்டதென்றால் அதுபற்றிய விவரங்களை அவைக்குத் தர வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரை, இது மிகப் பெரிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருக்கிறது. சர்க்கரை மிகவும் முக்கியத்துவம்

வாய்ந்தது. அதோடு மாத்திரமல்லாமல், சர்க்கரை ஆலைகளில் கரும்புச் சக்கை ஏராளமாகக் கிடைக்கிறது. கரும்புச் சக்கை அங்கிருந்து பேப்பர் தயாரிக்கின்ற மில்லுக்கு வருகிறது. இந்தக் கரும்புச் சக்கையைக் கணக்கில் கொண்டு தான் அரசு 100 கோடி, 200 கோடி என்று பேப்பர் மில்லுக்கு முதலீடு செய்யப் போகிறார்கள். அப்படிச் செய்கின்ற பெரிய திட்டம் எல்லாம் கையில் இருக்கிறது. இதுபோன்ற சட்ட முன்வடிவுகளின் மூலம் கரும்பு விளைச்சல் குறைகின்ற நிலை வரக் கூடாது. உற்பத்தி குறைகின்ற நிலையில் குறைந்தபட்ச நாட்கள்கூட ஓட முடியாத நிலை வரக்கூடாது. அப்படி சர்க்கரை ஆலை முடங்கக் கூடிய ஒரு நிலை வந்தால், சர்க்கரை உற்பத்தி பாதிக்கப்படுவதுடன், அரசு முதலீடு செய்திருக்கின்ற காகித ஆலையும் முடங்கிப் போகும் என்கிற அச்சம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இதுபோன்ற விவரங்களையெல்லாம் பூரணமாக விளக்கியிருந்தால், நாங்கள் எல்லாம் தெரிந்துகொண்டு போக வாய்ப்பாக இருந்திருக்கும். அவசரச் சட்டமாக வந்திருக்கிற ஒன்று என்ற நிலையில், ஏதோ அவசியமாக வந்திருக்கிற ஒன்று என்பதை நன்றாக உணர முடிகிறது. ஆனால் என்ன அவசரம் என்று தெரியவில்லை. இது ஏழையெளியவர்களுக்காக, சாதாரண விவசாயிகளுக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். அவர்களுக்கு மட்டும் தரப்படும் என்று சொல்லியிருந்தால், சட்டம் முழுமை பெற்றிருக்கும். அதுபற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது விளக்க வேண்டும். அதோடு மாத்திரமல்லாமல் பெரிய மாற்றத்தை, புரட்சியைக் கொண்ட திட்டம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஏழையெளியவர்களைக் காட்டி யார் பயன் பெறப் போகிறார்கள் என்பதை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. நாட்டு மக்களும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சூழ்நிலையும் பார்த்துக்கொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் அந்தச் சூழ்நிலைக்கு தன்னை ஆளாக்கிக் கொள்ளாமலிருக்க வேண்டுமானால், இந்தச் சட்ட முன்வடிவைப் பின்வலிக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தைக் கூறி முடிக்கிறேன்.

(முற்பகல் 10-40)

THIRU A. R. DAMODARAN: Sir, the amendment proposed is known to us because in the past also we have moved similar amendments extending the lease of land to the Tamil Nadu Sugarcane Corporation. But, I would like the Hon. Minister to give us a few details about the present Bill which he has sought to move.

(Thiru A. R. Damodaran) [1981 ஆகஸ்ட் 27

Sir, in 1961, when the Land Ceiling Act came into effect, many mirasdars in Thanjavur district sold their lands to the Thiruarooran Sugars, Ltd., for a price and such lands were taken over by the sugar factory for cultivation of sugarcane. In addition to that, because of the exemption granted under section 73(12), lands were also leased out to the sugar factory for cultivation of sugarcane. In 1971, an amendment was moved whereby it was sought to remove this exemption and it was mentioned by the Hon. Minister at that time that these lands would be cultivated by a separate Sugarcane Corporation because without such lands the sugar factory would not have sugarcane to crush during the seasons. Sir, our experience with the Sugarcane Corporation has shown—and there are also many reports of the Public Accounts Committee about this—that right from its inception this Corporation has not been successful in cultivating sugarcane on the lands that have been allotted to it—either formerly owned by the sugar factories or the lands that have been leased to the Sugarcane Corporation. From the reports received, it is seen that these lands, at least a major fraction of them, are not fit for sugarcane cultivation and that they are paddy-growing lands. Therefore, even if these lands are held by the Sugarcane Corporation, it would not be possible for us economically to grow sugarcane on such lands and supply sugarcane to the factory. When the amendment was moved a few years ago extending the lease by two years, we requested the Hon. Minister at that time itself to examine whether these lands could be held by the Sugarcane Corporation or, if they were found unfit for cultivation of sugarcane, whether the Government could not make up their mind to allot these lands to tenants, to landless labourers in Thanjavur district for cultivation of other crops. It is not as if every sugar factory in Tamil Nadu requires lands of its own to have sugarcane for crushing during a season. For example, the factory of Messrs. E. I. D. Parry and Company in Nellikuppam does not own more than 50 acres or 100 acres and those lands too are held only for experimental purposes to try new varieties of sugarcane. The idea that a sugar factory should have 10,000 acres or 15,000 acres for its own cultivation has not been proved to be successful. I would, therefore, plead with the Hon. Minister, while I welcome this idea that leased lands have to be given back to those persons who leased out those lands to the sugar factory, whether some such major decision would not be necessary also in the case of lands that have been sold by mirasdars to the sugar factory but which

1981 ஆகஸ்ட் 27] (Thiru A. R. Damodaran)

now can be allotted to the classes of persons who are likely to benefit under the land ceiling legislation. If my memory is correct, I believe that there are over 3,000 or 4,000 acres of land held by the Sugarcane Corporation. A division of this land amongst the landless labourers and other poorer and weaker sections of the society in that district would be of great benefit to them in that they would be able to cultivate foodgrain-crops on those lands. The hon. Member Thiru Ramamoorthy raised the point whether the sugar factory would be able to survive if those lands were handed over to tenants and landless labourers for cultivation, under the land ceiling provisions. I would like to say that if this factory is to survive in Thanjavur district, an attempt must be made to isolate these lands which can grow sugarcane in that district so that the factory may get regular supply of cane. The attempt to grow sugarcane on wet lands has not proved successful because the yields from those lands have been extremely low; in some cases, it is only 15 to 18 tons per acre and this is not an economic yield at all for lands to be cultivated by sugarcane factory.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

I would, therefore, take this occasion to plead with the Hon. Minister that instead of extending the period of lease by one year and two years or three years, as is done normally in the case of other legislations also, the Government should make up their mind whether these lands are fit for sugarcane cultivation and if they are not fit for sugarcane cultivation, the Government should wind up the Tamil Nadu Sugarcane Farm Corporation and not to waste public money on maintaining the Corporation which has lost heavily since its inception for the past 10 years. The Hon. Minister can give us details of what the Sugarcane Corporation has been doing for the past 10 years, particularly its financial performance. If it had lost heavily, I would request him to wind up the Corporation and to hand over the lands that are not fit for cultivation of sugarcane to other persons for cultivation of other crops and in the case of lands which are fit for sugarcane cultivation, they may be assigned to landless labourers or other farmers with the condition that such lands should be used only for growing sugarcane and this would help the factories to maintain their crushing programme and would also help many

landless labourers in this area to have land of their own, which, I think, was the primary objective for the exemption to be removed in 1971. I would only plead with him to take this into consideration and give us also details as to what the performance of the Sugarcane Corporation is, the total tonnage that we have obtained from the 3000 and odd acres of land, whether the lands are fit for sugarcane cultivation and to convey the Government's decision on what they have proposed to do not only with the lands that have been leased to the Corporation but also with the lands that have been sold to the factory and which cannot be put to the use for which they were meant when they were originally handed over. Thank you.

***Thiru G. VASANTHA PAI**: Hon. Vice-Chairman, in this Bill I find that there is a provision for re-surrender of lands taken by the Tamil Nadu Sugarcane Farm Corporation. I wish to mention something in this connection generally about this method of leasing and re-leasing of land and surrendering of the land. In other countries, sugarcane is produced on various kinds of lands which are meant for cultivation of wheat and crops like that and lands are diverted from one cultivation to another. There is one important aspect I would like to mention because the hon. Member Thiru Damodaran just now mentioned that these lands were not fit for cane cultivation. I have recently been to countries like Australia which is one of the major sugarcane producing countries in the world. When I travelled in Queensland, right from Cairmes to Brisbane, on either side, I foand sugarcane farms in abundance, the like of which you cannot see in this country. One method they use for making the land useful for cultivation is by burning the whole crop. I first thought that there was some fire in the farm when I saw the whole crop burning. The reason for that is said to be that there are rodents and snakes in those sugarcane farms and they have to be destroyed. After setting fire to the whole crop, they harvest immediately, they then put them into the machine

* (மூற்பகல் 10-50)

where they crush the cane and produce the sugar. The quickness with which they do it is something phenomenal. One day, you see the whole farm under fire and the next day the whole thing is cut and taken because if it is not cut immediately the very next day the cucrose content in the sugarcane will be reduced, and recovery

affected. So, they do it with speed and they obtain sugarcane juice and production of sugar within the shortest possible time of two or three weeks. I asked them the question whether the sugar-content would not be reduced if the sugarcane crop was burnt. They said that it would not be reduced because only the tops of the crops and roots were destroyed. In such circumstances, I would suggest that this theory that the land which is meant for cultivation of paddy is not fit for sugarcane is an obsolete theory. The land could be used for cultivation of sugarcane if proper drainage and methods of cultivation and harvesting are resorted to.

In the light of our experience in this part of the country, I would suggest that the sugarcane farms should not be reduced in extent. Formerly, under the Ceiling Act of 1961, a clear exemption was given for sugarcane. Thereafter, the Act of 1973 removed all exemptions that had been given for sugarcane farms and asked for the surrender of those lands for being re-let to other persons who might be landless labourers, etc. Sir, I would like, whatever be the opposition, the Sugarcane Farm Corporation or similar Corporations to be increased in number. Sugarcane should be cultivated on a large scale in this country. The Hon. Minster may be aware that under the Act of 1949 there were aeas reserved for each sugar factory and that such areas had to give sugarcane to those factories. That was at a time when sugarcane was not being used for the manufacture of sugare but was diverted to gur and khandasari. The prices of sugarcane have been increased from time to time and the provisions of the Essential Commodities Act as well as the Sugarcane Control Order have been used to make the sugarcane cultivator divert the sugarcane for the manufacture of sugar as against diversion to gur and khandasari. Now, the hon. Members Thiru Damodaran and Thiru Ramamoorthy mentioned about the inefficacy of the Sugarcane Farms Corporation Ltd., to discharge its duties and responsibilities. I would request the Government to have co-operatives of sugarcane growers and form sugarcane growing areas on a co-operative basis in order to see that sugarcane is made available to the sugar factories in large quantities for the purpose of crushing. It is a very sad thing to note that we are importing sugar from abroad. I think we have got enough facilities in our country and, given enough lands for the purpose of cultivation

of sugarcane, we would be able to make our country, self-sufficient, as it was a few years ago. In this connection, I would say that the surrender of lands which is envisaged in this Bill should not be taken very-seriously. The single instance of Thiruarooran Sugars or some other company which owns land in bulk should not be taken as an example. The Government should see that sugarcane growing co-operative farms are established on a firm footing, either with the cultivators as members or with the Government participating in equal measure in such co-operatives. The cultivation of sugarcane should be encouraged through these co-operative farms. I would also suggest that the re-lease of these lands should not be encouraged. The Sugarcane Farms Corporation itself must hold the lands and make an honest effort to cultivate those lands and to make sugarcane available to the factories situated nearby. Thank you.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்தை மாற்றிக் கொண்டு வரப்படுவதாகும். தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்திலிருந்த குத்தகைதாரர்களின் குத்தகைக் காலம் 30—6—1981 அன்றோடு தீர்ந்தது. உடனே ஒரு அவசரச் சட்டம் கொண்டு வந்து அவர்களின் குத்தகைக் காலத்தை நீட்டித்தார்கள். இப்போது அந்த அவசரச் சட்டத்தை அகற்றிவிட்டு, முறையான சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வரும் போது, இவைகளின் காரணமாக ஏற்பட இருக்கிற நன்மைகள் யாவை என்றும், இத்தகைய முடிவுகளை அரசு மேற்கொள்வதற்கான காரணங்கள் யாவை என்பதையும் அரசு மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும்.

நிலத்தின் சொந்தக்காரர்களுக்கே, அதாவது ஏழை விவசாயிகளுக்கே இந்த நிலங்கள் இனி கிடைக்கப் போகின்றன என்று அரசுத் தரப்பில் ஒரு வேளை சொல்லக்கூடும். அதை நான் வரவேற்கிறேன். அப்படி ஏழை விவசாயிகளுக்கே மீண்டும் தரப்பட்டு அவர்களே அதில் பயிரிடுவதாக இருந்தால், நான் அதை உண்மையிலேயே வரவேற்கிறேன். ஆனால் 1961 ஆம் ஆண்டு நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது, விவசாயிகள் தங்களின் நிலத்தைக் கரும்பாலைக்குக் குத்தகைக்குக் கொடுப்பதானால், அவர்களுக்கு நில உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து விதி விலக்கு அளிக்கப்படும்

என்று விலக்களிக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டபோது இந்த விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டதோடு, அந்த நிலங்களையெல்லாம் அரசே எடுத்து, கரும்புப் பண்ணைக் கழகம் ஒன்றை ஏற்படுத்தி, கரும்பைப் பயிரிட்டது. அதுமட்டுமல்ல. அதைச் சுற்றியுள்ள நிலங்களையும் தனியாரிடமிருந்து கரும்புப் பண்ணைக்காகவே அரசு எடுத்தது. அப்போது இந்த நிலம் அனைத்தும் உச்ச வரம்புக்கு உட்பட்ட நிலம் என்று சொல்லப்பட்டது. இப்போது இவர்களிடத்தில் திரும்பக் கொடுக்கப்படுவதால், சிறு விவசாயிகள் அல்லது நிலச் சொந்தக்காரர்கள் நில உச்ச வரம்புக்குட்பட்ட நிலத்தை வைத்திருப்பவர்கள் என்று சொல்லப்படுகிறது. எனவே எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. முன்பு கரும்புக்காக நிலம் கொடுப்பதாக இருந்தால், அத்தகைய நிலத்திற்கு விதிவிலக்கு அளிக்கப்படும் என்று சொன்னதன் பேரில், பலர் கரும்புப் பண்ணைக்கு, கரும்பாலைக்கு நிலத்தைக் கொடுத்து விதிவிலக்கு பெற்றார்கள். இப்போது அவர்களுக்கே இந்த நிலம் மீண்டும் திரும்ப அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். அவர்கள் கரும்பாலைக்கு நிலத்தைக் கொடுத்தபோது, அவர்கள் நில உச்ச வரம்புக்கு உட்பட்டவர்களாகக் கருதப்பட்டார்கள். ஆகவே கொடுத்தார்கள். பின்னர் அரசே கரும்புப் பண்ணை வைத்து கரும்புப் பண்ணைக்கு இந்த நிலத்தைக் கொடுத்தால் அதற்குச் சலுகை உண்டு என்று அறிவித்தது. அதிலும் இவர்கள் வருகிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. இப்போது அதே விவசாயிகளுக்குத்தான் மீண்டும் இந்த நிலத்தைக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லப்படுகிறது. இதனால் எவ்வளவு பேர் பயன்பெறப் போகிறார்கள்? இதன் காரணமாக கரும்பாலைகள் பாதிக்கப்படப் போகின்றனவா அல்லவா என்ற விளக்கத்தை அரசு தெரிவிக்க வேண்டும். இவ்வாறு நிலத்தை விவசாயிகளுக்கே திரும்பக் கொடுக்கும்போது, அவர்கள் அந்த நிலத்தில் கரும்புதான் பயிரிட வேண்டும் என்ற விதியிருக்கிறதா? அப்படி இல்லையென்றால், கரும்பாலைகள் பாதிக்கப்படுமா இல்லையா? இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், இத்தகைய நிலங்கள் இல்லாமல் கரும்பாலைகள் சிறப்பாகச் செயல்படத்தான் போகின்றன என்றால் அதை நான் வரவேற்கிறேன். இவைகளெல்லாம் அரசாங்கத்தால் தெளிவுபடுத்தப்படவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம், இன்னொரு சட்டத்தைக் கொண்டு வந்து மீண்டும் அந்த விவசாயிகளிடமிருந்து அந்த நிலத்தை அரசே பெறும் நிலை வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 ஆகஸ்ட் 27

அதனால், திரும்பக் கொடுக்கப்படும் நிலத்தைப் பெறுகிற நிலச்சுவான்தாரர்கள் முதலில் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை ஏமாற்றிவிட்டு, இப்போது இதன் மூலம் பயன்பெற்றுவிடக்கூடாது என்று எச்சரிக்க விரும்புகிறேன். அரசாங்கம் இவைகளைப்பற்றியெல்லாம் தெளிவாக இந்த நாட்டிற்கு அறிவித்திருக்க வேண்டும். அதுதான் முறையானதாக இருந்திருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, இந்தச் சட்டத் திருத்தத்தால் எத்தனை பேர் நிலம் பெறப் போகிறார்கள், அப்படிப் பெறுகிற விவசாயிகளுக்கு இதற்கு முன்னால் இருக்கும் நிலம் எவ்வளவு, இப்போது திரும்பக் கிடைக்க இருக்கிற நிலம் எவ்வளவு என்ற புள்ளிவிவரத்தை எங்களுக்குத் தெரிவிப்பார்களானால், நாங்கள் ஒரு தெளிவான முடிவை எடுப்பதற்கு உதவியாக இருக்கும். உண்மையிலேயே சிறு விவசாயிகளுக்கு நிலம் திரும்பக் கொடுக்கும் சூழ்நிலை இதன் மூலம் உருவாகும் என்றால், அந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் இவ்வாறு நிலத்தைத் திரும்பக் கொடுப்பதால், எத்தகைய விளைவுகள் உருவாகும் என்பதையெல்லாம் ஆராய்ந்து, தீய விளைவுகள் வராமல் உண்மையிலேயே சிறு விவசாயிகளுக்குப் பலன் அளிக்கும் வகையில் இந்தச் சட்டத்தைப் பாதுகாப்போடு செயல்படுத்த வேண்டும் என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னுள்ள சட்ட முன்வடிவைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். என்றாலும், அவர்கள் இதை எதிர்த்தார்கள் என்று யாரும் நிச்சயமாக எடுத்துக்கொள்ள முடியாது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். இராணுவத்தில் இரண்டு வார்த்தைகளை உபயோகிப்பார்கள். அதாவது "காஷனரி வேர்டு அண்டு கமாண்டிங் வேர்டு" என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். நான் தவறு செய்துவிடக்கூடாது என்ற வகையில் காஷனரியாகச் சிலவற்றைச் சொல்லியிருக்கிறார்கள். இராணுவத்தில் எப்படி காஷனரியாக உபயோகிப்பார்களோ, அப்படி எச்சரிக்கையாக வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதை முதலில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 11.00)

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சில சந்தேகங்களை எழுப்பினார்கள். அதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தபோது, அவருக்கு அடுத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்

1981 ஆகஸ்ட் 27] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் அதற்குரிய பதிலை அளித்திருக்கிறார்கள். இந்தச் சட்ட முன்வடிவை ஏன் இவ்வளவு அவசரமாகக் கொண்டு வந்தார்கள் என்று கேட்டார்கள். இதற்கு முன்பு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து விதிவிலக்கை ரத்து செய்தபோது, கரும்புப் பண்ணைகளுக்கு ஐந்தாண்டுகளுக்கு விதிவிலக்கு என்று அன்றைக்கிருந்த அரசு கொண்டு வந்தது என்பது மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அதை மேலும் இரண்டாண்டுகளுக்கு நாங்கள் நீட்டித்தோம். இப்போது மூன்றாண்டு என்று நீட்டிக்க விரும்புகிறோம். ஆகவே முதலிலே கொண்டுவரப்பட்ட சட்டம்தான் இன்றைக்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் கரும்பாலை பாதிக்கப்படுமா, பாதிக்கப்படாதா, பாதிக்கப்படுமானால் அதற்குரிய பாதுகாப்பு கொடுக்கப்படுகிறதா இல்லையா என்ற கேள்விகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி கேட்டிருக்கிறார். வளர்ந்து வருகிற சமுதாயத்தில் அன்றன்றைக்கு இருக்கின்ற நிலைமைக்கேற்ப சில சட்ட திட்டங்கள் மாற்றப்படுகின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். இந்தியாவானாலும், தமிழ்நாடானாலும், இருக்கின்ற எல்லா கரும்பாலைகளுக்கும் உத்திரவாதம் கொடுக்க வேண்டுமென்றால் நிச்சயமாக முடியாது. கிராமத்திலே ஒரு பழமொழியைச் சொல்லுவார்கள். "மேயப் போகிற மாடு கொம்பில் புல்லை வைத்துக் கொண்டா போகிறது!" என்பார்கள். போகிற இடத்திலே வளர்ந்திருக்கின்ற புல்லை மேயும். அதேபோல சர்க்கரை ஆலைகள் . . .

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற கோழி இனங்கள் மேயப் போகாமல் இருந்த இடத்திலேயே தீனியை சாப்பிட்டுக் கொண்டு நல்ல முறையில் வளர்ந்து முட்டையும் தருகின்றன, கறியையும் தருகின்றன. அந்த அளவிற்கு இன்றைக்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது.

கரும்பாலையைத் துவக்குகிறபோது, முதலில் துவக்கி விட்டு அதற்குண்டான கரும்பு விளையும் நிலம் இருக்க வேண்டுமா வேண்டாமா? கரும்பாலையைத் துவக்கி வைத்துவிட்ட பிறகு அதன் நிலத்தை எடுத்துக்கொண்டால், அது இயங்குவதில் சீர்குலைவு ஏற்படாதா என்று அறிய விரும்புகிறேன். ஆகவே பழமொழியைச் சொல்லுவது . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : பழமொழியைத்தானே சொல்லியிருக்கிறார். அது எப்படி இதற்குப் பொருந்தும் என்று சொல்லவில்லையே.

திரு. க. இராமமூர்த்தி : அது பழையதாகிவிட்ட பழமொழி. இப்போது புதிய மொழியைச் சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : எல்லா கரும்பாலைகளுக்கும் வேண்டிய நிலங்களுக்கு அரசு உத்தரவாதம் தர முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இருக்கின்ற இடத்தில் கரும்பைத்தான் போட வேண்டும் என்றும், அந்தக் கரும்பை அந்த ஆலைக்குத்தான் கொடுக்க வேண்டும் என்றும் சொன்னால், சில சங்கடங்கள் வருகின்றன. அதில் இருக்கக் கூடிய சங்கடத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் தெரிவித்தார்கள். கரும்பு போடுவதற்கு லாயக்கற்ற நிலம் இருந்தால், அதில் கரும்பைப் போட்டால் விவசாயிகளுக்கு நஷ்டம் வருமே, அதை அரசு அறியுமா என்று அவர் கேட்டார். ஆகவே கரும்புதான் போட வேண்டும் என்று கரும்பைப் போட்டால் விவசாயிகளுக்கு நஷ்டம் வருமே, அதை அரசு அறியுமா என்று அவர் கேட்டார். ஆகவே கரும்புதான் போட வேண்டும் என்று சொல்வதில் சங்கடம் இருக்கிறது. இரண்டாவது, அதில் விளையும் கரும்பை அந்த ஆலைக்குத்தான் கொடுக்க வேண்டுமென்றால் அந்த ஆலை என்ன விலை கொடுக்கிறதோ அதைத்தான் விவசாயிகள் பெற வேண்டிய நிலை இருக்கிறது. அரசு அதிகமாக விலை நிர்ணயம் செய்யும்போது, அந்த அதிகமான விலையை அவர்கள் கேட்க முடியாத நிலை எற்படுகிறது. ஆகவே இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அன்றைக்கு விதிவிலக்கை ரத்து செய்தபோது அன்றைக்கு இருந்த சூழ்நிலையில் அன்றைக்கு இருந்த அரசு கரும்பாலைகளுக்கு பாதுகாப்புக் கொடுத்துச் சட்டத்தைக் கொண்டு வந்தது. அதே அரசு இன்றைக்கு இருந்தால், அத்தகைய பாதுகாப்பு தேவையில்லை என்று நிச்சயமாகச் சொல்லும் என்பதை எதிர்க் கட்சி உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் அந்த நிலத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அந்த நிலம் கரும்பு பயிரிடுவதற்கு எற்றதாக இருக்குமா இல்லையா என்பதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அதற்காக ஒரு குழு எற்படுத்தப் பட்டிருக்கிறது. அந்த நிலத்தை எடுத்துக் கொண்டு அதிலே என்ன பயிர் போட்டால் இலாபகரமாக இருக்கும் என்பதை அரசு யோசித்து அதற்கு வேண்டிய முடிவுகளை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுக்கு பல பேர் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். 360, 380 பேர் எங்களுக்குத்தான் நிலங்களைத் தர வேண்டும் என்று மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். குத்தகை நிலங்களை எங்களுக்குத் திருப்பித் தர வேண்டும்; அந்தக் காலத்திலே ஏக்கருக்கு 150 ரூபாய், 100 ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள்; அது போதாது. ஆகவே, நிலங்களைத் திருப்பித் தர வேண்டுமென்று மனுக்களை கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணங்களை நிறைவேற்றுகிற முறையிலேதான் இதைச் செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது இருக்கின்ற நிலம் எவ்வளவு என்றும், எவ்வளவு நிலத்தைத் திருப்பிக் கொடுக்கப் போகிறோம் என்றும் கேட்டிருக்கிறார்கள். இருக்கின்ற நிலம் மொத்தம் 6,528 ஏக்கர். அரசு நிலம் 3,900 ஏக்கர். திருப்பிக் கொடுக்கப் போகிற நிலம் 2,616 ஏக்கர்—தனியார் நிலம். திருப்பிக் கொடுக்கப்பட்டிருப்பது 2,362 ஏக்கர். அப்படி திருப்பிக் கொடுக்கிறபோது அவர்கள் ஏற்கெனவே வைத்திருக்கின்ற நிலமும் இப்போது திருப்பிக் கொடுக்கப்படும் நிலமும் சேர்ந்து நில உச்சவரம்பிற்கு உட்பட்டதாக இருக்கும். நில உச்சவரம்பு அளவிற்கு மேல் அதிகமாக இருக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது கொடுக்கிற நிலமும் சேர்ந்து நில உச்சவரம்புக்கு மேல் இல்லாமல் பார்த்துக்கொள்ளப்படுமென்று அமைச்சர் அவர்கள் சொல்லுவதாக நான் எடுத்துக்கொள்ள முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நில உச்சவரம்புச் சட்டம் முதலில் வந்தபோது 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று இருந்தது. இப்போது 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று ஆக்கிவிட்டோம். இன்றைக்கு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர்தான் வைத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே பல பேர் திருப்பித் தர வேண்டுமென்று மனுக்கள் தந்ததின் பேரில், சிறு விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற முறையில், கரும்பை மட்டும் பயிரிடுவதால் இலாபகரமாக இல்லாமல் இருக்கிறது என்பதால், இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறேன்.

*** திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நில உச்சவரம்புச் சட்டம் ஆரம்பத்திலே வந்தபோது இருந்த அளவு வேறு. இடையிலே புதிய நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு

வரப்பட்டு அதன் அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த அடிப் படையிலே நில உச்சவரம்பை மீறாமல் இருக்குமாறு அரசு கவனித்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அடுத்து, அமைச்சர் அவர்கள் மொத்தம் 6,528 ஏக்கர் நிலம் உள்ளது என்றும் அதில் அரசுக்குச் சொந்தமானது 3,900 ஏக்கர் என்றும், ஏற் கெனவே கொடுக்கப்பட்ட நிலம் 2,362 ஏக்கர் என்றும் இன்னும் கொடுக்கப்பட வேண்டியது 2,016 ஏக்கர் என்றும் சொல்லியிருக்கிறார்கள் . . .

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தனியாருடைய நிலம் 2,401 ஏக்கர். இதுவரைக்கும் கொடுக்கப்பட்ட நிலம் 2,362 ஏக்கர். இனிமேல் கொடுக்க வேண்டியது 39 ஏக்கர்.

திரு. க. இராமமூர்த்தி : இப்படி நிலத்தைக் கொடுக்கின்ற வேலை நடக் கிறது என்றும், இதுபற்றி பரிசீலிக்க ஒரு கமிட்டி இருக்கிறது என்றும் மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி இயங்கிக் கொண்டிருக்கும்போது, நிலத்தைக் கொடுக்க வேண்டிய கட்டாயம் என்ன என்பது தெரியவில்லை. ஏன் அவசர அவசரமாகச் சட்டம் வந்தது? எந்தச் சூழ்நிலையில் இந்தச் சட்ட முன்வடிவு அவசரச் சட்டமாக வந்தது? இதற்கு வேண்டிய காரணம் என்ன என்பது தெரியவில்லை. அப்படியே

(முற்பகல் 11-10)

வந்தாலும், அவசரச் சட்டத்தின் அடிப்படையிலே ஏன் வரவேண்டும்? இதிலே கொஞ்சம் அவகாசம் எடுத்துக்கொண்டு, இந்த அவையினுடைய கருத்துக் களைத் தெரிந்து செய்ய வேண்டும். இதற்கு என்று கமிட்டியை வைத்திருக் கும்போது, இடையிலேயே கட்டாயமாக, நிர்ப்பந்தமாக சட்டம் கொண்டு வரும் நிலை ஏன் ஏற்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டத்திலே மிகத் தெளிவாக இருக்கிறது. இதை யாரும் மூடி மறைத்து விட முடியாது. அதை எடுத்துக்கொண்டுபோய் பீரோவிலே வைத்துப் பூட்ட முடியாது. நான் இந்தச் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருப்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மூலச் சட்டத்தில் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்றும், அதற்கு மேல் யாரும் வைத்திருக்க முடியாது என்றும் இருக்கிறது. அந்த 15 ஸ்டாண் டர்ட் எக்கருக்குக் குறைவாக வைத்துள்ளவர்களுக்குத்தான் இதிலே நன்மை கிடைக்கும், மற்றவர்களுக்குக் கிடைக்காது என்பதை நான் தெளிவுபடுத்து கிறேன். ஆனால் அவசரச் சட்டம் கொண்டுவருவது ஏனென்றால், நடை முறைப் படுத்துவதற்கு. இதற்கென குழு போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு

அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் வேறு மாவட்டத்துக்காரர். அவர் வேறு மாவட்டத்துக்காரராக இருந்தாலும், எடுத்துச் சொல்கிறார். அது தஞ்சை மாவட்டத்தில், கீழ்த் தஞ்சை மாவட்டத்தில், நிலத்திலே கரும்புக்குத் தண்ணீர் இருந்துகொண்டே இருக்கக்கூடாது என்று அவருக்குத் தெரிந்திருக் கிறது. அந்தக் காரணத்தினால்தான் அவர்கள் அந்த நிலத்தில் கரும்பு விளைவிக்க முடியுமா முடியாதா என்ற ஒரு சந்தேகத்தைக் கிளப்பியிருக் கிறார்கள். இன்றைக்குக் கொடுத்துவிட்டு மீதி நிலம் இருக்கிறது என்று சொன்னேன். 3,900 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலம் அரசு நிலம். உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக அரசுக்கு வந்திருக்கின்ற நிலம் இருக்கிறது. அதிலே ஒரு பண்ணையாக வைத்திருக்கிறார்கள். அந்த நிலத்திலே என்ன போடுவது என்பதைப் பற்றித்தான் அந்தக் கமிட்டி ஆராயும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போது, அதையெல்லாம் பிரித்துக்கொடுத்துவிடலாம் என்ற கருத்தைக் கூடச் சொன்னார்கள். அதிலே என்ன சங்கடம் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மூன்றாயிரம், நான்காயிரம் ஏக்கர் என்றால், அரசு அந்த நிலத்திலே போக்குவரத்து வசதி, போக வர ரோடு, அதிலே தண்ணீர் பாய்ச்ச பைப் லைன், தண்ணீர் விட மோட்டார் என்ஜின் இவைகள் எல்லாம் போடப்பட்டிருக்கிறது. அதற்காக பல லட்சக்கணக்கான ரூபாய்களைப் போட்டு பயிர் பண்ணப் போகிறது. இன்றைக்கு யாருக்குப் பிரித்துத் தர வேண்டுமென்று நடைமுறை இருக்கிறது என்றால், யாருக்கு மூன்று ஏக்கருக்கு மேல் இருக்கிறதோ அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்க முடியாது. இன்றைக்கு நிலமற்றவர்களுக்குப் பிரித்துக் கொடுப்பது என்றால், மூன்று ஏக்கர், மூன்று ஏக்கர் என்று பிரித்துக் கொடுத்தால், அதிலே போடப் பட்டிருக்கின்ற பைப் லைன், எலெக்ட்ரிக் லைன், மோட்டார் வசதி ஆகியவை களைத் தனியார்கள் பயன்படுத்த முடியாது. அதைப்பற்றியெல்லாம் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*** திரு. க. இராமமூர்த்தி :** ஐ திங்க் தி கேட் ஹாஸ் கம் அவுட் ஆப் தி பேக் (I think the cat has come out of the bag) இந்தக் குறிப்பு களிலே மசோதாவினுடைய காரணங்களையும் அவசியத்தையும் பற்றிச் சொல் கின்றபோது, அமைச்சர் அவர்கள் சிறு விவசாயிகளுக்கு நிலம் திரும்பத் தரப் படும் என்று சொல்லியிருக்கிறார்கள். சிறு விவசாயிகளுக்கு எவ்வளவு நிலம் என்பதைப்பற்றி இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீர்க்க மாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்கின்றபோது, 15 ஸ்டாண்டர்ட்

ஏக்கர் நிலத்திற்குக் கீழே வைத்துள்ளவர்களுக்குப் போய்ச் சேரும் என்று ஆகிறது. அதற்குள்ளே குறைவாக வைத்திருந்தால், இதுபோய்ச் சேர்வதன் மூலம் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வரும். அந்த அளவுக்கு வருமே தவிர, சிறு விவசாயிகளுக்குப் போய்ச் சேர்கின்ற அளவுக்கு இது இல்லை. ஆனால் சட்டத்தினுடைய நோக்கத்தைப் பார்க்கிறபோது, சிறு விவசாயிகளுக்குப் போய்ச் சேருகின்ற நோக்கத்திலேதான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். சிறு விவசாயிகள் என்பது 15 ஏக்கர் வைத்து இருப்பவர்களா அல்லது 2½ ஏக்கர் புஞ்சை ஒரு ஏக்கர் நஞ்சை என்று வைத்திருப்பவர்களா ? எந்த அடிப்படையிலே சிறு விவசாயிகள் என்பதும், இந்த மசோதாவினுடைய கருத்துப்படி சிறு விவசாயிகளுக்குத் திரும்பத் தருவது என்றும் இருக்குமானால் இன்றைக்கு அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற பதில், இந்தச் சட்டத்தை தோற்கடிப்பதாகத்தான் இருக்கிறது. மாறானதாக இருக்கிறது. இது வேறு ஏதோ காரணத்திற்காக வருகிறது. அரசின் நோக்கத்திற்கு மாறானதாக, புறம்பானதாக அமைந்திருக்கிறது என்ற குற்றச்சாட்டுகளிலிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மட்டுமல்ல, இந்த அரசே மீள முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட நிலம் 2,400 சொச்சம் ஏக்கர் நிலம் என்றும் அதிலே திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய நிலம் 39 ஏக்கர் நிலம் என்றும் சொன்னார்கள். சட்டம் கொண்டு வருவதற்கு முன்னாலேயே அமுல்படுத்திவிட்டு, இனிமேல் ஏன் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது தான் என் சந்தேகம். அரசுக்குச் சொந்தமான நிலம் உச்ச வரம்புக்கு உட்பட்ட மூன்று ஆயிரம் ஏக்கர் நிலம் கார்ப்பரேஷனுக்கு இருக்கிறது என்றும், குத்தகை எடுத்த நிலங்களிலே திருப்பிக்கொடுக்க வேண்டியது, 2,400 சொச்சம் ஏக்கரில் 39 ஏக்கர் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி யானால் இந்தச் சட்ட முன்வடிவு எதற்கு ? இதற்கு முன்னாலேயே கொடுக்கப் பட்டு விட்டதா என்றுதான் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இடி இடிக்கிறபோது வேகமாக வெளிச்சம் தெரியும் என்று சொல்வார்கள். இடி இடிக்கிறபோது இடிச் சத்தமும் கேட்கும், வெளிச்சமும் தெரியும், ஆனால் அதைப் பார்ப்பவர்களுக்கும் அல்லது யாருக்கும் அதனால் எந்தப் பயனும் இருக்காது. இது எல்லாம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அது யாருக்கும் பயன் தருவதில்லை. இது உங்களுக்கும் தெரியும். அதுபோல அழுத்தந்திருத்தமாக வேகமாக

இந்த அமைச்சரவையை, அமைச்சரை மட்டுமல்ல, அரசையும் குற்றம் சாட்டும்போது ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். அது பேச்சுக்குப் பயன் படுமே தவிர வேறல்ல. அது நடைமுறைக்கு வராது. இடி இடிப்பதனாலே, மின்னல் வருவதாலே பயன் இல்லை என்பதுபோல இதுவும் பயன்படுமா என்று அங்கத்தினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, நான் சிறிய விவசாயி என்று சொன்னவுடனே, 2½ ஏக்கர், 3 ஏக்கர் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்தச் சட்டத்திலேயே தெளிவாக இருக்கிறது. மூலச் சட்டத்தில் தெளிவாகவே இருக்கிறது. இதற்கு முன்பு நான் சொல்லியிருந் தாலும் இதுதான் சரி. அதைச் சரி செய்கின்ற வார்த்தையாக அங்கத்தினர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். மூலச் சட்டத்தில் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று இருக்கிறது. அதற்குப் பிறகு எந்தச் சட்டம் கொண்டுவந்தா லும், மூலச்சட்டத்தைத் திருத்துவதற்கு முன்னாலே, அந்த மூலச்சட்டத் திற்கு விரோதமாக எந்தச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்த முடியாது. மூலச்சட்டத்தில் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று இருக்கிறபோது, அதைத் திருத்தாது, சிறிய விவசாயிகள் என்று சொல்கின்றபோது, 2½ ஏக்கர், மூன்று ஏக்கர் என்று சொல்லிக்கொண்டிருப்பது சரி அல்ல.

திரு. க. இராமமூர்த்தி : அமைச்சர் அவர்கள் சொல்லியதுதான்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு அங்கத்தினர் திரு இராமமூர்த்தி அவர்களுக்குத் துணைத் தலைவர் அவர்கள் எவ்வளவு நேரம் கொடுக்கிறார்களோ அவ்வளவு நேரம் நான் பதில் சொல்லத் தயாராக இருக் கிறேன். எனக்கு நேரம் கொடுங்கள் என்று கேட்பதற்கு எனக்கு உரிமை யில்லை. நான் தெரிவித்துக்கொள்கிறேன். மூலச் சட்டத்திற்குக் கட்டுப் பட்டுத்தான் இது வருகிறது. இந்த நிலத்தைத் திருப்பிக்கொடுக்கின்றபோது 15 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் வைத்திருப்பவர்களுக்கு நிச்சயமாக நிலம் இல்லை. அவர்கள் அதற்குமேல் வைத்திருக்க முடியாது. அதற்குமேல் அவர்களுக்கும் கொடுக்க முடியாது. மற்றப் பொருள்களைப்போல, இந்த நிலத்தை யாருக்கும் தெரியாமல் பெட்டியிலே வைத்துக்கொள்ள முடியாது. அது மட்டுமல்ல. யார் யார் வாங்கியிருக்கிறார்கள் அவர்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது அவரவர்களுடைய சாதாரம் என்ன என்பதையெல்லாம் எப்போதும் அங்கத்தினர்கள் தெரிந்துகொள்ள முடியும். இங்கேயிருந்து திருவாரூரில், தஞ்சாவூரில் போய்ப் பார்க்கலாம் அதற்குப் பிறகு சொல்லலாம்.

இதிலே உள்நோக்கம் இருப்பதாகச் சொன்னார்கள். அதிலே ஏதாவது உள் நோக்கம் இருப்பதாகப் பார்த்துவிட்டு வந்து சொன்னால், அது உண்மையாக இருந்தால், நான் தலை வணங்குவேன். அந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டு, குற்றம் இருந்தால், நான் தலைவணங்குவேன் என்பதை நான் மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்குச் சொல்லிக்கொள் கிறேன். வேண்டுமானால் அவர்கள் திருவாரூர் சென்று பார்க்கட்டும். கொடுத்தவர்கள் யார் என்று பார்க்கட்டும். அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று பார்க்கட்டும். உள்நோக்கத்துடன் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று சொல்லட்டும். இங்கே சொன்னாலும் சரி—அங்கே சொன்னாலும் சரி, அதை நான் சொல்லக்கூடாது—வேண்டுமானால் இங்கேயே உறுப்பினர் சொல்லட்டும். அங்கத்தினர் மனச்சாட்சி ஏற்றுக்கொண்டால், அதை நான் ஏற்றுக்கொள் கிறேன். இதிலே உள்நோக்கம் எதுவும் இல்லை. இடி இடிக்கட்டும். இடிப் பதுபோல இடிக்கட்டும். சத்தம் கொடுக்கட்டும். மின்னல் வரட்டும். அவர்கள் பார்க்கட்டும். மின்னல் வரட்டும் மறையட்டும். அந்த நோக்கத்திலேதான் சொன்னார்கள். இதை நான் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், ஒரு சட்ட முன்வடிவை நன்கு உணர்ந்து அந்த உணர்ச்சிக்கு ஏற்ப கருத்துக்களைச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசுகின்ற போது, 'ஆன் பாலிசிஸ் அண்டு ஐடியாலஜிஸ்' என்ற அளவில் பேசுவார்கள். என்னுடைய 'பாலிசீஸ், ஐடியாலஜிஸ்' இவைகளை ஏற்றுக்கொள்வது என்பது வேறு. சிலர் சில சில நேரங்களில் 'ஐடியாலஜி' இல்லாமல் வேண்டுமென்றே சொல்வார்கள். உள்நோக்கம் இருக்கிறது என்று சொல்கின்றார்கள். கற்பனை செய்து பேசுவார்கள். ஒரு பெரிய கவிஞர் கற்பனையைப் போல கற்பனை பண்ணி, கவிஞனுடைய கற்பனையையும் மிஞ்சுகின்ற அளவுக்கு கற்பனை பண்ணி சொல்வார்கள். கற்பனையிலே அனுபவம் பெறாத அமைச்சர் எப்படி அதற்குப் பதில் சொல்ல முடியும்? சட்ட முன்வடிவின் மீதுதான் நான் பதில் சொல்ல முடியும். இதிலே தவறு இல்லை. இதிலே எந்த உள்நோக்கமும் இல்லை. யார் யார் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்குக் குறைவாக வைத்திருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் சேரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் ஒன்றைச் சொன் னார்கள். அதை நான் மறந்துவிட்டேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: நான் கொடுக்கப்பட வேண்டிய 39 ஏக்கர் நிலம் பற்றித்தான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இந்தச் சட்ட முன்வடிவை நோக்கம் தனிப்பட்டவர்களிடமிருந்து வாங்கிய நிலம், ரூபாய் 150, ரூபாய் 100 என்று வாங்கிய நிலங்களைத் திருப்பிக் கொடுப்பது பற்றியதாகும்.

(முற்பகல் 11-20)

குத்தகைக்கு எடுத்த நிலங்களைத் திருப்பிக் கொடுக்க முதலிலேயே வழிவகை அளிக்கப்பட்டிருக்கிறது. உரிமை வழங்கப்பட்டுள்ளது. பண்ணை அதைச் செய்துகொண்டிருக்கிறது. அதை இப்போது சட்டமாக்கியிருக்கிறோம். இன்னமும் நாம் தர வேண்டுமென்பதால், 30-6-1982 வரை அந்தச் சட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரியங்கள் முதலிலேயே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்றைக்கு 2,400 ஏக்கரில் 2,366 ஏக்கர் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். நாணயமான முறையில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவைமுன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.
சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

Thiru K. RAMAMOORTHY: Sir, I move the following amendment:—

"*Add* the following at the end of clause 2 (b):

'Provided further that such landowner was not hit by the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act of the State at the time of his having leased out his lands to the Tamil Nadu Sugarcane Farm Corporation Limited'."

Thiru A. R. DAMODARAN: I second it.

*திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய திருத்தம் குறித்து ஏறத்தாழ அமைச்சரவர்கள் பதில் சொல்லிவிட்டார்களென்று நினைக்கிறேன். என்னுடைய திருத்தத்தின் அடிப்படையிலே கூற வேண்டிய கருத்தைக் கூறுகிறேன். இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்து, விளக்கி, பதிலளித்த அமைச்சரவர்கள் இரண்டைத் தெளிவாகச் சொன்னார்கள். அந்த அவையிலே இது குறித்து விவாதம் நடைபெற்றபோது நான் கேட்டேன். பத்திரிகையிலும் படித்தேன். நிலமற்ற ஏழைகளுக்கு ஏராளமான நிலம் போகவிருக்கிறது என்ற எண்ணம் உருவாக்கப்பட்டது. இன்றைக்கு அமைச்சரவர்கள், அப்படி இல்லை, அப்படிச் செய்ய முடியாது, சட்டபூர்வமாகச் செய்ய இயலாது என்று சொல்லியிருக்கிறார்கள். வெளியில் தவறான கருத்து நிலவியதைப் போக்கியதற்காக அமைச்சரவர்களுக்கு நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக அரசில் சிறு விவசாயிகள் என்கின்ற சொல்லின் அர்த்தம் சமயத்திற்கேற்ப, சட்டத்திற்கேற்ப, நிலைமைக்கேற்ப மாறுமென்ற நிலைமையை தமிழக விவசாயிகள் உணர்ந்துகொள்ளலாமென்பதையும், மூலச் சட்டத்திற்கு விரோதமாக எப்போதும் போக முடியாது என்பதையும், நில உச்சவரம்புச் சட்டத்திற்கு உட்பட்டவர்கள் அனைவருமே சிறு விவசாயிகள் என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது. நில உச்சவரம்புச் சட்டம் இனிமேல் இந்த அடிப்படையிலேதான் இருக்கும். கடன் வசூல் சட்டங்கள் எந்த அடிப்படையிலே வந்தாலும், இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும், அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலம் எதையாவது இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே திரும்பத் தருவதென்றால், அது யாருக்குத் தரப்படும் என்பதை அரசாங்கம் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே ஏற்கெனவே நிலம் திரும்பத் தரப்பட்டுவிட்டது. அப்படித் தரப்பட்டவர்கள் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு உள்ளாக வைத்திருப்பவர்களா என்பதை அறிய விரும்புகிறேன். இப்போது கொடுப்பதையும் சேர்த்து 15 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் அவர்களுக்கு இராதென்பதற்கு இந்த அரசு உத்தரவாதம் தருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, திரும்பத் தரப்படுகிற நிலங்களின் விளைவாக அந்தச் சர்க்கரை ஆலைக்கு ஆபத்து இருக்கிறது; போதுமான அளவிற்கு, நிரந்தரமாக கரும்பு கிடைக்க வழிவகை செய்யவில்லை என்பதையும் இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இது நிலச் சீர்திருத்தச் சட்ட

மாக இருந்தாலும், நிலத்தைத் திரும்பத் தருகிற அளவிலே அமைகிறதென்றாலும், அங்கேயுள்ள சர்க்கரை ஆலை நாளடைவில் பாதிக்கப்படும் நிலைமை, மூடப்படும் நிலைமை ஏற்படுமென்ற அச்சத்தைப் போக்க முடியாது. எனவே அதற்காக பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரும்பத் தரப்படும் நிலங்களில் கரும்பு பயிரிட முடியாது. கரும்பு பயிரிட்டு, பயிரிட்டு ஓய்ந்த நிலங்கள் அவை. இனிமேல் அவற்றில் கரும்பு பயிரிட முடியாது. குறிப்பிட்ட ஆண்டுகள் கரும்பு பயிரிட்டால் சில ஆண்டுகள் தரிசாகப் போட வேண்டும், இல்லையென்றால் மாற்றுப் பயிர் செய்ய வேண்டும். எனவே, இது சர்க்கரை ஆலை அமைந்துள்ள இடம் இவற்றையெல்லாம் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டும். திருவாரூர் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். கரும்பு பயிரிட அங்கே வேறு நிலங்களைத் தேட முடியாது. வெளியிலிருந்து கரும்பு கொண்டுவந்தால், வழிச் செலவு அதிகமாகும். இப்படிப்பட்ட நிலையில் இருக்கும் தொழிற்சாலையை மூடும் நிலைமையும், தமிழகத்தில் சர்க்கரை உற்பத்தியைக் குறைக்கும் நிலையும், தொழிலாளர்களுக்கு வேலையில்லாத நிலைமையும் உருவாகுமென்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். சட்டத்தின் அடிப்படையிலே நிலங்களைக் கொடுத்து விட்டார்கள். இருந்தாலும் சர்க்கரை ஆலைக்குப் பாதுகாப்பு தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : திருத்தத்திற்கு பதில் கூறுகிறேன். நிலம் திரும்பக் கொடுக்கும்போது உச்சவரம்புச் சட்டத்திற்கு அதிகம் போகாமல் இருக்குமா என்பதுதான். அது உண்டு என்று ஏற்கெனவே சொல்லிவிட்டேன். அதற்கு பதில் தேவையில்லை. ஆலைக்குப் பாதுகாப்பு கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். சர்க்கரை ஆலைகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்படாது. அவர்கள்தான் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிவிட்டேன்.

திரு. க. இராமமூர்த்தி : சர்க்கரை ஆலைக்காரர்களுக்குப் பாதுகாப்பு கேட்கவில்லை. சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் பிரச்சினை இதில் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அவர்களேதான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மூன்றாவது, எடுத்துக்கொடுக்கப்படுகிற நிலம், யாருக்குக் கொடுக்கப்படுமென்று கேள்வி கேட்கிறார்கள். மூலச் சட்டத்திலே உச்சவரம்பில் எடுக்கும்போது யார் யாருக்கு நிலங்கள் கொடுக்கப்படுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. அரசு எடுக்கும் நிலங்களை யார் யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று விதி தெளிவாக மூலச் சட்டத்திலே இருக்கிறது. எனவே நிலங்கள் கொடுக்கப்பட்டால், எப்படிக் கொடுக்க வேண்டுமென்று விதி முறை இருக்கிறதோ, அதன்படிதான் கொடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தச் சட்டத்தையும் திருத்தமில்லாமல் கொண்டு வரும்போது, அது மூலச் சட்டத்தைப் பாதிக்காது. ஏழு ஏக்கர் என்று திருத்தத்தில் கொண்டு வந்தால், அது மூலச் சட்டத்தையும் பாதிக்கும். மூலச் சட்டத்தைப் பாதிக்கும் அளவிற்கு இந்தச் சட்ட முன்வடிவு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?

THIRU K. RAMAMOORTHY : Sir, I think that the legislation is against a particular person. Hence, I am pressing my amendment.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" *Add* the following at the end of Clause 2(*b*) :

'Provided further that such Landowner was not hit by the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act of the State at the time of his having leased out his lands to the Tamil Nadu Sugarcane Farm Corporation Limited'."

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட

முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1981) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவைமுன் உள்ள பிரச்சினை :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1981) நிறைவேற்றப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 57/1981).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 57/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 57/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "

(முற்பகல் 11-30)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் சட்டமுன்வடிவு எண் 57/1981 மற்றும் 58/1981 ஆகிய இரண்டு சட்ட முன்வடிவுகளின் மீதும் ஒரே பொருள் பற்றியதாக இருப்பதால் பொதுவாகப் பேசலாம். சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றும்போது, தனித்தனியாக நிறைவேற்றலாம்.

@ 216 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

* திரு. க. இராமமூர்த்தி : அவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு பல வேதனைக்குரிய நிலைமைகளை உடையதாக அமைந்திருக்கிறது. 1978 ஆம் ஆண்டிலே சட்டமாக இரண்டு அவையிலும் கொண்டுவரப்பட்டு, விவாதிக்கப்பட்டு நிறைவேறிய பிறகு, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு திருத்தச் சட்டமாக இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. அரசு சில சட்டங்களை அளிக்கின்றபோது, தயாரிக்கின்றபோது அல்லது உருவாக்குகின்றபோது, எந்த அளவிற்கு அலட்சியமாக இருக்கின்றது அல்லது இருக்கின்ற நிலைமைகளை முழுமையாகப் பரிசீலிக்காமல் இருக்கின்றது என்பதற்கு இது ஒரு திருஷ்டாந்தமான உதாரணமாக அமைந்திருக்கிறது. இதைக் கொண்டு வந்ததற்கான காரணங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

"The said section 21 does not empower the Government to grant any exemption retrospectively. Absence of this provision has caused certain administrative difficulties."

இந்தக் குறிப்பின்படி நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட்ட காரணத்தால், சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 1978 ஆம் ஆண்டு இதே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும், இதே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் பொறுப் பேற்றிருந்தபோது தான்; இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. "பரிபூரண பரிசீலனைக்குப் பிறகு தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே திருத்தம் எதுவும் தேவையில்லை, முழுக்க முழுக்க பரிசீலித்தேன்" என்கிற உத்தரவாதத்தை அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்தார்கள். அது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களும் பல்வேறு காரணங்களை அன்றைக்குச் சொன்னோம். அன்றைக்கு இது குறித்து அவசர அவசரமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னதோடு மட்டுமல்லாமல், தான் இதற்கு முன்னால் கொண்டுவரப்பட்ட சட்ட முன்வடிவில் சொன்னேனே, அதுபோல் அதாவது யாரையோ சிலரை மனதிலே வைத்துக்கொண்டு இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்றும் அவர் சொன்னது இன்றைக்கும் எனக்கு நினைவிருக்கிறது. அது பற்றிய விவரத்திற்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால் மூலச் சட்டம் கொண்டுவந்தபோதே நாங்கள் அதிலுள்ள நிலைமைகளைத் தெளிவாக எடுத்துச் சொன்னோம். தனிப்பட்டவர்களுக்காக அரசு இயந்திரத்தைப் பயன் படுத்துவது, அல்லது தனிப்பட்டவர்களுக்காக சட்டமுன்வடிவினைக் கொண்டு

வருவது, அல்லது அரசு அதிகாரத்தைப் பயன்படுத்துவது தவறு. அதை இந்த அரசு வழக்கமாக வைத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொண்டோம். தனிப்பட்டவர்கள் எவ்வளவு வசதி படைத்தவர்களாக இருந்தாலும், அரசாங்கத்தின் முன் அவர்கள் நிற்கவே முடியாது. அரசாங்கம் நினைத்தால் உடனே சட்டம் கொண்டுவர முடியும். அவர்கள் எவ்வளவு தான் வசதி படைத்தவர்களாக இருந்தாலும், அரசாங்கம் தான் சக்தியுள்ளது, அதிகாரம் உள்ளது. அப்படி தனிப்பட்டவர்களை ஒடுக்கும்போது கூட, கொஞ்சம் யோசிக்க வேண்டாமா? மூலச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிஃபிகல்டி (Administrative difficulty) ஏற்பட்டிருக்கிறது. நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தையே முழுமையாக நிறைவேற்ற அரசால் முடியவில்லை என்று சொன்னால், அதுவும் நிறைவேற்றப் பட்ட 2 வருடத்திற்குள்ளாகவே முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை யென்று சொன்னால், வேறு ஒரு அமைச்சராக இருந்திருந்தால் "நீங்கள் ராஜிநாமா செய்யுங்கள்" என்று கேட்டிருப்பேன். (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு, சட்டமன்றத்தால் நிறைவேற்றப் பட்ட ஒரு சட்டம் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை, அரசு இயந்திரத்தில், மெஷினரியில், சட்டத்தில் எங்கோ டிபக்ட், கோளாறு, இங்கே நிற்க மாட்டேன் என்கிறது, வெளியே நிற்க மாட்டேன் என்கிறது, இல்லாவிட்டால் நீதிமன்றம் அடித்துத் தள்ளுகிறது என்கின்ற நிலை இருக்கிறது. இந்த அரசு கொண்டுவருகிற எந்தச் சட்டத்திற்கும் இது தான் கதி. சட்டமன்றப் பேரவையும், மேலவையும் ஒரு சட்டத்தை நிறைவேற்றிய பிறகு, அதிகாரிகளிடம் கொடுத்து சட்டத்தை நிறைவேற்றச் சொன்னால், அந்த அதிகாரிகளே, அந்தத் துறையே சட்டத்தை நிறைவேற்ற முடியாது என்று பதில் தந்தால், சட்டத்தை நிறைவேற்றிய நமக்கு இதைவிட வேறு அவமானம் இருக்க முடியுமா? தம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எங்களிடம் என்ன கோபமோ? எங்களையெல்லாம் இந்த கதிக்கு ஆளாக்கியிருக்கிறார்கள். எங்களுக்கெல்லாம் சங்கடத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் (Retrospective effect) என்றும் சொல்லியிருக்கிறார்கள். 1978 ஆம் ஆண்டிலிருந்து ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. ஆர். தாமோதரன் அவர்கள் விளையாட்டாகவே ஒன்றைச் சொன்னார்கள். 'Minister for Retrospective Effect' என்றழைத்தார்கள். மூன்று வருடத்திற்கு முன்னால் நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கு இப்போது 'ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுப்பதாகச் சொல்லி

யிருக்கிறார்கள். அப்படி என்றால் 10 வருடத்திற்கு முன்னால் அல்லது 20 வருடத்திற்கு முன்னால் நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கும் 'ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுப்பது எப்படி சரியாகும்? முன்னாலேயே யோசித்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். சட்டத்தை நிறைவேற்றிய பிறகு, நான் முன்னால் தப்பு பண்ணிவிட்டேன். ஆகவே அது முதல் திருத்தச் சட்டம் அமுலுக்கு வருகிறது என்று சொல்வது சரியில்லை. இதன் விளைவு என்ன? அரசுக்கு அதிகாரம் இருப்பதால், சட்டம் முதலில் நிறைவேறிய நாளிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வருகிறோம் என்று சொல்லலாம். அந்த நாளிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் திருத்துகிறோம் என்று சொல்லலாம். ஆனால் நிறைவேறிய சட்டத்தின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள விளைவாக, சாதாரண குடிமகன், எடுத்திருக்கின்ற நடவடிக்கையால் எப்படி எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். தவறாகச் செயல்படுகின்ற முறையிலே, பயன்படுத்துகின்ற முறையிலே இந்தச் சட்ட முன்வடிவு அமைந்திருக்கிறது. இந்தச் சட்டத்தை 1978ஆம் ஆண்டிலே நிறைவேற்றிய உடனேயே, இதிலே 'அட்மினிஸ்ட்ரேட்டிவ்' சிக்கல் இருக்கிறது என்று கண்ட உடனேயே இச்சட்டத்தை நிறைவேற்ற முடியாது, சிக்கல் இருக்கிறது என்பதை அவைக்குத் தெரிவித்திருக்க வேண்டாமா? எங்கே இந்த அரசுக்கு சட்டச் சிக்கல் வந்தது என்பதைச் சொல்லியிருக்க வேண்டாமா? யாருடைய நிலத்தை எடுப்பதிலே அல்லது யாருக்கு நிலத்தை விற்பதிலே சிக்கல் அல்லது சங்கடம் வந்தது என்பதைச் சொல்லியிருக்க வேண்டாமா? அரசாங்கத்தால் சிக்கல் ஏற்பட்டதா, அதிகாரிகளால் சிக்கல் ஏற்பட்டதா, நிலத்தை வைத்திருப்பவர்களால் சிக்கல் ஏற்பட்டதா அல்லது இவற்றையெல்லாம் தாண்டி வேறு எங்காவது சிக்கல் ஏற்பட்டதா? காரணம் ஒன்றையும் சரியான முறையில் காட்டாமல் ஏற்கெனவே 1978ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தை அமுல்படுத்த முடியவில்லை. ஆகவே 'ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுத்து இன்னொரு திருத்தச் சட்டமுன்வடிவு கொண்டு வந்திருக்கிறோம், அதை நிறைவேற்றிக் கொடுங்கள் என்று கேட்பது எப்படி சரியாகும்? விவரங்கள் தெளிவாகக் கொடுக்கப்படவில்லை. எதற்காக இது கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற விவரமும் இல்லை. சட்டத்தை நிறைவேற்றுவதில் என்ன சட்டச் சிக்கல் அல்லது கோளாறு என்பது பற்றியும் விளக்கம் இல்லை. யார் மீது இந்த அரசுக் கோபம்? யார் இதை நிறைவேற்ற மறுக்கிறார்கள்? திருத்தம் கொண்டு வரும் அளவுக்கு என்ன நடந்துவிட்டது? யாராவது நீதிமன்றத்திற்குச் சென்றார்களா? அது பற்றி கூட ஒரு தகவலும் இல்லை. ஒரு தகவலையும் தராமல், மூடு மந்திரமாக, 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றிய சட்டத்தை அமுல்படுத்த முடியவில்லை,

ஆகவே மூன்று வருடங்களுக்கு பிறகு இப்போது 'ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுத்து திருத்தச் சட்ட முன்வடிவு கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னால், அது என்ன முறை? 3 ஆண்டுகள் கழித்து இது வந்திருக்கிறது என்றால், 1979ஆம் ஆண்டு சரியாக அமுல்படுத்தப்பட்டுள்ளதா? 1979ஆம் ஆண்டு இந்தச் சிக்கல் ஒன்றும் வரவில்லையா? 1980ஆம் ஆண்டு என்ன ஆயிற்று? அப்போதும் அமுல்படுத்தப்படவில்லையா? அந்த இரண்டு ஆண்டுகளிலும் சட்டச் சிக்கல் வந்ததா இல்லையா? சிக்கல் இருக்கிறது என்று தெரிந்தால் உடனேயே, அப்போதே இது வந்திருக்க வேண்டாமா? மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு திடீரென்று சிக்கல் வர காரணம் என்ன? ஆகவே இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவு ஒரு நியாயமில்லாத, அவசியமில்லாத சட்ட முன்வடிவினுடைய நடைமுறைகளுக்கு, நடைமுறை விதிகளுக்குப் புறம்பான ஒன்று என்ற குற்றச்சாட்டை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த ஒரு காரணத்தையும் சொல்லாமலேயே இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. எந்தத் தகவலையும் விளக்கமாக அவைக்குத் தரவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கோ, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தவிர மற்ற அமைச்சர்களுக்கோ இதைப்பற்றி ஒன்றும் தெரியாத நிலையில் இது இங்கே வந்திருக்கிறது. நிர்வாக இயந்திரம் சட்டமன்றம் இயற்றுகின்ற சட்டங்களை நிறைவேற்றுவதற்கு இயலாத நிலையில் இருக்கிறது. ஏற்கெனவே அரசாங்க நிர்வாக இயந்திரம் சரியாக இயங்கவில்லை என்ற ஒரு கருத்து வெளியிலே இருக்கிறது. அதற்கு ஏற்ற முறையில் என் இதை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்பதற்கு தெளிவாக, விளக்கமாக, அறிவிப்பு இல்லாத ஒன்று இது என்பதுடன் தேவையற்ற ஒன்று, அவசியமற்ற ஒன்று என்பதையும் தெரிவித்து அமைகிறேன்.

(முற்பகல் 11-40)

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு உண்மையிலேயே ஒரு அதிக அதிகாரத்தை, எல்லையற்ற, ஒரு வரம்பு மீறிய அதிகாரத்தை அரசு காரணம் காட்டாமல், இந்த மன்றத்திலிருந்து பெற கொண்டுவரப்பட்டதாகத்தான் நான் கருதுகிறேன். 1978லே நகர்ப்புற நிலங்களுக்கு உச்சவரம்பு விதித்து அந்தச் சட்டத்தில் அத்தியாயம் 3-லே விளக்கம் கொடுத்து, உச்சவரம்புக்கு இலக்கணம் கொடுத்து, இவ்வளவுக்கு மேல் இருக்கக்கூடிய நிலங்கள் உச்சவரம்பு நிலங்களாகக் கருதப்படும் என்று சொல்லி, அத்தியாயம் 3, பிரிவு 21-லே எவை எவைகளுக்கு விதிவிலக்கு கொடுக்கப்படும் என்று சொல்லி, அதற்குப் பிறகு இருக்கக்கூடிய நிலங்கள் உச்சவரம்பு நிலங்களாகக் கருதப்பட்டு அந்தச் சட்டத்தின் கீழ் பராமரிக்கப்

படும் என்று சொல்லப்பட்டது. அப்போது எங்களுக்கு ஏற்பட்ட அச்சங்களைச் சொன்னோம். இத்தகைய சட்ட முன்வடிவுகளை ஆய்வுக் குழுவுக்கு அனுப்பி நிறைவேற்றவேண்டுமே தவிர, திடீரென்று அவசரமாக அவையின் மூலம் ஒரு சட்ட முன்வடிவை, சட்ட மன்றத்திலேயிருக்கும் விதிகளுக்கு மாறாகக் கொண்டு வந்து, அந்தச் சட்ட முன்வடிவினுடையத் தேவையைச் சொல்லி, இந்த அரசு ஏதோ நன்மை செய்ய கொண்டுவந்த சட்ட முன்வடிவை நாங்கள் தடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கும் போக்கு நல்லதல்ல. 21-வது பிரிவிலே விதிவிலக்கு பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விதிவிலக்கைக் கொஞ்சம் முந்தி கொடுக்க அதிகாரம் கேட்கிறார்கள். முன் தேதியிலிருந்து கொடுக்க அதிகாரம் கேட்கிறார்கள். ஆகவே யாரையோ காப்பாற்ற வேண்டும் அல்லது யாருக்கோ சலுகை தரவேண்டும் என்று இப்படி இந்த அரசு போனால், இது இந்த நாட்டுக்கு என்ன நன்மை பயக்கும் என்று கேட்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தச் சட்டத்தினுடைய தேவையைச் சொல்லுகிறபோது 'நிர்வாகச்சிக்கல்' என்று சொல்கிறார்கள். அந்தச் சிக்கல் என்னவென்று சொன்னால் தானே அதை எப்படித் தீர்க்க முடியும் என்று சொல்ல முடியும்? இந்தச் சட்டத்தை அமுல்படுத்தும்போது, நில உச்சவரம்பு அல்லது நகர்ப்புற நிலங்களுக்கு உச்சவரம்பு என்றால் எந்தெந்த இடங்களிலே இவ்வளவு நிலங்கள் உச்சவரம்பாக இருக்கின்றன என்று 'டிக்ளேயர்' பண்ணி, இத்தனை பேர்களுக்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டும், அதில் நிர்வாகச் சிக்கல் இவ்வளவு வந்திருக்கிறது, அதைத் தவிர்க்க வேண்டும் என்று ஒரு 'டீட்டெய்ல்ட் எக்ஸ்பிளனேட்டரி நோட்', ஒரு விளக்கமான அறிக்கை வைக்கப்பட்டு அது பரிசீலனை செய்யப்பட்ட பிறகு நான் இதற்கு அனுமதி அளிப்பது நீதியாகவும், நேர்மையாகவும் இருக்கும் என்று சொல்லி, அதிக அதிகாரத்தை முறை தவறி கேட்கும் ஒரு சட்ட முன்வடிவை எதிர்த்து, அப்படி கேட்பது தவறு என்று சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், அதிகாரத்தைத் தவறாக இந்த அரசு பயன்படுத்திவிடுமோ என்ற அச்சத்தின் அடிப்படையிலே நான் இன்றைக்குப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். முதலிலே அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரத்தை இன்றைக்குத் தவறாக பயன்படுத்தக்கூடாது என்று எச்சரிக்கை செய்தார்களேயொழிய அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டாம் என்று அவர்கள் சொல்லவில்லை. ஆனால், நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத்

தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பயன்படுத்தும்போது எப்படி சந்தேகம் வந்தது? என்றைக்குச் சட்டம் வந்ததோ அன்றைக்கு இருந்தே இக்கட்டான நிலையில் இருப்பவர்கள் 'எங்களுக்கு விதிவிலக்கு தரவேண்டும்' என்று மனு போட்டார்கள். அப்படி கேட்கிறபோது, அதில் ஒன்றிரண்டைத்தான் நாங்கள் கவனிக்கிறோம். அது பொது நன்மையைப் பொறுத்தவரை, எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி யோசிக்கிறோம். அப்படி யோசித்து அதை நடைமுறைப்படுத்துவதிலே இருக்கும் சிக்கலைத் தெளிவாகச் சொன்னால், என் கையிலே பேனா இருக்கிறது, பேப்பர் இருக்கிறது—பேனா கொடுத்திருக்கிற சட்டம், விதிவிலக்கு கொடுத்திருக்கிற பேப்பர்—ஆனால் எழுதப்போகிறபோது அதிலே 'இங்க்' இல்லை. அந்த 'இங்க்' தான் இப்போது போடப்படுகிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்போதுமே, உவமையை வெளியிலேயிருந்து சொல்லி, எப்படி சிக்கல் வருகிறது என்று சொல்கிறார். இப்படி உச்சவரம்புக்கு உரியவர் இன்னார், உச்சவரம்பு என்று அறிவித்தோம், அவர் பெட்டிஷன் கொடுத்திருக்கிறார், அதில் இன்ன இன்ன சிக்கல்கள் இருக்கின்றன என்று சொல்வார் என்று நினைத்தேன். ஆனால், எப்போதும் சொல்வதுபோல, சட்டத்திற்கு வெளியே போய் உவமை சொல்கிறார். அதுவும் பயன்படவில்லை என்று சொல்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நாங்கள் நிறைவேற்றிக்கொடுத்த சட்டத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'அது இங்க் இல்லாத பேனா' என்று சொன்னால் அது 'கண்டம்ட் ஆஃப் தி ஹவுஸ்'

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உவமையை உவமையாகத் தான் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, அதை வேறுவிதமாகக் கருதுவது தவறு. உவமானமாகச் சொல்லும்போது தவறு இருந்தால்தான் தவறு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : முதலில் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது 'இங்க்' இருந்தது. இப்போது இரண்டாண்டு காலம் ஆகிவிட்டபோது, அந்தப் பேனாவிலே இருந்த 'இங்க்' தீர்ந்துபோய் விட்டது. பேனா என்று சொன்னாலே மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். (பலத்த சிரிப்பு) அடிக்கடி இங்க் போட வேண்டும். அடிக்கடி இங்க் போடாவிட்டால் பேனா எழுதாது. பொதுநோக்கு, பொது நன்மை, பப்ளிக் இன்டரஸ்ட் எங்கேயாவது பாதிக்கப்படுமானால், அது குறித்து நாம் தக்க நடவடிக்கை

எடுக்க வேண்டும். யாராக இருந்தாலும் தேவைப்பட்டால் தரவேண்டும். இது மருத்துவமனை, இதற்குக் கொடுக்க வேண்டும். அது தொழிற்சாலை என்றால் அதற்கும் கொடுக்க வேண்டும். அப்படி, என்னென்ன காரணங்கள் என்று இருக்கின்றன. ஆகவே, அப்படி பப்ளிக் இன்டரஸ்ட் ஆக இருக்க வேண்டும். 'ஹார்ட்ஷிப்' இருக்கிறது என்று சொன்னால், அவைகள் என்னவென்று தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், இந்தச் சட்டம் கொண்டு வந்தபோது இதிலே நாம் விளக்கமாகப் பேசினோம். முன்பு இதைக் கொண்டு வரும்போது நான் பேசாவிட்டாலும், இதிலே வேறொரு அமைச்சர் அவர்கள் பேசியிருந்தாலும், அவர் இந்த அரசினுடைய சார்பாகத்தான் பேசியிருப்பார். நான் அப்போது பேசவில்லை என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். பேசியவர் அரசின் சார்பாகத்தான் பேசியிருப்பார், ஆகவே அதற்கு நானும் பொறுப்பு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 3—8—1976-லே கொண்டு வந்தபோது பல பேர் தங்களுக்குக் கஷ்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். இதிலே பப்ளிக் இன்டரஸ்ட் இருந்தால், பப்ளிக் இன்டரஸ்ட் என்று சொன்னால் அங்கே ஹாஸ்பிட்டல் இருக்கலாம், நூற்பாலைகள் இருக்கலாம். அப்படி சங்கடம் வரும்போது மனுக்கள் கொடுக்கிறார்கள். அந்த விண்ணப்பங்களைப் பரிசீலித்து, ஆய்வு செய்து முடிவெடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. இன்றைக்கு முதல் தான் அமுலுக்கு வரும் என்று சட்டம் போட்டால் அது இன்றிலிருந்துதான் பொருந்தும். ஆனால், 3—8—1976-லேயே விண்ணப்பம் போட்டிருப்பார்கள். அன்றைக்கு இருந்த சங்கடங்களைப் போக்க வேண்டும், அவர்களுக்கு இருக்கும் இடையூறுகள் சங்கடங்கள் எல்லாம் போக்கப்பட வேண்டும். ஏற்கெனவே இருக்கும் சட்டத்தின் கீழ் முடிவு எடுக்கலாம் என்றால், பிரிவு 21, ஏ—பி—சி—லே முடிவு எடுக்கும் போது அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க முடியாமல் போய் விடுகிறது. 3—8—1976-லே சட்டம் வந்த பிறகு அன்றைக்கு, மறுநாளோ அல்லது ஒன்றிரண்டு மாதங்கள் கழிந்தோ மனு கொடுத்திருந்தால், அன்றைக்கு இருக்கும் சங்கடங்களை அந்தச் சட்டத்தின் மூலம் போக்க முடியாது என்ற காரணத்தால்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். 3—8—1976-ல் கொடுக்க வேண்டும் என்றால், அந்தச் சட்டத்தில் இடமில்லை. ஆகவே, அதைச் செய்யத்தான் இந்தச் சட்டம் பயன்படுமேயொழிய வேறல்ல. பப்ளிக் இன்ட்ரஸ்ட்லேதான் கொடுக்க வேண்டும். சிலருக்கு ½ கிரவுண்ட், சிலருக்கு 1 கிரவுண்ட் என்று கொடுக்க வேண்டுமென்றால், அவர்களுக்குக் கூட கொடுக்க முடியவில்லை. அவைகளைச் செய்வதற்குத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். 'பப்ளிக் இன்டரஸ்ட்' என்னும்

(முற்பகல் 11-50)

போது இதில் தொழிற்சாலைகள் வருகின்றன, நூற்பாலைகள் வருகின்றன, மற்ற சிறு தொழிற்சாலைகளும் வருகின்றன. இவ்வாறு சிலருக்குக் கஷ்டங்கள், ஹார்ட்ஷிப் வரும்போது மட்டுமே இந்த விதிமுறைகள் பயன்படுத்தப் படும் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை ஏற்க வேண்டும் என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 57/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment :

" In clause 2 (ii), *delete* the words ' or retrospectively '

திரு. சோ. அழகேசன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவின் மீதான கருத்துக்களைச் சொல்லும்போது, ஒரு விளக்கத்தைத் தர தவறி யிருக்கிறார்கள். இந்தச் சட்ட முன்வடிவு என்னென்ன காரணங்களுக்காகக் கொண்டு வரப்பட்டது என்று கேட்டபோது, சட்டத்தில் கொடுக்கப்பட்ட விதிவிலக்குகளை அமல்படுத்தும்போது ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்க்கவே 'ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுக்கும் இந்தத் திருத்தம் தேவைப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். அதைச் சொல்லும்போது, நகைச்சுவையோடு பேனாவைத் திரண்டு வருடத்திற்கு ஒரு முறை இந்தத் தேவைப்படுகிறது என்று

[திரு. க. இராமமூர்த்தி] [1981 ஆகஸ்ட் 27

குறிப்பிட்டார்கள். பேனாவுக்கு அடிக்கடி ரீஃபில் தேவைப்படலாம். ஆனால் சட்டத்தைக்கூட இப்படி இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை திருத்துவது என்று ஆரம்பித்துவிட்டால், இனி சட்டங்கள் சட்டங்களாகவே இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இத்தகைய 'ரீட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுக்க வேண்டும் என்று இந்த அரசாங்கத்திற்கு எப்போது தோன்றியது என்பதை தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். இந்தச் சட்டம் 1976 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. பிறகு மீண்டும் 1978 ஆம் ஆண்டில் திருத்தப் பட்டது. அதற்குப் பிறகு ஓராண்டு காலத்தில் ரீட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்காததால் எந்தச் சிக்கலும் ஏற்படவேயில்லையா? அதுவரை இந்த அரசாங்கத்தால் எந்த மனுவும் விதிவிலக்குக் கோரி பரிசீலிக்கப் படவில்லையா? அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகளுக்கு அரசாங்கத்தில் எந்த மனுக்களும் பெறப்பட்டு பரிசீலிக்கப்படவில்லையா? அப்போதெல்லாம் இந்தத் துறை என்ன செய்து கொண்டிருந்தது? நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் விதிவிலக்குகள் அளிக்க அந்தக் காலத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இப்போது மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தான் அரசாங்கத்தின் கவனத்திற்கு இது வந்தது என்றால், இதுகாறும் இதை நடைமுறைப்படுத்துவதில் இந்தத் துறையைச் சார்ந்தவர்கள் மெத்தனம் காட்டினார்களா? அல்லது 'ரீட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுத்தால்தான் இந்த விதிவிலக்குச் சலுகை முழுமை பெறக்கூடும் என்று உணர்த்தக்கூடிய வலிமை பெற்றவர்கள் யாராவது இப்போதுதான் வந்தார்களா? அப்படி யானால் அவர் யார்? அது யாருடைய மனு? விதிவிலக்குக் கொடுக்க வேண்டிய நிலம் அரை செண்டாக இருக்கட்டும் அல்லது அரை ஏக்கராக இருக்கட்டும். நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. எங்கள் ஊரில் உள்ள அரை ஏக்கர் நிலத்திற்கும் இங்குள்ள அரை செண்ட் நிலத்திற்கும் உள்ள வித்தியாசத்தை நாங்கள் நன்கு உணருவோம்.

இப்போது மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, 'ரீட்ராஸ்பெக்ட்டிவ் எபெக்ட்' கொடுக்க வேண்டும் என்ற அவசியம் வருகிறது என்றால், அதற்குக் காரணம் என்ன? வேறு சட்டம் என்றால்கூட என்னால் புரிந்து கொள்ள முடியும். நகர்ப்புற உச்ச வரம்புச் சட்டம் என்பது அன்றாடம் பயன்படுத்தப்படுகிற சட்டமாகும். ஆனால் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு மூன்று ஆண்டு களுக்குப் பிறகு இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவை முன் வந்து இதற்கு 'ரீட்ராஸ்பெக்ட்டிவ் எபெக்ட்' கொடுக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லுகிறார் என்றால், இதற்கு இப்போது என்ன அவசியம்

1981 ஆகஸ்ட் 27]

ஏற்பட்டது என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். மூன்று ஆண்டு காலமாக எந்தவிதமான சிக்கலும் இல்லாமல் நடைபெற்றிருக்குமானால், இப்போது மட்டும் எப்படி ஒரு புதிய சிக்கல் வந்தது? இல்லை, மூன்று வருஷத்திற்கு முன்பே இந்தச் சிக்கல் வந்தது என்றால், அரசாங்கம் இவ்வளவு மெத்தனமாக இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்குத் தான் காரணம் என்ன? எனவேதான் சொல்லுகிறேன், இந்தச் சட்டத் திருத்தத்திற்கான முழுமையான காரணங்கள் இந்த அவைக்குத் தெளிவாக்கப் படவில்லை. ஆகவே இந்தச் சூழ்நிலையில் இந்த 'ரீட்ராஸ்பெக்ட்டிவ் எபெக்ட்' கொடுப்பது சரியில்லை என்பதைக் கூற விரும்புகிறேன். மூலச் சட்டத்தைப் பயன்படுத்த இப்போது கேட்கப்படும் 'ரீட்ராஸ்பெக்ட்டிவ் எபெக்ட்' ஒரு வலிமையான, பலமான ஆயுதமாக மாறிவிடும் என்ற காரணத்தால், நான் என்னுடைய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். என்னுடைய திருத்தம் இந்தச் சட்ட முன்வடிவுக்கே ஒரு பாதுகாப்புக் கொடுக்கிற திருத்தமாக அமைந்திருக்கிற காரணத்தால், இதை ஏற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பொறுத்த வரையில், எங்கேயும் தவறு நடக்காமல் இருக்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருப்பவராதலால், என்னுடைய திருத்தத்தை அவர் ஏற்பார் எனநம்புவதோடு, அவர் அதை ஏற்க வேண்டும் என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்பு பேசியதற்கும், இப்போது திருத்தத்தின்மீது பேசியதற்கும் வித்தியாசம் ஏதுமில்லை. ஒன்றையேதான் இரண்டுமுறை பேசியிருக்கிறார். இதற்கெல்லாம் நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். இப்போது மீண்டும் அதே பதிலைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

முந்தைய சட்ட முன்வடிவுமீது பேசும்போது கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'தனிப்பட்டவர்களைக் கண்டு நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள் அவர்களுக்காக ஏன் சட்டத் திருத்தம் கொண்டு வந்து கஷ்டப்படுகிறீர்கள்?' என்று வேகமாகக் கேட்டார். அவர் ஆரூரான் மில்லை மனதிலே கொண்டு 'தனிப்பட்டவர்கள்' என்று பேசினார். தனிப்பட்டவர் களுக்கு நன்மை செய்யவா அல்லது கெடுதல் செய்யவா இந்தச் சட்ட முன்வடிவு என்றெல்லாம் கேட்டார்கள். அதுமட்டுமல்ல, மற்ற அமைச்சர் களுக்குத் தெரியாமல் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறேன் என்றும் குறிப்பிட்டார்கள். நான் இந்தத் துறைக்கு அமைச்சராக இல்லாத போது கொண்டு வரப்பட்ட சட்ட முன்வடிவைக்கூட நான் ஏற்று சம்மதம் கொடுத்திருக்கிறேன் என்பதை நான் ஏற்கெனவே விளக்கியிருக்கிறேன்.

ஆகவே இந்தச் சட்ட முன்வடிவு எந்த அமைச்சருக்கும் தெரியாமல் கொண்டு வரப்படவில்லை. எல்லா அமைச்சர்களுக்கும் தெரிந்துதான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவை எந்த அமைச்சர் வேண்டுமானாலும் முன்மொழியலாம், வாதிடலாம், பதில் சொல்லலாம் என்று விதியிருக்கிறது. எனவே எல்லோருக்கும் தெரிந்து இந்தச் சட்ட முன்வடிவை ஏகமனதாகத்தான் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொல்லி, திருத்தத்தைக் கைவிட வேண்டும் என்று சொல்லி அமைகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தை நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" In clause 2 (ii), delete the words ' or retrospectively ' "

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 57/1981) நிறைவேற்றப் பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 57/1981) நிறைவேற்றப் பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப் படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 58/1981).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 58/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

' சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 58/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 58/1981) நிறைவேற்றப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 58/1981) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

@ 217ஆம் பக்கத்தில் இணைப்புVஆக அச்சிடப்பட்டுள்ளது.

7. 1981-82 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த முதல் விவர அறிக்கையின் மீது விவாதம்.

(நண்பகல் 12-00)

* திரு. க. அருணாசலம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடு, 155 கோடி ரூபாய் அதிகமாகச் செலவு செய்யப்படுவதற்காக, இந்த மேலவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமாகக் குறிப்பிடப் பட்டிருப்பது தன்னிறைவுத் திட்டத்தைப்பற்றி. இதுவரையில் 69 ஒன்றியங் களில் தன்னிறைவுத் திட்டம் நடந்து வந்தது. மேலும் இவ்வாண்டு 150 வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டத்தை நடத்த ஏற்பாடு செய்திருக் கிறார்கள். தன்னிறைவுக்காகச் செய்ய வேண்டியவைகள் உணவு, உடை, குடியிருப்பு ஆகிய மூன்றும்தான் என்று பெரியவர்கள் கருதினார்கள். நாடு முழுவதற்கும் இத்தகைய தன்னிறைவை உண்டாக்க வேண்டும் என்றும், அப்போதுதான் சுதந்திரம் நிலைபெறும் என்றும் நினைத்தார்கள்.

முக்கியமாக சுத்தமான குடிதண்ணீர் அனைவருக்கும் கிடைத்தாக வேண்டுமென்று சுதந்திரம் வந்த நாளிலிருந்து நாம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இருப்பினும் அனைவருக்கும் சுத்தமான தண்ணீர் கொடுக்க நம்மால் இயலவில்லை. பெண்கள் பல மைல் தொலைவு சென்று தண்ணீர் எடுக்க வேண்டியிருக்கிறது. அதற்காக நம்முடைய அரசு முதலில் சில ஒன்றியங்களில் முயற்சி செய்து பார்த்து அதை மேலும் 150 வட்டாரங் களுக்கு விஸ்தரித்திருக்கிறது. கூடிய விரைவில் 335 வட்டாரங்களிலும் இதை விஸ்தரிக்க வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன். அப்படி விஸ்தரிக்கப்படுகிறபோது, குடிநீர் திட்டத்தோடு வேறு சில புதிய திட்டங் களையும், அதாவது புதிதாக வேலை வாய்ப்பு அளிக்கிற திட்டங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். மகாராஷ்டிரா மாநிலத்தில் 'எம்ப்ளாய் மெண்ட் கேரண்டி ஆக்ட்' என்று ஒரு சட்டத்தைப் போட்டு வேலை வாய்ப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக இப்போது தேசிய அளவில் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் இந்த ஆண்டு முதல் அமுலாகிறது. இதற்கு நம்முடைய அரசும் தன்னுடைய பங்கைக் கொடுக்க வேண்டிய நிலை எற்படுகிறது. இதற்கு முன்னால் முழு நிதியையும் மத்திய அரசே கொடுத்து வந்தது. அப்போது நாம் தயக்கம் காட்டினோம். ஆகவே இன்றைக்குப் பின் தங்கியிருக்கிறோம். மற்ற மாநிலங்களில் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே அமுல்படுத்தியதால், மத்திய அரசின் அதிகமான நிதியைப் பெற்றிருக்கிறார்கள். இப்போதுதான் நம்முடைய

அரசு அதில் பங்கு கொண்டு விஸ்தரிக்க நினைக்கிறது. இத்திட்டத்தை எந்தெந்த மாவட்டங்களில் தன்னிறைவுத் திட்டம் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் அமுலாக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

இப்போது வறட்சித் துயர் தணிப்புப் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இதையொட்டி வேலை வாய்ப்புத் திட்டங்களை அமுல் நடத்த வேண்டும். வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது, சாலைகளைப் போடுவது போன்ற பணிகளைச் செய்வது என்பதாகாது. ரோடுகளைப் போடுவதன் மூலமாகக் கொடுக்கப்படும் வேலை 'எம்ப்ளாய்மெண்ட் ஆப்பர்ட்சூனிட்டி' என்றாகாது. ஒரு 'ரெலீஃப்' தான் அது. அதைத்தான் நாம் இப்போது செய்து கொண்டிருக்கிறோம். ரோடுகளைப் போடுவது, குளங்களைத் தோண்டுவது, என்று மட்டுமில்லாமல் நிரந்தரமான வேலை வாய்ப்பைத் தர புதிய தொழில்களை ஆரம்பிக்க ஊக்கம் கொடுக்க வேண்டும். எல்லோருக்கும் 'சோஷியல் செக்யூரிட்டி' கிடைக்கும் என்ற நிலைமை வர வேண்டும். ரோடு போடுகிற வேலை என்பது மிகவும் சுலபமான வேலை இந்த ஆண்டு ஏதோ மண்ணையும் கல்லையும் அள்ளிப் போட்டுவிட்டால், அதற்கடுத்த ஆண்டு அது மழையில் அடித்துக் கொண்டு போகிறது. பிறகு மீண்டும் அதே வேலையைச் செய்கிறார்கள். இந்த வேலையில் காண்ட்ராக் டர்களை வேறு புகுத்தி விடுகிறார்கள். இப்படி காண்ட்ராக்ட் எடுத்து வேலை முடிக்கிற திட்டத்திற்கு வேலை வாய்ப்புத் திட்டம் என்று சொல்லி அதற்குக் கொஞ்சம் பணமும், கொஞ்சம் அரிசியும் கொடுக்கிறார்கள். அப்படி இல்லாமல் ஊரில் இருப்பவர்களுக்கு 'பெர்மனென்ட் அசட்ஸ்' உண்டாக்க வேறு பல திட்டங்களைப் போட வேண்டும். ரோடும் ஒரு அசட்தான் இருந்தாலும் அது ஒரு இன்ஃப்ராஸ்ட்ரக்சர் மட்டுமே.

வறண்ட பிரதேசங்களில் மழைக் காலத்தில் வரும் தண்ணீர் ஓடி வீணா கிறது. அதை குளம், குட்டைகளில் தேக்கி வைப்பது நல்லது என்று தேக்கி வைக்கிறார்கள். ஆனால் குளம், குட்டைகள், சிறப்பாகக் கசிவு நீர் குட்டைகள் பற்றி பாசனத் துறை கவலைப்படுவதில்லை. ஆகவே இந்த வேலை வாய்ப்புத் திட்டத்தைப் பயன்படுத்தி அப்படிப்பட்ட சிறுசிறு கசிவு நீர் குட்டைகளைப் பராமரிக்கும் பணிகளைச் செய்ய வேண்டும். இப்படிப் பட்ட திட்டங்கள் போடுகிறபோது, இடையிலே காண்ட்ராக்டர்கள் வருகிறார்கள். அவர்களுக்குப் பதிலாக ஆங்காங்கே உள்ள இளைஞர் சங்கங்கள், மாதர் சங்கங்கள் போன்றவைகளை ஈடுபடுத்தி அவர்களுக்கு வேலை கொடுத்தால் அதனால் பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் வேலை

[திரு. க. அருணாசலம்] [1981 ஆகஸ்ட் 27

வாய்ப்புக் கொடுக்க முடியும். பல இளைஞர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுப்பதன் மூலம் ஒரு தன்னிறைவை உண்டாக்க முடியும். இந்தப் பணிகளைச் செய்வதன் மூலம் அவர்களுக்கும், தம்முடைய வட்டாரத்திற்கு வேண்டிய மக்களுக்கு உதவி செய்து சாப்பாடு போடுகிறோம் என்ற பெருமையும் உண்டாகும். அவர்களுக்கும் தன்னிறைவை உண்டாக்கும், அவர்கள் சுதந்திரமாக வாழவும் வழி வகுக்கும். அப்படி இல்லாமல் எல்லாம் அரசு ஊழியர்களாலும், காண்ட்ராக்டர்களாலும் செய்யப்படுகிற நிலைமை வருகிறபோது, மக்களிடம் போதிய விழிப்புணர்ச்சி வளர்வதில்லை, தான் ஒரு குடிமகன், தனக்கும் சில கடமைகள் இருக்கின்றன என்ற உணர்வும் வருவதில்லை. உரிமைகளைத் தேடுவதற்காகத் தான் சங்கங்கள் வைக்கிறார்கள். அது ஓரளவிற்கு வேண்டியது தான். ஆனாலும் பொது மக்கள் தாங்களும் இந்த நாட்டின் குடிமக்கள், தங்களுக்கும் கடமைகள் இருக்கின்றன என்று உணரக் கூடிய அளவிற்கும், தான் மட்டும் வாழ்ந்தால் போதாது, அண்டையில் உள்ள மக்களும் வாழ வேண்டுமென்ற சேவை உணர்ச்சி பரவக் கூடிய அளவிற்கும் மக்களை ஊக்குவிக்க வேண்டும்.

அரசாங்கத்தில் ஒரு திட்டம் போட்டால், அதற்குத் தேவையான தொகையில் பாதி அளவு தொகை நிர்வாக ஊழியர்களுக்குச் சம்பளமாக அளிக்க ஒதுக்கப்படுகிறது. நிர்வாக ஊழியர்கள் இருக்க வேண்டியது அவசியம் தான். இருந்தாலும் அளவுக்கு அதிகமாக இருக்கக்கூடாது. இப்போது ஒவ்வொரு வட்டாரத்திலும் அளவுக்கு அதிகமான ஊழியர்கள் இருக்கிறார்கள். பல பேருக்கு வேலை இல்லையென்று சொல்லுகிறார்கள். கம்யூனிட்டி டெவலப்மென்ட் திட்டம் போட்டபோது, ஏராளமான வேலையிருந்தது. பொது மக்களுக்குக் கல்வி ஊட்ட வேண்டியிருந்தது. கூட்டுறவு அமைக்க வேண்டியிருந்தது. இப்படிப்பட்ட வேலைகளுக்காக சோஷியல் எஜுகேஷன் எக்ஸ்டென்ஷன் ஆபீசர் என்றும், கோவாப்பரேடிவ் எக்ஸ்டென்ஷன் ஆபீசர் என்றும், இண்டஸ்ட்ரியல் எக்ஸ்டென்ஷன் ஆபீசர் என்றும் பல ஆபீசர்களைப் போட்டார்கள். அது மட்டுமல்லாமல் அக்ரிகல்சர் துறையில் இரண்டு, மூன்று எக்ஸ்டென்ஷன் ஆபீசர்களைப் போட்டிருந்தார்கள். ஆனால் இவர்களுக்கெல்லாம் இப்போது வேலை இல்லை. இந்த வேலைகளையெல்லாம் தொலைபேசி மூலமும், ஒலி பரப்பு மூலமும், டி.வி. மூலமும் செய்யலாம். கிராம சேவக்குகள் எல்லாம் தங்களுக்கு வேலையில்லை என்று சொல்லிக்கொண்டு அலுவலகத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் புதிய வேலை செய்யச் சொல்லலாம்.

1981 ஆகஸ்ட் 27] [திரு. க. அருணாசலம்]

பொதுவாக அதிகமான ஊழியர்களைப் போட்டதால், இப்போது அவர்கள் வேலை இல்லாமல் சும்மா இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் துணை மதிப்பீட்டில் 155 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டியது அவசியம் என்று கருதினாலும், செலவழிக்கிறபோது ஜாக்கிரதையாக இல்லாமல் இருந்தால் வீண் செலவாகும். வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ளவர்களை உயர்த்த இந்தத் தொகையைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டு இந்த முதல் துணை மதிப்பீட்டை வரவேற்று அமைகிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. க. மீனாட்சிசுந்தரம் தலைமை)

* THIRU G. VASANTHA PAI: Honourable Vice-Chairman, in this Demands for Grants and Supplementary Budget the Hon. the Minister for Finance has referred to schemes for water-supply and works other than water-supply, with provision of Rs. 30 crores and Rs. 59 crores respectively. Sir, I have a suggestion to make to the Hon. Minister for consideration.

We have been putting up multi-storeyed tenements for slum dwellers and it is common knowledge that these slum dwellers and the fisherfolk let out these tenements to others and would still like to live in their own huts on the sea-side or near the river-side or in places where they were having their own huts or slum dwellings. I have a suggestion to make to the Hon. the Chief Minister and his colleagues for their consideration. Why not the Government build those huts themselves in a better way with clay and mortar and some bricks with thatched roof and give them good sanitation and water-supply? This would cost much less for the Government but make those dwellings habitable and clean.

(பிற்பகல் 12-10)

Sir, it has been a very pitiable experience for me during my recent travels abroad, when I found periodic references in Television to the so-called — I say so-called — Indian poverty and highlighting the instances of persons defecating in public and projecting their photographs with commentaries in T.V. in places like Australia and Newzealand and also publishing such news items and articles in papers illustrating them with photographs.

I was very much distressed by this and in defence I drew a parallel in western countries also. But nevertheless we see to our utter dismay the conditions of latrines, dry latrines and the lack of water-supply in the tenements which should engage the immediate attention of the Government. Proper sanitation and water facilities

should be provided in those places where the slum dwellers reside. I would request the Government to take it on a priority basis and see that water facilities and sanitation are provided and also see that water is supplied continuously to these persons who are occupying these tenements. Sanitary latrines should be provided with proper flushout arrangements and they must also be taught how to use them in a proper way through social education and social work undertaken by social service organisations. This is the suggestion that I am making.

Another aspect I found in the Supplementary Demands is about Social Welfare Scheme and Social Welfare and Welfare of Schedule Tribes and Castes. Sir, recently we have had a spate of conversions of Harijans to the Islamic community. I was very sorry to learn from the Hon. the Chief Minister, in his Vellore Maidan speech, reported in papers on 16th August 1981 that there had been mass conversions in Meenakshipuram and other places but there was visible behind them a foreign hand. I would have liked the Hon. the Chief Minister to take us into confidence and tell us which foreign hand is responsible for the mass conversions in this country, and why these conversions are taking place in the case of Scheduled Castes for whom the Government are doing so much, at least on paper. It is found on paper that so much money is being spent for Scheduled Castes. Then, why should these people get themselves converted to another religion?

What is the bait that has been offered to them and which foreign power is behind these conversions? I would have liked the Hon. the Chief Minister to tell us something about this at the beginning of this Session of the House. But, Sir, I found probably an explanation in the Vellore Maidan speech of the Chief Minister wherein he took the public into confidence and said that there was a foreign hand behind these conversions. In this connection, I would like to disclose to you and this House something which I had experience of in 1975-76. At that time, I used to go to Bombay almost every alternate week and I used to leave Madras on Friday and come back on Monday. During those trips, I found some college-girls travelling with me in the same plane. I was a bit surprised to find that, somehow, during every trip the girls were almost identical with those who travelled on a previous occasion. At Bombay, I changed my hotel from one five-star to another five-star because of lack of accommodation in the former. In one

of the hotels, when I went to the barbeene on the fifth floor, I found to my utter surprise these college girls arm-in-arm with some Arab Sheiks. I was very much distressed when I saw it and I wrote a letter to the Government of India telling them what all it was coming to. Later, when I met some of these girls while returning from Bombay in the plane, I asked them about it. They said, "Sir, we are being paid quite a fabulous sum for giving them call-girls' service". Those were college-girls from Tamil Nadu belonging to several sections of the population. Sir, it was most distressing for me to think of it. Is it the hand of these people that is again available now for these mass conversions? I can tell you that the women-folk who have been converted and who have, till now, not even worn asy 'purdah' may be misused for nefarious activities by these foreign agencies through local helpers. I would like the Government to take serious action in this matter and to stop this sort of conversions for nefarious activities that are being carried on, with the help of local personnel, by foreign persons occupying whole floor in the 5 star hotels.

THIRU J. M. MIAKHAN : Will the hon. Member clarify what he means by nefarious purposes?

THIRU G. VASANTHA PAI : These persons have not been converted to one religion because of their love for that religion. They have been converted by baits thrown to them. They have been converted by neo-Muslims. It has come to light that neo-Muslims have made the conversions and not *bona fide* Muslims. I tell the hon. Member that they have not been converted for religious purposes. They have been converted for purposes other than religious.

THIRU J. M. MIAKHAN : Does the hon. Member have any proof regarding this?

THIRU G. VASANTHA PAI : It was made clear by the Chief Minister.

THIRU J. M. MIAKHAN : Just because some people say so, how can it be true?

THIRU G. VASANTHA PAI : The Chief Minister has made it clear and I am also saying the same thing. Has the hon. Member Thiru Miakhan got proof that they have been converted *bona fide* for religious purposes? Will he give us proof of that? If he is

holding a brief for them, let him come out with his statement. Let him tell us how many people were converted, who asked them to convert, what sort of religious training was given to those people, what sort of lectures in Koran they attended, what sort of preparation they had had before they were converted. If the Hon. Member places before us these details, I shall be very happy.

THIRU J. M. MIAKHAN: If the Chair would permit me, I will say a few words regarding this matter.

மாற்றுத் தலைவர் (திரு. க. மீனாட்சிசுந்தரம்): மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது இதைப்பற்றிக் குறிப்பிடலாம்.

THIRU G. VASANTHA PAI: Sir, I repeat that these conversions, on a mass scale, of people belonging to the Scheduled Castes who have been given a favourable treatment in our Constitution and of Harijans who have been looked upon with favourable consideration by the Governments both at the Centre and in the States, into one particular religion, is politically as well as foreign motivated.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

The Hon. the Chief Minister has come out with a statement. I wish he comes out with such a statement in this House also. We would like to have a full-dress discussion on this. I am sure the hon. Member who is alongside with me will try to convince us about their *bona fides*. If they are *bona fide*, we will certainly accept and we will also congratulate them on their mass effort in such conversions. But, if foreign money is there and if some outside agency is behind these conversions, it must be stopped at any cost. I would request the Government to come out with a truthful statement on this subject for the elucidation and edification of this House. Thank you, Sir, for the opportunity given to me.

* திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒரு சில விஷயங்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்திலே தமிழ் நாடு அரசு ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருந்தது. அரசாங்கத்தினுடைய சாதனைகளாக அவைகள் வெளியிடப்பட்டிருந்தன. எல்லாத் துறைகளின் சாதனைகளையும் பார்த்தேன். சாதிக்கப்பட்டவை

களாகவே இருந்தன. ஆனால் கல்வித் துறை சாதித்ததாகச் சொல்லப்பட்ட பட்டியலிலே, ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டுள்ளது என்ற சாதனை, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது என்று இந்த கல்வித் துறையில் நிறைவேற்றப் பட்டிருப்பதாக சாதனைப்பட்டியலிலே சேர்த்திருக்கக்கூடிய நிலைமை, கல்வித் துறையிலே, தமிழக அரசாங்கத்தினுடைய விளம்பரத்திலே வெளியிடப் பட்டிருக்கிறது. அது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

(பிற்பகல் 12-20)

சாதித்து முடித்ததைத்தான் சாதனை என்று படித்திருக்கிறேன். சாதிக்காத ஒன்றை சாதனைப் பட்டியலில் வெளியிடப்பட்டிருக்கிற தென்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அது தவறு. அது தவறில்லை என்றால், அதைச் சாதித்த விஷயம் யாருக்கும் தெரியாமல் எப்படி நடந்தது என்பதைச் சொல்ல வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்துப் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இந்த நேரத்தில் என்னுடைய வேண்டுகோள் எல்லாம், சாதனைப் பட்டியலில் வந்துள்ள விஷயத்தை விரைவாக நிறைவேற்றுங்கள் என்பதுதான். சாதிக்காமலேயே சாதனைப் பட்டியலில் போட்டது சரியா, தவறா என்பதற்குள் கூட நுழையவில்லை. அதை உடனே செய்து நிறைவேற்றுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களுக்குத் தனியாக வீட்டு வசதி வாரியம் அமைக்க வேண்டுமென்றும், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்க உத்தரவிட வேண்டுமென்றும் முதன்முதலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மருத்துவப்படி இதுவரை வழங்கப்படவில்லை. அறிஞர் அண்ணா அவர்களே சொல்லியிருக்கக்கூடிய விஷயம் அது. ஏற்றுக்கொண் டிருக்கக்கூடிய விஷயம். டாக்டர் அவர்கள் அந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதை வழங்க வேண்டுமென்று நீண்ட கால மாகக் கேட்கிறோம். இன்றைக்குக்கூட தனியார் பள்ளி ஆசிரியர்கள் மெடிகல் ரீஇம்பர்ஸ்மென்ட் சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். தனியார் பள்ளி ஆசிரியர்கள் என்ன பாவம் செய்தார்கள்? தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மெடிகல் ரீஇம்பர்ஸ்மென்ட் சலுகை தரவில்லை என்பதை தலைவரவர்கள் மூலமாக இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, உடனடியாக அதை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. முத்துசாமி] [1981 ஆகஸ்ட் 27

அடுத்து, ஆந்திர மாநிலத்திலே 1—4—1978 முதல் இளநிலை ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் 400 ரூபாய் அடிப்படைச் சம்பளம் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு 450 ரூபாய் என்றும், பட்டதாரி ஆசிரியர்களுக்கு 525 ரூபாய் என்றும், உயர்நிலைப் பட்டம் பெற்றுள்ள மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு 700 ரூபாய் என்றும் 1—4—1978 முதல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. விலைவாசிப் புள்ளி 300 என்று 1—4—1978 அன்று நிர்ணயிக்கப்பட்டு, அந்தச் சம்பள விகிதங்கள் அமல் படுத்தப்பட்டிருக்கின்றன. ஆந்திர மாநிலம், இங்கேயிருந்து பிரிந்து சென்ற மாநிலம். மதுவிலக்கால் அந்த மாநிலத்திற்கு அதிக வருமானம் வருகிறதென்று சொல்லப்பட்டது. ஆனால் இப்போது தமிழ்நாட்டிலும் 200 கோடி ரூபாய்க்கு மேலே வருமானம் பெருகியுள்ளது. எனவே தமிழ்நாட்டிலும் அதுமாதிரி சம்பள விகிதத்தை ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போதிருக்கும் சம்பள விகிதங்களை மாற்றியமைக்க அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலை நாட்கள் அடிப்படையிலே ஈட்டிய விடுப்பு இருக்க வேண்டுமென்று கோருகிறோம். அமைச்சரவர்கள் சமீபத்தில்கூட, அது பரிசீலிக்கப்படு மென்று அறிவித்தார்கள். அது குறித்து உடனடியாக அறிவிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆரம்பப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தனி ஊதிய விகிதம் வேண்டும். கல்லூரி முதல்வர்களுக்கு தனி ஊதிய விகிதம் இருக்கிறது. உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தனி ஊதிய விகிதம் இருக்கிறது. மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தனி ஊதிய விகிதம் இருக்கிறது. நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தனி ஊதிய விகிதம் இருக்கிறது. ஆனால் ஆரம்பப் பள்ளித் தலைமை ஆசிரியருக்கு 40 ஆசிரியர்களுக்குத் தலைமை ஆசிரியராக இருந்தாலும், தனி ஊதிய விகிதம் இல்லை. இப்போது பணம் அரசுக்கு நிறைய வருகிறது. இதுவரை அதைச் செய்யவில்லை என்றாலும், இனியாவது அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பி.டி. தலைமை ஆசிரியர்கட்குச் சிறப்பூதியம் தர வேண்டும்.

அடுத்தபடியாக, கர்நாடக மாநிலத்திலே 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை லீவ் டிராவல் கன்செஷன் குடும்பத்தோடு செல்ல வழங்கப்படுகிறது. 600 ரூபாய் சம்பளத்திற்கு உட்பட்டவர்களுக்கு இரண்டாம் வகுப்பில் செல்லுவ தற்கும், 600-க்கு மேல் சம்பளம் உள்ளவர்கள் முதல் வகுப்பில் ரயிலில் செல்லவும் எல்லா ஊழியர்களுக்கும் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை சலுகை தரப் படுகிறது. இந்திய எல்லைக்குட்பட்டு எவ்வளவு தூரம் வேண்டுமானாலும்

1981 ஆகஸ்ட் 27] [திரு. செ. முத்துசாமி]

அவர்கள் பயணம் செய்யலாம். கர்நாடக அரசு செய்துள்ளது போன்று தமிழக அரசும் செய்ய வேண்டும். அந்த மாநிலத்திற்கு எந்த விதத்திலும் குறையாமல் நம்முடைய வருமானம் இருக்கும்போது, அதைச் செய்யவில்லை. தமிழ் நாட்டில் இப்போது அளிக்கப்பட்டிருக்கும் தமிழகத்திற்குள் ஒரு பயணத்திற்கான சலுகை சரியானதல்ல. கர்நாடக அரசு வழங்கியுள்ளது போல் இங்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 20 ஆண்டுக்காலம் பணி புரிந்தவர்களுக்குச் சிறப்பு நிலை அளிக்கப்பட்டிருக்கிறது. இளநிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் ஊதியத்தில் பணியாற்றுகிறவர்களுக்குச் சிறப்பு நிலை வழங்கப்பட்டிருக்கிறது. பள்ளிகளிலே பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள், தலைமை ஆசிரியர்களுக்கு ஏன் இந்தச் சலுகையை வழங்கவில்லை ? கல்வித் துறையிலே ஆய்வு செய்து, முடிவுகளை அறிவிக்கிறார்கள். அப்படி ஆய்வு செய்து 2, 3 பிரிவினருக்கு மாத்திரம் வழங்குவது என்ன நியாயம் ? கல்வித் துறையில் சரியான பார்வையில்லை. ஆசிரியர்கள் இது குறித்து குமுறி, கடிதம் எழுதியிருக்கிறார்கள். தலைமை ஆசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். எனவே பட்டதாரி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் ஆகியோருக்கு 20 ஆண்டு பணிக்குச் சிறப்பு நிலை வழங்க வேண்டும். அப்படி அவர்களுக்குச் சிறப்பு நிலை வழங்கும்போது, ஒரு இன்க்ரிமென்ட் கொடுக்க வேண்டும். ஆனால் இப்போது, சலுகைகள் வழங்குவது போல் இருக்க வேண்டும். ஆனால் காசு போகக்கூடாது என்ற மனப்பான்மைதான் இருக்கிறது. செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு 1—6—1981-ல் 10 ரூபாய் கொடுத்தால் 1—10—1981-ல் ஊதிய உயர்வு வழங்கும்போது, அந்தப் பத்து ரூபாயை ஊதிய உயர்வில் சரி செய்து கொள்ளுவார்கள். வழங்குவது போலவும் இருக்க வேண்டும், ஆனால் பணம் போகக்கூடாது. தமிழ் நாட்டு நிதித் துறையைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் இப்படிக் கஞ்சத்தனமாகச் செய்யவில்லை என்பதைத் தெரிவித்து, இதில் நிதித் துறை நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன், நீண்ட காலம் கல்வி அமைச்சராக இருந்த நாவலர் அவர்கள் நிதி அமைச்சராக இப்போது இருக்கிறார்கள். அவர்கள் இதில் நிதி வழங்காமல் இருப்பது கொஞ்சமும் சரியல்ல என்பதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே தேர்வு நிலை, சிறப்பு நிலை பெறுபவர்களுக்கு ஒரு ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இடைநிலை ஆசிரியர் பணியிடத்தில் பணியாற்றும் பி.டி. தமிழாசிரியர்கள் இருக்கிறார்கள். ஆந்திராவில் ஒரு முடிவு செய்தார்கள். செகண்டரி கிரேடில் பணியாற்றும் பி.டி. ஆசிரியர்களுக்கு பி.டி. ஆசிரியர்

[திரு. செ. முத்துசாமி] [1981 ஆகஸ்ட் 27

சம்பளம் கொடுத்து விட்டார்கள். தமிழ் நாட்டில் வருமானம் அதிகமாக இருக்கும் இந்தக் கால கட்டத்தில், பட்டதாரி ஆசிரியர்களும், தமிழாசிரியர்களும் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர் பணியிடத்தை அப்கிரடேஷன் செய்து, பட்டதாரி ஆசிரியர் சம்பளத்தை அவர்களுக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு மாநிலம் அதைச் செய்திருக்கிறதென்பதையும் இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இரண்டாண்டுக் காலம் பயிற்சி பெற்றவர்களுக்கு ஒரு ஊதிய உயர்வு தந்திருக்கிறார்கள். இளநிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்களுக்கு ஒரு ஊதிய உயர்வு தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்கியதற்காக நான் நன்றி தெரிவிக்கிறேன். இளநிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் மட்டும் பயிற்சி பெறவில்லை. மற்ற ஆசிரியர்களும் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். கல்வித் துறையில் ஹையர் கிரேட் ஆசிரியர்கள், செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் மட்டும் தான் பணியாற்றுகிறார்களா? எஸ்.எஸ்.எல்.சி.-க்குப் பிறகு 3 ஆண்டுகள் பயிற்சி பெற்றுள்ள ஹையர் கிரேட் உடற்பயிற்சி ஆசிரியர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எஸ்.எஸ்.எல்.சி.-க்குப் பிறகு பயிற்சி பெற்ற ஓவியர், தொழிலாசிரியர், உடற் பயிற்சி ஆசிரியர் ஆகியோருக்கும் ஓர் ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும். அவர்களுக்கு இல்லையென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே இடைநிலை ஆசிரியர், இளநிலை ஆசிரியர் ஊதியம் பெறும் மற்ற ஆசிரியர்களுக்கும் ஒரு இன்கிரிமென்ட் வழங்க வேண்டும். ஒரு தலைப் பட்சமாக நடக்கக்கூடாது. அது யாரால் நடந்தது என்று நான் குற்றம் சொல்ல விரும்பவில்லை. அந்த ஊதிய உயர்வை எல்லோருக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்குவதில் 43 லட்சம் ரூபாய் செலவு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது பதவிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று அறிய முடிந்தது. அவர்களை அரசு ஊழியர்களாக மாற்றுவதை வரவேற்கிறேன். அதற்காகச் சட்டம் பிறப்பித்திருக்கிறார்களே, அந்தச் சட்ட நகலை உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டாமா? அது நாளை மாலையத்தில் வருகிறது. அது வைக்கப்படவில்லை. வைக்கப்பட வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கியதற்குப் பின்னால் எ.ஈ.ஓ. நியமித்திருக்கிறார்கள்.

1981 ஆகஸ்ட் 27]

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. செ. முத்துசாமி : இப்படி சீர்திருத்தம் செய்யும்போது சட்டரீதியாக பஞ்சாயத்து யூனியன் ஆணையர்களுக்கு இருந்த அதிகாரத்தை உதவிக் கல்வி அலுவலர்களுக்குக் கொடுக்கவில்லை. இப்படி இருந்தால், யாராவது கோர்ட்டுக்குச் சென்றால், நிலைமை என்னவாகும்? மேலும் உதவிக் கல்வி அலுவலர்களாக எந்த நிர்வாக அனுபவமும் இல்லாதவர்களைப் போடுகிறார்கள். பயிற்சி வேண்டாமா? ஆகவே அந்தப் பதவிக்கு தலைமையாசிரியர்களைப் பார்த்துப் போட வேண்டும். அல்லது அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும். கல்வித் துறை இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கல்வித் துறையை எடுத்துக் கொண்டால், கல்லூரிகளிலுள்ள ஆசிரியர்கள் அமைதியில்லாமல் இருக்கிறார்கள். கோவையிலே பெரிய பெரிய கல்லூரிகள் இருக்கின்றன. அங்கு இராமகிருஷ்ணா வித்தியாலயா இருக்கிறது. இராமகிருஷ்ண பரமஹம்சர் பற்றி உலகம் பூராவும் தெரியும். உத்தமர். அங்கே பணியாற்றிக் கொண்டிருந்த முருகன் என்கிற ஆசிரியர் பல்கலைக் கழகச் சங்கத்திலே சேர்ந்தார். அவர் சங்கத்திலே விறு விறுப்பாகப் பணியாற்றுகிறார் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக காமர்ஸ் பிரிவையே ரத்து செய்து விட்டார்கள். அதை 'சரண்டர்' செய்து விட்டார்கள். அதுபோல் ஹோம் சயன்ஸ் கல்லூரியை ராஜம் தேவதாஸ் என்பவர் நிர்வகித்து வருகிறார். அங்கும் போராட்டம். அதுபோல் பி.எஸ்.ஜி. கல்லூரியில் ஆசிரியர்களுக்குப் பிரச்சினை. கொங்கு நாடு கலைக் கல்லூரியில் வேலையில் நியமிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டும் இன்னும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. டாக்டர் பட்டம் பெற்ற சிவகாமி சுந்தரி போன்ற ஆசிரியைகள் எல்லாம் இன்றைக்கு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சமுதாயம் எப்படி இருக்கிறது என்பதை அவையினர் அறிய வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். அதோடு நீதித் துறையிலுள்ள நிர்வாகக் கோளாறு எந்த அளவிற்கு இருக்கிறது என்பதையும் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டார்கள். டாக்டர் பட்டம் பெற்றவர்கள் உட்பட கைது செய்யப்பட்டார்கள். அவர்களுடைய வாழ்க்கை வசதிக்கு எற்றபடி சிறையில் இடம் கொடுக்காமல் 'சி' வகுப்பில் இடம் கொடுத்து அடைத்திருக்கிறார்கள். வழக்கு விசாரணைக்கு வந்தபோது நடைபெற்ற ஒன்று, உண்மையிலேயே நடந்த உண்மையை சொல்கிறேன். *

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, the conduct of a Judge is being questioned. It is not correct.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : நீதிபதியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட வார்த்தையை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நீதிபதியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட வார்த்தையை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : நீதிபதி பற்றி நான் குறிப்பிட்ட வார்த்தையை எடுத்துவிடுவதில் எனக்கு ஆட்சேபணையில்லை. அவையின் கவனத்திற்கு நான் அதைக் குறிப்பிட்டேன். நியாயம் கிடைக்கும் என்று நினைக்கிறேன். நீதிபதி பற்றிச் சொன்னேன். ஆனால் குறிப்பாக ஜனநாயகத்தில் நடக்கின்ற அக்கிரமங்களை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நோக்கம் கற்பிக்கவில்லை. நடந்த உண்மை சம்பவத்தை அப்படியே சொன்னேன். ஆசிரியர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு பதில் அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினை இதுவரை தீர்க்கப்படவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : பத்து நிமிடங்களுக்கு பதில் 15 நிமிடங்கள் பேசிவிட்டார்கள்.

திரு. செ. முத்துசாமி : அவர்களுடைய பிரச்சினையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தலையிட்டு முடிவு காண வேண்டும். அங்கே கல்லூரிகள் எல்லாம் மூடப்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தலையிட்டு பேச்சுவார்த்தை நடத்தி முடிவுக்கு வர வேண்டுமென்று பணிவன்புடன் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மலிவு விலையில் போலீசாருக்கு உணவுப் பொருட்கள் கொடுக்கிறார்கள். உணவுப் பொருட்களின் விலை ஏறியிருப்பதால், ஆசிரியர்களுக்கும் மலிவு விலையில் உணவுப் பொருட்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்ப நலம் என்ற அடிப்படையில் ஓய்வு பெறும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் 10 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும். இன்றைக்குக் காலையில் கூட அதுபற்றிய பிரச்சினையை அவையில் நாம் பார்த்தோம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதுகுறித்து சீர்திருத்தம் செய்யப்படும் என்றார்கள். ஏற்கெனவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமையில் குழு ஒன்று அமைத்திருக்கிறோம். அந்தக் குழு விரைவில்,

ஓய்வு பெற்றால் 10 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்ற திட்டத்தைப் பரிந்துரைக்க வேண்டும். அதுபற்றிய அறிவிப்பை விரைந்து அரசு இந்த கூட்டத் தொடரிலேயே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : விரைந்து உறுப்பினர் முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

திரு. செ. முத்துசாமி : ஆரம்பக் கல்விக்கு தனியாக ஒரு இயக்குநர் தேவை. கல்வித் துறை ஒரு பெரிய அமைப்பாக வளர்ந்து விட்ட நிலையில்கூட ஹையர் செக்கன்டரி, பிரைமரி கல்வி எல்லாவற்றுக்கும் ஓரே ஒரு இயக்குநர் இருக்கிற நிலை இருக்கிறது. எவ்வளவு கெட்டிக்காரராக வரக்கூடிய இயக்குநர் இருந்தாலும் கூட, இருக்கின்ற பணிச் சுமையால் அவரால் எல்லாவற்றையும் சரியாகக் கவனிக்க முடியாது. இது ஏற்கெனவே நிரூபிக்கப்பட்டுவிட்ட ஒன்று. ஆகவே ஆரம்பக் கல்விக்கென்று தனியாக ஒரு இயக்குநர் நியமிக்கப்பட வேண்டும். அதோடு கூட இன்றைக்கு ஒரு லட்சம் பேரை அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கிறோம். அவர்களுக்காகவாவது இதை அரசு அவசியம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்)

ஆரம்பக் கல்விக்கு என்று தனியாக ஒரு இயக்குநரை நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மணி அடிப்பதற்கும் பொருள் உண்டு என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஒப்புக்கொள்ள வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : அடுத்து, மேற்கு வங்கத்தில் காளி பூஜை அல்லது துர்கா பூஜை விழாக் காலத்திலும், கேரளாவில் ஓணம் விழாக் காலத்திலும் அரசு ஊழியர்களுக்கு போனசாக 150 ரூபாய் வழங்குகிறார்கள். அந்த இரண்டு மாநிலங்களுடனும் நம்முடைய மாநிலமும் உறவு முறை கொண்ட மாநிலம். ஆகவே நம்முடைய மாநிலத்திலும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் போனஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அந்த மாநிலங்களில் எல்லாம் ஆரம்பப் பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் இலவசமாகப் புத்தகங்கள் தரப்படுகின்றன. இங்கே கூட மீனாட்சிபுரம் சம்பவம் பற்றிப் பேசப்பட்டது. அந்த மாநிலங்களில் அரிசன மாணவர்களுக்கும், மலைவாழ் மாணவர்களுக்கும் இப்போது ஹையர் செக்கண்டரி கல்வி வரையில் இலவசமாக உடை வழங்கப்படுகிறது. அதோடு மட்டுமல்லாமல் 40 சதவிகிதம் பெண் மாணவிகளுக்குக் கூட இலவசமாக உடை வழங்கப்படுகிறது. அதோடு கூட ஸ்காலர்ஷிப் போன்ற சலுகைகள் அல்லாமல் மேற்கு வங்கத்தில் அரிசன மாணவர்களுக்கு 20 ரூபாயும், கேரளாவில் 25 ரூபாயும் ' பாக்கெட் மணி ' ஆகத் தரப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

8. மேலவை விதி 82-ன்படி அமைச்சரின் விளக்க உரை.

விவசாயத்திற்கும் தொழிற்சாலைகளுக்கும் மின்சக்தி வழங்குவதில் உள்ள கட்டுப்பாடு நீக்கம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற மேலவை விதி 82-ன்கீழ் அவைக்கு ஓர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்பொழுது கிராமப்புறங்களில் விவசாய மின் இணைப்புகளுக்குப் பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் முறை வைத்து மின்சக்தி தரப்படுகிறது. அதேபோல் உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு மின்சக்தி வழங்குவதில் நெரிசல் நேர தடைகள் 'பீக் அவர்ஸ் ரெஸ்ட்ரிக்சன்ஸ்' அமுலில் உள்ளன.

மின் உற்பத்தியில் ஒரு சீரான நிலைமை இப்பொழுது ஏற்பட்டுள்ளதால், மேற்கூறிய கட்டுப்பாடுகள் அனைத்தும் 1981 செப்டம்பர் திங்கள் முதல் நாளிலிருந்து அறவே நீக்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (கரவொலி) இதன் மூலம் விவசாயத்திற்கும் தொழிற்சாலைகளுக்கும் 24 மணி நேரமும் மின்சக்தி எவ்விதத் தடையுமின்றி வழங்கப்படும். மீண்டும் இவ்வாண்டு நவம்பர் திங்கள் இறுதியில் கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டிய அவசியம் பற்றி முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முதல் துணை விவர அறிக்கை மீதான விவாதம் இன்று பிற்பகலிலும் தொடரும். இன்றைய முற்பகல் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் பிற்பகல் 4-00 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 12-38)

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 4-00)

அவை மீண்டும் கூடியது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

7. 1981-82 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த முதல் விவர அறிக்கையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

Thiru J. M. MIAKHAN: Mr. Deputy Chairman, I thank you for the opportunity to speak on the Supplementary Budget. I feel it is necessary that we should have more funds to implement the schemes that have been enunciated by the Government. I am glad

to note that they are going to spend about Rs. 18 crores for drinking water-supply and about Rs. 26 crores for employment generating works. As a matter of fact, utilising this opportunity, I request the Government to bestow some attention in providing drinking water to every village. There may be very big schemes to bring water from Palar river and other rivers, but there are also schemes by which we can utilise the water available locally in streams and ponds for the benefit of the people of that area. For example, in Pallavaram Municipality there is a very good tank which can yield adequate supply of water. It could be used for providing water-supply at least to one-fourth of the population in the entire Municipality of Pallavaram. At least it could be used for providing water-supply to people in places where poor people live, like Shanti Nagar and Malanganathapuram. I have represented about this to the Collector of Chengalpattu and he has also approved of my sugestion. But somehow or other, I will do not find any more activity in that direction. Such schemes will really give relief to the poor.

They say something about employment generating works. I do not exactly understand what they mean by that. Whether it means the starting of new ventures or giving some loans to start industries, I do not know. But they can at least make some of the katcha roads into pucca roads. There are very many roads which can only be called tracks and during rainy season they become slushy and no vehicle can pass through those roads and those places become inaccessible. Those roads may be improved and made pucca roads. Such works will give relief to the poor. The bunding of canals can be taken up to give relief to the people.

While speaking on this, one hon. Member mentioned something which, of course, does not pertain to the Supplementary Grant. He brought in Meenakshipuram into this discussion and I have to say something about it because he had given some information that was not wholly correct. As a matter of fact, the Muslim community has nothing to do with it. But a few people think that the Islam religion is better than theirs and they want to get themselves converted as Muslims. We have to welcome them but we do not give any inducement to them and we have no intention of giving inducement at all, since we have got our own problems and burdens and we do not want any more burdens. As a matter of fact, I am fully aware of the fact that in the matter of conversions in Meenakshipuram and other places in Ramanathapuram and Tirunelveli

[Thiru J. M. Manickam] [1981 ஆகஸ்ட் 27

districts, no foreign funds have come. If the Hon. the Chief Minister could prove what he has stated, why should it just be stated, "It is learnt that some foreign hand is at the back of this"? Why do they not name the foreign power and say from whom the funds have come and to whom they have gone? Why do they not take such people into custody and take action? If any nefarious activities have been going on, we will certainly co-operate with the Government in any action that is taken. Our State is having connections with many foreign countries. For example, a silver chariot has been manufactured in our State and is being sent to a Temple in Malaysia. Some idols also are being sent to Singapore and other foreign countries. Such things create goodwill and are actually welcome. Similarly, if a particular Muslim country desires to give some funds for a particular purpose like the construction of a Mosque, a Madarasa or a school, it is also equally good. I do not think we can have any objection if the funds come openly with the approval of the Government. But, if it comes from any country, let it be Arab country or any other country, to induce people to change their religion, that is definitely wrong and is against the Constitution. If such a thing happens, action should be taken against the people who indulge in such nefarious activities. If that is the case, why do not the Government take immediate action? Why should they cover up something and say in a round-about way that "It is learnt", etc? Why do not they say, "Such and such a person has done this"? Even if they have a doubt that a particular person has done that, they can take that person into custody and put him on trial so that he may vindicate himself. But, if vague statements are issued, it creates a wrong impression. The innocent people will think that the Muslims somehow collect crores of rupees and disburse them to the people who get converted or build houses for them. Such an impression will create ill-will and will lead to violence and several other things. Hence, it is not a healthy tradition. Now, the Hon. the Chief Minister has said in a public meeting that he is aware that a foreign hand is at the back of these conversions. It is definitely not so. As a matter of fact, I would like him to ponder over some facts. We, Muslims, constitute only 5 per cent of the State's population. We are only about 30 lakhs of people. Even if 3,000 persons get converted, it is not going to change the position of the Muslims and the Muslims are not going to get any political advantage. As a matter of fact, from out of the 234 Assembly Constituencies, only a very few Muslims have been returned to the Assembly. When

1981 ஆகஸ்ட் 27] [Thiru J. M. Manickam]

we are so small in number, how could we aspire to increase the number of M.L.A.'s or to capture the Government? Of course, some of us have come to the Legislature with the goodwill of people belonging to other communities. We always want to foster goodwill and we always want to have good relationship with people belonging to other communities. We give our votes to them and, in one or two Constituencies, they give their votes to us. That is how we get some representation in the Legislature. We are not at all trying to make this country a Muslim country. To make a propaganda that we are trying to do so is all trash. Such propaganda should be completely put down because it will create ill-feeling between the Hindus and the Muslims. As far as South India is concerned and especially as far as Tamil Nadu is concerned, Hindus and Muslims are living like brothers. There is no problem at all so far as Tamil Nadu is concerned. India is supporting fully the Arab cause in Israel and other places. The Arab countries are very affluent and they are having plenty of petro-dollars. Hitherto, they have been investing their money in America and European countries. Now, they want to invest their money in under-developed countries. They expect a modest

(பிற்பகல் 4-10)

return for their investment. As a matter of fact, I learn that one section of Arab group are willing to start industries in India if the Government of India give them permission. They say that we need not raise any loan for such purposes and they will give the amount we need, for a small return of 5 or 6 per cent. If foreign capital is coming to us on easy terms, it will be good for the country.

(The Deputy Chairman sounded the gong.)

Sir, I will finish in one or two minutes.

If such amounts come through proper channel, it is good. If it is coming for some ulterior purpose, definitely it should be stopped or nipped in the bud. It should be done at all costs and we will support the action of the Government in that respect. I am afraid that some people who are jealous of the unity between Hindus and Muslims and especially among the Indian people have started this kind of mischievous propaganda and it is only their handi work. Whether they are Indians or visitors, I do not know. It may be that the Harijans have some grievances. As far as the Harijans are concerned, we will be only too glad to treat them as equals. As a matter of fact, we consider all human beings as

equals and even the Muslims and non-Muslims are treated by us as equals. If the Hindus, especially caste Hindus, feel like that, it will be good. All of them are not having any ill-will against them. But there is harassment of Harijans in some places ; they are not given rights, they are not allowed to sit and eat in hotels, they are not permitted to go into the hotels, they cannot wear footwear in some places and all these things are there. All those things should be put down with a firm hand. If they are made to realise that there is no harassment and they are the brethren of other Hindus, we will be only too glad and there is no necessity for them to embrace Islam.

(The Deputy Chairman sounded the gong). Sir, one minute more. We have not given any inducement for this purpose. Though the Harijans may have economic prosperity, they feel that they are not given equality and they come to our religion. As far as Meenakshipuram is concerned, even one year back they wanted to come to our fold and we asked them to wait for some time. After waiting for more than one year, they have voluntarily come to us, without any inducements. If it can be proved that we have given any inducements for them to change their religious. I am prepared to take any punishment that is given by the Government of Tamil Nadu. I can assure the Government of Tamil Nadu that there is good relationship between Hindus and Muslims and if such irresponsible statements are made by persons in responsible positions, it will create ill-feelings among them, leading to acts of violence and damage to property. Therefore. I request the Government of Tamil Nadu to bestow some attention on this. I thank you for the opportunity given to me to speak on this occasion.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்ட 1981-82 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீட்டை வழிமொழிந்து பேசுகிற வகையில் ஒரு சில கருத்துக்களை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களையெல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கி யிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து ஆசிரியர்களின் சங்கங்கள், குறிப்பாகத் தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மன்றமும், தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியும் போராட்டம் நடத்தின. அதற்குப் பிறகு பல்வேறு அரசாணைகள் பிறப்பிக்கப் பட்டன. இவ்வாறு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் போராட்டத்திற்குப் பிறகு

வெளியிடப்படும் அரசாணைகள் மூலம் தரப்படும் சலுகைகள் அவர்களோடு ஒத்த நிலையில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் பொருந்தக்கூடிய வகையில் வெளியிட்டால்தான், ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அரசு அவர்களிடையே பாகுபாடு காட்டவில்லை என்ற உணர்வு ஏற்படும். ஆனால் தற்போது வெளியிடப்படும் சலுகைகள் இந்த வகையில் அமைவதில்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாண்டுக் காலம் ஆசிரியர்கள் பயிற்சி பெற்றதைக் கருத்தில் கொண்டு, இளநிலை மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கு ஓர் ஊதிய உயர்வு தரப்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் அதே நிலையில் உள்ள சிறப்பாசிரியர்கள், மூன்று ஆண்டுகள் பயிற்சி பெற்ற உடற் பயிற்சி ஆசிரியர்கள், ஓவிய ஆசிரியர்கள், நான்காண்டுகள் பயிற்சி பெற்ற தமிழா சிரியர்கள், உழவியல் ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் ஆகியவர்களுக்கு இந்த ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை. இரண்டாண்டுகள் பயிற்சி பெற்றதற்கே ஒரு ஊதிய உயர்வு என்றால், அதற்கு மேல் அதிகமான காலத் திற்குப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு இன்னும் அதிகமான ஊதிய உயர்வைத் தர வேண்டும், அதில் கொஞ்சம் குறைவாகப் பெற்றவர்களுக்குப் பாதியாவது தர வேண்டும். ஆனால் இவ்வாறு அனைத்து ஆசிரியர்களுக்கும் தராமல் ஒரு நிலையில் உள்ள ஆசிரியர்களுக்கு மட்டும் ஊதிய உயர்வு அளிப்பதென்பது ஆசிரியர்களிடையே பாரபட்சம் காட்டுவதாக இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்த நிலை போக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்பு நிலை தரப்பட்டதில்கூட பாரபட்சம் காட்டுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. 1—6—1981 முதல் இளநிலை இடைநிலை ஆசிரியர் களுக்கு இந்தச் சிறப்பு நிலை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் இந்தச் சிறப்பு நிலை வழங்கப்படவில்லை. எனவே இதை அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை அளிக்கும்போது, தேசிய நல நிதியிலிருந்து அதற்குரிய தொகையை 'ரீயிம்பர்ஸ்மெண்ட்' பெற்றுக்கொள்ளலாம் என்று ஆணையிடப் பட்டிருக்கிறது. ஆசிரியர்களான நாங்கள் கேட்டதும், பேச்சுவார்த்தையின் போது அரசுத் தரப்பில் ஒப்புக்கொண்டதும் என்னவென்றால், தொடக்கப் பள்ளி ஆசிரியர்களிலிருந்து அனைத்துப் பள்ளி ஆசிரியர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் உட்பட அனைத்துப் பள்ளி ஆசிரியர் களுக்கும் இந்தச் சலுகை வழங்கப்படும் என்பதாகும். ஆனால் இப்போது வெளியிடப்பட்டுள்ள அரசாணையில் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இந்தச் சலுகை இல்லை என்று சொல்லப்பட் டிருப்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1981 ஆகஸ்ட் 27

தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் போராடுகிறார்கள். அதற்குப் பிறகு சில சலுகைகளை அரசு அளிக்கிறது என்றால், அதே நிலையில் உள்ள மற்றவர்களுக்கும் இந்தச் சலுகையை அளிக்காமல் பாரபட்சம் காட்டுவதன் காரணமாக, சலுகை கிடைக்காத ஆசிரியர்களைப் பார்த்து, "நீங்களும் போராடுங்கள், அப்போதுதான் உங்களுக்கும் இந்தச் சலுகைகள் கிடைக்கும்" என்று சொல்லுவதைப்போல், அவர்களையெல்லாம் போராட்ட உணர்வைப் பெறுவதற்கு தூண்டுவதுபோல் இது அமைகிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே ஒரு போராட்டத்தின் இறுதியில் அறிவிக்கப்படும் சலுகைகள் அனைத்தும் அதே நிலையில் உள்ள மற்ற அனைவருக்கும் பொருந்தும் வகையில் அறிவிக்கப்பட வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் அரசுக்கு எனது வேண்டுகோளை இந்தச் சந்தர்ப்பத்தில் விடுக்க விரும்புகிறேன்.

ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னால்தான் கட்சித் தலைவர் என்று இருக்க முடியும். ஆனால் ஒருவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிட்ட பிறகு, தன்னை ஒரு கட்சித் தலைவராகப் பாவித்துக்கொண்டு செயல்படுவது என்பது சரியல்ல. வெளியில் பேசும்போதும், பொதுக்கூட்டங்களில் பங்கு கொள்ளும்போதும், கட்சிக் கூட்டத்தில் பங்கு கொண்டு பேசும்போதும் வேண்டுமானால் கட்சித் தலைவராக இருக்க முடியுமே தவிர, ஆட்சிப் பொறுப்பிலிருந்து செயல்படும்போது அவர்கள் அனைவருக்கும் முதலமைச்சர், அனைவருக்கும் நிதியமைச்சர், அனைவருக்கும் கல்வியமைச்சர் என்ற நிலையில்தான் செயல்பட வேண்டும். ஆனால் நடைபெற்ற ஒன்றை நான் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் போராட்டத்திற்குப் பின்னாலே தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணி போராட்டத்தை நடத்தியது. அந்தப் போராட்டத்தின்போது அவர்களுடைய போராட்டத்தை இந்த அரசு கவனித்த முறை, அணுகிய முறை தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் போராட்ட நேரத்தில் இருந்ததிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தது. தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியினர் அரசுக்கு வேண்டியவர்களாக நடத்தப்பட்டதோடு, ஆசிரியர் மன்றத்தினர் கோரிக்கை வைத்துப் போராடினால், அவர்களை அடக்கி ஒடுக்குகிற முறை பின்பற்றப்பட்டது. அரசே அவர்களுக்கு (கூட்டணியினருக்கு) சலுகை தரும் வகையில் நடந்து கொண்டது.

தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் கூட்டணியினர் போராட்டத்தை விடுமுறை நாட்களில் நடத்தியபோது, தமிழக முதல்வர் அவர்கள் "நான் அதை வரவேற்கிறேன்" என்றார். அவர்கள் கோடை

1981 ஆகஸ்ட் 27] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

விடுமுறை நாட்களில் போராடினார்கள், ஆகவே அதை வரவேற்றேன் என்று குறிப்பிட்டார்கள். அதோடு, போராடியவர்கள் சிறையிலிருந்து வெளிவந்த பிறகு, சிறை சென்ற செம்மல்களைப் பாராட்டுவதற்காகப் பாராட்டுக் கூட்டங்கள் நடத்தப்பட்டபோது, அங்கெல்லாம் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சென்று அவர்களைப் பாராட்டி மகிழ்வித்தார்கள்.

இவ்வாறு செயல்படுவதன் மூலம், அரசே ஒரு சாராரைத் தூண்டிவிட்டு, "ஒரு அமைப்பைச் சார்ந்தவர்கள் போராடிச் சில சலுகைகளைப் பெற்றுவிட்டார்கள், நீங்களும் போராடினால்தான் அந்தச் சலுகைகளை நீங்களும் பெறமுடியும்" என்று அவர்களின் போராட்டத்திற்கு உறுதுணையாக இருப்பதைப்போல்—இருப்பதைப்போல் என்ன—உறுதுணையாகவே இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களின் போராட்டத்தை அரசினரே வழிநடத்துகிறார்கள். அவர்களின் பாராட்டுக் கூட்டங்களில் கலந்துகொண்டு ஊக்கப்படுத்தியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தைச் சார்ந்த நாங்கள் போராடிய காலத்திற்கு எங்களுக்குத் தகுதியான விடுப்பு வழங்கப்பட வேண்டும் என்று கோரினோம். விடுப்புக் கொடுக்கப்படாததால், அவர்கள் ஊதியத்தை இழக்கிறார்கள் என்று சொன்னபோது, எங்களுக்கு என்ன சொல்லப்பட்டது என்றால் "நோ ஒர்க், நோ பே" என்று, அரசாங்கத்தின் கொள்கை இது என்று சொல்லப்பட்டது. ஆனால் அதே நேரத்தில் தொடக்கப் பள்ளி கூட்டணி ஆசிரியர்கள் நடத்திய போராட்டத்தின்போது இதே முறை மேற்கொள்ளப்பட்டதா, இதே கொள்கை பின்பற்றப்பட்டதா என்றால் இல்லை. அவர்களெல்லாம் கோடை விடுமுறையின்போது போராடினாலும்கூட, அந்தக் காலத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த பள்ளிகளும் உண்டு. அந்தப் பள்ளிகளில் உள்ளவர்களைப் பொறுத்தவரை, விடுமுறைக்குரிய ஒரு அரசாணை தனியாக இந்த அரசால் வெளியிடப்பட்டது. போராட்டத்திற்குப் பின் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்குப் பிறகு, போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு விடுப்பு வழங்கப்பட வேண்டும், அவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும், தகுதியுள்ள அந்த விடுப்பையாவது வழங்க வேண்டும் என்று நாங்கள் கேட்டபோது மறுத்த இந்த அரசு, எங்களுக்குப் பின்னாலே போராட்டம் நடத்திய தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியைச் சார்ந்தவர்களுக்கு ஒரு உத்தரவைப் போட்டது. அதில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"Teachers who have participated in the agitation from 4th May 1981 to 23rd May 1981 to stress their 12 points demand may be treated as on vacation leave. If certain schools had been working on those days, the period of absence of teachers in these schools who have participated in the agitation should be treated as leave to which they are eligible.

(பிற்பகல் 4-20)

இப்படிப்பட்ட சலுகையை எங்களுக்கும் தாருங்கள் என்று கேட்டேன். எங்களுக்கு இன்று வரை தரப்படவில்லை, அது மறுக்கப்படுகிறது. அதே நேரத்தில் மற்றொரு அமைப்பு போராடிப் பெற்றிருக்கிறது. அந்தப் போராட்டத்தை முதல்வர் அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். அவர்களுடைய பாராட்டுக் கூட்டத்திலே கல்வி அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டிருக்கிறார். அவர்களுக்குச் சலுகையாக இந்த ஆணையை வழங்கியிருக்கிறார்கள். சட்டத்திற்கு முன்னால் அனைவரும் சமம். அரசுக்கு முன்னால் மக்கள் எல்லோரும் சமம் என்று சொல்லப்படுகிற நிலை இல்லாத வகையிலே பாரபட்சமாக இந்த அரசு நடந்திருக்கிறது. இனியாவது இந்தவிதமான பாரபட்ச முறையை விடுத்து இதே விடுமுறைச் சலுகையை எங்களுக்கும் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் போராடும்படி எங்களைத் தூண்டவேண்டாம். அப்படி போராடினால் என்னையும், எங்கள் அமைப்பையும் பிடிக்க முடியும் என்றும், என்.ஜி.ஓ. சங்கத்தினரையும் வேளாண்மைப் பொறியாளர்கள் சங்கத்தினரையும் பழி வாங்கியதைப் போல என்னையும், எங்கள் அமைப்பையும் பிடிக்கலாம் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தாலும், அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது கூட நூற்றுக் கணக்கான பேர் அரசுக்குத் தந்தியை அனுப்பியிருக்கிறார்கள். இனியாவது அந்தச் சலுகையை அளித்தால், போராட்டங்களைத் தவிர்க்கலாம். போராட்டங்களைத் தவிர்த்தால் செலவு குறையும் என்பதை நிதியமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர் மன்றமும் போராடியது. 16 ஆம் தேதியன்று சட்டமன்றத்திலே கல்வியமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மெண்டைப் படித்தார்கள். அதன்படி நாங்கள் போராட்டத்தை வாபஸ் வாங்கிக் கொண்டோம். போராட்டத்தை வாபஸ் வாங்கிக்கொண்ட பிறகு, 4 நாட்கள் ஆசிரியர்கள் சிறையிலே இருந்தார்கள். அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. ஆனால் மற்றொரு அமைப்பைச் சேர்ந்தவர்கள் அன்றே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆசிரியர் மன்றத்தினரை 18 ஆம் தேதியன்று விடுதலை செய்வதாக சொல்லி கையெழுத்துப் பெற்றுக்கொண்டு, 20 ஆம் தேதிதான் விடுதலை செய்திருக்கிறார்கள். இந்த இரண்டு நாட்களுக்கான செலவை யார் செய்தது? எந்தத் தலைப்பின் கீழே எப்படி செலவு செய்தார்கள் என்பது தெரியவில்லை. இப்படி ஒரு அமைப்பைப் பழி வாங்கும் நிலையிலே நடக்கக் கூடாது என்று கூறிக்கொள்கிறேன். புலவர் அவர்கள் இப்போது இந்த அவையில் தலைமை தாங்கியிருக்கிறார்கள். சிலம்புச் செல்வர் உட்காரும் இடம் அது. சிலப்பதிகாரம் கூறுகிறது: 'அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்'. அதை உணர்ந்து செயல்படுங்கள். நான் இதை நிதியமைச்சர் அவர்களுக்கு நினைவுபடுத்த வேண்டியதில்லை. அவர்களுக்கே நன்றாகத் தெரியும். ஆகவே அரசியல் பிழையோடு ஓர் அரசு நடக்கக் கூடாது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசாணைகள் எங்களுக்குத் தரப்படுவதில்லை. தருவதற்கு மறுக்கிறார்கள். நான் குறிப்பிட்ட ஆணை அந்த ஓர் அமைப்புக்கு மட்டும் அரசாணை வெளியிட்ட காரணத்தாலே எங்களுக்குத் தர மறுக்கிறார்கள். சட்டமன்ற மேலவை உறுப்பினர் என்ற முறையிலே கல்வித் துறை இயக்குநரிடம் இந்த அரசாணையைக் கேட்டபோது, 'உங்களுக்குத் தர முடியாது' என்று அவர் சொல்லி தர மறுக்கிறார். கல்வி சம்பந்தமாக அத்தனை அரசாணைகளும் ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர்கள் தொகுதிகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டும் இன்றுவரை எங்களுக்கு எந்த அரசாணையும் வருவதில்லை. போய்க் கேட்டால் தர முடியாது என்று அலுவலர்கள் கூறுகிறார்கள். எனவே உறுதிமொழியை இந்த அவையிலே கொடுத்துவிட்டு, தர வேண்டாம் என்று அலுவலர்களிடத்திலே சொல்கிறார்களா அல்லது அதிகாரிகள் அமைச்சர்களுடைய ஆணைக்குக் கட்டுப்பட மறுக்கிறார்களா என்பது தெரியவில்லை. ஆனால் இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இண்டக்மெட் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், ஓர் உறுதிமொழி கொடுக்கப்பட்டது. அந்த ஆசிரியர்களுக்குக் குறுகிய கால பயிற்சி அளித்து, மேல் நிலைப் பள்ளிகளில் தொடர்ந்து பணியாற்ற வாய்ப்பு அளிக்கப்படுமென்று இந்த அவையிலேயே உறுதிமொழி தரப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த உறுதிமொழிக்கு முரணாக இப்போது ஓர் ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. 1983-க்குள் அவர்கள் தங்களுடைய தகுதியை உயர்த்திக்கொள்ளவில்லையென்றால், திரும்பவும் பழைய இடத்திற்கே அனுப்பப்படுவார்கள் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த அவையில் அளிக்கும் உறுதிமொழிக்கும் அதிகாரிகள் இடும் அரசாணைகளுக்கும் சம்பந்தமே இருப்பதில்லை. இதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழாசிரியர்களும் தலைமை ஆசிரியர்களாக ஆகலாம் என்று ஆணை இருக்கிறது. இது ஏட்டுக்குத்தான் இருக்கிறது. அவர்கள் தலைமை ஆசிரியர்களாக வர வேண்டுமென்றால், பி.டி. பயிற்சி பெற்று பத்தாண்டுக் காலம் பணி புரிந்திருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதே அரசாணையில் பண்டிதர் பட்டம் பி.டி.க்குச் சமம் என்று இருக்கிறது. அப்படி இருக்கும்போதும், மறுபடியும் பத்தாண்டுக் காலம் என்ற நிலை ஏன் வர வேண்டும்? தமிழ் நாட்டிலே தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக

வர இடையூறு இருக்கலாமா என்று கேட்க விரும்புகிறேன். அடிப்படை விதி 22 பிரிவின் அடிப்படையிலே அவர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்ய வழி இருக்கிறதா என்று சர்வீஸ் விதிகளைப் பார்த்தால், அதில் விளக்கமாக இல்லை. ஒரே குழப்பமாக இருக்கிறது. இப்படிப்பட்ட குறைபாடுகள் நிறைய இருக்கின்றன.

மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றக் கூடியவர்களுக்கு 50 சதவீதம் பதவி உயர்வு அளிக்கப்படும் என்றும் வெளியிலிருந்து வருபவர்களுக்கு 50 சத வீதம் இடம் அளிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனால் மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் அனைவருக்கும் பதவி உயர்வு கிடைக்கும் வாய்ப்பு இல்லை. இப்படி ஊதியம் நிர்ணயம் செய்வது குறித்தும், ஊக்க ஊதியம் தருவது குறித்தும், தொழில் பிரிவுகளை ஏற்படுத்துவது குறித்தும் தெளிவு இல்லை. நிறைய குறைபாடுகள் இருக்கின்றன. இவற்றை யெல்லாம் அரசு நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வு பெறுபவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் அளிப்பது குறித்து ஆய்வு செய்ய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. இது குறித்து அந்தனை இயக்கங்களைக் கலந்து பேசப்படவில்லை. இது குறித்து விரைவிலே முடிவு எடுக்க வேண்டுமென்று போராட்டத்தின்போது இது பற்றி கலந்து பேச அழைக்கப்படும் என அரசுத் தரப்பில் அளிக்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியிலே இருக்கக் கூடிய ஜோசப் கல்லூரி புராதனமான கல்லூரி என்பது எல்லோருக்கும் தெரியும். அந்தக் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் சின்னப்பன் எ.யூ.டி.-ல் சேர்ந்து பணியாற்றுகிறார் என்ற காரணத்திற்காக முறைப்படி அவருக்கு வழங்க வேண்டிய பதவி உயர்வு வழங்கப்படாமல் தவிர்க்கப்பட்டிருக்கிறது. அவர் பழி வாங்கப்பட்டிருக்கிறார். அதை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்தபோது, கல்லூரி நிர்வாகத்தினரின் தூண்டுதலால் கத்தோலிக்க மதத்தினர் எல்லாம் ஒன்று சேர்ந்து, கத்தோலிக்க மதத்தினருக்கு எதிராக ஆசிரியர்கள் போராடினார்கள் என்று எதிர் உண்ணாவிரதம் இருந்தார்கள். பாதிக்கப்பட்ட அவரும் ஒரு கத்தோலிக்க மதத்தினர்தான். போராடும் ஆசிரியர்களில் பலரும் கத்தோலிக்க மதத்தினர்தான். அப்படியிருப்பினும் எதிர் உண்ணாவிரதம் இருந்தார்கள். அடுத்து அங்கே இருக்கக் கூடிய திரு. சாமிமுத்து என்ற பேராசிரியர் தன்னுடைய மகன் தேர்வு பேப்பரைப் பெற்று அவரே திருத்தி முதல் , மார்க் போட்டிருக்கிறார்கள். இதெல்லாம் தன்னாட்சியால் வந்த கோளாறுகள். ஆகவே அத்தகைய தன்னாட்சியை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே கோவை அவினாசிலிங்கம் கல்லூரியிலே ஒரு பெரிய பிரச்சினை இருக்கிறது. அது குறித்து விசாரணை செய்வதற்காக பல்கலைக் கழகம் ஒரு விசாரணைக் குழுவை அனுப்பியது. அவர்களும் அங்கே தேற்று சென்றார்கள். ஆனால் அங்கேயுள்ள டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் அவர்கள் கல்லூரிக்குள்ளேயே அவர்களை அனுமதிக்கவில்லை. அக்குழுவினரை வெளியே நிறுத்திவிட்டார்கள். அந்தக் கல்லூரி விஷயத்தில் தலையிட முடியாது என்று அவர்களைத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். அவர்களும் திரும்ப வந்திருக்கிறார்கள். அதுபற்றிய அறிக்கையையும் கொடுக்க இருக்கிறார்கள். அங்கே யூ ஜி சி ஸ்கேல் அரியர்சை ஒரு கையில் கொடுத்துவிட்டு மறு கையிலே 'மிஸலேனியஸ் அக்கவுண்ட்ஸ்' என்ற தலைப்பின் கீழ் அதை அப்படியே கட்ட வேண்டுமென்று ஆசிரியர்களிடம் எழுதி வாங்கியிருக்கிறார்கள். அதற்கான ரிக்கார்டுகளும் இருக்கின்றன. ஆகவே அந்த நிலுவைப் பணம் ஆசிரியர்களுக்குப் போய்ச் சேரவில்லை. அது மட்டுமல்லாமல், பணிக் காலத்திலே ஆசிரியைகளுக்கு மகப்பேறு ஏற்படக் கூடாது என்று தடை விதித்திருக்கிறார்கள். ஏனென்றால் பணிக்குக் குந்தகம் ஏற்பட்டுவிடுமாம். ஆகவே கருத்தரித்த ஆசிரியை ஒருவரை இரவுண்டில் விட்டு ஓடச் சொல்லியிருக்கிறார்கள் கரு கலைப்புக்காக. எவ்வளவு பெரிய அடிமை மனப்பான்மையோடு நம்முடைய நாட்டிலே கல்லூரிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆசிரியர்களை அந்த அளவிற்குக் கொடுமைப்படுத்துகிறார்கள். ஆசிரியைகள் மானத்தோடு பணியாற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மேலும் ஒரே ஆசிரியரை இரண்டு பதவிகளில் போட்டு ஒரு பதவிக்குரிய சம்பளத்தை மட்டும் அவருக்குக் கொடுத்துவிட்டு, மற்றொரு பதவிக்குரிய பணத்தை நிர்வாகத்தினரே எடுத்துக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகள் நிறைய இருக்கின்றன. அரசு நிதியைச் செலவு செய்கிற நேரத்தில் சரியாகச் செலவு செய்யப்படவேண்டும். அதற்கான வழிமுறைகளைக் காண வேண்டும். இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கக் கூடாது என்பதைச் சொல்லி இந்த முதல் துணை மதிப்பீட்டை வரவேற்று அமைகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டிற்கான துணை மானிய மதிப்பீட்டின் மேல் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன். அரசாங்கத்தினுடைய நிர்வாகச் செலவு பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறோம். அரசாங்கம் தன்னுடைய கொள்கைக்கேற்ப பலவற்றுக்கான செலவுகளை ஏற்று செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. கடந்த காலத்தில் அது மதிக்கப்பட்ட தொகை எந்த அளவிற்குச் சீராக செலவிடப்பட்டிருக்கிறது

[திரு. க. இராமமூர்த்தி] [1981 ஆகஸ்ட் 27

என்பதை கவனிப்பதிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குப் பொறுப்பு இருக்கிறது. அவரைப் பொறுத்த வரையில், நேரடியாக அவர் துறையின் மூலமாக அத்தனையும் நடைபெறுகிற நிலை இல்லாவிட்டாலும்கூட, அத்தனை துறைகளுக்கும் அவர்தான் நிதி ஒதுக்கீடு செய்கிறார் என்ற அளவிலே தவறுகள் ஏற்படுகிறபோது, நியாயமற்ற, முறையற்ற செலவினங்கள் அதிகரிக்கிறபோது, அதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய பொறுப்பாக இருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கிராம அதிகாரிகளின் பதவிகளை ஒழித்தபோது, இந்த அவையில் மட்டுமல்லாமல், பல்வேறு இடங்களிலும் கருத்துக்களை மிக அழுத்தமாகச் சொல்லியிருக்கிறோம். அப்போது அது தேவை, புரட்சிகரமான மாற்றம் என்று அரசுத் தரப்பில் சொன்னார்கள். அது முடிந்து போன ஒன்று. அது தேவையா, இல்லையா என்ற பிரச்சினைக்குள் நுழைய விரும்பவில்லை. ஆனால் அதனுடைய விளைவாக இன்றைக்கு அரசாங்கத்தினுடைய கஜானாவிலிருந்து மாதம் ஒன்றுக்கு 25 இலட்சம் ரூபாய் வேலை செய்யாமல் வீட்டிலேயே இருப்பவர்களுக்குக் கொடுக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஓர் இனத்தில் மட்டும் பல கோடி ரூபாயை சம்பளமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதை

(பிற்பகல் 4-30)

யெல்லாம் எண்ணிப்பார்க்கிறபோது, நாம் வருவாய்க்காக எவ்வளவு சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதையும், எந்த அளவுக்கு நாம் கண்மூடித்தனமான செலவுக்கு அனுமதி கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் பார்க்க வேண்டும். தேவையான அளவுக்கு நாம் அதிலே ஆர்வம் காட்டாமல் இருக்கிறோம் என்பதை இந்த அவையில் வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலேயும் இன்னொரு வேடிக்கையைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். இந்த அரசு சில அதிகாரிகளைப் பொறுத்தவரையில், எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இந்த அரசாங்கத்தில் புதிதாக அதிகாரம் ஏதாவது கொடுத்திருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. விளம்பரங்களைப் பார்க்கின்றபோது, அரசாங்கத்தின் விளம்பரங்களைக் கொடுக்கின்றபோது, அரைப் பக்கம், முழுப் பக்கம் விளம்பரங்களைக் கொடுக்கின்றபோது, அதிலே அவர்களுடைய பெயர்களையே போட்டு விளம்பரம் கொடுக்கப்படுகிறது. அப்படி அந்த விளம்பரங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அந்த அளவுக்கு இருக்கின்றது. அப்படிப் போட்டு தன்னையே அடையாளம் காட்டிக்கொள்கின்ற அளவுக்கு, இருக்கிறது. கிராம அதிகாரிகள் நீக்கப்பட்டவுடன் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். சுப்ரீம் கோர்ட்

1981 ஆகஸ்ட் 27] [திரு. க. இராமமூர்த்தி]

டிலே 'ஸ்டே' கொடுக்கப்பட்டது. வீட்டிலே உட்கார்ந்து இருந்தாலும் சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற சூழ்நிலையிலே புதிதாக அவர்களுக்கு வேலை வாய்ப்பு தருகிறோம் என்று விளம்பரத்தில் சொன்னார்கள். புதிய அதிகாரிகள் தேர்வு செய்வதற்கு விளம்பரங்கள் பல மாவட்டங்களிலே வெளியாயிற்று. அதற்குப் பிறகு கலெக்டருக்கு அந்த அதிகாரம் இல்லை, தேர்வு செய்வதற்கு சர்விஸ் கமிஷனுக்குத்தான் அதிகாரம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு ஆட்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கு என்று நாள் கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். சில மாவட்டங்களில் 'இன்டர்வியூ' நடைபெற்றது. ஆனால் அதன் முடிவுகள் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அதிலேயும் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. பல பேர்கள், வேலை கிடைக்க வேண்டும் என்று ஐயாயிரம் ரூபாய், ஐயாயிரம் ரூபாய் என்று கொடுத்திருக்கிறார்கள். பல லட்சக்கணக்கான ரூபாய்கள் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அப்படி கொடுத்துவிட்டு தெருவிலே நிற்கின்றார்கள். அவர்கள் அப்படிக் கொடுத்தது அவர்கள் பொறுப்பு. அதிலே நான் நுழைய விரும்பவில்லை. இப்படி அதிலே எடுக்கப்பட்ட அரசு நடவடிக்கைகள் அரைகுறையாக நின்றுவிட்டது. அதற்கான நடவடிக்கைகள் என்ன என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். நமது செலவினங்களில் நாம் ஊதாரித்தனமாக இருந்துகொண்டிருக்கிறோம் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்லிக்கொள்கிறேன். அந்தச் செலவினங்களை இழுத்துப் பிடிக்க வேண்டும்.

காவல் துறையிலே கூட செலவினங்கள் அப்படித்தான் இருக்கின்றன. லட்சக்கணக்கில் செலவினங்கள் வருகின்றன. செலவினங்களுக்கு நாம் எவ்வளவு சங்கடப்பட்டு நிதி வருவாய் தேடுகிறோம்? அந்த நிதி வருவாயை இந்த அதிகாரிகள் எந்தச் செலவினங்களுக்கும் செய்ய முடியும் என்ற அளவில் நிலைமைகளை உருவாக்கியிருக்கிறார்கள். இந்தத் தவறுகளுக்கு அவர்கள் தான் பொறுப்பு என்று நம்மாலே குறிப்பிட்டுச் சொல்ல முடியாததனாலேயே அவரவர்கள் தலை விரித்தாடுகின்ற நிலைமைகள் தான் இருந்துகொண்டிருக்கின்றன. அதிலே நிர்வாகம் அரசினுடைய கரங்களை விட்டு விலகிக் கொண்டிருப்பதாக இருக்கிறது. இதை நான் ஒரு குறையாக மட்டுமல்ல, ஒரு குற்றச்சாட்டாகவும் சொல்கிறேன். அது மட்டுமல்ல, இந்த நிலைமைகளைத் தடுத்து நிறுத்தவில்லை என்றால், இன்னும் கொஞ்ச காலம் ஆனால், தடுத்து நிறுத்தவே முடியாத நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த இரண்டையும் தாண்டி இன்னொரு வேதனையான நிலைமை இன்றைக்கு இருக்கிறது. எனக்கு ஒன்றிலே பெருமை. நம்முடையே தமிழகத்தைப் பொறுத்த வரையிலே, நமக்குக் கிடைத்திருக்கின்ற

தற்போதைய தலைமைச் செயலாளர்—தனிப்பட்ட முறையிலே நான் பெருமையடைகிறேன், நிமிர்ந்து நிற்கிறேன், ஏனென்றால் அவர்—சுதந்திரப் போராட்டத்திலே கலந்துகொண்டவர், இன்று அவர்கள் ஒரு உயர்ந்த பதவியிலே வந்திருக்கிறார். அதற்காக நான் பெருமைப்படுகிறேன். ஆனால் நம் மாநிலத்திலே 7 பேர்கள் தலைமைச் செயலாளர் அந்தஸ்த்தில் பதவி வகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. இது எவ்வளவு வேடிக்கையான நிலைமை என்று பார்க்க வேண்டும். அதிலேயும் இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். டெல்லியிலே ஸ்பெஷல் ரெபரசென்ட்டேடிவ் என்று ஒருவரை நியமிக்கிறோம். தலைமைச் செயலாளர் என்கின்ற அந்தஸ்த்திலே இருக்கின்ற ஒருவரை அங்கே ஒரு தொடர்பு அதிகாரியாக வைக்கிறோம். சீப் செக்ரட்டரி அளவிலே இருக்கின்ற ஒருவரை நாம் அங்கே கொண்டுபோய் வைக்கிறோம். அவர் அங்கே மத்திய அரசோடு, மத்திய அரசு அலுவலர்களோடு, அங்கேயுள்ள அதிகாரிகளோடு, மத்திய அமைச்சர்களோடு தொடர்பு கொண்டு, இந்த மாநிலத்திற்கு வேண்டியவற்றைப் பெற்றுத் தருவதற்கு ஒரு பாலமாக இருப்பவர். சீப் செக்ரட்டரி அளவிலே அங்கே வைக்கிறோம். அந்த அந்தஸ்த்திலே இருக்கும் அவர்கள் அங்குள்ள அதிகாரிகளைப் பார்க்க முடியுமா ? எந்தச் சூழ்நிலையிலே அதைச் செய்வார்கள் ? அவர்கள் செய்வார்களா ? சீப் செக்ரட்டரி அளவிலே இல்லாமல், ஜூனியர் ஆபீசர் என்ற அளவிலே இல்லாமல், கொஞ்சம் சுலபமாகக் காரியங்களைச் சாதிக்கக்கூடிய அளவில், உள்ள ஆபீசர் இருக்க வேண்டும். அவர் செக்ரட்டேரியட்டில் சுற்றி, அமைச்சர்களைப் பார்த்து, எந்த பேப்பர் எங்கே போகிறது என்று பார்த்து, அதற்கான தகவல்களைப் பெற்று காரியங்களை ஆற்றலாம். நாம் என்ன செய்கிறோம் ? 'We must provide them posts' என்ற அளவில், எங்கேயாவது போட வேண்டும் என்ற அளவில், கண்காணாத இடத்திலே போட வேண்டும், எங்காவது போட்டு பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டும் என்று போடுகிறோம். சீப் செக்ரட்டரி அந்தஸ்த்தில் 7 பேர்கள் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதே போல் ஐ.ஜி.-க்கள் 9 பேர்கள் இருக்கிறார்கள். அதற்கு என்று ஒரு சட்டமே போடப்பட்டிருக்கிறது. அவசர அவசரமாக ஒரு 'டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்' போட்டார்கள். இல்லாவிட்டால், போலீஸ் நிர்வாகமே கெட்டுவிடும் என்று போட்டார்கள். மாநிலத்தில் ஒரு டைரக்டர் ஜெனரல் போட்டார்கள். அவர் தவிர வேறு ஒருவர் அந்தப் பதவியை வகிக்க முடியாது. அவருக்கு இரண்டு தடவை எக்ஸ்டென்ஷன் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இன்றைக்கு 6 மாதத்திற்கு அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதுபற்றி எனக்கு சரியாகத் தெரியவில்லை. அந்தப் பதவி என்ன ஆயிற்று ? அது காலியாக இருக்கிறது என்று நினைக்கிறேன். நம்

மாலே செலவிடுகின்ற அளவுக்கு காரியங்களைச் செய்ய வேண்டும். இதிலே இன்னொன்றை நான் சொல்ல முடியும். 17 சீப் இன்ஜினியர்கள் இருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். நாம் இங்கே வாதாடுகிறோம். செலவினங்களுக்கு ஒதுக்க சண்டை போடுகிறோம். அவசியமான செலவினங்களுக்கு நாம் ஒதுக்கித்தான் ஆக வேண்டும். சில துறைகளுக்கு அதிகமாகச் செலவு செய்ய வேண்டும். அதிலே நான் குறுக்கே நிற்கவில்லை. ஏதோ சில நிலைமைகளைச் சமாளிக்க வேண்டும் என்பதற்காக, தவிர்க்க வேண்டும் என்பதற்காக டைரக்டர் ஜெனரல் பதவி உருவாக்கப்பட்டது. டெல்லியிலே சீப் செக்ரெட்டரி அளவில் ஒருவரை உட்கார வைத்திருக்கிறோம் நாம் சும்மா சில நிலைமைகளைச் சமாளிப்பதற்காகவும் சௌகரியங்களைச் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் இப்படியெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். செலவினங்களுக்கு அவர் வருவாய் தேடித் தந்திருக்கிறார்கள். அதை எதற்கு செலவிடுவது, எதற்குப் பிரித்துக்கொடுப்பது என்று பார்க்க வேண்டும். என்ன பயன் கிடைக்கிறது என்பதைப்பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும். சட்ட முன்வடிவை எடுத்துக்கொள்ளும்போது, மது விலக்கைப் பற்றிப் பேச வாய்ப்பு இருக்கும் என்ற அளவில் அதைப்பற்றி இப்போது எதுவும் சொல்ல விரும்பவில்லை. சாராயக் கடைகளில் பாதுகாப்புக்கு என்று போலீஸ் கான்ஸ்டேபிள்கள் போடுகிறார்கள். அவர்கள் அங்கே நிற்கிறார்கள். சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க அங்கே அவர்கள் இருக்கிறார்கள் என்றாலும் கூட, ஒவ்வொரு சாராயக் கடைக்கும் வெளியிலே இரண்டு கான்ஸ்டேபிள்கள் என்ற நிலைமையைக் கொண்டுவந்து, அதற்கு என்று போலீஸ்காரர்கள் போட்டுவிடுவது என்பது, நாட்டிலே வேறு வேலையே கிடையாது என்று சொல்வது போல இருக்கிறது. கள்ளச் சாராயம் கடைகளிலே விற்கலாம். அதைத் தடுக்க என்று சொல்வார்கள். சில குறைகளைக் கேட்டால் அதற்கு அப்படி பொறுப்போடு சொல்கிறார்கள். எசன்சியல் கம்மோடிட்டீஸ் (Commodities) அல்ல. கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று இல்லை. அது எசன்சியல் கம்மோடிட்டியா இல்லையா என்பதைப்பற்றி நான் சொல்லவில்லை. அதனுடைய விபரீத விளைவுகள் சமுதாயத்தின் மீது பிரதிபலிப்பதைத்தான் சொல்கிறேன். போலீஸ் காவலோடு கள்ளச் சாராயம் விற்கக்கூடிய நிலைமைகள் எங்கே கொண்டுபோய் விடும் என்பதைப் பார்க்க வேண்டும். பணத்தை எப்படி எப்படியெல்லாம் சிக்கனமாகச் செலவிட வேண்டும் என்று பார்க்க வேண்டும். இதைச் சிக்கனமாகச் செலவிடுவதற்கு நாம் இங்கே ஒருவருக்கொருவர் சண்டைப் போட்டுக்கொண்டிருக்கிறோம். கடைசியாக விளைவுகள் எப்படி இருக்கின்றன ?

கல்வித் துறையைப் பொறுத்த வரையிலே, சமீபத்திலே தேர்வுகள் நடைபெற்றன. அந்த கம்ப்யூட்டர் முறையிலே தவறுகள் இருக்கின்றன. பிளஸ் 2 முடிவுகள் கம்ப்யூட்டரில் போடப்பட்டு வந்தன. அதிலே பல தவறுகள் நடந்திருக்கின்றன என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே கூட வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். ஒரு பள்ளிக்கூடத்திலே உள்ள மாணவர்கள் எல்லாம் தேர்வு பெறவில்லை. சரியாக முடிவுகள் வெளிவரவில்லை. 69 மார்க்குகள் வாங்கியும் தேர்வு பெறவில்லை என்று வந்திருக்கிறது. சிலர் 4, 5 பாடங்களில் தேர்வு எழுதி, அதிலே 2 பாடங்களில்தான் தேர்வு எழுதியதாக வருகிறது. அதற்குப் பிறகு ரகஸ்யமாக கம்ப்யூட்டர் தவறு தெரிந்துவிடும், வெளியே தெரிந்துவிடும் என்பதற்காக அன்றைக்கு அப்படிச் செய்திருக்கிறார்கள். எனக்குக்கூட ஒரு தகவல் வந்திருக்கிறது.

(பிற்பகல் 4-40)

கே. குபேந்திரன். அவர் வாங்கியிருக்கிற மொத்த மார்க்குகள் 32. பிரைவேட் ஸ்டூடன்ட்டாக அப்பியராகியிருக்கிறார். சர்ட்டிபிகேட் நம்பர் ஏ. 217072. நான் இப்படிக் குறைவாக மார்க் வாங்கும் மாணவன் இல்லையே என்று அவர் தகராறு பண்ணியிருக்கிறார். அதற்குப் பிறகு அதே குபேந்திரனுக்கு மார்க்கை 78 என்று திருத்தியிருக்கிறார்கள். இப்படி ஒருவர் இருவருக்குச் செய்திருக்கிறார்கள் என்பதல்ல. 6,000 மாணவர்களுக்கு சர்ட்டிபிகேட்டை உரிய காலத்தில் கொடுக்காமல் திருத்தி வைத்திருந்தார்கள் என்பது மட்டுமல்ல. பி. சேகர் என்று ஒரு மாணவன். சர்ட்டிபிகேட் நெம்பர் ஏ. 178248. அவர் இரண்டு சப்ஜெக்ட்டுகள் பரிட்சை எழுதியிருக்கிறார். சர்ட்டிபிகேட்டில் ஆங்கிலத்தில் 68 மார்க்குகள் என்று மட்டும் போட்டு வந்திருக்கிறது. இன்னொரு சப்ஜெக்டில் மார்க் என்னவாயிற்று என்று கேட்டிருக்கிறார்கள். பின்னால் ஹிஸ்டரியில் 45 மார்க் என்று கையால் எழுதி அனுப்புகிறார்கள். இப்படி கல்வித் துறை இருந்தால் எப்படி மாணவர்களைப் படிக்க வைப்பது ? இப்படி இருந்தால் கல்வியில் மாணவர்களுடைய ஆர்வம் எங்கே போய் முடியும் ? கல்வித் துறைக்கு நாம் செலவு செய்கிறோம். எப்படிச் செய்கிறோம் ? மாடர்ன் எக்விப்மென்ட்ஸ், மாடர்ன் சிஸ்டம் வைத்துக் கொண்டு, மாணவர்களுடைய எதிர்காலத்தைப் பாழாக்குவதற்காக செலவு செய்துகொண்டிருக்கிறோம். இதை எங்கே கண்காணிப்பது, எங்கே பிடிப்பது என்பது தெரியாமல் இருக்கிறோம். பல இடங்களில் பல அதிகாரிகளிடம் சொன்னால், இதில் ஒன்றை செய்ய முடியாது, நடவடிக்கை எடுக்க முடியாது, கைகள்

கட்டப்பட்டிருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு எவ்வளவு தான் நாம் நிதி ஒதுக்கீட்டிலே கவனம் செலுத்தினாலும், இந்த நிதி ஒதுக்கீட்டின் வெற்றி எங்கே இருக்கிறதென்றால், இதை எப்படிச் செலவு செய்கிறோமென்பதில்தான அமைந்திருக்கிறது. செலவினத்தைப் பொறுத்தவரையிலும், அரசாங்கத்தின் நோக்கம் உயர்ந்ததாக இருந்தாலும், செலவு நாம் நினைப்பதுபோல் நடைபெறுவதில்லை. அதனுடைய பலன்கள், நாம் எதிர்பார்க்கும் பலன்களைத் தருவதில்லை என்ற அளவிலே இன்றைக்குத் தமிழகத்திலே நிலைமைகள் இருக்கின்றன. நான் மிகவும் வேதனையோடு ஒன்றைச் சொல்லுகிறேன். இதில் விரிவாக எது எதற்கு எவ்வளவு என்றுகூட பார்க்க முடியாத அளவிற்குச் செலவுகள் நடைபெறுகின்றன. எனவே அடுத்த முறை அறிக்கை தரும்போது மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு, நிதி ஒதுக்கம் செய்யும்போது, உங்களுடைய துறையிலே இப்படிச் செய்ய வேண்டும் என்ற முறையில் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, இந்த மாநிலத்தின் நிதி நிலையைக் காப்பாற்ற வேண்டும், இந்த மாநிலத்தில் செலவினங்கள் உயர்வாகச் செய்யப்படுகின்றன என்ற பெயரைப் பெற வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1981-82 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த முதல் விவர அறிக்கையின்மீது ஒருசில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். அண்மையில் நடந்த சட்டமன்றத் தொடர் கூட்டத்திற்குப் பிறகு, ஆசிரியர்களுக்குப் பலன் அளிக்கக்கூடிய ஓரிரண்டு மிக முக்கியமான கோரிக்கைகளை அரசு செயல்படுத்தியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக தொடக்கப் பள்ளி ஆசிரியர்களை—ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களை—ஜூன் 1 ஆம் தேதி முதல் அரசு ஊழியர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கும், அடுத்து இடைநிலை, இளநிலை ஆசிரியர்களின் நீண்டகாலக் கோரிக்கையான இரண்டு ஆண்டு பயிற்சிக்குக் கூடுதல் ஊதிய உயர்வு அளித்ததற்கும், இளநிலை, இடைநிலை ஆசிரியர்களுக்கும், அவர்களுக்குச் சமமான ஊதியம் பெறும் மற்றைய ஆசிரியர்களுக்கும் 20 ஆண்டுக்கால பணி அடிப்படையில் சிறப்பு நிலை அளித்ததற்கும் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீண்டகாலமாகக் கோரப்பட்ட கோரிக்கைகள் ஏற்கப்பட்டதற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே சமயத்தில் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாற்றியபோது, அதனை ஒட்டி ஏற்படும் பிரச்சினைகளை விவரமாக அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் அரசு விரைந்து செயல்பட வேண்டும். 2 ஆண்டுப் பயிற்சிக்காக

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1981 ஆகஸ்ட் 27

இடைநிலை, இளநிலை ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களைப் போலவே ஆசிரியப் பயிற்சி பெற்று உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளில் பணி புரியும் தலைமை ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், உடற்கல்வி இயக்குநர்கள், தொழிலாசிரியர்கள், ஓவிய ஆசிரியர்கள், கலை கைத்தொழில் ஆசிரியர்கள் போன்ற பல்வேறு பிரிவினருடைய பிரச்சினைகள் குறித்து, அவர்களைக் கூட்டிப் பேசி, விரைவாக அரசு தீர்த்தால், அவர்களிடையே அமைதியின்மை ஏற்பட்டிருப்பதைத் தவிர்க்க முடியும். அதைப்போலவே நீண்ட காலமாக ஆசிரியர் சமுதாயம் கேட்கும் கோரிக்கையான 3 நாட்கள் ஈட்டிய விடுப்பை உயர்த்திக் கொடுக்க வேண்டும். குறைந்தபட்சம் 23 நாட்கள் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசு பரிசீலித்து, விரைவாக முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலவசக் கல்வி அளிக்கும் திட்டத்தை அரசு அண்மையில் அறிவித்திருக்கிறது. ஆசிரியர்களுக்கான தேசிய நல நிதியிலிருந்து தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு கல்லூரிக் கல்வி அளிக்க ஒரு திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. நான் அதை வரவேற்கிறேன். ஆசிரியர்களுடைய தேசிய நல நிதி என்பது பொதுவான அமைப்பு. அதிலிருந்து நிதியை எடுத்து செலவை ஈடுகட்டும்போது, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கும் அந்தச் சலுகையை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தேசிய நல நிதி என்பது அனைத்து ஆசிரியர்களுக்கும் பொதுவான நல நிதி என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் விரிவாகப் பேசியிருக்கிறார்கள். கல்லூரி

மாற்றுத் தலைவர் திரு. நீலநாராயணன் தலைமை)

ஆசிரியர்கள் பிரச்சினை இன்று அரசுக்கும் சரி, ஆசிரியர்களுக்கும் சரி, மாணவர்களுக்கும் சரி, பொது மக்களுக்கும் சரி மிகப் பெரிய சவாலாக விடுக்கப்பட்டிருக்கிறது. கோவையிலே இருக்கும் தனியார் கல்லூரியானாலும், திருச்சியிலே இருக்கும் தனியார் கல்லூரியானாலும், சென்னையிலே இருக்கும் தனியார் கல்லூரியானாலும் கல்லூரி ஆசிரியர்கள் பிரச்சினை அங்கே இருக்கிறது. அவர்கள் ஊதிய மாற்றத்திற்காக, ஊதிய உயர்விற்காகப் போராடவில்லை என்பதை அரசு மனதிலே கொள்ள வேண்டும். அவர்களுடைய பணி நிலைமைகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய பணியை

1981 ஆகஸ்ட் 27] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

அரசே செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி நேரடி நடவடிக்கையில் ஆசிரியர்கள் இறங்கி, அவர்கள் கைது செய்யப்பட்டு, இன்றைக்கு சிறை சென்றிருக்கிறார்கள். அது அவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினையாக இருப்பதால், அவர்கள் அத்தகைய போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதுவரை அரசு அவர்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தியதாகத் தெரியவில்லை. அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசிடம் அதிகாரம் இருக்கிறது. அவர்களை அழைத்துப் பேசி, அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் சில ஆதாரங்களைக் கொடுத்திருக்கிறார்கள் கோவையிலே ஒரு கல்லூரி. அந்தக் கல்லூரி நான் படித்த கல்லூரிதான். அங்கே நான்கு ஆண்டுகள் படித்தேன். அது இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயம். அந்தக் கல்லூரியின் மீது அதிகமான பற்றும் பாசமும் வைத்திருப்பவன் நான். அங்கே நான் பெற்ற பயிற்சிதான் என்னுடைய வாழ்நாள் முழுவதும் பல்வேறு வகைகளில் உதவுகிறது. இப்போது ஆசிரியர்களைப் பாதிக்கக்கூடிய, விரும்பத்தகாத அம்சங்கள் அந்நிறுவனத்திலும் அதனுடைய Sister Institution ஆன அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியிலும் நடக்கிறதென்றால், அது நல்லதல்ல. அது குறித்து ஓரிரு சான்றுகளைக் கூற விரும்புகிறேன். அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் ஒரு ஆசிரியைக்கு அரசு அறிவிப்பின் காரணமாக நிலுவைத் தொகை வழங்கப்பட்டது. பல்கலைக் கழக மானியக் குழுவின் ஊதிய விகிதத்தை அமுல்படுத்தியதால், நிலுவைத் தொகை அவருக்குக் கிடைத்தது. அதில் 2,824 ரூபாயை வேண்டுமென்றே பிடித்தம் செய்திருக்கிறார்கள். அதற்கு ரசீது கொடுத்திருக்கிறார்கள். 'Miscellaneous' என்று போட்டு, ஆசிரியையுடைய பெயரை எழுதி, ரசீது கொடுத்திருக்கிறார்கள். 'Miscellaneous' என்றால் என்ன என்று கண்டுபிடிக்க வேண்டும். அந்த ஆசிரியைக்'ச் சேர வேண்டிய தொகையிலிருந்து, 2,824 ரூபாயை, சதவீதக் கணக்கில் பிடித்தம் செய்திருக்கிறது அந்த நிர்வாகம். எனவே அந்தக் கல்லூரிக்கு மானியம் தரும் அரசு இது குறித்து கல்லூரி நிர்வாகத்தின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறது.

(பிற்பகல் 4-50)

அதேபோல் இன்னொரு நிகழ்ச்சியும் அங்கே நடைபெற்றிருக்கிறது. ஆசிரியைகள் இப்போது அங்கே முக்கியமான ஒரு குறைபாட்டைச் சொல்கிறார்கள். அதாவது விடுமுறை இருக்கும் காலத்தில் மகப்பேற்றை உண்டாக்கிக் கொள்ளுங்கள் என்று ஒரு நிர்வாகம் சொன்னால், எப்படி போராட்டம்

நடைபெறாமல் இருக்க முடியும்? அதனால் தான் அவர்கள் சிறைச்சாலைக்குக் கூட செல்லத் தயங்கவில்லை. மகப்பேறு காரணமாக விடுப்பு வேண்டுமென்று கேட்கின்ற ஆசிரியைகளுக்குக் கூட விடுப்பு மறுக்கின்ற நிலை இருக்கிறது என்பதற்கான ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் மாற்றியமைக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் காரணமாக, மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதாரங்களைத் தங்கள் மூலமாக நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதுடன் அரசுக்கு சமர்ப்பிக்கவும் செய்கிறேன். (மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் பேப்பர்கள் கொடுக்கப்பட்டன). அதேபோல் ஒரே ஆசிரியர் பணியாற்றுகின்ற இடத்துக்கு இரண்டு ஆசிரியர்களுக்கான மானியம் அரசிடமிருந்து அந்த நிர்வாகம் வாங்குகிறது. ஆனால் ஒரே ஒரு ஆசிரியர்தான் அங்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். அப்படி ஒரு ஆசிரியரை நியமித்து விட்டு, இரண்டு ஆசிரியர்களுக்கான மானியத்தை அந்த நிர்வாகம் வாங்குகிறது என்றால், யார் யாரை ஏமாற்றுகிறார்கள் என்பதை அரசு அவசியம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி பல்வேறு பிரச்சினைகளின் காரணமாகத்தான், அங்கே கொந்தளிப்பான நிலை ஏற்பட்டு, இன்றைக்கு போராட்டமாக பிரச்சினை வெடித்திருக்கிறது. இன்னொரு அறிக்கையை நான் படித்துப் பார்த்து வியந்தேன்.

" All the students and staff are hereby informed that only those who wear college uniform should enter the college campus என்று அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆக, கல்லூரியில் சீருடை அணிய வேண்டுமென்பது ஒரு நல்ல கருத்துதான். ஆனால் ஆசிரியர்களையும் மாணவர்களையும் அழைத்துப் பேசி, அவர்களுடைய கருத்தை ஏற்க வைத்து ஒரு சுமுகமான முடிவுக்கு வந்திருக்க வேண்டும். உடனடியாக ஒரு ஆணையின் மூலமாக, ஒரு சுற்றறிக்கையின் மூலமாக எல்லோரும் சீருடை அணிந்தால் தான் கல்லூரிக்கு வர வேண்டும், இல்லாவிட்டால் வரக் கூடாது என்று சொல்லுவது தனியார் கல்லூரிகள் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்திற்கே முரணான கருத்து.

அடுத்து, எங்கள் ஊரில் இருக்கும் ஒரே ஒரு பிரச்சினை அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பிரச்சினை தான். அங்கு 6 ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்களில் 3 ஆயிரம் பேர் பி.ஏ., பி.எஸ்ஸி, பி.காம். போன்ற வகுப்புகளில் படிக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் சிதம்பரத்திலிருந்தும், சுற்றுப்புறப் பகுதிகளிலிருந்தும் கால்நடையாகவும், சைக்கிள் மூலமும் பேருந்து மூலமும் ரெயில் மூலமும் குறிப்பாக சீசன் டிக்கெட்டு எடுத்துக்கொண்டு வந்து படிக்கின்ற ஏழையெளிய நடுத்தர வகுப்பைச்

சார்ந்தவர்கள். இப்படி ஏழையெளிய நடுத்தரப் பிரிவைச் சார்ந்த மாணவர்கள் பயன்படுத்திக் கொண்டிருந்த பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம். போன்ற வகுப்புகளை இந்த ஆண்டு ஆரம்பிப்பதுபற்றி இதுவரை அறிவிப்பு வாராததால், அது ஒரு கேள்விக் குறியாக இருக்கிறது. நிர்வாகம் இதுவரை அதுகுறித்து அறிவிப்பும் வெளியிடவில்லை, விண்ணப்பம் கோரவும் இல்லை, விண்ணப்பம் அச்சடிக்கவும் இல்லை. கேட்டால் நாங்கள் அரசுடன் கடிதத் தொடர்பு கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அனைத்து கட்சி சார்பாக இதுகுறித்து துணை வேந்தரைக் கேட்டபோது கூட துணை வேந்தரும் இப்படித்தான் சொல்லியிருக்கிறார். அரசு மீது அவர்கள் பழியைச் சுமத்துவது சரியில்லை. அரசு தன்னுடைய நிலையை உடனே தெளிவுபடுத்த வேண்டும். நிர்வாகம் சொல்வதை எதிர்க்கிறோம் அல்லது ஆதரிக்கிறோம். நிர்வாகம் சொல்கிறபடி பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம். போன்ற வகுப்புகளை மூட வேண்டுமென்று சொல்வதை எதிர்க்கிறோம் அல்லது ஆதரிக்கிறோம் என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும். இதன் காரணமாகவே அங்கு ஒரு பதட்ட நிலை உருவாகியிருக்கிறது. இன்று கூட அங்கே பதட்ட நிலை நிலவுகிறது. அரசு இதில் நேரடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவற்றையெல்லாம் அரசு பார்த்துக்கொண்டிருந்தால், இது பெரிய பிரச்சினையாக ஆகும். சிதம்பரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள ஏழையெளிய நடுத்தர மக்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் இப்படிப்பட்டவர்களுடைய குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு இதனால் பாதகம் ஏற்படும் என்பதால், அரசு ஓரிரு நாட்களுக்குள் நடவடிக்கை எடுத்து எந்தக் காரணத்தைக் கொண்டும் பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம். வகுப்புகள் மூடப்பட மாட்டாது என்கிற வாக்குறுதியை அளிக்க வேண்டும். வேறு பகுதிகளில் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று அந்த நிர்வாகம் அல்லது அரசு நினைத்தால், தாராளமாக எத்தனை கல்லூரிகள் வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம். மனப்பூர்வமாக அதனை அங்குள்ளவர்கள் வரவேற்பார்கள். எவ்வளவு கல்லூரிகள் வந்தாலும், அங்குள்ள மக்கள் அதனைப் பயன்படுத்திக்கொள்வார்கள். அந்த அளவுக்கு அது மிகவும் பின்தங்கிய ஒரு பகுதி. ஆனால் சிதம்பரத்தில் இருக்கின்ற அந்தக் கல்லூரியை மூடிவிட்டு வேறு எங்காவது அதைக் கொண்டு போனால், அந்தப் பகுதி மக்கள் அதை மிகவும் கடுமையாக எதிர்ப்பார்கள். இதை நான் அந்தப் பகுதி மக்களின் உணர்வினை உணர்ந்தவன் என்ற முறையில் சொல்கிறேன். இப்படிப்பட்ட பதட்ட நிலை நிலவும் போது, உள்ளபடியே அங்குள்ள நிலைமையை காவல் துறையினர் மற்றும் அதிகாரிகள் உணர்ந்து அரசுடன் தொடர்பு கொள்வதுடன் நிலைமையை மக்களுக்கும் தெளிவுபடுத்தலாம். அதை விட்டு விட்டு ஏதோ நிர்வாகத்திற்கு

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1981 ஆகஸ்ட் 27

ஆதரவாக இயங்குவதும், போராட்டத்தை ஒடுக்க நினைப்பதும் தவறு. மேலும் இப்படிப்பட்ட வேலை ஒரு டி.எஸ்.பி.-க்குத் தேவையில்லாத வேலை. அவருடைய வேலை சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவதுதான். சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய டி.எஸ்.பி.-யே அதற்கு பாதகம் ஏற்படும் வகையில் செயல்பட்டால், அதற்கு அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நெருக்கடி அங்கு இருப்பதால், நல்ல முறையில் அதிகாரிகள் செயல்பட வேண்டுமென்று அரசு அறிவிக்க வேண்டும். அல்லது அங்குள்ளவர்களிடம் இதுகுறித்து விசாரித்து அதிகாரிகள் சரிவரச் செயல்படவில்லை என்று அரசு உணர்ந்தால், அங்கிருந்து அப்படிப்பட்டவர்களை மாற்ற வேண்டும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம். போன்ற வகுப்புகளைத் தொடங்குவது குறித்து உடனே விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அரசு மீது அங்குள்ள மக்கள் நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசு ஆளுநர் உரையில் குறிப்பிட்டவாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்த வேண்டும். அப்படி திருத்தினால் அங்கு இப்போதுள்ள பதட்ட நிலை மாறி அமைதி ஏற்பட முடியும். ஆகவே ஆளுநர் உரையில் சொன்ன வாக்குறுதியை இந்த அரசு காப்பாற்ற வேண்டுமென்று வற்புறுத்தி கேட்டுக்கொண்டு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாற்றுத் தலைவரவர்களே, 1981-82 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த முதல் விவர அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்து வைக்க விழைகிறேன். 153.3 கோடி ரூபாய் கூடுதலாக இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கைக்கு மேல் தேவைப்படுகிறது என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்கத்தோடு கூடிய ஒரு அறிக்கையை நம் முன்னால் சமர்ப்பித்திருக்கிறார்கள். நிதி நிலை அறிக்கைக்குப் பிறகு சாட்டிய செலவினங்கள் எக்சஸ் ஆக செலவு செய்யப்படுகிறது. தேவைப்படுகிற இனங்களுக்குத் துணை மதிப்பீட்டின்படி. அல்லது துணை நிதிநிலை அறிக்கையின்படி நிதி பெறுவது என்பது மரபு. ஆனால் இங்கே அதற்காக கேட்கப்பட்டிருக்கிறதற்கு காரணங்களைச் சொல்லியிருக்கிறதைப் பார்க்கிறபோது, இவைகளையெல்லாம் நிதிநிலை அறிக்கையினைத் தருகிறபோதே மதிப்பிட முடியாதா என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டியிருக்கிறது. மதிப்பிட முடியாத செலவுகள் என்று பார்க்கிறபோது, வறட்சி நிலை தவிர பாக்கியிருக்கிற எல்லாச் செலவினங்களைப் பொறுத்த

981 ஆகஸ்ட் 27] [திரு. ம. சங்கரலிங்கம்]

வரையிலும், அவைகள் அனைத்தும் நிதிநிலை அறிக்கையில் கேட்கப்பட வேண்டியவைதான். அதற்கான காரணம் என்ன ஏற்பட்டது என்று தெரியவில்லை.

இருந்தாலும் விளக்கமாகத் தரப்பட்டிருக்கிற துணை மதிப்பீடுகளைக் கூர்ந்து பார்க்கிறபோது பக்கம் 2-ல் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

திருநெல்வேலி, சேலம் வட்டங்களில் புதிதாக ரெயில்வே போக்குவரத்து ஏற்படுத்துவதுபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம்பற்றி நிதி நிலை அறிக்கையிலேயே சொல்லியிருக்கலாம். முன்பே இருந்த திட்டம் தான் இது. இதற்காக வேண்டி 2 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் கூடுதலாகக் கேட்டிருக்கிறார்கள். அதுபோல் 3 ஆம் பக்கத்தில் மதுவிலக்குத் திட்டத்திற்காக கூடுதலாக 3 லட்சம் ரூபாய் கேட்டிருக்கிறார்கள். 4-வது பக்கத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்ட கிராம அதிகாரிகள் ஒழிப்புத் திட்டத்திற்குக் கூடுதலாகக் கேட்டிருக்கிறார்கள். அரசு எடுத்த அந்த நடவடிக்கையின் மூலம் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது என்பதை அவர் தெளிவாக எடுத்துச் சொன்னார். மாதம் ஒன்றுக்கு 25 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. கிராம அதிகாரிகளுக்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்களுக்குப் பயிற்சியளிக்க கணிசமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிதி நிலை அறிக்கையைத் தந்த போதே இதையும் அதில் காட்டியிருக்கலாம். இப்போது கேட்டதில் ஒன்றும் தவறில்லை. ஆனால் நிதித் துறை துணை நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்கும்போதே, மதிப்பீடு செய்யும்போது இப்படிப்பட்டவர்களையும் மதிப்பிட்டிருக்கலாம். பக்கம் 7-ல் மத்திய சமையற் கூடத்திலுள்ள மோட்டார் வண்டிகளைச் செப்பனிடவும் சீரமைக்கவும் 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் கேட்டிருக்கிறார்கள். இதையும் மார்ச் மாதத்திலேயே நிதிநிலை அறிக்கையிலேயே செய்திருக்க முடியும். செய்ய முடியாததல்ல.

(பிற்பகல் 5.00)

வறட்சியால் ஏற்பட்டதல்ல, வெள்ளத்தால் ஏற்பட்டதல்ல. பக்கம் 8-ல் 1979-80-ல் மாணவர்களுக்கு சலுகை சீட்டு வழங்கியதன் பொருட்டு பல்லவன் போக்குவரத்துக் கழகத்துக்கு 1 கோடியே 16 ஆயிரம் ரூபாய் வழங்க அரசு அனுமதித்தது. 1979-80-ல் வந்த செலவு, 1981 பட்ஜெட்டிலே சேர்த்துக் கொள்ள முடியாத நிலை இருந்து துணை மானியத்திலே கேட்கும் நிலை

இருந்தால், இது நிர்வாக அமைப்பிலே இருக்கக்கூடிய கோளாறா அல்லது காலதாமதமா எப்படி என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 9-வது பக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிறது, 12 லட்சம் ரூபாய் கூடுதலாகக் கொடுக்கிறார்கள். எம்.பி.பி.எஸ். மாணவர்களின் படிப்புக் காலத்தில் 1 வருஷத்தைக் குறைத்து, சென்ற ஆண்டு ஆகஸ்ட்டிலே அனுப்ப வேண்டியவர்களை டிசம்பர் மாதத்திலே அனுப்பியதால் இரண்டு பேரையும் சேர்ப்பதிலே ஏற்பட்ட செலவு என்று அங்கு சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலே டெக்னிக்கல் கல்விக்கு எல்லாம், கல்வி ஆண்டிலே ஜூலை மாதத்திற்குள் தேர்வு எல்லாம் முடிந்து மாணவர்கள் அனுப்பப்படுவார்கள். புகுமுக வகுப்பிலே மேத்ஸ் தனி க்ரூப், சயன்ஸ் தனி க்ரூப். இப்போது ஹையர் செகண்டரி வகுப்பிலே மேத்தஸ்—ஐயும், சயன்ஸ்—ஐயும் ஒரே பாடமாகச் சேர்த்து நான்கு படிக்கிறார்கள். ஹையர் செகண்டரி வகுப்பிலே வெற்றி பெற்ற மாணவர்கள் மருத்துவக் கல்லூரிக்கு, எஞ்ஜினியரிங் கல்லூரிக்கு அல்லது அக்ரிக்கல்சுரல் கல்லூரிக்குப் போகலாம். மூன்று கல்லூரிகளுக்கும் ஒரே நேரத்திலே ஆட்களைத் தேர்ந்தெடுத்து முடிவைத் தெரிவித்தால், ஹையர் செகண்டரி வகுப்பு தேரிய மாணவர்கள் ஏதாவது ஒன்றுக்குப் போக வாய்ப்பு இருக்கும். இப்போது எஞ்ஜினியரிங் கல்லூரிக்கான முடிவுகள் வந்திருக்கின்றன. ஆனால், மெடிக்கல் கல்லூரிக்கு இன்னும் வரவில்லை. ஒரு மாணவன் எஞ்ஜினியரிங் கல்லூரியிலே சேர்ந்துவிட்டு, அதற்குப் பிறகு அவனுக்கு மெடிக்கல் கல்லூரியிலே இடம் கிடைத்தால், இங்கே சேர்ந்துவிட்ட பிறகு அங்கே போகவேண்டும் என்று சொன்னால், எப்படி முடியும், அதில் எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன. இதைப்போல வேளாண்மைக் கல்லூரியும் கடந்த மூன்று ஆண்டுகளாக டெக்னிக்கல் எட்யூக்கேஷனிலே இருக்கும் குழப்பம் தீர்க்க முடியாததாகியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போன வருஷம் ஏற்பட்ட செலவுக்குக் கூட இந்த மார்ச் மாதத்திலே அதற்கான நிதியை வாங்காமல் இப்போது 12 லட்சம் ரூபாய் கேட்கிறார்கள். ஆகவே, மதிப்பீடு செய்யும் நிலையும், திட்டமிடும் நிலையும் படுதோல்வியடைந்திருக்கிறது; அப்போதைக்கப்போது ஏதோ இருக்கிற சட்டத்தையும் அரசியல் அமைப்பையும் மட்டும் வைத்து நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோமோ என்ற அச்சம் தான் எனக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது.

கல்வித் துறையிலே இருக்கும் குறைகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் மிகவும் தெளிவாகச் சொன்னார்கள். ஹையர் செகண்டரி கல்வித் திட்டத்தைக் கொண்டு வரும்போது, உயர் நிலைப் பள்ளிகளிலே

முதுமை பெற்ற ஆசிரியர்களை—அவர்கள் மேல் நிலைப் பள்ளிக் கல்வி போதிக்க அவர்களுக்கு இன்டக்டட் டீச்சர்ஸ் என்று பெயர் கொடுத்து, ஆயிரக்கணக்கான ஆசிரியர்களை அப்போது பயன்படுத்தினார்கள். அவர்களுக்கு வருஷத்திற்கு மூன்று—நான்கு மாதங்கள் என்று இரண்டு—மூன்று முறை அரசாங்கப் பணச் செலவு செய்து பயிற்சி அளிக்கப்பட்டு 'மேல் நிலைப் பள்ளிகளில் வகுப்புகள் நடத்த தகுதி படைத்தவர்கள்' என்று சொல்லப்பட்டதற்குப் பிறகு, இப்போது புதிதாக ஒரு அரசாணையைப் போட்டிருக்கிறார்கள். இந்த அரசாணையின்படி 'நீங்கள் 1983-க்குள் எம்.ஏ. பட்டம் பெறாவிட்டால், உங்களுக்கு இந்த ஸ்கேல் கிடையாது' என்று போட்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், 'இப்படிச் சொல்ல அரசுக்கு என்ன உரிமை இருக்கிறது' கல்லூரி ஆசிரியர்களுக்கு அதிக அளவு சம்பளத்தைக் கொடுத்து மினிமம் க்வாலிஃபிக்கேஷன் எம்.ஏ., எம்.பில், பிஎச்டி என்று சொன்னபிறகு கூட, ஐந்து ஆண்டுகளுக்கு உள்ளாக ஆராய்ச்சிப் பட்டம் பெறாவிட்டால், இந்த ஸ்கேலில் அவர்களுக்கு இன்கிரிமென்ட் இல்லை என்று மட்டும்தான் பல்கலைக் கழக மானியக் குழு சொல்லியிருக்கிறது. அங்கே அவர்களுக்கு ஐந்து ஆண்டுக்காலம் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், இன்கிரிமென்ட் மட்டும்தான் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இது அரசே செய்த மாற்றம். 15, 16, 20 வருஷங்கள் பணி புரிந்தவர்களுக்கு இரண்டு முறை பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. மூன்று-நான்கு மாத கால பயிற்சி அவர்கள் பெற்றிருக்கிறார்கள். அந்தப் பயிற்சியும் அரசினுடைய பணத்திலேயிருந்து பெற்றிருக்கிறார்கள். அவர்கள் வகுப்பு நடத்த தகுதி படைத்தவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது, மாணவர்களின் தரம் மிகவும் உயர்ந்திருக்கிறது. அதுவும் ஹையர் செகண்டரி மாணவர்களின் தரம் மிகவும் உயர்ந்திருக்கிறது. புகுமுக வகுப்பு படித்து வந்தவர்களுக்கு மெடிக்கல் காலேஜ் படிப்பு 5 வருடங்கள், ஆனால் இவர்களுக்கு 4½ வருட காலங்கள்தான் என்றெல்லாம் சொல்லி, துணை மானியக் கோரிக்கையில் 12 லட்சம் ரூபாய் கூடுதலாக வாங்கி, அந்த ஆசிரியர்களுக்கு இவ்வளவு பயிற்சி அளித்த பிறகும், இன்றைக்கு 'உங்களுக்கு ஹையர் செகண்டரி வகுப்பில் மாணவர்களைப் படிப்பிக்கும் தகுதி வேண்டும்' என்று சொன்னால், 'நீங்கள் எம்.ஏ. படிக்க வேண்டும்' என்று சொன்னால், இது என்ன அவல நிலை? இந்த அரசு சிந்தித்துத்தான் செயல்படுகிறதா என்ற ஐயப்பாடு எனக்கு இருக்கிறது. நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நீண்ட காலமாக கல்வித் துறையைத் தன் பொறுப்பிலே வைத்திருந்தவர்கள். அவரை இன்னும் மக்களில் பெரும்பாலோர் கல்வியமைச்சர் என்றே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். கல்வித் துறையிலே அவர் ஒரு பல்கலைக் கழகம் என்று சொல்லும் அளவுக்குப் புகழ் பெற்றவர். அவர் தயவுசெய்து

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 ஆகஸ்ட் 27

இதை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எத்தனையோ சிக்கல்கள் இன்னும் இதிலே இருக்கின்றன. அவற்றையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். கோவையிலே ஆசிரியைகள் 36 பேர்கள் சிறையிலே ரிமான்டிலே போய் உட்கார்ந்திருந்தார்கள். சிறைக்குப் போவது என்றால் சாதாரண காரியம் அல்ல. அரசியல்வாதி சிறைக்குப் போவான். ஏனென்றால், ஜெயிலுக்குப் போனால்தான் அடுத்த எலக்ஷனிலே ஜெயிக்க முடியும். ஆனால், இந்த ஆசிரியைகள் ஜெயிலுக்குப் போவதால் அவர்களுக்கு என்ன தகுதி வந்துவிடப் போகிறது? ஒன்றும் இல்லை. அப்படியிருந்தும் அவர்கள் ஜெயிலுக்குப் போகிறார்கள் என்றால், வேறு வழியில்லாமல்தான் போகிறார்கள். 80 ஆண் ஆசிரியர்கள் 15 நாட்கள் ரிமான்ட் முடிந்து வந்திருக்கிறார்கள். 35 அல்லது 36 ஆசிரியைகள் தங்களுடைய குழந்தைகளை, பெற்றோர்களை விட்டு விட்டு, வந்து சிறையிலே இருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் உண்மையாகவே நியாயமான பிரச்சினைகள் இல்லாமல் சும்மா ஜெயிலிலே வந்து இருப்பார்களா? அப்படி இந்த அரசு நினைக்கிறதா? அந்தப் பிரச்சினையைச் சுமுகமான முறையில் அணுகும் போக்கு இந்த அரசுக்கு இருக்கிறதா? கண்ணை மூடிக்கொண்டு பிரச்சினை இல்லை என்று சொன்னால் எப்படி? அவர்களின் பிரச்சினை என்ன என்பதைப்பற்றி, அவர்களை அழைத்து வைத்துப் பேசி, அதைத் தீர்க்கும் ஆற்றலை இந்த அரசு இழந்துவிட்டது என்றுதான் நான் கருதுகிறேன்.

அடுத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகம். அங்கே எத்தனையோ சிக்கல்கள், பிரச்சினைகள் இருக்கின்றன. அவைகள்பற்றி இந்த அவையிலே பல தடவை நாம் விவாதித்தோம். இப்போது அங்கே இருக்கும் நிலைமைகள் எந்த அளவுக்குச் செல்கின்றன என்பதை நாம் பார்க்க வேண்டும். இப்போது அங்கே பி.ஏ., பி.எஸ்ஸி, பி. காம் வகுப்புகள் கிடையாது என்று அறிவித்திருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்திலேயுள்ள ஹையர் செகண்டரி வகுப்பு படித்த மாணவர்கள் தங்களுடைய மேல் படிப்புக்கு எங்கே போவார்கள்? அதற்கு இந்த அரசு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்திருக்கிறதா? அவர்கள் மனம்போல் தங்களுடைய கல்வி நிலையங்களை மூட அவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? இந்தப் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்க்க வேண்டிய அரசு, இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறது. பிரச்சினைகள் வளர்வதற்கு இந்த அரசு சாதகமாக இருக்கிறது என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பெரிய போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. அங்கே இருக்கிற மக்கள் யாருமே ஒன்றும் கேட்கவில்லை. அங்கே இருக்கும் டிரான்ஸ்போர்ட்டுக்கு என்ன பெயர்

1981 ஆகஸ்ட் 27] [திரு. ம. சங்கரலிங்கம்]

வைக்க வேண்டும் என்று யாரும் கேட்கவில்லை. அப்படியிருக்க, அரசே திடீரென்று ஒரு பெயரை அறிவித்தார்கள். அதன் பின்னர், அந்த வட்டாரத்திலே இருக்கிற மக்கள், குறிப்பாக கல்குளம், விளவங்கோடு பகுதியிலே இருக்கின்ற மக்கள் மறைந்த திரு. நேசமணி அவர்களின் பெயரை வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையில், திரு. ஜீவா அவர்களுக்கு எந்த அளவுக்கு மதிப்பு உண்டோ அது போல திரு. நேசமணி அவர்கள் மீது மக்களுக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. 1930லே இருந்து தேசிய அளவிலே அரசியலிலே வளர்ந்தவர் ஜீவா அவர்கள். திரு. நேசமணி அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேரும் பிரச்சினை வந்தபோது, அந்தப் பிரச்சினையை தன் சொந்தப் பிரச்சினையாக எடுத்து நடத்தியவர். ஆனால் இப்போது 'சும்மா கிடக்கிற ஏதையோ எடுத்து ஊதி கெடுத்தார்கள்' என்று சொல்வார்களே அதுபோல சும்மா இருந்த சூழ்நிலையைக் கெடுத்திருக்கிறார்கள். அந்த ஊரிலே சே. டி. சி. என்று பஸ் போய் கொண்டிருந்தது. அப்படி போய்க்கொண்டிருந்ததை மாற்றி, ஜீவா போக்குவரத்துக் கழகம் என்று வைத்தார்கள். பிறகு அடுத்த பகுதியிலே உள்ளவர்கள் நேசமணி அவர்களின் பெயரை வைக்க வேண்டும் என்று சொன்னவுடனே, ஜீவா அவர்களின் பெயரையும் மாற்றினார்கள். இப்போது அங்கே என்ன நடக்கிறது? எனக்கு தந்தி வந்திருக்கிறது. 21 ஆம் தேதி அங்கே ஹர்த்தால் வைத்திருந்தார்கள். அங்கே நடக்கும் இரு சாராரின் போராட்டத்திற்கும் எங்களுடைய கட்சி ஆதரவு கொடுக்கவில்லை. இதுவல்ல நம்முடைய பிரச்சினை. நமக்கு எவ்வளவோ வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த அரசு மக்களுக்கு இருக்கும் பிரச்சினைகளை திசைதிருப்பத்தான் இப்படிச் செய்கிறதோ என்னவோ என்று ஐயப்படுகிறேன். கோயம்புத்தூரிலே ஆசிரியர்கள் பிரச்சினை, சிதம்பரத்திலே கடந்த இரண்டு வருடமாகப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. இப்போது கன்னியாகுமரி மாவட்டத்திலே ரேஷன் அரிசி நிறுத்தப்பட்டிருப்பதால், கிலோ அரிசி 5 ரூபாய் வரையில் விற்கப்படுகிறது. பக்கத்திலே கேரளா இருக்கிறது. அங்கே செல்லும் வாய்ப்பும் இருக்கிறது. இந்தப் பிரச்சினையின் காரணமாக மக்கள் அரசின் மீது போராட்டம் நடத்தாமல், அவர்கள் பஸ்ஸிலே கல் எறிந்துகொண்டு இருக்கட்டும் என்று அவர்களை இந்தப் பிரச்சினை உருவாக்கியதன் வாயிலாக விட்டிருக்கிறார்களோ என்னவோ? இரு சாராரும் இதுவரையில் சகோதரர்களாக வாழ்ந்தவர்கள் இப்போது ஒருவருக்கொருவர் வெறுப்பு கொள்ளும் அளவுக்கு ஒரு சூழ்நிலையை இந்த அரசாங்கம் திட்டமிட்டு உருவாக்கியிருக்கிறது என்று நான் ஐயப்படுகிறேன்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 ஆகஸ்ட் 27

(பிற்பகல் 5-10)

ஜீவாவின் பெயரை அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு வைக்கச் சொல்லி யாரும் சொல்லவில்லை. அப்படி வைத்துவிட்டு, அதை மாற்றுவது என்றாலும், அனைத்துத் தரப்பினரையும் அழைத்துக் கலந்து பேசியாவது மாற்றியிருக்கலாம். இப்போது இருக்கிற நிலையில் இரண்டு பெயரையுமே அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு வைத்துவிடுவார்களோ என்னவோ தெரியவில்லை. முதலில் நேசமணியின் பெயரை வைக்கக் கோரி, கல்குளம், விளவங்கோடு போன்ற தாலுக்காக்களில் அர்த்தால் நடத்தினார்கள். இப்போது ஜீவாவின் பெயரை வைக்கக் கோரி நாகர்கோயில், தோவாளை, அகஸ்தீஸ்வரம் போன்ற பகுதிகளில் உள்ளவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக நிலைமை என்னவாயிற்று என்றால் போலீசார் பொதுமக்களை வீடு புகுந்து தாக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆரல்வாய்மொழி, இறவைக்குளம், மருங்கூர் போன்ற பகுதிகளில் உள்ள 80-க்கும் மேற்பட்டவர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தந்தி வந்திருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில், இரண்டு பகுதியினரின் போராட்டத்தையும் ஆதரிக்கவில்லை. அரசின் தவறான அணுகுமுறை காரணமாக இதைக் கண்டிக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையைப் போலீசார் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு பொதுமக்களைத் தாக்க ஆரம்பித்து விட்டார்கள். மக்கள் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்த நிலை ஏன், இதை யாராவது விரும்புகிறார்களா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

இதோடு, என்னுடைய கல்லூரி தொடர்பான இன்னொரு பிரச்சினையையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்., காரணம் அது இந்தப் போராட்டத்தின் விளைவாக உண்டான பிரச்சினை. கட்டபொம்மன் போக்குரத்துக் கழகம் இரண்டாகப் பிரிகிறது என்ற காரணத்தால், ஒரு புதிய பிரச்சினையை அங்கே உள்ள அதிகாரிகள் எழுப்பிவிட்டார்கள். இந்த அரசாங்கத்திற்கு அங்கே உள்ள அதிகாரிகள் உதவி செய்கிறார்களா அல்லது தொல்லை தருகிறார்களா என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து என்னுடைய கல்லூரிக்கும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பல்வேறு கல்லூரிகளுக்கும் மாணவர்கள் படிக்க வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் இதுவரை கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தால் ஐம்பது சதவீத பயணக் கட்டணச் சலுகை அடிப்படையில் கன்செஷன் டிக்கட் வழங்கப்பட்டு வந்தது. இப்போது அந்தப் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கப் போகிறோம் என்று சொன்னதன் காரணமாக, திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் படிக்க வரும்

1981 ஆகஸ்ட் 27] [திரு. ம. சங்கரலிங்கம்]

மாணவர்களைப் பொறுத்தவரையில், ஆகஸ்ட் மாதத்திற்கான கன்செஷன் டிக்கட்டுகளைத் திருநெல்வேலியில் போய் வாங்கிக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பணகுடி, நாங்குனேரி, வள்ளியூர், சமரங்கபுரம் போன்ற இடங்களிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எங்கள் ஆரல்வாய்மொழி அறிஞர் அண்ணா கல்லூரியில் வந்து பயிலும் மாணவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஜூலை மாதத்திற்குப் பிறகு கன்செஷன் டிக்கட்டை இங்கே வழங்க மாட்டோம் என்று போக்குவரத்துத் துறையினர் சொல்லிவிட்டார்கள். மாணவர்களும், போக்குவரத்துத் துறையினரும் சந்திக்கும் வாய்ப்பைக் குறைப்பதற்காகவே, கல்லூரி முதல்வர்களான நாங்கள் எல்லாம் ஒன்று கூடி ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, மாணவர்களுக்கு கன்செஷன் டிக்கட் வழங்குவதற்கு கல்லூரிக்கு ஒரு நாள் என்று ஏற்படுத்தியிருந்தோம். 10 ஆம் தேதிக்குள் அனைத்துக் கல்லூரிகளுக்கும் கன்செஷன் டிக்கட் வழங்கப்பட வேண்டும். எங்கள் அறிஞர் அண்ணா கல்லூரிக்கு 10 ஆம் நாள் டிக்கட் வழங்கப்பட வேண்டும். கன்செஷன் டிக்கட் பெற வேண்டிய 700 மாணவர்களுக்கான தொகையோடு கல்லூரி கிளார்க் ஃபாரத்தைப் 'ஃபில் அப்' செய்து கொண்டு சென்றால், டிக்கட் வாங்கி வந்துவிடுவார். இது கல்லூரி முதல்வர்களான நாங்களே செய்து கொண்ட ஏற்பாடு. அரசாங்க அதிகாரிகளுக்கும், மாணவர்களுக்கும் சந்திப்பே இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட முறை இது. வழக்கப்படி இந்த மாதம் கல்லூரி கிளார்க், உரிய பணத்தோடும், ஃபாரத்தோடும், போக்குவரத்து அதிகாரிகளிடம் சென்று டிக்கட் கேட்டபோது, அதில் 142 மாணவர்களுக்கு அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து வருகிற காரணத்தால் இல்லை என்று சொல்லியனுப்பிவிட்டார். இவர்களெல்லாம் திருநெல்வேலிக்குச் சென்று வாங்கிக்கொள்ள வேண்டும் என்று சொல்லிவிட்டார். கட்டபொம்மன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் இன்னும் அதிகாரபூர்வமாக இரண்டாகப் பிரியவில்லை. பெயர் மாற்றத்தைப்பற்றிக் கலெக்டரிடம் கேட்டால், ஒரு சமயம் ஜீவா பெயரை எப்போதோ போட்டுவிட்டோமே என்கிறார், இன்னொரு சமயம் நேசமணியின் பெயரைத்தான் போட்டுவிட்டோமே என்கிறார். "என்னய்யா நேற்று அப்படிச் சொன்னீர்கள், இன்று இப்படிச் சொல்கிறீர்களே" என்றால், அரசாங்கத்திலிருந்து நேற்றைக்கு அப்படி ஃபோன் வந்தது, இன்றைக்கு இப்படி வந்தது, நான் என்ன செய்யட்டும் என்கிறார். அவர் அரசாங்கத்தின் 'மவுத் பீஸ்' தானே, அவர் வேறு என்ன செய்ய முடியும்?

இவ்வாறு நிர்வாகம் இரண்டாகப் பிரியாதபோது, 10 ஆம் தேதி மாணவர்களுக்கு கன்செஷன் டிக்கட் கிடையாது என்று இந்த 142 மாணவர்களுக்கும் சொல்லப்பட்டதால், இந்தத் தகவல் எனக்குக் கொடுக்கப்பட்டது. நான்

கல்லூரியின் முதல்வர் என்ற முறையில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் மேனேஜிங் டைரெக்டருக்கு ஃபோன் செய்து, "உங்கள் போக்கு வரத்துக் கழகம் இரண்டாகப் பிரிந்த பின்னால் வேண்டுமானால் இப்படிச் செய்யலாம். இப்போது மாணவர்களுக்கு கன்செஷன் டிக்கட் ஏற்கெனவே ஜூலை மாதத்தில் வழங்கப்பட்டதைப்போல வழங்குவதுதான் முறை" என்று எடுத்துச் சொன்னேன். "அரசாங்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் தவறு செய்கிறார்கள் என்றால், நிரந்தரமாக இருக்கிற அதிகாரிகளான நீங்க ளாவது ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டாமா? எதற்காகப் புதிய புதிய பிரச்சினைகளைக் கிளப்புகிறீர்கள் " என்றேன். அவர் ஏதோ சாக்குப் போக்கு சொன்னார். மாணவர்கள் என்னைச் சந்தித்து, நமது கல்லூரிக்கு மட்டும்தான் இவ்வாறு கன்செஷன் டிக்கட் கொடுக்கவில்லை, ஹையர் செகண்டரி பள்ளியைச் சார்ந்த 2 மாணவர்களுக்கும் பாலிடெக்னிக்கைச் சார்ந்த 3 மாணவர்களுக்கும் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து வந்தாலும், கன்செஷன் டிக்கட் கொடுத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட் டார்கள். அதோடு அவர்களுக்கு வழங்கப்பட்ட டிக்கட்டுகளின் நெம்பர் களையும் குறித்துக்கொண்டு வந்து என்னிடம் தெரிவித்தார்கள். ஒரு கல்லூ ரிக்கு இல்லை என்று சொல்லிவிட்டு, அதே நேரத்தில் இன்னொரு கல்வி நிலை யத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு கன்செஷன் டிக்கட் கொடுப்பது என்றால், அது 'டிஸ்கிரிமினேஷன்' ஆகிறது என்ற அடிப்படையில் மீண்டும் 14 ஆம் தேதி போக்குவரத்துக் கழகத்திற்கு ஃபோன் செய்து, இந்தச் செய்தியைச் சொன்னேன். அப்போது அவர்கள் "அப்படியானால் இது கவனிக்க வேண்டியதுதான், தந்து விடுகிறோம்" என்று சொன்னார்கள். 14 ஆம் தேதி மீண்டும் கல்லூரி கிளார்க்கை அனுப்பி வைக்கிறேன் என்று சொன்னேன். அப்போது மாணவர்கள் என்னைப் பார்த்து, "நீங்கள் இப்படி ஜனநாயக முறையில் கேட்டுக் கொண்டிருந்தால் இது நடக்காது, எங்களை விடுங்கள் நாங்கள் பஸ்களைக் கொண்டு வந்து இங்கே சேர்த்துவிடுகிறோம்" என்றார்கள். நான் அவர்களைச் சமாதானப்படுத்திவிட்டு, "அவர்களுக்கு நான் ஃபோன் செய்திருக்கிறேன், எனவே வேண்டுமானால் உங்களின் ரெப்ரசென்டேடிவ் இருவரை மட்டும் அனுப்பி வையுங்கள், அது போதும்" என்று சொன்னேன். அதன்படி கிளார்க்கும், 2 ரெப்ரசென்டேட்டிவ்களும் சென்றார்கள். காலை 10 மணிக்குச் சென்றவர்களை மாலை 4½ மணி வரை அங்கே நிறுத்தி வைத் திருந்துவிட்டு, மானேஜிங் டைரெக்டர் சென்னைக்குப் பெயர் மாற்றம் விஷய மாகப் போயிருக்கிறார், அவருக்குத் திடீரென்று அழைப்பு வந்து சென்று விட்டார், ஆகவே நீங்கள் 16 ஆம் தேதி வாருங்கள் என்று சொல்லியனுப்பிவிட் டார்கள். 16 ஆம் தேதி போனபோது மேனேஜிங் டைரெக்டர் சென்னையி லிருந்து திரும்பவில்லை. 17 ஆம் தேதி மாணவர்கள் ஒன்றுகூடி—அவர்கள்

அனைவரும் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து வருகிறார்கள்—திருநெல்வேலி மாவட்டமும் கன்னியாகுமரி மாவட்டமும் ஒன்று சேருகிற எல்லையில் ஒரு பஸ்ஸை தடுத்து நிறுத்திவிட்டார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர் கோயிலிலிருந்து திருநெல்வேலிக்கு வருகிற பாதையில் கன்னியாகுமரி மாவட்ட எல்லைக்குள் நிறுத்தினால், நான் எங்கே வந்து அவர்களை அழைத்து வந்துவிடுவேனோ என்று அவர்கள் திருநெல்வேலி மாவட்ட எல்லையில் நிறுத்தி விட்டார்கள். எங்கள் அறிஞர் அண்ணா கல்லூரி 1970 ஆம் ஆண்டு, தற்போது நிதியமைச்சராக இருக்கும் நாவலர் அவர்கள் கல்வியமைச்சராக இருந்தபோது ஆரம்பிக்கப்பட்டது. அவர் அடிக்கல் நாட்டியது அங்கே இப்போதும் இருக் கிறது. அன்று முதல் இன்றுவரை அந்தக் கல்லூரியில் எந்தவிதமான போராட் டமும் ஏற்படவில்லை. போராட்டம் நடத்த நாங்கள் விடுவதுமில்லை, மாண வர்களுக்கு அத்தகைய தேவை இதுவரை ஏற்படவுமில்லை. ஆனால் அப்படிப் பட்ட கல்லூரியைச் சார்ந்த மாணவர்கள் திருநெல்வேலி மாவட்ட எல்லைக்குள் கன்னியாகுமரி மாவட்டத்திற்குள் செல்லும் பாதையில் போக்குவரத்துக் கழகத்தின் பஸ்ஸைத் தடுத்து நிறுத்திவிட்டார்கள். காலை 9 ¾ மணிக்கு அப்படி அவர்கள் பஸ்ஸைத் தடுத்து நிறுத்திவிட்டார்கள். "எங்களுக்குக் கன்செஷன் டிக்கட் கொடுத்தால் பஸ்ஸை விடுவோம். தினசரி 10 ஆம் தேதி முதல் நாங்கள் முழுக் கட்டணத்திற்கான ரூபாய் கொடுத்துவிட்டு பயணம் செய்கிறோம்" என்று சொல்லி தடுத்து நிறுத்திவிட்டார்கள்.

இவ்வாறு அவர்கள் பஸ்ஸைத் தடுத்து நிறுத்திய இடம் பணகுடி போலீஸ் ஸ்டேஷனுக்கு உட்பட்ட இடம். உடனே அங்கேயிருந்து சப்-இன்ஸ்பெக்டர் வந்து மாணவர்களைப் பார்த்து, "உங்கள் கோரிக்கை இதுதானே, இதை நாங்கள் தீர்த்து விடுகிறோம், நீங்கள் இப்போது பஸ்ஸைப் போக விடுங்கள்" என்று சொல்லி பஸ்ஸை அனுப்பி வைத்துவிட்டார். மாணவர்களை, திருநெல் வேலியிலிருந்து கன்னியாகுமரி செல்லும் பாதையில் ஒரு திண்டுபோல் இருக்கும் இடத்தில் உட்கார வைத்துவிட்டு, பஸ்ஸை மட்டும் அனுப்பி வைத்துவிட்டார்.

காவல் துறையில், கலவரத்தை அடக்குவதற்கு என்று ஒரு தனி போலீஸ் படை வைத்திருக்கிறார்கள். ஒரு டெபுடி சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பூபதி என்பவர், இந்தப் படையைச் சேர்ந்தவர், ஒரு தனி வேனில் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறார். அவர் மீது 81 வழக்குகள் இருக்கின்றன, ஆனாலும் அவர் யாருடைய ஆதரவையோ வைத்துக்கொண்டு இன்னும் தப்பித்துக் கொண்டேயிருக்கிறார். ஒருமுறை அவர் குடித்துவிட்டு கலாட்டா செய்தார் என்றும், இரவு 2½ மணிக்கு லாட்ஜில் ஹவுசில் கலாட்டா செய்தார் என்றும் வழக்கு இருக்கிறது. அதோடு அவர் மீது ஒரு 'ரேப்' கேசும் இருக்கிறது.

இப்படி 81 வழக்குகள் உள்ள அவர் எப்படியோ காவல் துறையில் இன்னும் தப்பித்துக்கொண்டே இருக்கிறார். அவருக்கு யாருடைய ஆதரவு இருக்கிறது என்பது தெரியவில்லை.

பணகுடி சப்-இன்ஸ்பெக்டர் பேச்சைக் கேட்டு, அங்கே உட்கார்ந்திருந்த மாணவர்களிடம் சென்று யார் பஸ்ஸைத் தடுத்து நிறுத்தியது என்று கேட்டு அவர்களை அடித்திருக்கிறார். அவர் அடித்த சம்பவத்தைப் பற்றிய போட்டோக்களை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் தருகிறேன். இது திருநெல்வேலி எல்லையில் மாணவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தைக் காட்டும் படம். அடுத்தது அடிபட்ட மாணவர்களைக் காட்டும் படம். இப்படி 3 படங்கள் இருக்கின்றன.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எப்போது கல்வியமைச்சராக மாறினார்?

திரு. க. இராமமூர்த்தி: நிதியமைச்சர் கொடுத்தால்தானே கல்வியமைச்சர் அவர்கள் செலவழிக்க முடியும்.

திரு. ம. சங்கரலிங்கம்: எல்லோருக்கும் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. இவ்வாறு பச்சிளம் மாணவர்கள், முதலாண்டு பி.ஏ., பி.எஸ்ஸி. படிக்கும் மாணவர்கள், இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் 19 பேர் அவரால் தாக்கப்பட்டு மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். 7, 8 மாணவர்கள் அடிபட்டிருப்பதைப் பற்றிய போட்டோவையும் நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் துணைத் தலைவரின் அனுமதியோடு வழங்குகிறேன்.

இந்தச் சம்பவம் 9¾ மணிக்கு நடந்தது. அப்போது நான் கல்லூரியில் இருந்தேன். அப்போது திடீரென்று டிரான்ஸ்போர்ட் ஆபீசர் என்னிடம் வந்து, "எங்கள் மீதுதான் தப்பு, நாங்கள் கன்செஷன் டிக்கட்டைக் கொடுத்து விடுகிறோம். போன மாதத்தைப்போலவே இந்த மாதம் கொடுத்து விடுகிறோம்" என்றார். அப்போது பல மாணவர்கள் ஓடி வந்து இந்த மாதிரியாக மாணவர்கள் மீது லத்தி சார்ஜ் நடக்கிறது என்று தெரிவித்தார்கள். நான் அந்த இடத்திற்குப் போய்ப் பார்த்தபோது, அங்கே போலீஸ் இல்லை, வேறு ஆட்களும் அங்கே இல்லை. ஆனால் சாமான்கள் மட்டும் சிதறி இருந்தன. அப்போது மாணவர்களை அடித்த அந்த டேபுடி இன்ஸ்பெக்டர் அங்கே வேனில் வந்து சேர்ந்தார். டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனின் அசிஸ்டெண்ட் மானேஜர் மற்றும் இருவரும் என்னுடைய வைஸ் பிரின்சிபாலும் என்னோடு இருந்

தார்கள். அந்த டெபுடி இன்ஸ்பெக்டர் பூபதி அங்கே வந்து, "யார் பிரன்சிபால்"? என்று கேட்டார். டிரான்ஸ்போர்ட் அதிகாரிகள் என்னைக் காட்டினார்கள். நானோ அவரிடம் "நான் உங்களோடு பேச விரும்பவில்லை, நான் யாரிடம் பேச வேண்டுமோ அவரிடம் பேசிக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டேன். அவர் என்னைப் பார்த்து மாணவர்கள் எப்படி பஸ்ஸை நிறுத்தலாம் என்று கேட்டார். நான் உங்களோடு பேச விரும்பவில்லை, என்றேன். காரணம், அவர் ஒரு லெவலில் இல்லை. மதுவிலக்கு இல்லாததால் அவர் ஃபுல்லாக இருந்தார். எனவே நான் "உங்களிடம் பேச விரும்பவில்லை. You may do what you want சொன்னேன். அப்போது அவர் ஆடிக்கொண்டே இருந்தார். பிறகு நான் எஸ்.பி.-க்குப் ஃபோன் செய்தேன். விவரத்தைச் சொன்னேன். நான் ஆளை அனுப்புகிறேன் என்று எஸ்.பி. என்னிடம் தெரிவித்தார். அந்தச் சமயத்தில் மாணவர்கள் சிலர் என்னிடம் ஓடிவந்து, "மாணவர்கள் கொந்தளித்து இருக்கிறார்கள், ஐந்து மாணவர்களைக் காரில் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு செல்லுகிறார்கள்" என்று சொன்னார்கள். அந்த பூபதி என்னிடம் பேசும்போதே அவருடைய காரில் போலீஸ்காரர்களோடு 5 மாணவர்களை ஏற்றி வைத்துக் கொண்டிருந்திருக்கிறார். இது எனக்குத் தெரியாது. எனவே நான் மாணவர்களை அமைதிப்படுத்தி, "நீங்கள் யாரும் போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்லக்கூடாது, இந்தக் காம்பவுண்டைத் தாண்டக்கூடாது, கட்டுப்பாடாக இருந்தால்தான் வெற்றி பெற முடியும், கட்டுப்பாட்டை மீறி நீங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று தவறு செய்தால் அவர்கள் வெற்றி பெற்று விடுவார்கள்" என்று சொன்னேன். பிறகு நான் மீண்டும் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஃபோன் செய்து, "5 மாணவர்களைக் கொண்டு போயிருக்கிறீர்களா?" என்று கேட்டேன். காரணம், நான் அதை நம்பவில்லை. கல்லூரியை அடுத்து போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. 'மாணவர்கள் கொந்தளிப்பாக இருக்கும்போது, 5 மாணவர்களைக் கொண்டுபோய் நிலைமையை மோசமாக்க எந்த புத்தியுள்ள போலீஸ் அதிகாரியும் விரும்பமாட்டார் என்று எனக்குத் தெரியும். எவ்வளவு பெரிய

(பிற்பகல் 5-20)

தவறாக இருந்தாலும், அவர்களை விட்டு விடுவார்கள், பிறகுதான் கேஸ் போடுவார்கள்" என்றேன். இல்லை, உண்மையிலேயே மாணவர்களைப் பிடித்து வைத்திருக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். நான் திரும்பவும் எஸ்.பி.க்கு ஃபோன் பண்ணி ஐந்து மாணவர்கள் அங்கே இருக்கிறார்களாம், அவர்களை அடிக்கிறார்களாம் என்று சொன்னேன். மேலும் இங்கேயுள்ள மாணவர்கள் கொந்தளிக்கிறார்கள். 19 பேர் இங்கே அடிபட்டுக் கிடக்கிறார்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் "அடிஷனல் எஸ்.பி.-யை அனுப்புகிறேன், அமைதியாக இருங்கள்" என்று சொன்னார். அடிஷனல் எஸ்.பி.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 ஆகஸ்ட் 27

நாகர்கோவிலில் இருந்து வர வேண்டும். அவர் வருவதற்குள் மாணவர்கள் அத்தனை பேரும் போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னால் சென்று படுத்துக்கொண்டால், அந்த மாணவர்களை அடிக்கமாட்டார்கள் என்று சொன்னார்கள். அப்போது 700, 800 மாணவர்கள் இருந்தார்கள். வேண்டாம், நானே போய்ப் பார்க்கிறேன் என்று சொல்லி நான் போனேன். போலீஸ் ஸ்டேஷனுக்குள் வரக்கூடாது என்று டெபுடி இன்ஸ்பெக்டர் பூபதி சொன்னார். பிறகு மீண்டும் எஸ்.பி.யிடம் சொன்னேன். அதற்குப் பிறகு அடிஷனல் எஸ்.பி. வந்தார், அவர் விசாரணை செய்து எழுதி வாங்கிக்கொண்டார். என்னிடமும் ஸ்டேட்மென்ட் வாங்கினார். அவர் மாணவர்களை அட்ரஸ் பண்ணினார். நானும் மாணவர்களிடையில் அட்ரஸ் பண்ணினேன். பிறகு மாணவர்கள் கலைந்து சென்றார்கள். ஆனால் இன்று வரை அந்தக் கல்லூரி நடக்க முடியவில்லை. மாணவர்கள் கொந்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள எல்லா மாணவர்களும் உண்ணாவிரதம் இருந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை நடந்த பிறகும், அந்த அதிகாரி அங்கேயாதான் ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட அடியாட்களை வைத்துக்கொண்டு ஆட்சியை நடத்த முடியாது. அங்கிருந்து வந்த தந்தியையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் கொடுத்து விடுகிறேன். இத்தகைய நிலையில் நிர்வாகத் திறமையின்மை உள்ளது தான் தோன்றித்தனமாக நடக்கக்கூடிய 81 குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்ட அந்த டெபுடி இன்ஸ்பெக்டரை இன்னும் அங்கே வைத்திருக்கக்கூடிய தேவை என்ன என்பதை நான் கேட்க விரும்புகிறேன். இந்தக் குறிப்புகளையெல்லாம் அவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு நிதியமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, நடவடிக்கை எடுத்த பிறகு எனக்கும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அங்குள்ள மாவட்ட ஆட்சியாளரோடும், மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடும் தொடர்பு கொண்டு ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் பிரச்சினையை நாமே உண்டாக்கிவிட்டு தீர்க்காமலிருப்பது என்பது ஒருவேளை தற்காலத்தில் தீமையாகத் தெரியாது என்றாலும், எல்லா இடங்களிலும் பிரச்சினைகள் கிளம்பிவிட்டால், பிறகு ஒன்றும் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்து, அதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொன்ன சம்பவம்பற்றி ஐ.ஜி.க்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் அனுப்பிவிட்டோம். மற்ற விஷயங்களை எல்லாம் நேரம் வருகிறபோது சொல்லுகிறேன் என்று சொல்லி, சற்று அதிக நேரம் எடுத்துக்கொண்டதற்காக மன்னிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

1981 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே வழங்கியிருக்கிறார்கள். என்னுடைய பொறுப்பைப் பொறுத்த வரையில், நிதி மதிப்பீடு அல்லது ஒதுக்கீடு எந்த அளவிற்குச் செய்யப்பட வேண்டுமென்று விளக்கம் கேட்டிருந்தால், நான் சொல்வேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒவ்வொரு துறையிலும் நெடுந்தூரம் சென்று அந்தந்தத் துறைகளினுடைய நடவடிக்கைகளைப்பற்றி எடுத்துச் சொல்லியிருப்பதுபற்றி விளக்கம் தருகிற நிலையில் நிதியமைச்சர் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பெரும்பாலோர் எடுத்துச் சொன்ன கருத்துக்களின் அடிப்படையிலே பார்த்தால், முதல் துணை மதிப்பீட்டின் மீதான விவாதம் என்பதைவிட கல்வி மானியத்தின் துணை மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் என்று வைத்துக்கொண்டால், பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். அந்த அளவிற்கு பிரச்சினைகளை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். (சிரிப்பு). அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் அத்தனையும் உள்ளபடியே அந்தந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் அலசிப் பார்க்க வேண்டியவைகளாக இருக்கின்றன என்று கருதுகிறேன்.

சாதாரணமாக நிதிநிலை அறிக்கையைக் கொண்டுவருகிறபோது எதிர்காலத்தில் ஓராண்டுக் காலத்திற்கு என்னென்ன திட்டங்களை வகுக்கப் போகிறோம் என்று எடுத்துச் சொல்லி, அதுபற்றிய கொள்கைகளை எடுத்துச் சொல்லி, அந்தத் திட்டங்களை நிறைவேற்ற எந்தெந்தத் துறைகளுக்கு எவ்வளவு எவ்வளவு தொகையை ஒதுக்குகிறோம் என்று எடுத்துச் சொல்லிக் கொண்டு வருவதுதான் வழக்கம். ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையின் வாயிலாக சட்டமன்றப் பேரவை, மேலவை ஆகியவற்றின் உறுப்பினர்களுடைய ஆதரவோடு நிறைவேற்றப்பட்ட தொகைகளுக்கு மேலாக இந்த இடைப்பட்ட காலத்திலே ஏற்படுகிற செலவினங்களுக்கு அவையின் அனுமதியைப் பெறுகின்ற தன்மையிலேதான் துணை மதிப்பீடுகள் வருகின்றன. துணை மதிப்பீட்டில் எதிர்காலத் திட்டங்கள் பற்றி பெரும்பாலும் வருவதில்லை. திட்டங்கள் ஆண்டுக்காண்டு போடப்படுகிற நிதிநிலை அறிக்கையிலேதான் வரும். இடைக் காலத்திலே தேவைபட்டபோது, அவசர நிலை ஏற்பட்டபோது அல்லது இன்றியமையாத செலவினங்கள் வந்தபோது அதற்குரிய பணத்தை "கன்டின்ஜென்சி ஃபண்டிலிருந்து" செலவழித்துவிட்டு அதற்குப் பிறகு துணை மதிப்பீட்டை இந்த அவையிலே கொண்டு வந்து இந்த அவையின் அனுமதியைப் பெற்று நாம் அதைக் கணக்கிலே

கொண்டு வரவேண்டிய தன்மையிலேதான் நாம் இதைக் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசியபோது, பல்வேறு ஒதுக்கீடுகளை நிதிநிலை அறிக்கையிலேயே கொண்டு வந்திருக்கலாமே, இப்போது கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லையே என்று சுட்டிக் காட்டினார்கள். கூடுமான வரையில் நிதிநிலை அறிக்கை வருவதற்கு முன்னால் பார்ட்-2 திட்டங்கள் என்ற அளவிற்கு நான்கைந்து மாதங்களுக்கு முன்னாலேயே திட்டங்களை முடிவு செய்கிறோம். பிப்ரவரி-மார்ச் திங்களில் வரக்கூடிய பட்ஜெட்டுக்கு அதற்கு முன் உள்ள அக்டோபர்-நவம்பர் திங்கள்களிலேயே இரண்டாம் பகுதி திட்டத்திற்கான கோரிக்கைகள் அந்தந்தத் துறைகளிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றன. அதற்குப் பிறகு எதிர்பாரா செலவினங்கள் ஏற்படுகிறபோது, சிலபல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கருதுகின்றபோது "நியூ சர்வீஸ்" என்று ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். இதிலேதான் நிதித் துறைக்கும் மற்ற பல்வேறு துறைகளுக்கும் இடையிலே போராட்டங்கள் நடைபெறும் நிலைமைகள் வருகின்றன. அப்படி வருகிறபோது, அனுமதி கொடுக்காவிட்டால், அடுத்து வருகின்ற அக்டோபர்-நவம்பர் திங்கள்களில் இரண்டாவது பகுதி திட்டமாக முடிவு செய்து 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சேர்க்க வேண்டி வரும். ஆனால் அந்தத் துறையினர் அவசரத் தன்மையைக் கருதி உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். ஆகவேதான் புதிய சர்வீஸ் என்று கொண்டுவர வேண்டியிருக்கிறது. ஆனால் கூடுமான வரையில் நிதி அமைச்சர் என்ற முறையிலும், நிதி இலாக்கா என்ற முறையிலும் பார்ட்-2 திட்டத்தின் கீழ் கொண்டு வரலாம் என்று சொல்லும் பலவற்றைத் தடுத்து நிறுத்துகிறோம். "இன்றியமையாத செலவு" என்று வருகிறபோது ஒப்புதல் கொடுக்க வேண்டி வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களும், மற்றவர்களும் எடுத்துச் சொன்னதைப்போல, எதிர்பாராத விதமாக வறட்சி நிலை ஏற்பட்டதால், கூடுதலாகச் செலவழிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மத்திய அரசாங்கத்திலிருந்து வந்த இரண்டு குழுக்கள் ஆராய்ந்து பார்த்து அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையிலே, மத்திய அரசின் ஒப்புதலோடு ரூபாய் 49 கோடி சொச்சம் அளவிற்கு வறட்சி நிவாரணப் பணிகளுக்கான திட்டங்களை வகுத்து அவற்றை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். வறட்சி நிலை ஆரம்பிக்கும்போது, முதலில் 4 மாவட்டங்களில் இருந்துதான் தகவல்கள் வந்தன. பிறகு நான்கைந்து, ஆறு, ஏழு என்று ஆகி பிப்ரவரி-மார்ச் மாதங்

களில் 13 மாவட்டங்களில் வறட்சியின் கொடுமையான தன்மைகள் இருந்தது தெரிய வந்தது. அதனால்தான் அவ்வப்போது நிதி ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டிய அவசியம் வந்தது. அந்த அடிப்படையிலே பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

அதுமட்டுமல்லாமல், தன்னிறைவுத் திட்டம் என்ற அடிப்படையிலே 376 ஊராட்சி ஒன்றியங்களிலும் தனித்தனியாகத் திட்டமிட்டு ஊக்குவிக்கின்ற நிலை ஏற்பட்டால், நல்ல பலன் அடைய முடியும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருதி, அதன் சார்பாக எல்லாத் துறை செயலாளர்களும், அந்தந்தத் துறையைச் சேர்ந்த வல்லுநர்களும் சேர்ந்து கூட்டப்பட்ட கூட்டத்தில் முடிவு எடுத்ததற்கிணங்க 69 ஊராட்சி ஒன்றியங்களில் மேற்

(பிற்பகல் 5-30)

கொள்ளப்பட்டது. அதற்காக கிட்டத்தட்ட 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, இந்தத் தன்னிறைவுத் திட்டங்கள் 69 ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப் பட்டன. நிதிநிலை அறிக்கையில் இங்கே குறிப்பிட்டவாறு, 150 ஊராட்சி ஒன்றியங்களுக்கு இதை எடுத்துக்கொண்டு, அவற்றை தன்னிறைவுத் திட்டத்தின் கீழே கொண்டு வரவேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலே கிட்டத்தட்ட 80 கோடி ரூபாய் அளவுக்கு இந்த ஆண்டு திட்டமிட்டிருக்கிறோம். பொதுவாக மாவட்ட அளவிலே, மாநில அளவிலே திட்டமிடுவதன் காரணமாக, பரவலாக எல்லா இடங்களுக்கும் செயல்படுத்த முடியவில்லை. ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு அங்காங்கே இருக்கக்கூடிய குறைகளைப் போக்க முடியும் என்ற அளவில் திட்டமிட்டிருக்கிறோம். ஒவ்வொரு ஒன்றியத்திற்குள்ளும் ஆங்காங்கே குடிநீர் வசதிகளைச் செய்து தருவதற்கு குடிநீர் திட்டத்திற்கு முதலிடம் கொடுத்து அதை முதல் திட்டமாக மேற்கொண்டிருக்கிறோம். சாலை வசதிகள் செய்து தருவது, குடிநீர் வழங்குதல், பள்ளிக் கூடக் கட்டிடங்கள் கட்டுதல், மகப்பேறு இல்லங்கள் அமைத்தல், தாய்சேய் நல விடுதிகள் கட்டுதல், மயானத்திற்குச் செல்கின்ற வழிகள் அமைத்தல், ஆங்காங்கு சிறு சிறு பாலங்கள் அமைத்தல் ஆகிய பணிகளை இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கொண்டுவந்து, அவற்றை நிறைவேற்றுவதன் காரணமாக கூடுதல் செலவு ஆங்காங்கே ஏற்படுகிறது. அந்தத் தன்னிறைவு திட்டங்களை மேற்கொண்டிருக்கின்ற ஒவ்வொரு ஒன்றியத்திலும் இப்போது இருக்கின்ற பெரிய அதிகாரியான பி.டி.ஓ. அவர்கள் போதாது, கூடுதலாக ஒரு தனி பி.டி.ஓ. இதைக் கவனிக்க வேண்டுமென்று சொன்னதன் காரணமாக, அன்மையிலே அதற்கு அனுமதி அளித்திருக்கிறோம். அப்படிப் போட்டு

அந்தப் பணிகளை குறிப்பிட்ட காலத்தில் இந்த ஆண்டிலேயே நிறைவேற்ற வேண்டும் என்றும் அடுத்த ஆண்டிற்கு எடுத்துச் செல்லக்கூடாது என்றும் எதிர்பார்த்து இந்தச் செலவினங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

கூடுமானவரையில் மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல, இந்த அரசு தேவையான இனங்களுக்குச் செலவிடும். இந்த அரசைப் பொறுத்தவரையில், 'நான்-பிளானிங்'-க்கு அதிகமாகச் செலவு செய்யாத அளவுக்குப் பார்த்துக்கொள்ளும். கூடுமானவரையில் நாம் ஒதுக்கீடு செய்வது பிளானிங் அளவுக்குச் செலவழிக்கின்ற நிலைக்கு இருக்குமானால், மாநிலத்தினுடைய வசதிகளும் வாய்ப்புகளும் பெருகும். 'நான்-பிளானிங்' திட்டங்களுக்கு அதிகமாகச் செலவிடாமல் இருக்கக்கூடிய சூழ்நிலைகள் உருவானால், நாம் வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவழிக்கலாம். அப்படிச் செலவழிக்கக்கூடிய அளவுக்கு வழிவகைகளைக் கண்டறிந்து செலவழித்தால், பொது மக்களுக்கு வாய்ப்பு வசதிகள் பெருகும். அதில் நாம் கண்ணுங்கருத்துமாக இருந்து நிறைவேற்றி வருகிறோம். எவ்வளவோ நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்ட காலத்திலும், செலவினங்கள் பல்வேறு துறைகளில் வருகின்ற சூழ்நிலையிலும்கூட, நான் பெருமையோடு கூறிக் கொள்வேன், நம்முடைய மாநிலத்தினுடைய அதிகாரிகள், அலுவலர்கள் அத்தனை பேர்களின் ஒத்துழைப்பின் அடிப்படையிலே, நம் மாநிலம் இதுவரை ஓவர் டிராப்ட் வாங்கவேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு இருக்கிறது. மாநிலத்தினுடைய நிதிநிலையை நாம் சரிக்கட்டிக்கொண்டு வருகிறோம். வளர்ச்சித் திட்டங்களுக்கு நாம் அதிகப் பணம் செலவழிக்க வேண்டும். நான்-பிளானிங்-க்குச் செலவழிக்கக்கூடாது என்று கட்டுப்படுத்தி வருகிறோம். ஒரு 3, 4 மாதங்களுக்கு முன்னால், அங்கத்தினர்கள் பத்திரிகைகளைப் பார்த்திருந்தால் தெரிந்திருக்கும். ரிசர்வ் பாங்கு வெளியிட்டிருக்கின்ற அறிக்கையின்படி, அகில இந்தியாவில் இருக்கின்ற 22 மாநிலங்களில் கிட்டத்தட்ட 14, 15 மாநிலங்கள் ஓவர்டிராப்ட் மூலமாக ரூ. 148 கோடி வாங்கியிருக்கின்றன என்று கூட கணக்கு வந்தது. ஏன் இதை நான் இங்கே சொல்கின்றேன் என்றால், மாண்புமிகு அங்கத்தினர்கள் பலர் இங்கே எடுத்துக் கூறியதற்கு இணங்க, செலவினங்களை இறுக்கிப் பிடித்து, இந்தத் திட்டங்களை பரவலாகச் செய்ய வேண்டும் என்ற முறையிலே, செம்மையாகச் செய்ய வேண்டும் என்று கருதித் தான் அவைகளை நாம் துணை மதிப்பீடுகளிலே சேர்த்திருக்கிறோம். ஓரளவுக்குச் சேர்த்திருக்கிறோம். கூடுதல் மதிப்பீடுகள் இருந்தாலும், வரி போடாத அளவுக்கு அவசியமில்லாமல் துணை மதிப்பீடு வந்திருக்கிறது. சில சமயங்களில் துணை மதிப்பீடுகளோடு வரிகளும் சேர்ந்து வரும். அப்படி வரி போடாத அளவுக்கு, அதற்கு அவசியம் இல்லாத அளவிற்கு சரிக்கட்டி-

(மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

விட்டோம் என்ற அடிப்படையிலேதான் இந்தத் துணை மதிப்பீடுகள் வந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக மாண்புமிகு அங்கத்தினர்கள் இதற்கு ஆதரவு தந்திருப்பதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும், மாண்புமிகு திரு. சங்கரலிங்கம் அவர்கள் கூறியதற்கு இணங்க, பல்வேறு கருத்துக்கள் இங்கு கூறப்பட்டதற்கு இணங்க, அந்தந்தத் துறை அமைச்சர்கள் இதைப்பற்றிக் கூர்ந்து கவனிப்பார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், பல துறைகளிலே நடைபெறுகின்ற பல்வேறு விஷயங்கள் முழுவதையும் நிதி அமைச்சர் என்ற முறையில் நான் அறிந்திருக்க நியாயமில்லை. எந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு எவ்வளவு செய்யலாம் என்று பார்த்துச் செய்கிறோம். அந்தந்தத் துறைகளிலே நடக்கின்றவைகளையெல்லாம் அந்தந்தத் துறைகளைச் சேர்ந்த அமைச்சர்கள் அவ்வப்போது வாய்ப்பு ஏற்படும்போது எனக்கு எடுத்துச் சொல்வார்கள். கல்வித் துறையைப் பற்றி பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு பிரச்னைகளை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்து, அந்தத் துறையில் கூர்ந்து கவனித்து அதன் மூலமாக அவர்கள் சொன்ன குறைகளையும், சங்கடங்களையும் போக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொள்வார்கள் என்பதை குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

அடுத்து ஊதியம் தந்த வகைகளிலே, ஒரு சாராருக்குக் கொடுத்திருக்கின்ற அளவுக்கு வேறு சில சாராருக்குக் கொடுக்கப்படாத நிலைமைகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அது எந்த நிலையில் என்பதற்கான முழு விளக்கத்தை நான் பெற முடியவில்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி ஆராய்ந்து, அதற்கான குறிப்புரைகளை நிதித் துறைக்கு அனுப்பினால், அது நியாயமானதென்றால், அதை நிதித் துறை ஆராய ஆயத்தமாக இருக்குமென்பதைக் குறிப்பிடுகிறேன். அதிலே எந்தெந்த அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன, அங்கத்தினர்கள் சொல்வது போன்றவைகளை ஏன் செய்ய முடியவில்லை என்பதற்கான காரணங்களை, உறுப்பினர்களுக்குத் தெரியாமலிருந்தால், எடுத்துச் சொல்லி சமாதானப்படுத்தலாம். அந்தக் காரணங்களை எடுத்துச் சொல்லித் தெளிவுபடுத்தலாம். அங்கத்தினர்கள் சொல்வதிலே நியாயம் இருக்குமானால், அந்த நியாயத்தின் அடிப்படையிலே குறைபாடுகளைப் போக்க வழிவகை இருக்கிறதா என்பதை நிதித் துறை கவனிக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஆகஸ்ட் 27

மாண்புமிகு திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னதைப்போல, கூடுமான வரையில் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்க்கின்ற நிலைமை ஏற்கெனவே ஜூலை மாதம் 31 தேதிக்குள்ளாகவே இருந்தது. அது மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும், பொறியியல் கல்லூரியாக இருந்தாலும், பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு நடந்து முடிந்தவுடனே இரண்டு வார காலத்திற்குள்ளாகவே சேர்க்க வேண்டுமென்ற முறை இருந்தது. ஆனால் அதுவும் ஆண்டுக்காண்டு பல்வேறு நிலைமைகள், சிக்கல்கள் காரணமாக தள்ளிக்கொண்டே வந்து, இப்போது ஜூலையைத் தாண்டி, ஆகஸ்ட்டையும் தாண்டி, செப்டம்பரையும் தாண்டுகின்ற நிலைமை வந்திருக்கிறது. நமக்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும். அரசாங்கம் ஆணையிட்டு தேர்வை இந்தத் தேதியிலே நடத்த வேண்டும், அந்தத் தேர்வு முடிவுகளை இந்தத் தேதியிலே வெளியிட வேண்டும், அதற்குப் பிறகு கல்லூரிகளிலே மாணவர்களை குறிப்பிட்ட காலத்தில் சேர்க்க வேண்டும் என்று ஆணையிடுவது மிக மிக எளிதுதான். ஆனால் அந்த ஆணையை நிறைவேற்றுவதற்கு, கல்லூரிகளும், பள்ளிகளும் மற்ற துறைகளும் தகுந்த சூழ்நிலைகளை ஏற்படுத்தித் தரவேண்டிய பொறுப்புடையவைகளாக இருக்கின்றன. பல சமயங்களிலே அந்தத் தேர்வு நடக்க வேண்டிய நேரத்தில் நடந்தாலும், அதனுடைய முடிவுகள் வரவேண்டிய நேரத்தில் வந்தாலும், அதற்குப் பிறகு விண்ணப்பிக்க வேண்டிய நேரத்தில், விண்ணப்பம் அடிக்க வேண்டிய நேரத்தில் அடித்து அனுப்பினால்தான், சேர வேண்டிய காலத்தில் சேர வேண்டிய வாய்ப்பு ஏற்படும். ஆனால் பல சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற நிலைமைகள் என்ன? மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன மாதிரி, உணர்ச்சி பொங்க, வேறு வழியில்லை என்று சொல்லி, அதற்கும் வேலை நிறுத்தங்கள் எல்லாம் வருகின்றன. அந்த வேலை நிறுத்தங்கள் பெரும்பாலும் தேர்வு வருகின்ற நேரத்தில்தான் வருகின்றன. அப்போதுதான் அதற்கு அதிக முக்கியத்துவம் ஏற்படும் என்று கருதுகின்ற காரணத்தினாலே, வேலை நிறுத்தம் வருகின்றது. அதன் காரணமாக அது தள்ளப்பட்டு, தள்ளப்பட்டு நடைபெறவேண்டிய தேர்வும் ஓரளவுக்குத் தள்ளப்படுகிறது. அதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்படுகின்றன. அதற்குப் பிறகு இந்தப் போராட்டங்கள், வேலை நிறுத்தம் ஆகியவற்றின் காரணமாக தள்ளப்படுவது மட்டுமல்லாமல், மாணவர்களோ "நாங்கள் இப்போது எழுதுகின்ற நிலைமையில் இல்லை, எங்களுக்கு வேறு வேலைகள், அவசியமானவைகளாக இருப்பதன் காரணமாக, இந்தத் தேர்வை கவனிப்பதற்கு என்று எங்களுக்கு இரண்டு வார கால அவகாசம் இருந்தால்தான் கவனிப்போம்" என்று சொல்கிறார்கள். பல்கலைக் கழகத் துணை வேந்தர் மூலமாக தேர்வுகளை தள்ளச் செய்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் காரணமாகவும் தள்ளப்பட்டுக்கொண்டே வந்துவிட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1981 ஆகஸ்ட் 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாண்புமிகு அங்கத்தினர் திரு. சங்கரலிங்கம் அவர்களுடைய உணர்வுடன்
நானும் ஒத்துப்போகிறேன். கூடுமானவரையில், இந்த அரசுக்கும் அந்த
எண்ணம் இருக்கிறது. கல்வித் துறைக்கும் அந்த எண்ணம்தான் இருக்கிறது.
அடுத்த ஆண்டிலிருந்தாவது ஜூலை மாதத்திற்குள்ளாக முடித்துவிட
வேண்டும். ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத அளவுக்குச் செய்ய
வேண்டும். சில சமயங்களிலே தொழில் நுட்பக் கல்லூரி மற்ற கல்லூரிகள்
அட்மிஷன் வருகின்றபோது, பி.ஏ., பி.எஸ்ஸி ரிசல்ட் வரவில்லை என்பதற்காக
அட்மிஷனுக்குக் காத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடு
கின்றது. ஒரு பல்கலைக் கழகத்தினுடைய முடிவு வராததனால் தள்ளப்
பட்டுவிடுகிறது. ஒரு பல்கலைக் கழகத்தினுடைய முடிவு வந்தாலும், மற்ற
பல்கலைக் கழகத்தின் முடிவும் வந்து சேரட்டும் என்று இருக்கிறார்கள்.
அதற்குப் பிறகு வைத்துக் கொள்ளலாம் என்பதன் காரணமாகவும் தள்ளப்படு
கிறது. இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு, கூடுமானவரையில்
குறிப்பிட்ட காலத்திலே செய்யலாம். இந்த மாநிலத்திலே இருக்கின்ற மாண
வர்கள் இங்கே படிப்பதற்கும், இந்த மாநிலத்திலே இருக்கின்ற மாணவர்கள்
மற்ற மாநிலங்களுக்குச் சென்று, உரிய காலத்திலே சென்று படிக்கின்ற அள
வுக்கு வாய்ப்பு ஏற்படுகின்ற அளவுக்கு வேண்டிய முயற்சிகளை இந்தத் துறை
மேற்கொள்ளும் என்பதை இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொல்கின்றபோது, இந்தப்
போக்குவரத்திலே ஜீவா, நேசமணி இவர்கள் பெயர் வைப்பதிலே பிரச்சினை
வந்திருக்கிறதென்று குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே போக்குவரத்துக்குப்
பெயர் பெற்ற, புகழ் பெற்ற, நாட்டிற்கு பெருமை தேடித் தந்த, பெயரைக்
கேட்டாலே மக்களுக்கு ஒரு உணர்ச்சி, எழுச்சி, பெருமிதம் எழக்கூடிய நபர்
களின் பெயர்களை வைக்க வேண்டுமென்ற அளவுக்கு முயற்சி செய்யப்பட்டது.
அதன் காரணமாகத்தான் வரலாற்றுச் சிறப்புமிக்க சேரன், சோழன்,
பாண்டியன், பல்லவன் என்று வைக்கப்பட்டிருக்கிறது. அப்போது நான்கு
வேந்தர்கள் மட்டும் இருந்து, வேறு வேந்தர்கள் இல்லாமலிருந்த காரணத்தி
னாலே, அந்த 4 பேர்கள் வைக்கப்பட்டது. அந்த 4 பெயர்கள் முடிந்த
பிறகு, போக்குவரத்துக்கு இன்றைக்கு பெரியவர்கள், புகழ் பெற்றவர்கள்,
போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பெயரை வைக்கிறோம் என்றால், ஒரு பெருந்
தன்மையின் பேரில் தான் செய்யப்படுகிறது. அந்த அளவில்தான் அரசின்
எண்ணம் இருக்கிறதே தவிர, அந்த அளவில்தான் பெயர்கள் வைக்கப்படு
கிறதே தவிர, மாண்புமிகு அங்கத்தினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் கூறுவது
போன்று, அங்கே ஒரு கலவரத்தைத் தூண்டவேண்டுமென்றோ, கன்னியா
குமரியில் இருப்பவர்கள் இடையிலே சண்டை சச்சரவு உண்டாக்கி வம்பு

வழக்கில் ஈடுபடுத்தவேண்டுமென்றோ எண்ணம் அரசுக்கு கிஞ்சித்தும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜீவாவாகட்டும், நேசமணியாகட்டும்,

(பிற்பகல் 5–40)

இரண்டு பேருமே ஆளும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றுத் தொடர்பு உடையவர்களல்ல. ஜீவா அவர்கள் சுய மரியாதை இயக்கத்தில் தந்தை பெரியாரோடு இணைந்து நின்று பாடுபட்டவர்கள் வரிசையில் இருந்தவர். இரண்டு பேரும் அரசியல் கட்சிகளில் இருந்து பாடுபட்டவர்கள். ஆனால் ஒரு பெருந்தன்மையின் அடிப்படையிலே அவர்களைப் பாராட்ட வேண்டுமென்று நோக்கம்தான் இது. அதிலே சிக்கல் வந்துவிட்டது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இரண்டு சாரரையும் அழைத்து வைத்துப் பேசி, ‘ காம்பரமைஸ் பார்முலா ’ என்ற அளவிற்கு ஒரு முடிவெடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் மாச்சரியத்திற்கு இடமில்லாத அளவிற்கு ஒரு அமைதியான தன்மையிலே, அவர்களுடைய எண்ணங்களை அறிந்து செய்யலாமென்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். விரைவிலே அதுபற்றிச் சிந்தித்து, செயலாற்ற முற்படுவார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் குறிப்பிடுகின்றபோது கூட, சென்னையிலே இருக்கின்ற குடிசைப் பகுதிகளை மாற்றுகின்ற திட்டங்களுக்கு அதிக நிதியைச் செலவழிக்காமல் அந்தப் பகுதிகளை முன்னேற்றமடையச் செய்ய வாய்ப்புகளையும், வசதிகளையும் செய்வதில் நாட்டம் செலுத்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். குடிசை மாற்று வாரியம் மூலமாக அவ்வளவு குடிசைப் பகுதிகளையும் கற் கட்டிடங்களாக மாற்ற முடியுமா என்றால், இப்போது இருக்கின்ற பொருளாதாரத் தன்மைகளைப் பார்க்கின்றபோது, முடியாது. 15, 20 ஆண்டுகளுக்கு முன்னால் சென்னையைப் பொறுத்தவரையில், 600 குடிசைப் பகுதிகள் இருந்த இடத்தில் இன்றைக்கு 1800 க்கும் மேற்பட்ட குடிசைப் பகுதிகள் வந்துவிட்டன. அண்மையிலே எடுத்த சென்சஸ்படி மூன்றிலே ஒரு பகுதி குடிசையாக இருக்கின்றன. சென்னையிலே உள்ள 36 லட்சம் மக்களில் 12 லட்சம் மக்கள் குடிசைகளிலே வாழ்கின்ற மக்களாக இருக்கிறார்களென்று அண்மையிலே எடுத்த சென்சஸ் மூலம் அறிகிறோம். அந்த அளவிற்கு குடிசைகள் பெருகிக்கொண்டிருக்கின்றன. இவர்கள் அத்தனை பேருக்கும் வீடுகள் கட்டித் தரும் காலம் வருமானால், 4 பகுதிகளைக் கட்டிடமாக மாற்றுவதற்குள் 40 குடிசைப் பகுதிகள் வந்துவிடும். ஆகவே இரண்டையும் சேர்த்து நாம் எடுத்துக் கொள்ளும் முயற்சியின் அடிப்படையிலே ஒரு பக்கம் நம்முடைய நிதி வசதி, மற்றவைகளை [illegible]ண்டு, முக்கியமான பகுதிகளில், எக்காரணம் கொண்டும்

அந்தப் பகுதியை விட்டு நகர முடியாது என்பதால், அங்கே நிலையான கட்டிடங்களைக் கட்டித் தரும் முயற்சியில் ஈடுபடுகிறோம். மற்ற பகுதிகளில் குடிசை வாழ் மக்களுக்குத் தேவையான வாய்ப்பு வசதிகளைச் செய்து தருகிறோம். அவர்கள் நடந்து செல்லத் தக்க அளவிற்கு, அதாவது சாக்கடை நீர் போன்றவை வராத அளவிற்கு, சந்தாக இருந்தாலும் பாதை வசதி ஏற்படுத்துதல், ஒளி விளக்குகள் அமைத்தல், அங்கே வாழும் மக்கள் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல குடிநீர் குழாய்கள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்த இருக்கிறோம். உலக வங்கி 2 திட்டங்கள் மூலமாக இதற்கு உதவ முன் வந்திருக்கிறது. உலக வங்கியின் உதவியுடன் சென்னை பெரு நகர் திட்டம் முதல் கட்டமும், தொடர்ந்து இரண்டாவது கட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் குடிசை வாழ் பகுதியில் குடிசை மேம்பாட்டுத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. முதல் கட்டத்தில் 6 கோடியே 6 லட்சம் ரூபாயும், இரண்டாவது கட்டத்தில் 27 கோடியே 80 லட்சம் ரூபாயும் இப்பணிகளுக்காகச் செலவிடப்பட இருக்கிறது. குடிசை மாற்றும் பணிகளும் ஒரு பக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த இரண்டு திட்டங்களும் சென்னை நகரைச் செம்மைப்படுத்தும் திட்டங்கள். இதற்கு உலக வங்கியின் உதவியைப் பெற்றிருக்கிறோம். அதை மத்திய அரசின் மூலமாகப் பெறுகிறோம். அப்படி உதவி வருகின்றபோது கொஞ்சம்கூட குடிசைகளை நகர்த்த முடியாத இடங்களில் வாய்ப்பும், வசதிகளையும் பெருக்கும் தன்மையிலே ஈடுபட இருக்கிறோமென்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் மீனாட்சிபுரம் பற்றிப் பேசினார்கள். அது நாளை ஒத்திவைப்புத் தீர்மானமாக வருவதன் காரணமாக, அப்போது விரிவாக எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருப்பதன் காரணமாக, மீனாட்சிபுரத்திற்கு இப்போது நான் போக வேண்டாமென்று கருதுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஆசிரியர்களுக்கு இருக்கிற பல குறைபாடுகள், செய்ய வேண்டிய செயல்கள் செய்யப்படாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். அவற்றை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் ஆராய்ந்து அறிந்து, எனக்கு நிதி சம்பந்தமாக வருகின்றபோது அதை நிறைவேற்றுவேன் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

மேலும் பல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். தொடக்கப் பள்ளி ஆசிரியர்களைப்பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவற்றுக்கெல்லாம் விடையிறுக்கும் நிலையில்

நான் இல்லை. எந்தச் சூழ்நிலையில் எப்படிப்பட்ட முடிவுகள் எடுக்கப்பட்டன, ஏன் அந்த முடிவுகள் எடுக்கப்பட்டன என்று மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் இருக்கும்போது கேட்டால், அதற்குரிய விடைகள் கிடைக்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்று எடுத்துச் சொன்னார்கள். 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்று பாண்டியன் நெடுஞ்செழியன் மறைந்ததற்குப் பிறகு இளங்கோவடிகள் உணர்த்தினார்கள். இந்த நெடுஞ்செழியன் இப்போது இருக்கிற காரணத்தாலே, அதை நன்றாக உணர்ந்திருக்கிறேன், 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்பதை நான் தெளிவாக உணர்ந்திருக்கிறேன். அதனால்தான் அந்த நெடுஞ்செழியனுக்கு ஏற்பட்ட கதி இந்த நெடுஞ்செழியனுக்கு ஏற்படக் கூடாதென்ற காரணத்தாலே தான், அதைத் தெளிவாக அறிந்திருப்பதன் காரணத்தாலேதான், 'அறநெறி முகத்தே அரசின் கொற்றம்' என்ற தன்மையின் அடிப்படையிலே பணியாற்ற விரும்புகிறேன்.

ஓய்வு பெற்றவர்களுக்கு குறிப்பிட்ட தொகை அளிக்கப்பட வேண்டுமென்பது குறித்து ஆய்வு செய்ய ஒரு குழு அமைத்திருக்கிறோம். அவர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் குழு ஒரு தடவை கூடி இருக்கிறது. மறுபடியும் கூடும்போது, மற்ற மாநிலங்களில் உள்ளதையும் ஆராயும்படி சொல்லியிருக்கிறேன். அரசாங்கத்திலே பணி புரியும் எல்லா ஊழியர்களுக்கும் பொருத்தமான அளவிலே, இருவரும் சேர்ந்து அதை நிறைவேற்றும் அளவிலே, ஒரு முடிவெடுக்க ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அது குறித்து பல்வேறு கூறுகளை ஆராய்ந்து, தேவைப்பட்டால் அவர்களுடைய யோசனைகளையும் கேட்டு முடிவு செய்யுங்கள் என்று தலைமைச் செயலாளரிடம் குறிப்பிட்டிருக்கிறேன். அவர்கள் கூடிப் பேசியதற்குப் பிறகு, மறுபடியும் இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னால், தேவைப்பட்டால் அழைத்துப் பேசுவார்கள். மற்ற மாநிலங்களில் உள்ள நிலைமைகள் என்ன, ஒவ்வொருவரும் செலுத்த வேண்டிய பங்கு எவ்வளவு, அரசாங்கம் செலுத்த வேண்டிய பங்கு எவ்வளவு, அவர்கள் ஓய்வு பெறும்போது கொடுக்க வேண்டிய தொகை எவ்வளவு என்பதற்கெல்லாம் ஒரு நியதி வேண்டும். அவற்றைப் பற்றிப் பேசி, முடிவு எடுக்க இருக்கிறார்கள். ஐந்து ஆண்டிலே ஓய்வு பெறுகிறவர்கள், ஒரு ஆண்டிலே ஓய்வு பெறுகிறவர்கள், நான்கு ஆண்டுகளிலே ஓய்வு பெறுகிறவர்கள், பத்து ஆண்டிலே ஓய்வு பெறுகிறவர்கள், பதினைந்து ஆண்டுகளிலே ஓய்வு பெறுகிறவர்கள் என்றெல்லாம் வரும்போது, அதற்குத் தகுந்தாற்போல் இருக்க வேண்டும். முப்பது ஆண்டுக்காலம் கழித்து ஓய்வு பெறுகிறவர்களுக்குக் கொடுக்கும் தொகையை இரண்டு, மூன்று மாதங்களில் ஓய்வு பெறுபவர்களுக்குக் கொடுக்க

இயலுமா என்பது போன்ற சங்கடங்கள் எல்லாம் வருகின்றன. எப்படியிருந்தாலும், ஒரு நியாயத்தின் அடிப்படையிலே யோசித்துக் கொண்டிருக்கிறோம். அதுபற்றி விரைவிலே முடிவெடுப்போம் என்பதையும், தேவைப்பட்டால் குறிப்பிட்ட சங்கங்களின் பிரதிநிதிகளையும் அழைத்து, இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்று சொல்லி, அவர்கள் யோசனைகளையும் கேட்டு, இறுதி முடிவெடுக்கலாம். இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னால், சந்தேகத்திற்கு இடமில்லாமல் மற்றவர்களையும் கேட்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு முடிவெடுக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மறுநாளே ஓய்வு பெற்றாலும் 10,000 ரூபாய் வேண்டுமென்ற கோரிக்கைக்கேற்ப அரசுக்கு லாபம் தரும் திட்டத்தையே சங்கங்கள் வைத்திருக்கின்றன. ஆகவே இது குறித்து சங்கங்களை அழைத்துப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நியாயத்தின் அடிப்படையிலே 'நார்ம்ஸ்' வகுக்க வேண்டுமென்பதுதான் அரசின் நோக்கம். அதை இரு சாராரும் உட்கார்ந்து பேசி, ஒப்புக்கொண்டால் சங்கடங்கள் வராது. நாம் ஒரு முடிவிற்கு வந்த பிறகு ஒவ்வொருவருக்கும் ஒரு எண்ணம் வந்தால், அதை எடுத்துச் சொன்னால் பிரச்சினைகள் மீண்டும் வரும். ஏற்கெனவே இந்தத் திட்டம் நிறைவேறாமல் போனதற்குக் காரணம், ஒவ்வொருவரும் ஒன்று சொன்னதால்தான். எனவே மறுபடியும் தேவைப்பட்டால், அதைப்பற்றித் தெளிவான நிலைமைகள் ஏற்பட வேண்டுமென்றால், அவர்களையும் கூட்டிப் பேசுங்கள், அதற்குப் பிறகு இறுதி முடிவெடுங்கள் என்று தலைமைச் செயலாளரிடம் கூறியிருக்கிறேன்.

கிராம அதிகாரிகள்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு 25 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறதே என்று சொன்னார்கள். எனக்கும் அதில் வருத்தம்தான். மாதாமாதம் 25 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. கொடுக்க வேண்டாமென்றுதான் நினைக்கிறேன். வேறு வழியே இல்லை. தவிர்க்க முடியாத நிலை. உச்ச நீதி மன்றம் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : மாநிலச் சட்டம் அப்படி இருக்கிறது. இங்கே நிறைவேற்றிய சட்டம் அதுபோன்ற சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அப்போதே சங்கடம் வருமென்று நாங்கள் தெரிவித்தோம்.

[1981 ஆகஸ்ட் 27

(பிற்பகல் 5-50)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அநேக சட்டங்களை நாம் நிறைவேற்றும்போது இப்படியும் வரலாம், அப்படியும் வரலாம். நாங்கள் இப்படி நினைத்தோம். நீங்கள் அப்படி நினைத்தீர்கள். ஆனாலும் கூட இது இப்போது தவிர்க்க முடியாத ஒரு நிலையில் இருப்பதால் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை விரைவில் எதிர் பார்க்கிறோம்.

தலைமைச் செயலாளர் பதவிபற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். நிர்வாகம் செய்கின்ற சூழ்நிலையில் இதெல்லாம் வருவது தான். தலைமைச் செயலாளருக்குச் சரி சமமான அந்தஸ்தை நான்கு பேருக்குக் கொடுத்து விட்டு பிறகு தான் தலைமைச் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். இப்படி தலைமைச் செயலாளராக ஆக்கப்பட்டிருக்கின்ற முன் தன்மைகள் கூட உண்டு. ஆக, அவர்களுக்கு தலைமைச் செயலாளருக்குரிய அந்தஸ்து கொடுக்கப் பட்டிருக்கிறது. தலைமைச் செயலாளர் ஒருவர் தான். ஆக, இது சாதாரணமாக நடைபெறுகிற ஒன்று தான். இது நிர்வாகத் தன்மையைப் பொறுத்த ஒன்று தான்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதுபற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனித்துக் கொண்டிருப்பதால், இப்போதுள்ள சூழ்நிலைகளைப்பற்றி, வாய்ப்பு ஏற்படும்போது, அவர்கள் பதில் சொல்வார்கள்.

அறிஞர் அண்ணா கல்லூரி மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அது வருந்துதற்குரிய ஒன்று. அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில், மற்றும் அவர்கள் கொடுத்திருக்கிற விண்ணப்பத்தின் அடிப்படையிலும் அவற்றை முதலமைச்சர் அவர்கள் மூலமாக உரிய துறைக்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றும் இந்த ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையின் மீது கருத்துக்கள் பல்வேறு உறுப்பினர்களால் வழங்கப் பட்டுள்ளன. அவற்றின் மீது அந்தந்தத் துறையினர் கவனம் செலுத்தி உரிய முறையில் தொடர்ந்து நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்து இத்துடன் என் உரையை முடித்து அமைகிறேன்.

1981 ஆகஸ்ட் 27]

* **திரு. செ. முத்துசாமி :** மதுவிலக்குத் தளர்த்தப்பட்டிருப்பதால் அதிக வருமானம் இப்போது வருகிறது. வருமானம் உயர்ந்துவிட்டிருக்கிற நிலையில் கல்விக்காக நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருந்த 22 சதவிகிதத் தொகையை உயர்த்துவதற்கான நோக்கம் அரசிடம் இருக்கிறதா ? மற்ற மாநிலங்களில் எல்லாம் மொத்த வருவாயில் 37 சதவிகிதம், 40 சதவிகிதம் என்று கல்விக்காக உயர்த்தியிருக்கிறார்களே, அதுபோல் நம்முடைய மாநிலத்திலும் அதிகமான வருவாய் வந்துவிட்ட நிலையில் கல்விக்காக அதிகமாக ஒதுக்கக்கூடிய எண்ணம் அரசுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி, வேறு மாநிலங்களில் 37 சதவிகிதம், 40 சதவிகிதம் என்ற அளவுக்கு ஒதுக்குகிறார்களா என்பதுபற்றித் தெரியவில்லை. (சிரிப்பு) ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 24 சதவிகிதம், 23 சதவிகிதம், 22 சதவிகிதம் என்ற அளவிற்கு தொடர்ந்து 15, 20 ஆண்டுகளாக கல்விக்காக ஒதுக்கிக்கொண்டு வருகிறோம். மதுவிலக்கைத் தளர்த்தியதன் காரண காரியங்களை ஏற்கெனவே எடுத்துச்சொல்லியிருக்கிறோம். இந்த வகையில் நிதி சேர்கிறபோது இரண்டு, மூன்று பிரச்சினைகளையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். நிதிநிலை அறிக்கையில் 121 கோடி ரூபாய்க்கான டெபிசிட் ஏற்பட்டது. அந்தப் பற்றாக்குறையை இந்த வருவாயின் மூலம் சரிக்கட்ட முடியுமா என்ற ஒரு எண்ணத்தையும் வைத்திருந்தோம். அதோடு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான திட்டங்களை நிறைவேற்ற மாநில அரசு 3,150 கோடி ரூபாயை திரட்டும் என்று நாங்கள் உறுதிமொழி வேறு கொடுத்திருந்தோம். ஆகவே இவற்றையும் கவனிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது மாதிரி, கல்விக்காக அதிகத் தொகை ஒதுக்க வேண்டியது தான். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை, நூற்றுக்கு 54 பேர் படித்தவர்கள். நூற்றுக்கு 46 பேர் தான் 'இல்லிட்டரசி'. அகில இந்திய அளவில் பார்த்தால், நூற்றுக்கு 34 பேர் தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். நூற்றுக்கு 66 பேருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. கல்விக்காக முதலீடு செய்வது, 'இன்வெஸ்ட்மென்ட் இன் எஜுகேஷன்' செய்வது மிகவும் முக்கியமான ஒரு முதலீடு என்ற முறையில் வேறு எந்த ஒரு துறைக்கும் இல்லாத அளவுக்கு கல்விக்காக நாம் செலவு செய்கிறோம். இந்தத் தலைமுறையில் கொஞ்சம் அதிகமாக கல்விக்காகச் செலவு செய்தால், 10 அல்லது 15 ஆண்டுகளுக்குப் பிறகு எப்படியும் 5 ஆயிரம், 10 ஆயிரம் கோடி அளவுக்கு செல்வம் கிடைக்காமலா போய்விடும் என்று நினைத்துத்தான் அதிகமாக நாம் கல்விக்காகச் செலவு செய்கிறோம். கல்விக்காக வாய்ப்புகள் கிடைக்கும்போதெல்லாம், கூடுதலாகச் செலவு செய்ய வேண்டுமென்ற

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஆகஸ்ட் 27

எண்ணத்தில் தான் இந்த அரசு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொல்லியதுபோல், ஒன்பது ஆண்டுக் காலம் நான் கல்வி அமைச்சராக இருந்ததாலும், இப்போது நிதியமைச்சராக இருக்கிறபடியாலும், கல்வியினுடைய முக்கியத்துவத்தைப் பார்த்தவன், உணர்ந்தவன் என்ற வகையில் அதற்கேற்ப செயல்படுவேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 5-34)

9. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

76. Notification issued with G.O. Ms. No. 832, Forests and Fisheries, dated the 13th July 1981 in regard to certain rules for summarily evicting any person unauthorisedly occupying in any reserved forests [Laid on the table of the House under section 64-A of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882).]

77. Notification issued with G.O. Ms. No. 499, Commercial Taxes and Religious Endowments, dated the 12th May 1981 in regard to certain amendments to the rules published with the Revenue Department Notification No. 313, dated the 15th December 1925. [Laid on the table of the House under section 26 (3) of the Tamil Nadu Survey and Boundaries Act, 1923 (Tamil Nadu Act VIII of 1923).]

78. Notification issued with G.O. Ms. No. 658, Commercial Taxes and Religious Endowments, dated the 11th June 1981 in regard to the exemption of the tax payable by any dealer under the Tamil Nadu General Sales Tax Act, 1959 on the sale of X-ray films to the Society of the Sacred Heart Leprosy Centre, Sakkottai, Thanjavur District. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

79. Notification issued with G.O. Ps. No. 741, Commercial Taxes and Religious Endowments, dated the 30th June 1981 in regard to certain amendments to the first Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

80. Notification issued with G.O. Ps. No. 421, Commercial Taxes and Religious Endowments, dated the 23rd April 1981 in regard to the exemption of the tax payable by any dealer under the Tamil Nadu General Sales Tax Act, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

81. Notification issued with G.O. Ps. No. 467, Commercial Taxes and Religious Endowments, dated the 4th May 1981 in regard to certain amendments to the Commercial Taxes and Religious Endowments Department Notification No. II (1)/CTRE/705/80, dated the 3rd November 1980. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

82. Audit Report on the Accounts of the Tamil Nadu Housing Board for the year 1975-76. (English). [Laid on the table of the House under section 125 (2) of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]

B. Reports, Notifications and Other Papers.

11. Ninth Report of the Committee on Public Undertakings on the Accounts of the Tamil Nadu Electricity Board for the years 1976-77 and 1977-78. (Tamil and English).

12. Ninth Report of the Committee on Public Accounts on the action taken by the Government on the Recommendations contained in its Reports on the Excesses Over Voted Grants and Charged Appropriations for the years 1970-71, 1971-72 and 1972-73 (Tamil).

13. Tenth Report of the Committee on Public Accounts on the action taken by the Government on the Recommendations of the Committee (1977-78) contained in its Second Report on the Advance Report of the Comptroller and Auditor-General of India for the year 1972-73. (Tamil and English).

* 14. The Tamil Nadu Places of Public Resort (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 52 of 1981), as passed by the Assembly.

* 15. The Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1981 (L.A. Bill No. 54 of 1981), as passed by the Assembly.

* 16. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land), Bill, 1981 (L.A. Bill No. 56 of 1981), as passed by the Assembly.

* 17. The Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Amendment Bill, 1981 (L.A. Bill No. 57 of 1981), as passed by the Assembly.

* 18. The Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Second Amendment Bill, 1981 (L.A. Bill No. 58 of 1981), as passed by the Assembly.

* 19. The Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Bill, 1981 (L.A. Bill No. 59 of 1981).

---

* Circulated to all M.L.Cs. on 25th August 1981.

(இணைப்பு I

100-ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 19-க்கான விடையைக் காண்க.)

கர்நாடக அரசு கபினி மற்றும் ஹேமாவதி ஆறுகளின் குறுக்கே, தமிழ்நாடு மற்றும் கர்நாடக அரசுகளின் 1924-ஆம் ஆண்டு உடன்பாட்டின்படி தமிழ்நாட்டின் சம்மதம் பெறாமல் நீர்த்தேக்கங்களைக் கட்ட ஆரம்பித்ததால், இதனை இந்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் தனது மறுப்பை தமிழ்நாடு அரசு தெரிவித்தது. இந்திய அரசு இத்திட்டங்களுக்கு அனுமதி அளிக்காதிருந்தபோதிலும், கர்நாடக அரசு கட்டுமானப் பணிகளைத் தொடர்வதை நிறுத்தவில்லை. இப்பிரச்சினையைக் கருத்தில் கொண்டு, காவிரி நீர்ப்பங்கீடு சம்பந்தமாக தமிழக அரசின் வேண்டுகோளுக்கிணங்க, மத்திய அரசு சம்பந்தப்பட்ட மற்ற மாநில அரசுகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியது. ஆனால், அவை பலனளிக்கவில்லை. 1970 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் இந்த பிரச்சினையைத் தீர்க்க தீர்ப்பாயம் (Tribunal) ஒன்று

அமைக்கும்படி மத்திய அரசை தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டது. அவ்வமயம் கர்நாடக மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் இருந்தது. மத்திய அரசு தீர்ப்பாயம் அமைக்க கட்டளை இடுவதற்கு டெல்லி தலைமை நீதிமன்றத்தில் 1971 ஆம் ஆண்டு உரிமையியல் வழக்கு ஒன்று தமிழ்நாடு அரசால் தொடரப்பட்டது. இந்தப் பிரச்சினையை பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்ற இந்திய பிரதமரின் அறிவுரையின் பேரில், வழக்கு திரும்பப் பெறப்பட்டதோடு தீர்ப்பாயம் அமைப்பதும் வற்புறுத்தப் படவில்லை. தமிழ்நாடு அரசின் வேண்டுகோளுக்கிணங்க மத்திய அரசு சம்பந்தப்பட்ட மாநில அரசுகளிடம் பல தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடத்தியது. கடைசியாக 27—12—1980 அன்று சென்னையில் மத்திய விவசாய மற்றும் பாசன அமைச்சர் அவர்கள் தலைமையில் நடந்த தமிழ்நாடு, கர்நாடக, கேரள மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநில முதலமைச்சர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் காவிரி நீர்ப்பங்கீடு பற்றி விவாதிக்கப்பட்டது. இம்மாநாட்டில் சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் காவிரி நீர்ப்பங்கீடு பற்றிய தனது வரைவு செயற்குறிப்பை மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டுமென்றும், அதே சமயத்தில் சம்பந்தப்பட்ட மற்றைய மாநில அரசுகளுக்கும் அனுப்ப வேண்டுமென்றும், மீண்டும் இதுபற்றி விவாதிக்க பெங்களூரில் கூடலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டது. இதையொட்டி 31—12—1980 அன்று நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தமிழக அரசு ஒரு வல்லுநர் குழுவை அமைக்கலாமென்று முதல்வர் கூறிய கருத்தை ஏற்று அக்குழுவின் கருத்தை அனைத்துக் கட்சியினர்கள் கலந்துகொள்ளும் கூட்டத்தில் விவாதித்து முடிவெடுத்து மைய அரசின் நீர்ப்பாசன மற்றும் விவசாய அமைச்சர் அவர்களுக்கு அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானத்திற்கிணங்க காவிரி நீர்ப்பங்கீடு பற்றிய விவரங்களை ஒருங்கிணைத்து அரசுக்கு அறிக்கை கொடுக்க வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. இவ்வறிக்கை அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. முடிவாக, 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மத்திய அரசுக்கு அனுப்பப் படவுள்ள செயற்குறிப்பு ஒன்று 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நடந்த அனைத்துக் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க இந்த செயற்குறிப்பு இந்திய அரசுக்கு 1981 ஆம் ஆண்டு மே திங்களில் அனுப்பப்பட்டுள்ளது. இந்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

இணைப்பு

(105 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

சென்னை மத்திய பல்தொழில் பயிற்சி பயிலக மாணவர்கள் 4—8—1981 முதல் எந்தவித குறைகளையும் குறிப்பாக சுட்டிக்காட்டாமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். எவ்வித குறிப்பிட்ட கோரிக்கை குறித்தும் கல்வி நிலைய முதல்வரிடம் எழுத்து மூலமாகவோ அல்லது நேரிடையாகவோ தெரிவிக்காமையால் மாணவர்களுடைய வேலை நிறுத்தத்திற்கு காரணம் முதல்வருக்கு தெரியவில்லை. மேலும் மாணவர்கள் தங்கள் கோரிக்கைகளை பிரதி தினமும் மாற்றி கொள்கின்றனர். 7—8—1981 அன்று மாணவர் மன்ற தேர்வு உடனடியாக 10—8—1981-க்குள் நடக்க வேண்டும் என்று கோரி, வேலை நிறுத்தம் செய்தனர். முதலாமாண்டு மாணவர் சேர்க்கை முடிவு பெறாமையால் தேர்வு நடைபெற இயலாது. இவ்வாறு இனம் தெரியாத கோரிக்கையின் பேரில் மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமையால் இரண்டாம், மூன்றாம் ஆண்டு முழு நேர படிப்பு மாணவர்களுக்கு வகுப்புகள் நடைபெறுவதை கல்வி நிலைய முதல்வர் நிறுத்தி வைத்துள்ளார். மேலும் முதலாமாண்டு மாணவர்களுக்கும் பகுதி நேர வகுப்பு எல்லா வருட மாணவர்களுக்கும் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் ஒரு சில நாட்களுக்குள் இரண்டாம், மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கும் வகுப்புகள் தொடங்கப்படும்.

மேலும் தற்பொழுது பல்தொழில் பயிற்சி பயிலக முழு நேர மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் தேர்வு கட்டணம் செமஸ்டருக்கு ரூ. 20. இது சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு செமஸ்டர் முறை அமுல்படுத்தப்பட்டபோது நிர்ணயிக்கப்பட்ட தொகையாகும். இந்த தேர்வு கட்டணத்தை இதுவரை அரசு மாற்றியோ, திருத்தியோ நிர்ணயிக்கவில்லை. எனவே மத்திய பல்தொழில் பயிற்சி பயிலக மாணவர்கள் செய்யும் வேலை நிறுத்தம் தேர்வு கட்டணத்தைப் பற்றியது அல்ல.

இணைப்பு

[1[illegible]7 ஆம் பக்கத்தில் இனம் 6(1)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 56 OF 1981.

(As passed by the Assembly.)

A Bill further to amend the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Act, 1981.

(2) (*a*) The provisions of this Act, except clause (*a*) of section 2, shall be deemed to have come into force on the 30th June 1981.

(*b*) Clause (a) of section 2 shall be deemed to have come into force on the 15th January 1972.

2. *Tamil Nadu Act 58 of* 1961, *as subsequently modified, to have effect subject to modifications.*—The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961) as subsequently modified, shall have effect as if, in section 94-B,—

(*a*) in sub-section (1), for the words "seven years", the words "eight years" had been substituted :

(*b*) to sub-section (1), the following proviso had been added, namely :—

"Provided that where the said corporation is of opinion that any land held by it under any such contract of tenancy, is not longer required for the purposes of that corporation, then the said corporation may terminate such contract of tenancy in respect of such land and release such land to the landowner concerned.".

3. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Ordinance, 1981 (Tamil Nadu Ordinance 8 of 1981), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anythin done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the corresponding provisions of the principal Act, as amended by this Act.

இணைப்பு IV

[135 ஆம் பக்கத்தில் இனம் 6 (2)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 57 OF 1981.

(As passed by the Assembly.)

A Bill further to amend the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Act, 1978.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Amendment Act, 1981.

(2) It shall come into force at once.

2. *Amendment of section* 21, *Tamil Nadu Act* 24 *of* 1978.—In section 21 of the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Act, 1978 (Tamil Nadu Act 24 of 1978), in sub-section (1),—

(i) in clauses (*a*) and (*b*), after the words 'exempt', the words "whether prospectively or retrospectively and" shall be inserted ;

(ii) in clause (*c*), after the word 'exempt', the words "whether prospectively or retrospectively" shall be inserted.

இணைப்பு V

[147 ஆம் பக்கத்தில் இனம் 6 (3)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 58 OF 1981.

(As passed by the Assembly.)

A Bill further to amend the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Act, 1978.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Second Amendment Act, 1981.

2. *Amendment of Schedule I, Tamil Nadu Act* 24 *of* 1978.—In Schedule I to the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Act, 1978 (Tamil Nadu Act 24 of 1978), the following *Explanation* shall be added at the end, namely :—

"*Explanation.*—Where the local limits of any local authority referred to in this Schedule have been or are altered by the State Government under the law governing such local authority or where any such local authority has been or is redesignated, any reference to such local authority in this Schedule shall, with effect on and from the date on which the local limits have been, or are, so altered or, as the case may be, the date on which the redesignation, has taken or takes, effect be deemed to be a reference to the local authority having the local limits as so altered or, as the case may be to the local authority with the redesignation.".

143087

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute. Egmore. Madras-8.
2 The City Book Company. Madras-4.
3 Higginbothams (Private) Limited Madras-2.
4 P. Varadachary and Company. Madras-1.
5 C. Subbiah Chetty and Company. Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty. and Company. No. 8-C. Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhantha Works Publishing Society (Tirunelveli), Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11. Sunkurama Chetty Street. Madras-1.
12 New Century Book House (Private) Limited. Madras-2.
13 Kalaivani Book Centre. No. 1. Ponniamman Koil Street. Egmore. Madras-8.

IN MOFASSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company. Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot. Thanjavur (Thanjavur District).
3 P. V. Nathan & Company. Kumbakonam (Thanjavur District).
4 Appar Book Stall; Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street. Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai. Tirunelveli Junction.
8 B. Aruldoss. Villupuram (South Arcot District).
9 Vasantham Stores. Booksellers 9/31. Cross Cut Road. Coimbatore-12
10 Mercury Book Company, 20. Karuppa Gounder Street. Coimbatore-1.
11 S. M. Jagannathan Book House. 35. Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores. South Car Street. Sivakasi.
13 Mari Martin, Booksellers. Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons. Salem-1.
15 Parameswari Book Shop. No. 46-D. Old Market Street. Salem.
16 Meenakshi Pathippagam. Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons. Dindigul. Madurai District.
18 Jayakumari Stores. Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores. No. 3/1. Old Post Office Road. Coimbatore-18.
21 Kumaran Book Depot. Booksellers. Erode-1.
22 Vela Book Company. No. A. Annaji Rao Street. Erode-1.
23 Radhamani Stores. 6-A Raja Street. Coimbatore-1.
24 Ajantha Book Centre. Salem-1.
25 Sri Vidya. 63. Tennure High Road. Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop. 90. Amman Sannathi. Madurai-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency. New Delhi-1.
2 International Book House. Trivandrum.
3 The Book Syndicate. Hyderabad-1.
4 Labour Law Publications. Hyderabad.
5 Puthaghaleyam Pondicherry.
6 Prabu Book Service. Gurgaon. Haryana.
7 K. P. Bagchi & Company. 286. B. B. Ganguli Street. Calcutta-17.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, TAMIL NADU ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE COUNCIL.

(1)	(2)	(1)	(2)